# இஸ்லாம் வளர்த்த தமிழ்

டாக்டர் ம.மு. உவைஸ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# இஸ்லாம் வளர்த்த தமிழ்

டாக்டர் ம. முகம்மது உவைஸ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை—600 113

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the book | — | Islam Vaḷartta Tamiḻ |
| Author | — | Dr. M. M. UWISE, B.A. (Hons.) M.A., Ph.D., Professor of Islamic Tamil Literature, Madurai Kamaraj University, Palkalai Nagar, Madurai-625021 |
| Publisher | — | International Institute of Tamil Studies, T. T. T. I. Post, Taramani, Madras-600 113 |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Publication Number | — | 85 |
| Endowment Lectures Publication Number | — | 1 |
| Date of Publication | — | January 1984 |
| Paper used | — | 16 Kg. D/Demy |
| Size of the Book | — | 21 × 18 Cms. |
| Printing type used | — | 10 Point |
| Number of Copies | — | 2200 |
| Number of Pages | — | viii+280 = 288 Pages |
| Price | — | Rs. 15/- |
| Printers | — | Novel Art Printers, Madras—600 014 Phone : 82731 |
| Binding | — | Cardboard |
| Artist | — | Simhan |
| Subject | — | A Study on Islamic Tamil Literature. |

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600113

# பதிப்புரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழில் பல நல்ல நூல்களை வெளிக் கொணர்கிறது. நூல்களின் தரத்தையும் எண்ணிக்கையையும் இன்னும் உயர்த்துவதற்காக வேண்டிப் பல அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்நிறுவனம் தற்போது 12 அறக்கட்டளைகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. முதல் அறக்கட்டளைச் சொற்பொழிவாக 1984 சனவரி 30, 31 ஆகிய நாட்களில் 'இஸ்லாம் வளர்த்த தமிழ்' என்ற தலைப்பில் டாக்டர் ம. முகமது உவைஸ் அவர்கள் இரண்டு நாட்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இச்சொற்பொழிவே நூலுருப் பெற்றுள்ளது.

இச்சொற்பொழிவு 'இஸ்லாமும் தமிழும் அறக்கட்டளை' சார்பில் நடைபெற்றது. இந்த அறக்கட்டளையைத் தோற்றுவிப்பதற்கு எல்லா நிலைகளிலும் உதவிபுரிந்த ஜனாப் எம். இத்ரீஸ் மரைக்காயர் அவர்களுக்கு எங்கள் அன்பான நன்றியைத் தெரிவிக்கின்றோம். அவர்கள் வாயிலாகத்தான் சீதக்காதி அறக்கட்டளை நிறுவனம் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு இந்த அறக்கட்டளை நிறுவுவதற்கான பணத்தைத் தந்தது. சீதக்காதியின் அதே நிலைக் கொடைத்தன்மையில் இன்னும் அவர் பெயரை நிலை நாட்டுகின்ற வகையில் சீதக்காதி நிறுவனம் இயங்கிக் கொண்டு இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அந்த நிறுவனத்தார் அனைவருக்கும் எங்கள் அன்புகலந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

'இஸ்லாம் வளர்த்த தமிழ்' என்ற இந்த நூலை முழு ஆய்வுத் திறனோடும் செறிவோடும் உருவாக்கித்தந்த டாக்டர் ம. முகமது உவைஸ் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிப்ப தோடு அதைச் சிறந்த நிலையில் மெய்ப்புத் திருத்தித்தந்த ஜனாப் சையது முகம்மது "ஹஸன்" அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை அச்சிட்டுத் தந்த 'நாவல் ஆர்ட்' அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர் களுக்கு மிக்க நன்றி உடையேன். எல்லா நிலைகளிலும் ஒத்துழைத்த எங்கள் நிறுவன ஆய்வாளர் திரு மு. இ. அகமது மரைக்காயர் அவர்களுக்கு எங்கள் நன்றி.

நிறுவனத்தின் பணிகள் அனைத்திற்கும், ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

சென்னை
1-2-1984

ச. வே. சுப்பிரமணியன்

# நூன்முகம்

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் புறக்கணிக்கப் பட்டிருந்தது ஒரு காலம். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் அவ்விலக்கியங்களில் படிந்து கிடந்த தூசி படிப்படியாக அகற்றப்பட்டது. இப்பொழுது மறுமலர்ச்சிப் பாதையிலே துரித நடையில் சென்று கொண்டிருக்கின்றன அத்தகைய இலக்கியங்கள். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய பல தமிழ்க் காப்பியங்கள் புதுப்பொலிவுடன் வெளிவரத் தொடங்கி உள்ளன. அவை மக்கள் மத்தியிலே பயிலப்படுவதற்கு உறுதுணை புரியும் வகையில் அவற்றிற்கு உரை வகுக்கப்பட்டு வருகின்றது. ஆர்வம் உள்ளவர் மத்தியிலே அவற்றைப் பெருவழக்கில் பயின்றிட உதவும் வகையில் அவை பற்றிய கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய கருத்தரங்குகளில் வழங்கப்பட்ட கருத்துரைகள் நூல் களாகத் தொகுக்கப்பட்டு வருகின்றன. இஸ்லாமிய அடிப்படை யில் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள, இஸ்லாத்துடன் நெருங்கிய தொடர்புடைய திசைச் சொற்களைப் புரிந்து கொள்வதை எளிதாக்கும் முகமாக அகாரதியும் தயாரிக்கப் பட்டு வருகிறது. இப்பொழுது இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளுக்குப் பொருளாக அமையவும் தலைப்பட்டுள்ளது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்கான அத்தகைய அறக் கட்டளைச் சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்வதில் முன்னோடி யாகத் திகழ்கின்றது சென்னையில் அமைந்துள்ள உலகத்தமிழா ராய்ச்சி நிறுவனம். வளம் படைத்த முஸ்லிம் வள்ளல்களைக் கொண்டு அறக்கட்டளைகளை நிறுவுவதில் வெற்றி கண்டுள்ளது, அவ்வாராய்ச்சி நிறுவனம். அதன் பயனாக அந்நிறுவனம் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளது எனக் கூறின் அது மிகையாது. சீதக்காதி அறக் கட்டளை நிறுவனத்தைக் கொண்டு ஓர் அறக்கட்டளைச் சொற் பொழிவு நிகழ்த்த வாய்ப்பை அளித்து இத்துறையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஒரு சாதனையையே ஏற்படுத்தி உள்ளது. 'இஸ்லாமும் தமிழும்' என்னும் பொருளில் அத்தகைய ஓர் அறக் கட்டளைச் சொற்பொழிவு நிகழவழி வகுத்துள்ளது.

இம்முயற்சியின் பெறுபேறே இச்சிறு நூல். சீதக்காதி அறக் கட்டளைச் சொற்பொழிவாகவே இது அமைந்துள்ளது. இந்நூலில் கி. பி பதினேழாம் நூற்றாண்டுடன் முடிவடைந்த கால கட்டத்தில் தோன்றிய முஸ்லிம் தமிழ் நூல்களைப் பற்றியும், அக்கால எல்லையிலும் அதன் பின்னரும் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களைப் பற்றியும் சுருக்கமாக விவரிக் கப்பட்டுள்ளது.

இத்துறையில் என்னை ஊக்கியவர் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் ஆவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் உந்து சக்தியாகப் பணி புரிந்து கொண்டிருப்பவர் டாக்டர் சுப்பிர மணியன் அவர்கள். அவர் தம் வேண்டுகோளின் படியே இந்நூலுக் குரிய பொருள் தயாரிக்கப்பட்டது சொற்பொழிவு நிகழ்ந்த அன்றே அதனை நூலுருவில் தயாரித்து அளிக்கும் பெரும் பொறுப் பையும் டாக்டர் சுப்பிரமணியன் அவர்கள் எல்லோரையும் மிஞ்சி விடும் முறையில் நிறைவேற்றியுள்ளமை போற்றற்குரியது மட்டு மன்று; பின்பற்றற்குரியதுமாகும். இங்ஙனம் உடனுக்குடன் நூல் வெளியிடும் டாக்டர் சுப்பிரமணியன் அவர்களின் முயற்சி வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிவானாக! டாக்டர் சுப்பிரமணியன் அவர்களுக்கும், அவர் சார்ந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தாருக்கும் எனது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

தயாரிக்கப்பட்ட தட்டச்சுப் பிரதியைத் திருத்தியும், ஆய்வோலை தூக்கியும் தம் சொந்த வேலைகள் பலவற்றிற் கிடையே அரும் பணிபுரிந்த ஜனாப் எம். சையது முகம்மது "ஹஸன்" அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைத் தயாரிக்கும் பணியில் சலியாது உழைத்து அதற்கென ஒரு சொல்விவரப் பட்டியலைத் தயாரித்து நூலுக்கு முழுமைத்துவம் வழங்கிய நிறுவன ஆய்வாளர் ஜனாப் மு. இ. அகமது மரைக்காயர் அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

**ம. முகம்மது உவைஸ்**

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
பல்கலைநகர், மதுரை—625 021.
1984 சனவரி 31

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை—இஸ்லாம் வளர்த்த தமிழ் | 1 |
| 2. | பல்சந்தமாலை (12 ஆம் நூற்றாண்டு) | 15 |
| 3. | யாக்கூபுசித்தர் பாடல் (15 ஆம் நூற்றாண்டு) | 36 |
| 4. | ஆயிர மசலா (1572) | 49 |
| 5. | மிகுறாசு மாலை (1590) | 54 |
| 6. | திருநெறிநீதம் (1693) | 64 |
| 7. | சக்கூன் படைப்போர் (1686) | 78 |
| 8 | முதுமொழிமாலை (17 ஆம் நூற்றாண்டு) | 85 |
| 9. | திருமக்காப்பள்ளு (17 ஆம் நூற்றாண்டு) | 92 |
| 10. | கனகாபிஷேகமாலை (1648) | 100 |
| 11. | சீறாப்புராணம் (1703) | 118 |
| 12. | திருமணக்காட்சி (1710) | 134 |
| 13. | சின்னசீறா (1732) | 140 |
| 14. | இராஜநாயகம் (1807) | 151 |
| 15. | குத்புநாயகம் (சே) (1810) | 157 |
| 16. | திருக்காரணப்புராணம் (1812) | 162 |
| 17. | குத்புநாயகம் (வ) (1814) | 169 |
| 18. | முகியித்தீன் புராணம் (1816) | 174 |
| 19. | திருமணிமாலை (1816) | 189 |
| 20. | இறவுசுல்கூல் படைப்போர் (1818) | 191 |
| 21. | புதூகுஷ்ஷாம் (1821) | 205 |
| 22. | தீன்விளக்கம் (1821) | 221 |
| 23. | நவமணிமாலை (1855) | 236 |
| 24. | நாகூர்ப்புராணம் (1882) | 248 |
| 25. | ஆரிபுநாயகம் (1894) | 260 |
| 26. | தொகுப்புரை | 270 |
| 27. | சொல்லகராதி | 276 |

# இஸ்லாம் வளர்த்த தமிழ்

# இஸ்லாம் வளர்த்த தமிழ்

இஸ்லாம் உலகில் பரவுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே முஸ்லிம் மக்களின் மூதாதையாரான அறபு மக்கள் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழ் நாட்டுக்கு அவ்வறபு மக்கள் வந்து கிழக்கு மேற்கு வணிகத்துறையிலே பெரிதும் ஈடுபட்டு வந்தனர். அதற்கான அகச் சான்றுகளைச் சங்ககால இலக்கியங்களிலே நிறையக் காணலாம். சங்க கால இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை போன்றவற்றில் அவ்வறபு மக்களைக் குறிப்பதற்கு யவனர் என்னும் பதம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

மத்திய தரைக் கடலுக்கு வட கிழக்கே இரண்டு கடல்கள் உள்ளன. ஒன்று ஏஜியன் கடல். மற்றது ஐயோனியன் கடல். இந்த ஐயோனியன் கடலுக்குக் கரையாக அமைந்துள்ள பிரதேசம் அறபு மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியாகும். அறபுத் தீபகற்பத்தின் வடமேற்குப் பகுதியும், பலஸ்தீனம், சிரியா, லெபனான், துருக்கி, சைப்பிரஸ் முதலியநாடுகளும் இந்த ஐயோனியன் கடலைச் சுற்றிவர உள்ள நாடுகளாகும். இக்கடலைச் சுற்றிவர உள்ள பிரதேசமே ஐயோனியன் கடற்கரைப் பிரதேசமாகக் கணிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்திலிருந்து கீழை நாடுகளுக்கு வந்தவர்களே ஒரு காலத்தில் ஐயோனியர் என்று அழைக்கப்பட்டனர். பின்னர் இவர்களே யவனர் என அழைக்கப்பட்டனர். மிகப்பழைய காலத்திலே இப்பிரதேசத்திலிருந்து கீழை நாடுகளுக்கு வந்த கிரேக்கரும் ரோமானியரும் முறையே இப்பெயரால் அழைக்கப்படலாயினர். அவர்களைத் தொடர்ந்து அப் பிரதேசங்களில் இருந்து இங்கு வந்த அறாபியர் யவனர் என வழங்கப்பட்டனர். இதி

விருந்து ஐயோனியர் என்ற பதமே காலப் போக்கில் யவனர் என மருவி வந்திருக்கிறது எனலாம்.

யவனரின் தமிழ் நாட்டு வருகையின் பிரதான குறிக்கோள் அக நானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் வியாபார நோக்க மாகவே வந்தனர். கிழக்கு நாடுகளுக்கு அவசியம் ஆன பொருள் களை மேற்கிலிருந்து கொண்டுவரவும் மேற்கு நாடுகளுக்குத் தேவையான பொருள்களைக் கிழக்கிலிருந்து கொண்டு செல் லவுமே அவர்கள் அங்கு வந்தனர். பண்டமாற்று வியாபாரத்திலே தான் அவர்கள் பெரிதும் ஈடுபட்டுவந்தனர்.

சேர மன்னர்க்குரியது சுள்ளி ஆறு. இது பேரியாறு என்றும் அழைக்கப்படுகிறது. இந்த அழகிய பெரிய ஆற்றில் அலை மோது வதால் நுரை ஏற்படுவது வழக்கம். அந்த நுரைகள் கலங்கி விடு கின்றன. அவ்வாறு கலங்குவதற்குக் காரணம் அதனூடே கப்பல்கள் செல்வதாகும். அவை சாதாரண கப்பல்கள் அல்ல. அவை தொழில் திறமை மிக்கனவாய் அமைக்கப்பட்டவை; மாட்சி மையுடையவை; அழகியவை. யவனர் என்னும் மேலைநாட்டு வணிகர் கொணர்ந்தவை. அக்கப்பல்கள் மேற்கு நாடுகளிலிருந்து பொன்னைச் சுமந்து கொண்டு வந்தன. மீண்டும் கிழக்கு நாடுகளி லிருந்து மிளகுப் பொதிகளை மேற்கு நாடுகளுக்கு ஏற்றிச் சென்றன. இவ்வாறு பண்டமாற்று வியாபாரத்தில் ஈடுபட்டனர் யவனர். இத்தகைய வளம் பொருந்தியது முசிறி என்னும் பட்டினம். இச்செய்தியே சுருக்கமாக அகநானூற்றிலே இவ்வாறு விளக்கப்படுகின்றது.

சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வனங்கெழு முசிறி......... (149)

இங்கே கறி என்னும் சொல் மிளகினைக் குறிக்கிறது. மிளகு போன்ற வாசனைத் திரவியங்களினால் ஈர்க்கப்பட்டே யவனர் முதலியோர் பொதுவாகக் கிழக்கு நாடுகளுக்கும் சிறப்பாகத் தமிழ் நாட்டுக்கும் வருகை தந்தனர். அவர்கள் பெரிதும் விரும்பிய பொருள்களுள் ஒன்று மிளகு. இதனாலேயே 'யவனப் பிரியம்' என மிளகு அழைக்கப்படுகிறது. இப்பாடலில் குறிப்பிடப்பட் டுள்ள முசிறி என்ற நகர்ப்பெயரும் அறபு மொழியிலிருந்து வந்தது எனவும் கூறுவர்.

எட்டாம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் திவாகர நிகண்டு 'யவனர் சோனகர்' எனக் குறிப்பிடுகிறது. சோனகர் தாம் யவனர் என நிருபிக்கிறது. அதன் பின்னர்த் தோன்றிய பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டும் அவ்வாறே கூறுகின்றது. திவாகர நிகண்டு கம்மாளர் பத்து வகையினரைக் குறிப்பிடுகின்றது. அவர்களுள் யவனர் கம்மாளராகக் குறிப்பிடப்படுகின்றனர். பிங்கல நிகண்டு கம்மாளர் ஐந்து வகையினர் என்றும் அவர்களுள் யவனர் ஒரு வகையினர் என்றும் குறிப்பிடுகின்றது.

யவனர் தச்சர்களாக இருந்தனர் என்பதை மணிமேகலை,

அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும் (19:108)

என்றும், பெருங்கதை

யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும் (1:58:49)

என்றும் குறிப்பிடுவதைக்காணலாம். உண்மையிலேயே யவனர்கள் தச்சுத் தொழிலில் திறமை மிக்கவர்களாக இருந்தனர் என்பதற்கு சீவக சிந்தாமணிபோன்ற காப்பியங்களில் பலசான்றுகள் உள்ளன. பொறிகள் இயற்றுவதில் யவனர்களுக்கு இருந்த திறமையைக் குறிப்பிடவந்த திருத்தக்கதேவர், அவர்களால் இயற்றப்பட்ட பொறிகளைக் குறிப்பிடுகின்றார். 'அம்புகளையும் வேல்களையும் கற்களையும் உமிழ்வனவாக—உமிழ்ந்து எறிவனவாக யவனர் தங்கள் அறிவின் திறமையினால் பொறிகள் அமைத்தனர்'. இக் கருத்துக்களே இங்கு இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

அம்பு மிழ்வ வேலுமிழ்வ கல்லுமிழ்வ வாகித்
தம்புலங்க ளால் யவனர் தாட்படுத்த பொறியே (103)
(நாமகள் இலம்பகம் 74)

பெருங்கதையிலும் யவனர் கைவன்மை மெச்சப்படுகிறது. அவர்களால் இயற்றப்பட்ட புதுவிதமான ஊர்தியைப் பற்றிப் பெருங்கதை விதந்தோதுகின்றது.

இலங்கையில் வழங்கும் சிங்கள மொழியிலும் யவனர் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. வடமொழி, பாளிமொழி போன்ற ஆரிய மொழிகளின் செல்வாக்கினைப் பெற்ற சிங்கள மொழியில் யவன என்றே யவனர் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். பாளி மொழியில் பயன்படுத்தப்படுவதுபோல் யொன், யோன் என்னும் பதங்களையும் இதே கருத்தில் சிங்கள மொழியில் பயன்படுத்தக் காணலாம். யோனக என்னும் பிரயோகமும் அங்கு உண்டு. யோனக என்னும் சிங்களச் சொல் சோனகர் என்பதைக்

குறிப்பிடவே பயன்படுத்தப்படுகின்றது. சிங்கள மொழியில் தோன்றிய பழைய இலக்கியங்களிலும் சோனகரைப் பற்றிய குறிப்புக்கள் வரும்பொழுது யோனக என்பதே உபயோகப்படுத்தப்படுவதைக் காணலாம். 'சோனக வீதி' என்பது கூட சிங்கள மொழியில் 'யோனக வீதி' அல்லது 'யொன் வீதி' என்றே இலங்கையில் இன்றும் வழங்கப்படுகின்றது.

சென்ற பல நூற்றாண்டுகளாக வாழையடி வாழையாக இலங்கையில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் இன்றும் சோனகர் என்றே அழைக்கப்படுகின்றனர். இலங்கை அரசும் அவர்களை இனம் காண்பதற்காக இலங்கைச் சோனகர் என்றே அழைத்து வருகிறது. இந்தியாவிலிருந்து சிறப்பாகத் தமிழ் நாட்டிலிருந்து அண்மைக்காலங்களில் இலங்கை வந்த முஸ்லிம்கள் இந்தியச் சோனகர் என வழங்கப்படுகின்றனர். அறபு மக்களின் பரம்பரையினரைச் சோனகர் என்று சுட்டும் வழக்கம் இன்று இலங்கையில் மாத்திரமே இருந்து வருகிறது. அரசு அங்கீகாரம் பெற்றதாய் அவ்வழக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

யவனர் என்னும் சொல்லிலிருந்து சோனகர் என்னும் பதம் தோன்றியதா? அல்லது சோனகர் என்பதிலிருந்துதான் யவனர் என்பது தோன்றியதா? எதிலிருந்து எது தோன்றியது என்பதைக் கண்டுபிடிப்பது சிக்கலான ஒரு கருமம் என்பது உண்மையே. இதற்குத் தீர்வு காண்பது அவ்வளவு இலகுவான ஒரு காரியம் அல்ல. யவனர் என்பது வேற்றுமொழிச் சொல்லாயிருக்கச் சோனகர் என்பது தமிழ்ச்சொல் போன்று காட்சி அளிக்கின்றது,

யவனர் என்னும் சொல்லிலிருந்து சோனகர் என்னும் பதம் மருவியதாக இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. இக்கூற்றுக்கிணங்க 'யவனர்' என்னும் சொல் 'ஆனர்' ஆகத் திரிந்து சகர மெய் பெற்று 'சோனகர்' என, ஆன்றோன் சான்றோர் எனத் திரிந்தது போல் திரிந்துள்ளது என்றும் பின்னர் 'சதம்' என்னும் சொல் 'சதகம்' ஆனது போல் 'சோனர்' என்பது 'சோனகர்' ஆக மாறி உள்ளது என்றும் வந்துள்ளமை புலனாகின்றது, மொழியியல் அடிப்படையில் இக்கூற்றுப் பொருத்தமானதொன்றாக அமையவில்லை. மொழியியல் விதிகளுக்கு இணங்க இத்தகைய மாற்றம் ஏற்பட முடியாது. மேலும் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண அடிப்படையில் மொழி முதல் சகரம் இழக்கப்பட்டிருக்கிறதே த்விர புதிதாகத் தோன்றியதற்கான சான்றாதாரம் இல்லை.

எனவே சான்றோர் என்பது ஆன்றோர் ஆகலாம். ஆனால் ஆன் றோர் சான்றோர் எனத் திரிந்திருக்காது. இவ்விரு சொற்களும் ஒரே பொருளைக் குறிக்கும் வெவ்வேறு சொற்களாகக் கருதப்படு படுகின்றன. இஸ்லாமிய அடிப்படையில் பாடப்பட்ட தமிழ்ச் செய்யுட்களைக் கொண்ட ஒரே நூலில் ஒரு புலவர் யவனர், சோனகர் என்னும் இரண்டு சொற்களையும் ஆண்டிருப்பதைக் காணலாம். முஸ்லிம்களையோ, முஸ்லிம்களின் மூதாதையாரான அறபு மக்களையோ குறிக்கவே !இவ்வாறு ஒரே ஆசிரியர் இவ் விரண்டு சொற்களையும் தமதுநூலில் பயன்படுத்திஉள்ளமையைக் காணலாம். எனவே, யவனர், சோனகர் என்னும் இரண்டு சொற் களும் பண்டு தொட்டு ஒரே கருத்தில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம்.

சங்ககால இலக்கியங்களில் யவனர் என வந்த சொல்லுக்கு, அவ்விலக்கியங்களுக்கு உரைவகுக்க முற்பட்ட பிற்காலத்தில் வந்த நச்சினார்க்கினியர் சோனகர் என்றே பொருள் தந்துள்ளார். திவா கரம் என்னும் நிகண்டும் அதனைத்தொடர்ந்து வந்தபிங்கலந்தை என்னும் நிகண்டும் 'சோனகர் யவனர்' என்றே கூறுகின்றன. முதலில் சோனகர் என்ற பதத்தைக் குறிப்பிட்டுவிட்டே யவனர் எனக் குறிப்பிடுகின்றன.

13 ஆம் நூற்றாண்டுக்குரிய ஜடாவர்மன் குலசேகரனால் வழங்கப்பட்ட திருப்புல்லாணிக் கல்வெட்டில் பவுத்திர மாணிக் கப்பட்டணத்தில் இருந்த சோனக சாமந்த பள்ளி வாசலுக்கு அளிக்கப்பட்ட நன்கொடைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

யவனர் என்னும் சொல் தொடக்கத்தில் மேற்கு நாட்டி லிருந்து வந்த கிரேக்கரைச் சுட்டியது. பின்னர் அவர்களைத் தொடர்ந்து வந்த உரோமானியரைக் குறித்தது. அதற்கப்புறம் உரோமானியரின் பின்னர் வந்த அறாபியரைக் குறிக்க வழங்கப் பட்டது. கிரேக்கரும் உரோமானியரும் பெரும்பாலும் தரை மார்க்கமாகவே கீழைத்தேயங்களுக்குவந்தனர். அவர்கள் முதலில் வடஇந்தியாவுக்குவந்தனர். உரோமானியர்வருகையும் அவ்வாறே அமைந்திருந்தது. கடல் மார்க்கமாக அவர்கள் வருவதற்கு அவர் களுக்கு வாய்ப்புகள் இருக்கவில்லை. அவர்கள் வாழ்ந்த நாடு களைச் சுற்றி உள்ள மத்திய தரைக்கடலிலிருந்து நேரடியாக இந்து மகாசமுத்திரத்துக்கு வருவதற்கான வழி அவர்களுக்கு வசதியாக அமையவில்லை. அறபு மக்களுக்கோவெனின் செங்கடல்

வழியாக இந்து மகாசமுத்திர நாடுகளுக்கும் அவற்றின் மூலமாக ஏனைய கீழைத்தேயங்களுக்கும் செல்லும் கடல் மார்க்கம் மிக வசதியாக அமைந்திருந்தது.

அறபுக் குடா நாட்டின் தென்கிழக்காக அமைந்துள்ள கரைப் பகுதி இந்து சமுத்திரத்தின் கரையாக அமைந்திருந்தது. அறபுக் கடல் பிராந்தியமாக இருந்தது. தமிழகத்துடன் நேரடித் தொடர்பு கொள்வதற்கு இவ்வமைப்பு பெரிய வாய்ப்பாக அமைந்தது.

இஸ்லாம் உலகில் பரவுவதற்கு முன்னரே அறபு மக்கள்திரை கடலோடித் திரவியம்தேடுபவர்களாக வாழ்ந்து வந்தனர்.பலநாடு களைப்பற்றி அறிந்திருந்தனர். சீனதேசம் வரை சென்றிருந்தனர் 'சீனம் சென்றேனும் ஞானம் தேடு' என்னும் நபிகள் நாயகம். முகம்மது (சல்) அவர்களின் பொன்மொழியிலிருந்து அவர்களும் அவர்களுக்கு முன்பு வாழ்ந்தவர்களும் சீனம் முதலிய நாடுகளைப் பற்றி அறிந்திருந்தனர் என்று கொள்ளலாம். 'கிறித்தவ ஆண்டு தொடங்கியதற்கு முன்னரேயே அறபிகள் இலங்கையில் வந்து குடியேறினர்' எனப் பிளினி என்னும் வரலாற்றாசிரியர் குறிப்பிட் டுள்ளார். எனவே முஸ்லிம்களின் மூதாதையர் ஆன அறாபியரே யவனர் என அழைக்கப்பட்டனர்.

அறாபியர் பண்டமாற்று வியாபாரத்துக்காகக் கப்பல் மூலம் தமிழ்நாட்டுக்கு வந்து சென்றனர் என்பதற்குச் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களிலே சான்றுகள் உள்ளன என்பது மேலே காட்டப் பட்டுள்ளது.

சங்ககால இலக்கியம் எனப் பத்துப்பாட்டையும் எட்டுத் தொகையையும் கருதுகிறோம். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து. இது ஏனைய சங்க கால நூல்களை விடக் காலத் தால் பிந்தியது. பதிற்றுப்பத்திலே 'பந்தர்' ஏன்னும் சொல் இடம் பெற்றுள்ளது. இந் நூலிலே பந்தர் என்னும் இச்சொல் ஆளப் பட்டுள்ள நான்கு இடங்களை எடுத்துக் கொள்வோம். பதிற்றுப் பத்துக்கு உரை எழுதியவர்கள் பந்தர் என்னும் சொல்லுக்கு பண்டகசாலை எனப் பொருள் கொண்டுள்ளனர். ஆனால் பந்தர் என்பது இங்கே துறைமுகப்பட்டினம் என்னும் பொருளில் பயன் படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம், பந்தர் என்பது முத்துக்குப் பேர்போன ஒரு புராதனக் கடற்கரைப் பட்டினம் எனக் கூறுகிறது தமிழ் அகராதி.

இனிய ஓசையை உடையன அலைகள். அந்த அலைகள் கடலிலே அவ்வினிய ஓசையை எழுப்பிக்கொண்டிருந்தன. அத்தகைய கடல் வழியாகக் கப்பல்கள் வந்தன. அந்தக் கப்பல்கள் செல்வத்தைக் கொண்டு வந்தன. அந்தச் செல்வங்கள் தொகுக்கப் பட்டுக் குவிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு குவிக்கப்பட்டுக் காட்சி அளிக்கிறது பந்தர் என்னும் துறைமுகம். இக்கருத்துக்களைக் கொண்ட செய்யுள் இது.

இன்னிசைப் புணரி இரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்

(பதிற்றுப்பத்து 55:4)

இங்கே குறிப்பிடப்பட்ட பந்தர் என்பது பலரும் கூடும் இடமாக அமைந்திருந்தது. நான்கு எல்லைகளுக்குள்ளும் வாழும் பலரும் ஒன்றுசேரும் தலமாகத் திகழ்ந்தது. கீழ்க்கடலும் மேலைக் கடலும் தென்கடலும் ஆகிய எல்லைக்குள் இடைப்பட்ட நிலத்து வாழும் அரசரும் பிற சான்றோரும் கூடி இருக்குமிடமாக விளங்கியது.

'பந்தர்' என்னும் அறபுச் சொல் துறைமுகம், துறைபொருட் களஞ்சியம் என்னும் பொருள்களைக் குறிக்கின்றது. பாரசீக மொழியிலும் இச்சொல் துறைமுகப் பட்டினத்தைக் குறிக்கிறது. அறபு மொழியிலிருந்து பாரசீக மொழிக்கு வந்தது இச்சொல். எனவே பந்தர் என்பது ஓர் அறபுச் சொல் என்பது புலனாகிறது. இன்னும் பந்தர் என்னும் பெயரைக் கொண்ட துறைமுகப் பட்டினங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. போர்டோநோவோ என்றும் பறங்கிப் பேட்டை என்றும் அழைக்கப்படும் துறைமுகப் பட்டினம் மஹ்மூது பந்தர் என வழங்கப்படுவதை இன்றும் காணலாம். தமிழ் நாட்டின் கிழக்குக் கரையில் கோவளத்துக்கு அருகில் 'சஹிது பந்தர்' என்றும் பட்டினம் ஒன்றும் உள்ளது.

இஸ்லாம் உலகில் பரவுவதற்கு முன்பிருந்தே அறாபியர் மேற்கு இந்திய நாடுகளுடன் பெருமளவிலான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என எஸ். சிறிகந்தயா என்னும் வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். 'முகமது நபியின் வருகையினாலும் அவரின் பின் வந்தவர்களின் தலைமையில் இஸ்லாம் வளர்ச்சி அடைந்தமையினாலும் ஒரே முறையில், அத்திலாந்திச் சமுத்திரத்திலிருந்து பசுபிக் வரைஉள்ள பிரதேசங்களில் இஸ்லாம்

பரவிய போதிலும் அவர்களின் செல்வாக்கு நிலையாக இருந்தது இந்து சமுத்திரத்தைச் சர்ந்த நாடுகளிலேயாம்' என்றும், 'அவர்கள் உடற்பலம் வாய்ந்த பேரரசாக மாறியது இந்து சமுத் திரத்திலேதான்' என்றும், அதன் பயனாக 'இந்து சமுத்திரம் ஒரு மாபெரும் அறபுக்கடலாக மாறியது' என்றும், 'அறபு மக்களின் வருகையினால் ஏற்பட்ட நிலையான பெறுபேறுகளை இந்து சமுத்திரத்தின் மேற்குக்கரை நாடுகளிலே காணக்கூடியதாக உள்ளது' என்றும் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.

இஸ்லாம் உலகில் பரவத் தலைப்பட்டதும் இந்தியாவின் கடற்கரைப் பகுதிகளில் முஸ்லிம் குடியேற்றங்கள் தோன்றலாயின அவர்களின் வியாபாரக் குறிக்கோள்கள் நிறைவேற அந்நாட்டு இந்து மன்னர்கள் எல்லா உதவிகளையும் நல்கினர். அனைத்து ஒத்துழைப்புக்களையும் அளித்தனர். இதன் பயனாக அவர் களுடைய பண்டமாற்று வியாபாரம் பல்கிப் பெருகியது.

'திரைகடலோடியும் திரவியம்தேடு' என்னும் குறிக்கோளுடன் இயங்கிய முஸ்லிம்கள் கி.பி.9 ஆம் நூற்றாண்டில் அத்தகைய உச்ச நிலையை அடைந்தனர். இஸ்லாமிய அரபியரின் கப்பல்கள், இந் தியாவின் மேற்குக் கரையோரத் துறைமுகங்களுடன் மாத்திர மல்லாது, இலங்கைத் துறைமுகங்களுடனும் பண்டமாற்ற வியா பாரத்துறைகளில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தன.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாட்டில் நிகழ்ந்த ஒரு சம்பவம்[1] இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக அமைந்து விடுகின்றது. ஹிஜ்றி ஆண்டு 578 இல் அதாவது கி.பி. 1182 இல் அறபு நாட்டில் உள்ள மதீன மாநகரிலிருந்து ஒரு மனிதப் புனிதர் தமிழகத்துக்கு வருகை தந்தார். அப்பொழுது அறபு நாடுகளிலே சிலுவை யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த மனிதப் புனிதரான சையத் இபுறாஹீம் அவர்கள், நபிகள் முகம்மது (சல்) அவர்களின் புதல்வி பாத்திமா நாயகி அவர்களின் புதல்வர் ஹுசைன் (றலி) அவர்களின் வழித்தோன்றலாக வந்துள்ளார். சையது இப்றாஹீம் அவர்கள் தென் இந்தியாவின் மேற்குக் கரை யில் உள்ள கண்ணனூரில் வந்திறங்கி உள்நாட்டுக்குச் சென்

1. Dr. S.A.Q. Husaini, The History of the Pandya Country. Pp. 48,49.

றார்கள். அவர்கள் தமது பரிவாரங்களுடன் வந்து தமிழ் நாட்டில் தங்கினார்கள். அப்பொழுது பாண்டி நாட்டைப் பாண்டியர் ஆண்டுவந்தனர். பாண்டி நாட்டை ஐவர் ஆண்டு வருவது பெரு வழக்காக இருந்தது. சையிதுஇபுறாகீம் அவர்கள் தமிழ்நாடு வந்த பொழுதும் இந்த நிலைமையே நிலவியது. சையத் இபுறாகீம் அவர் களுக்கு விக்கிரம பாண்டியனுடன் போர் புரிய வேண்டி ஏற்பட் டது, போரிலே விக்கிரம பாண்டியனுடைய இருபுதல்வர்களும் தள பதிகளும் சையித் இபுறாகீம் அவர்களுடைய புதல்வரும் வீர மரணம் எய்தினர். விக்கிரம பாண்டியனும் போரில் கொல்லப் பட்டார்.

சுல்தான் சையது இப்றாகிம் அவர்கள் ஏறத்தாழ பன்னிரண் டரை ஆண்டுகள் அங்கு இஸ்லாமிய ஆட்சி புரிந்தார்கள். தமது ஆட்சிக் காலத்தில் நாணயங்களும் வெளியிட்டார் என்பதும் கூறப் படுகிறது. பின்னர் விக்ரமபாண்டியனின் உறவு முறையினனான வீரபாண்டியன் படையெடுத்து வந்து சுல்தான் சையது இப்றாகீம் அவர்களுடன் போர் செய்தார். இப்போரிலே சுல்தான் சையது இப்றாகீம் அவர்கள் கொல்லப்பட்டார்கள். வெற்றிவாகை சூடிய வீரபாண்டியனும் போரிலே ஏற்பட்ட காயங்களினால் கால மானான். அந்தக் கால எல்லையில் மதுரையை ஆட்சி செய் தவன் ஜடாவர்மன் குலசேகரன் என்பவனாவான்.

முஸ்லிம் மக்கள் தமிழகத்தின் பழங்குடி மக்கள் என்பதற்கு ஆதாரமாகப் பதின்மூன்றாம்நூற்றாண்டின் முற்பகுதியில் முஸ்லிம் களுக்கு நன்கொடை வழங்கப்பட்ட செய்தி அக்காலக் கல்வெட் டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள[1] திருப்புல்லாணி வைணவக்கோவிலில்அமைந் துள்ளது. இக்கோவிலின் முதலாம் கோபுர வாயிலிலே சாசனம் அமைந்து உள்ளது. வாயிலின் தரையில் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. பாண்டிய மன்னனான இரண்டாவது மாறவர்மன் சுந்தரபாண்டியன் முஸ்லிம்களுக்கு வழங்கிய நன்கொடை பற்றியது அந்தக் கல்வெட்டு. இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கி. பி. 1238 முதல் 1251 வரை ஆட்சி புரிந்தவன்.

---

1. No. 402 Tiruppullani (A. R. No. 116 of 1903) On a slab built into the floor at the entrance of the first gopuram in the same temple.

அந்தக் கல்வெட்டில் ஆளப்பட்டுள்ள சில சொற்களை எடுத்துக் கொள்வோம். அங்கே சோனக சாமந்தப்பள்ளி எனக்குறிப்பிடப் பட்டுள்ளது. சாமந்தர் என்னும் பதத்துக்கு இளவரசன், சிற்றரசன், படைத்தலைவன், அமைச்சன் எனப் பல்வேறு கருத் துக்களைக் கூறுகிறது தமிழ் அகராதி. சாமந்தர் என்னும் அச் சொல் சாமாந்த் என்னும் பாரசீகச் சொல்லிலிருந்து பிறந்து உயர்திணைப் பலர்பால் விகுதியான 'ஆர்' பெற்றிருக்கலாம். பாரசீக மொழியில் சாமாந்த் என்னும்சொல் 'அரசனைப் போன்ற' அல்லது 'அரசுரிமை சார்ந்த' (Royal) என்னும் பொருளை உடையது எனக் குறிப்பிடுகிறது பாரசீக—ஆங்கில அகராதி. சோனகச் சாமந்தப்பள்ளி என்று குறிப்பிடும் பொழுது 'சாமந்தம்' என்னும் அச்சொல் ஒரு முஸ்லிம் சிற்றரசனை அல்லது ஒரு முஸ்லிம் அரச குடும்பத்தைச் சார்ந்த ஒருவனைக் குறிப்பிடுவ தாக இருக்கலாம். இச்சிற்றரசனுடைய பொருளுதவியால் அல்லது அவரது முயற்சியால் அப்பள்ளிவாசல் கட்டப்பட்டிருக்க லாம். முஸ்லிம் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட பள்ளி வாசலாக அது திகழ்ந்திருக்கலாம்.

அக்கல்வெட்டில் 'சோனகச் சாமந்தப்பள்ளியான பிழார்ப் பள்ளி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். 'பிழார்ப்பள்ளி' என்றால் என்ன? கல்வெட்டினைப் பதிவு செய்தவர் விட்ட பிழை யினால் இத்தடுமாற்றம் ஏற்பட்டிருக்கலாம். அச்சொற்றொடர் அக்கல்வெட்டில் சோனக சாமந்தப்பள்ளியான பிலால் பள்ளி என்று இருந்திருத்தல் வேண்டும். பிலால் என்னும் சொல்லில் உள்ள பகர இகரம் வல்லொலி வல்லெழுத்தாக உச்சரிக்க வேண்டும். பிலால் என்பது அறபுச்சொல். கல்வெட்டைப் பதிவு செய்தவர்களுக்குப் 'பிலால்' என்னும் அறபுச் சொல், ஒரு புதிராக அமைந்திருக்கலாம். திருப்புல்லாணிக் கல் வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் நடைமுறையிலிருந்து கல் வெட்டு எழுத்து முறையில் லகரத்துக்கும் ழகரத்துக்கும் அதிக வேறுபாடு இருக்கவில்லை. எனவே 'பிலால்' என்பதனைப் பிழை யெனக் கண்ட கல்வெட்டுப் பதிப்பாசிரியர் அதனைப் பிழார் என மாற்றி இருக்கலாம்.

பிலால் என்பது ஒரு பெயர். அறபு மொழியில் வழங்கி வரு கிறது. பிலால் என்பவர் எத்தியோப்பியா என்று வழங்கும் அபிசீனியாவைச் சேர்ந்தவர், அவர் ஒரு நீக்ரோ, கறுப்பு

இனத்தைச் சேர்ந்தவர். தொடக்கத்தில் இஸ்லாத்தைத் தழுவிய வர்களுள் ஒருவர், ஓர் அடிமையாக இருந்தபொழுதே பிலால் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார். அதற்காக எசமானனால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். பின் அடிமைத்தளையி லிருந்து முஸ்லிம் மக்களால் விடுவிக்கப்பட்டார். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் தொழுகையை நிறைவேற்ற வருமாறு முஸ்லிம் மக்களை அழைக்க வேண்டி இருந்தது. அறபுச் சொற் றொடர்களை இனிமையான குரலில் நன்கு உச்சரிக்கக் கூடிய வராயிருந்தமையினால் பிலால் அவர்கள் அந்தப் பணியை நிறை வேற்றுமாறு முகம்மது நபி (சல்) அவர்களால் நியமிக்கப்பட்டார். முஅஸ்ஸின் என்று வழங்கப்பட்ட அந்தப் பதவி பிலால் என அவர் பெயராலும் வழங்கப்படலாயிற்று. அதனால் அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட சோனக சாமந்தப் பள்ளிவாசல் பிலால் பள்ளி எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

வஸ்ஸாப் என்னும் பயணி வருணித்த தமிழ் நாட்டுத் துறை முகங்களிலே முக்கியமாகப் பணியாற்றியவராகக் குறிப்பிடப்படு பவர் தகியுத்தீன் அப்துல் ரஹ்மான் அவர்கள். அவர் மர்ஸ்பான் ஆகக் கடமையாற்றினார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு மர்ஸ்பான் என்றே பட்டம் வழங்கப்பட்டிருந்தது. மர்ஸ்பான் என்பது ஒரு பாரசீகச் சொல். அச்சொல்லுக்கு எல்லைப்புற ஆளுநர் என்னும் ஒரு பொருளும் உண்டு. ஆங்கிலத் தில் (Margrave) என்னும் சொல்லுக்கு மர்ஸ்பான் சமமாக உள்ளது என்பர். Margrave என்பது ரோமப் பேரரசின் இளவர சர்களுக்கு அளிக்கப்பட்ட ஜெர்மானியப் பெயர். எல்லைப்புற மாகாணத்தின் தலைவர் என்பதையும் Margrave என்னும் சொல் சுட்டிக் காட்டுகிறது. இவ்வாறு தமிழ் நாட்டிலே ஓர் ஆளுநராகப் பணிபுரிந்த தக்கியுத்தீன் அப்துல் ரஹ்மான் அவர்கள் மலிகுல் இஸ்லாம் ஜமாலுத்தீன் என்பவரின் சகோதரர். ஜமாலுத்தீன் அவர்கள் ஓர் அறபுச் சிற்றரசன். கைஸ் நாட்டை ஆட்சி புரிந்து வந்தார். பாரசீக வளைகுடாவில் கைஸ்தீவு அமைந்துள்ளது. முதன் முதல் தக்கியுத்தீன் அப்துல் ரஹ்மான் அவர்கள் காயலிலே ஜமாலுத்தீன் அவர்கள் நிறுவிய வியாபார நடுநிலையத்துக்கு அதிபதியாகக் கடமை ஆற்றினார்.

அக்கால எல்லையில் தமிழ் நாட்டை ஆண்டு வந்தவன் முதலாம் மாறவர்மன் குலசேகரன் என்பான். அவனுடைய ஆட்சிக் காலம் கி. பி. 1268 முதல் கி. பி. 1310 வரை நிகழ்ந்தது

என்பர். இந்தக் கால கட்டத்தில் அவனுடன் வேறு நால்வர் பாண்டி நாட்டைக் குறுநில மன்னராக ஆண்டு வந்துள்ளனர். இரண்டாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன், மாறவர்மன் விக்ரமபாண்டியன், ஜடாவர்மன் வீரபாண்டியன், மூன்றாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பவரே அவர்கள் எனப் பாண்டிய வரலாறு கூறுகின்றது.[2] ஆறாவது பாண்டியனாகக் கணிக்கப்பட்டவர் தக்கியுத்தீன் அப்துல் ரகுமான் என்பவரே. இக்கருத்தினையே செய்தக்காதிறு திருமண வாழ்த்தில் எட்டைய புரம் உமறுகத்தாப் புலவர் அவர்கள்.

மைவருக்கஞ் சூழ்சோலை மாமதுரைப் பாண்டியர்கள்
ஐவருக்கு மாறாக ஆறாம்பேர் கொண்ட பிரான் (47)

என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து அவர் எல்லைப்புற மாகாண ஆளுநர் எனப் பொருள்படும் மர்ஸ்பான் என்னும் பட்டம் பெற்றிருந்தமை உறுதியாகின்றது. பாண்டியன் மகளைத் திருமணம் புரிந்தார் என்பது.

நிலமகளும் சயமகளும் நிற்ப வழுதிசெல்வக்
குலமகளைக் கைப்பிடித்துக் கொண்ட மணவாளன் (48)

என்னும் உமறுகத்தாப் புலவரின் கூற்றிலிருந்து புலனாகின்றது.

பல்வேறு பயணிகளால் குறிப்பிடப்பட்ட தமிழகத் துறை முகங்களுள் ஒன்றிலிருந்து சீனாவுக்கு ஒரு தூதுக்குழு அனுப் பப்பட்டது. கி. பி. 1297ல் அனுப்பப்பட்ட தூதுக்குழுவுக்குப் பக்றுத்தீன் அஹமது பின் இப்றாஹிமுல் தீபி என்பவர் தலைவ ராகக் கடமையாற்றினார். இவர் ஜமாலுத்தீன் என்பவரின் புதல்வர். துறைமுகப்பட்டினங்களில் மாத்திரம் அல்லாது உள் நாட்டுப் பிரதேசங்களிலும் முஸ்லிம் மக்கள் குடியேறி இருந்தனர். வட நாட்டிலிருந்து தென் இந்தியாவுக்குப் படையெடுத்து வருவ தற்கு முன்பிருந்தே தமிழக முஸ்லிம்கள் வரலாறு ஆரம்பமாகி யுள்ளது.

முஸ்லிம் வரலாற்றாசிரியர்களும் முஸ்லிம் அல்லாதோரும் மலிக் நாஇப் என்பவர் வடக்கிலிருந்து சுந்தரபாண்டியனுக்கு உதவி செய்யுமுகமாகத் தெற்கே வந்தார் என்று கூறி உள்ளனர். கி. பி. 1316 இல் கல்வெட்டு ஒன்றில் அக்காலத்துக்குச் சற்று முன்னர்ச் சுந்தரபாண்டியன் முஸ்லிம்களுடன் வந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுல்தானின் படைகள் வருவதைக்

2. Gazetteer of India, Ramanathapuram District p. 74

கண்ட வீரபாண்டியன் தனது தலைநகரைப் புறக்கணித்துவிட்டுக் காட்டுப் பகுதிக்கு ஓடிவிட்டான் என்று கூறப்பட்டுள்ளது. வெற்றிபெற்ற மலிக் நாஇப் மதுரையிலே சுந்தர பாண்டியனை அரசனாக அமர்த்திவிட்டுத் தமிழ்நாடு முழுவதையும் டில்லி சுல்தானின் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தார் என்று கூறப்படுகிறது.

கி. பி. 1333 வரை டில்லி சுல்தான் ஆட்சி பாண்டி நாட்டில் நிலவியது. மதுரையில் ஆளுநராக இருந்த அஹ்ஸன் என்பவர் டில்லியிலிருந்து பிரிந்து மதுரையில் தமது ஆட்சியை நிறுவினார். இங்ஙனம் நிறுவப்பட்ட மதுரை சுல்தான் ஆட்சி கி. பி. 1378ம் ஆண்டில் முடிவடைந்தது.

தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் வாழும் முஸ்லிம் மக்களின் மூதாதையர் பண்ட மாற்று வாணிகத்தில் ஈடுபடுவதையே பிரதான குறிக்கோளாகக் கொண்டு இங்கு வந்தனர். அகநானூறு புறநானூறு போன்ற சங்க கால இலக்கியங்கள் இதற்குச் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன. 'பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' என்கிறது, அகநானூறு (149)

இந்தப் பொன் 'சோன' எனவும் வழங்கப்படுகிறது. பொன் கொண்டு வந்தமையினால் தமிழக முஸ்லிம்களின் மூதாதையர் அப்பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம். 'சோன' என்னும் சொல்லோடு உயர்திணைப் பலர்பால் விகுதியாக 'அர்'சேர்ந்தால் சோன + அர் = சோனவர் என வரும். அச்சொல்லோடு ஆண்பால் விகுதியாகிய அன் சேர்ந்தால் சோனவன் என்றும், பெண்பால் விகுதியாகிய அள் சேர்ந்தால் சோனவள் என்றும் வரும். இங்கே சோன என்னும் சொல்லோடு உயர்திணை ஆண்பால் விகுதியும் பெண்பால் விகுதியும் பலர்பால் விகுதியும் வந்து புணரும்பொழுது உடம்படுமெய்யாக வகரம் தோன்றுவதைக் காணலாம். பொன் எனப் பொருள்படும் சோனம் நிறைய இருந்தமையாலும் அங்கிருந்து பொன் கொண்டு வரப்பட்டமையாலும் அந்த நாடு சோனகம் என வழங்கப்பட்டிருக்கலாம். அந்தக் சோனகத்தைச் சேர்ந்தவர்களே சோனகர் என்று அழைக்கப்பட்டனர் எனலாம். உயர்திணை ஆண்பால். பெண்பால், பலர்பால் விகுதிகள் அமைவதற்காகச் சோனகர் என்பது திரிந்து இருக்கலாம், உயர்திணை ஆண்பாலில் சோனவன் என்றும் பெண்பாலில் சோனவள் என்னும் பலர்பாலில் சோனவர் என்றும் வந்திருக்கலாம். சோனகன்

என்பதோ சோனகி என்பதோ வழக்கில் இடம் பெறவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையில் அரசாங்க அலுவலகங்களில் தமிழில் பதியப்பெற்ற பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களில் இன அடிப்படையில் சோனவன் என்று ஆணையும் சோனவள் என்று பெண்ணையும் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். சோனவன், சோனவள் என்பதே இலங்கை முஸ்லிம் மக்களின் தமிழ் பேச்சு வழக்கில் இடம் பெற்றிருப்பதையும் நாம் பார்க்கலாம். கம்பரும் தமது இராமாயணத்தில் சோனகர் என்னும் சொல்லைத் தனியே ஆண்டுள்ளார்.

அக்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் தமிழைப் பேசக் கற்றிருந்த போதிலும் எழுதத் தெரியாதவர்களாக இருந்திருத்தல் வேண்டும். அதே நேரத்தில் அல்குர்ஆன் வேதநூலை ஓதக் கூடியவர்களாக இருந்திருத்தல் வேண்டும். அதன் பயனாக அறபு எழுத்துக்களை வாசிக்கும் ஆற்றல் அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ் பேசத் தெரிந்து அறபு வாசிக்கத் தெரிந்திருந்த அன்றைய தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய நூல்களை எழுத அன்றைய தமிழ் நாட்டு அறிஞர் அறபு மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருந்தமையினாலேயே ஒரு புது உத்தியைக் கையாள வேண்டியிருந்தது. எனவேதான் பேச்சுத் தமிழ் நடைக்கு ஒப்பான ஒரு நடையிலே இஸ்லாமியத் தமிழ் நூல்களை எழுத முற்பட்டனர். அக்கால எல்லையில் தமிழ் நூல்களை எழுதிய முஸ்லிம் அறிஞர்களும் தமிழில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர்களாக இருந்திருக்கவில்லை போலும். ஆகவே அவ்விஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாம் பற்றிய தமிழ் நூல்களைஅறபு எழுத்துக்களில் எழுதத் தலைப்பட்டனர்.

அவ்விஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களே அறபுத் தமிழ் இலக்கியங்கள் என வழங்கப்படலாயின. முஸ்லிம்களின் நாளாந்த வாழ்க்கையில் அத்தகைய நூல்கள் அறபுத் தமிழில் எழுதப்பட்ட நூல்களாகக் கருதப்பட்டன. ஒரு காலத்தில் முஸ்லிம் மக்களின் திருமண அழைப்புக்கள் கூட அறபுத் தமிழில் அச்சியற்றப்பட்டன. அறபுத் தமிழ்ப் பயிற்சி ஒரு கலையாகப் பயிலப்பட்டது. தமிழகத்திலே சில கலாசாலைகள் அறபுத் தமிழ்ப் பயிற்சிக்காக வகுப்புக்களை ஒழுங்குபடுத்தின என அவற்றில் பயின்றவர்கள் கூறி உள்ளனர். அத்தகைய அறபுத் தமிழில் உரைநடை மாத்திரமன்று, தலை சிறந்த கவிதை நூல்களும் இயற்றப்பட்டன.

காலப்போக்கில் தமிழ் அறிவு வளரவளர அவ்வாறு அரபுத் தமிழில் எழுதப்பட்ட இஸ்லாமிய நூல்கள் தமிழ்எழுத்துக்களிலும் எழுதப்பட்டன. இன்று கிடைக்கக் கூடிய சில இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தமிழ் எழுத்து, அரபு எழுத்துஆகிய இரண்டு லிபி களிலும் அச்சியற்றப்பட்டிருப்பதைக் காணலாம். அறபு எழுத்துக் களில்எழுதப்பட்ட தமிழ் நூல்கள் தமிழ் எழுத்துக்களில் எழுதப் பட்ட தமிழ் நூல்களை விட புனிதத் தன்மை வாய்ந்தவை என எண்ணிய பாமர மக்களும் இஸ்லாமியரிடையே இருந்தனர். தமிழ் எழுத்தை அரபு எழுத்துக்களில் எழுத முற்பட்டபோது தமிழ் எழுத்துக்களுக்கு சமமான உச்சரிப்பை உடைய எழுத்துக்கள் அரபு மொழியில் இல்லாமையினால் அறபு எழுத்துக்களில் மேலாலோ கீழாலோ குற்றுக்களை இட்டுப் புதிய எழுத்துக்களை உருவாக்க வேண்டிய பொறுப்பும் அவ்வறபு அறிஞரைச் சார்ந் திருந்தது.

தமிழ் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு ஆர்வமுடன் வாழ்ந்த முஸ்லிம் பெருமக்களும் காலத்துக்குக் காலம் தோன்றி உள்ளனர். அவர்கள் சாமந்தர் என வழங்கப்பட்ட சிற்றரசர்களாக இருந் திருக்கலாம். இல்லையென்னாது வழங்கிய கொடை வள்ளல் களாக இருந்திருக்கலாம். வின்னன் எனப் பெயரைக் கொண்டு சிற்றரசராக வாழ்ந்து தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்ட ஒருவருக்கான எடுத்துக்காட்டாக அவரைக் காட்டலாம். தமிழ் வளர்ச்சியிலே பெரிதும் ஈடுபாடு கொண்டு தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கித் தமிழ்த் தொண்டும் இஸ்லாமியத் தொண்டும் புரிந்த சீதக்காதி வள்ளல் போன்றோர் மற்றதற்கான எடுத்துக்காட்டாவர்.

அதே சீதக்காதி என்னும் செய்து அப்துல்காதிர் மரைக்காயர் என்பவர் பெயரால் இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்வது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## பல்சந்தமாலை

இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரப்பிலே தோன்றிய நூல்கள் பல. அவற்றுள் இன்று நமக்குக் கிடைக்கக் கூடியதான மிகப் பழமையான நூல் பல்சந்த மாலை என்னும் இலக்கியமாகும். இப் பல்சந்தமாலையில் இருந்தும் கூட ஒரு சில பாடல்களே இப் பொழுது நமக்குக் கிடைத்து உள்ளன. பழங்காலத்தில் தோன்றிய அகப்பொருள் பற்றிய ஒரு நூலுக்கு எழுதப்பட்ட

உரையிலே இப்பாடல்கள் உதாரணச் செய்யுட்களாகத் தரப் பட்டுள்ளன. அந்த அகப்பொருள் பற்றிய நூல் கூட இன்னும் சரியாக அடையாளங் காணப்படவில்லை.

பல்சந்த மாலைச் செய்யுட்களை உதாரணச் செய்யுட்களாகக் கொண்ட களவியற் காரிகை எனத் தம்மாலேயே பெயரிடப்பட்ட அகப்பொருள் பற்றிய நூலை பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்1931 ல் பதிப்பித்துள்ளார்கள்.

மேற்கோள் நூல்களைப் பற்றிய குறிப்பு ஒன்றைக் களவியற் காரிகை என்னும் நூலின் இறுதியில் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தந்துள்ளார். அக்குறிப்பில் பல்சந்த மாலையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். பல்சந்த மாலை என்ற பெயருடைய நூல் ஒரு சில செய்திகளைப் புலப் படுத்துகின்றது. பன்னிரு பாட்டியலில் பல்சந்தமாலை என்றொரு பிரபந்தவகை கூறப்பட்டுள்ளது. இந்நூல் அப்பிரபந்த வகையைச் சார்ந்ததாக இருத்தல் கூடும். ஆனால் இதன்கணின்று களவியற் காரிகை உரையில் காணப்படுவன எனலாம் கலித்துறைச் செய்யுட் களே. இந்நூல் வச்சிரநாட்டு வகுதாபுரியில் அரசு புரிந்த அஞ்சுவண்ணத்தவர் மரபினனாகிய ஒரு முகமதிய (முஸ்லிம்) மன்னனைக் குறித்துப் பாடப்பெற்றதாகும். வகுதாபுரியை இக் காலத்தில் காயற்பட்டினம் என வழங்குவர். சையத் அப்துல் காதர் (சீதக்காதி) என்ற பிரபு இந்நகரிலேயே வாழ்ந்து வந்தவர். 'மன்மதன் வச்ரநாடன் வகுதை வாழ் சீதக்காதி' என்ற நொண்டி நாடகச் செய்யுளால் (நொண்டியின் சபையுலா விருத்தம்) இது விளங்கும். வகுதாபுரிக்கு 'அந்துபார்' என ஒரு பெயரும் இருத்தல் வேண்டும் என்பது ஒரு செய்யுளால் புலப்படு கின்றது' (களவியற் காரிகை பக். 168-169). வகுதை அல்லது வகுதாபுரி என்பது எந்தப் பட்டினத்தைக் குறிப்பிடுகின்றது என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது. இப்பொழுது பல பட்டினத்தவரும் அப்பெயர் தத்தம் பட்டினங்களையே சுட்டு வதாக வாதாடிக் கொண்டிருக்கின்றனர். வரலாற்றுச் சான்று களோடு நிறுவவும் முற்பட்டுள்ளனர்.

எய்துதற்கருமை, ஆற்றல் கிளத்தல், இரந்து குறையுற்ற விடத்துக் குறையுறுதல், வேழம் வினாதல், கணியென உரைத்தல் ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி, பறவையொடு வருந்துதல், பதியள வுரைத்தல் என்னும் எட்டு அகப்பொருட் துறைகளுக்கே பல்சந்த மாலையிலிருந்து பெறப்பட்டுள்ள எட்டுச் செய்யுட்களும் உதாரணச் செய்யுட்களாகத் தரப்பட்டுள்ளன.

பல்சந்தமாலையில் பல பாடல்கள் இருந்திருக்கவேண்டும். திருவாளர் மு. அருணாசலம்[1] அவர்கள் கூறுவது போல் அது ஒரு கோவை நூலாக இருந்திருந்தால் பல செய்யுட்கள் அதில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் பல களவியற் காரிகையிலே இடம் பெற்றிருத்தல் வேண்டும். களவியற் காரிகைச் சூத்திரங்களும் அவற்றிற்கான உரைகளும் அழிந்து போயின போன்று பல்சந்தமாலையிலிருந்து மேற்கோளாகக் காட்டப்பட்ட பல செய்யுட்களும் அழிந்து போயிருக்கலாம்.

ஓர் இனத்தின் சமய, பண்பாட்டுக் கருத்துக்களைக் கருவாக அமைத்துப் பாடப்படும் இலக்கியங்கள் அவ்வினத்துக்குரிய இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாறே இஸ்லாமிய இலக்கியமும் அமைந்துவிடுகின்றது. அத்தகைய இலக்கியங்கள் தமிழ் மொழியில் தோன்றியுள்ளமையால் அவற்றை இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் என அழைக்கிறோம். இஸ்லாமிய சமய, பண்பாட்டுக் கொள்கைகளை நன்கு புரிந்து கொண்டவர்களால் படைக்கப்பட்ட அத்தகைய இலக்கியங்களே சிறந்தவையாகக் கணிக்கப்படுகின்றன. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களாகக் கருதப்படும் மிகப்பெரும்பான்மையானவை முஸ்லிம் புலவர்களாலே இயற்றப்பட்டுள்ளன. இஸ்லாமிய அடிப்படையிலே படைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் தோன்றியதுதான் பல்சந்தமாலை. மொத்தமாக எத்தனை பாடல்கள் இந்நூலில் இருந்தன என்பதை, நாம் அறியோம். அவை முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை அதன் ஆசிரியர் யாவர் என்பதைக் கூட இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள பல்சந்தமாலைப் பாடல்களிலிருந்து அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம்.

இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள பாடல்களிலிருந்து பல்சந்த மாலையில் பாட்டுடைத் தலைவர் யாவர் என்பதை அறிவோம். அவர் எந்த இனத்தைச் சார்ந்தவர் என்பதை அறிவோம். எங்கிருந்து அரசு புரிந்தார் என்பதும் புலனாகின்றது எந்த நாட்டில் வாழ்ந்தார் என்பதும் தெரிகிறது. அவரைச் சார்ந்தவர்கள் என்ன தொழிலில் ஈடுபட்டார்கள் என்பதும் புலப்படு

---

1. தமிழ் இலக்கிய வரலாறு—14ஆம் நூற்றாண்டு ப. 335.

கின்றது. அத்தகையோரை அழைக்க எவ்வெப்பெயர்கள் பயன் படுத்தப்பட்டன என்பதும் தெளிவாகிறது. அத்தகையோருடைய சிறந்த பண்புகளைப் பற்றியும் அறிய முடிகிறது. அவர்களுடைய வள்ளன்மை போற்றப்படுவதையும் காண்கிறோம். அவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர்களாக வாழ்ந்துவந்தார்கள் என்பது பற்றியும் பல்சந்தமாலையில் சான்றுகள் உள்ளன.

இத்தகைய விவரங்கள் அனைத்தையும் தரக்கூடிய ஒரு நூல் அகப்பொருளைப் பேசுவதாகத் தோன்றி உள்ளது. பொதுவாக அகப்பொருளைப் பற்றி நூல்கள் தோன்றுவதற்கு முன்னர் ஏனைய பொருள்களில் நூல்கள் தோன்றி இருக்கவேண்டும். அல்லது அதேகாலத்தில் தோன்றி இருக்கவேண்டும். அல்லது அதன் முன்மாதிரியாக வைத்துப் பிற பொருள்களில் நூல்கள் தோன்றி இருக்க வேண்டும். அத்தகைய நூல்கள் இஸ்லாமிய அறங்களைப் பற்றிப் பேசி இருக்கலாம். ஒழுக்கங்களைப் பாடி இருக்கலாம். வாழ்க்கை வரலாறுகளை காவியங்களாக இயற்றி இருக்கலாம். போதனைகளை அமைத்து இலக்கியங்கள் யாத்திருக்கலாம். சாதனைகளை வைத்து இலக்கியக் கோபுரங்கள் கட்டி எழுப்பி இருக்கலாம். இன்னோரன்ன பலநூல்கள் தோன்றி இருக்கலாம். பல்சந்தமாலைக்குச் சற்று முன்னரோ, பல்சந்த மாலையின் சம காலத்திலோ அதற்குச் சற்றுப் பின்னரோ இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் நூல்கள் எதுவும் நமக்குக் கிடைக்க வில்லை. அத்தகைய நூல்கள் தோன்றிக் கவனிப்பாரற்று மறைந்து போயிருக்கலாம். உரிய முறையில் பேணிக்காப்பாற்றப் படாது கையேடுகளாகவே முடங்கிக் கிடக்கலாம். ஒரு வேளை அத்தகைய கையேடுகளில் அளவுக்கு அதிகமான அறபுச் சொற்கள் இடம் பெற்றிருந்தமையால் அவற்றைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தினால் அவை புறக்கணிக்கப்பட்டிருக்கலாம். களவியற் காரிகையின் உரைகாரரால் மேற்கோட் செய்யுட்களாகத் தரப் படாதிருந்திருந்தால் பல்சந்தமாலைச் செய்யுட்களும் நமக்கு இன்று கிடைத்திரா. எனவே, தமிழ் கூறும் முஸ்லிம் உலகு களவியற் காரிகை உரைகாரருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

பல்சந்த மாலை என்பது பிரபந்தங்களுள் ஒன்று எனக் கூறப் படுகின்றது. அது பத்துச் செய்யுள் முதல் நூறு செய்யுள் வரை கொண்டதாகப் பாடப்படுவது எனக் கூறுகிறது பன்னிரு பாட்டியல். பத்துப் பாடல்களுக்கு ஒரு சந்தமாகப் பத்து வெவ்வேறு சந்தங்களில் நூறு செய்யுட்களாகப் பாடப்படுவது என்று பிற

பாட்டியல்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் நமக்குக் கிடைத்துள்ள பல்சந்த மாலைச் செய்யுட்கள் களவியல்காரிகையில் மேற்கோளாகக் கொள்ளப்பட்டனவாகும். அது ஒரு தனிநூல். எனவே முன்னர் குறிப்பிட்ட பாட்டியல் இலக்கணம் இப்பல்சந்த மாலைக்குப் பொருந்தாது என்கிறார் திருவாளர் மு. அருணாசலம் பிள்ளை அவர்கள், தமது தமிழ் இலக்கிய வரலாறு-14 ஆம் நூற்றாண்டு என்னும் நூலில். களவியற் காரிகையில் தரப்பட்டுள்ள பாடல்களன்றி வேறு பாடல்கள் கிடைக்கவில்லை. அப்பாடல்கள் வேறு எங்காவது மேற்கோட் செய்யுட்களாகப் பயன்படுத்தப் பட்டிருந்தால் நமக்குக் கிடைத்திருக்கும். அத்தகைய வாய்ப்பு இருப்பது போல் தோன்றவுமில்லை.

பல்சந்த மாலையின் காலம் எது? பல்சந்த மாலையிலிருந்து இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள பாடல்களிலிருந்து பல்சந்த மாலையின் காலத்தை நிர்ணயிக்கக் கூடிய அகச்சான்றுகள் உள்ளனவா? பல்சந்த மாலையின் எல்லாப் பாடல்களும் கிடைத்திருப்பின் சந்தேகத்துக்கிடமின்றிப் பல்சந்த மாலையின் காலத்தை உறுதியாகக் கூறி இருக்கலாம். இப்பொழுது கிடைத்துள்ள பல்சந்த மாலையின் பாடல்களில் இடம்பெற்றுள்ள சொல்லாட்சியினைப் பயன்படுத்தி அதன் காலத்தைக் கூற முடியுமா எனப் பார்ப்போம். பொதுவாக ஒரு நூலில் இடம்பெற்றுள்ள சொற்களின் அமைப்பு முறையும் அவற்றை அந்நூலில் பயன்படுத்தியுள்ள முறையும் ஓரளவுக்கு அதன் காலத்தை நிர்ணயிக்கக்கூடிய அகச்சான்றுகளாகப் பெரும்பாலும் அமைந்துவிடுவது உண்டு. அத்தகைய அமைப்பு முறை பல்சந்த மாலையில் உண்டா என்பதைப் பார்ப்போம்.

ஆவோ டல்லது யகர முதலாது

என்கின்றது தொல்காப்பியச் சூத்திரம்(தொல்காப்பியம் 65:மொழி மரபு 32) ஆகாரத்தோடு கூடி அல்லது யகர ஒற்றுமொழிக்கு முதலாகாது. இது தொல்காப்பிய மொழி மரபு. யானை, யாணர் எடுத்துக்காட்டுகள். தொல்காப்பியரின் மொழி மரபுக்கியைய யவனர் என்னும் சொல் அமைய இயலாது. ஆனால் பவணந்தி முனிவரின் நன்னூலில்.

அஆ உ ஊ ஒஔ யம் முதல்

என (நன்னூல்: 104) வந்துள்ளது. இந்நன்னூற் சூத்திரத்திற்கு உரை வகுத்தவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "தொல்காப்பி

யனார், ஆவோடல்லது யகர முதலாது எனக் கூறி இருப்பினும், பவணந்தி முனிவர் அஆ உஊ ஒஔ என்பனவற்றுடன் யகரம் சொல்லுக்கு முதலில் வருவதாகக் கொண்டது வடசொற்கள் தமிழில் வரும்பொழுது முதலாதலையும் காட்ட என்க. இதனை இங்ஙனம் பின்வருவனவற்றிற்குக் கொள்க. நன்னூலார், வட சொல் இலக்கணத்தையும் ஒருசார் தழுவுதலை மேல், 'மொழி யியல்' என்னாது 'பதவியல்' என்பதனாலும் காண்க. அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ இந்த ஆறு உயிரோடும்கூடிய யகர மெய் சொல்லுக்கு முதலாகும் யவனர், யானை, யுகம், யூகம், யோகம் யௌவனம் எடுத்துக்காட்டுகள்.

பல்சந்தமாலையில் இடம்பெற்றுள்ள இரண்டு செய்யுட்களில் பல்சந்தமாலை ஆசிரியர் தொல்காப்பியரின் மொழிமரபினைப் பின்பற்றி உள்ளார் என்றே தோன்றுகிறது. அவருடைய சொற் பிரயோகம் நன்னூல் கருத்துக்களுக்கு ஏற்புடைத்தாய் அமைய வில்லை. பல்சந்த மாலை ஆசிரியர் சோனகரை (முஸ்லிம்களை)க் குறிக்க 'இயவனர்' என்று இரண்டு இடங்களில் உபயோகிக்கிறார். 'இயவனராசன்' என ஒரு செய்யுளை ஆரம்பிக்கிறார். களவியற் காரிகை 8 ஆம் பக்கத்தில் இடம் பெற்றுள்ள பல்சந்தமாலைச் செய்யுள்

இயவன ராசன் கலுபா தாமுத லெண்ணவந்தோர்

என அதன் முதலடியைக் கொண்டுள்ளது.

... ... ... .... சூ
தெல்லா முணர்ந்தவ ரேழ்பெருந்த தரங்கத்தியவனர்கள்

என 159ஆம் பக்கத்தில் உள்ள பல்சந்தமாலைச் செய்யுளில் இரண்டாமடி அமைந்துள்ளது இவ்விரண்டு செய்யுட்களிலும் 'இயவனர்' என்றே வந்துள்ளது. முதலாம் செய்யுளில் 'இயவனர்' என்பது பாடலை ஆரம்பிக்கும் சொல்லாக அமைந்துள்ளது. மற்றச்செய்யுளில் யகரத்தின் முன்வந்த குற்றியலுகரம் முற்றிய லிகரமாக மாறி 'இயவனர்' என வந்துள்ளது. யவனர் எனப் பாடலில் பயன்படுத்தி இருந்தால் அப்பயன்பாடு தொல்காப்பிய மொழி மரபுக்கு மாறாக இருந்திருக்கும். சான்றோர் அதனை 'வழு' எனக் கருதி இருப்பர். பல்சந்தமாலை ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் 'அகரத்தோடு யகர மெய் மொழிக்கு முதலில் வரும்' என்னும் நியதி இருக்கவில்லை. எனவேதான் பல்சந்தமாலை ஆசிரியர் 'இயவனர்' என்னும் உபயோகத்தை விரும்பி இருப்பார்

இதிலிருந்து பல்சந்தமாலை ஆசிரியரின் காலத்தில் நன்னூலாரின் மொழி மரபு வழக்கில் இருக்கவில்லை எனத் தோன்றுகிறது. எனவே, பல்சந்தமாலை ஆசிரியர் பவணந்தி முனிவர் வாழ்ந்த காலத்துக்கு முற்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

பவணந்தி முனிவர் காலம் கி. பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர். கி. பி. 1181 முதல் 1212 வரை சோழப் பேரரசிரின் ஆட்சியில் குறுநில மன்னனாக ஆட்சி புரிந்தவன் சீயகங்கன். இக்கால எல்லையுள் அவன் வாழ்ந்ததை உறுதிப்படுத்தும் அவனுடைய கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன என்பர். இவனுடைய தலைநகர் குவளாலபுரம் ஆகும். இந்நகர் இன்று மைசூர் மாநிலத்தில் உள்ள கோலார் என அடையாளம் காணப்பட்டுள்ளது என்பர். சீயகங்கன் என்னும் குறுநில மன்னன் வேண்டுகோளுக்கு இணங்கவே பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றி உள்ளார். நன்னூல் சிறப்புப்பாயிரத்தில் சீயகங்கனின் கொடைத் திறம் வருணிக்கப்பட்டுள்ளது. சீயகங்கன் பவணந்தி முனிவருக்கு நன்னூலை இயற்ற ஆதரவு நல்கினமையினாலேயே அவன் அவ்வாறு புகழப்பட்டுள்ளான். ஆக, 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பவணந்தி முனிவரின் நன்னூலில் கூறப்பட்டுள்ள மொழி மரபினைப் பல்சந்த மாலை ஆசிரியர் பின்பற்றவில்லை. ஆதலால் பல்சந்தமாலை ஆசிரியர் 13 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பதே புலனாகின்றது.

களவியற் காரிகையின் உரைகாரர் மேற்கோள் காட்டியுள்ள செய்யுட்கள் எடுக்கப்பட்டுள்ள நூல்களைப்பற்றி ஆராயும் பொழுதும் பல்சந்தமாலையின் காலத்தை நிர்ணயிக்கக் கூடிய சில சான்றுகளைப் பெறலாம். களவியற் காரிகையின் உரைகாரர் அங்கு பல கோவைகளிலிருந்து மேற்கோட் செய்யுட்களைத் தந்துள்ளார். அரையர் கோவை, திருக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, பாண்டிக்கோவை, வங்கர் கோவை, என்னும் கோவை நூல்களிலிருந்து செய்யுட்களை மேற்கோள்களாக, எடுத்துக்காட்டியுள்ளார்; அரையர் கோவையிலிருந்து ஒரு செய்யுளையும், திரு விடைமருதூர் மும்மணிக் கோவையிலிருந்து ஒரு செய்யுளையும், வங்கர் கோவையிலிருந்து மூன்று செய்யுட்களையும் தந்துள்ளார். திருக்கோவையிலிருந்தும் பாண்டிக்கோவையிலிருந்தும் விளக்கப்பட்டுள்ள களவியற்காரிகைச் சூத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு செய்யுள் வீதம் அங்கு மேற்கோள்

தரப்பட்டுள்ளன. அரையர் கோவையிலிருந்து தரப்பட்டுள்ள ஒரு செய்யுளில் 'தயாபரன் தஞ்சை அன்னாய்' என வந்துள்ளது. ஆனால் இச்செய்யுள் தஞ்சைவாணன் கோவையிலிருந்து பெறப் பட்டதன்று. கிடைக்கக்கூடிய கோவை நூல்களிலிருந்து மேற் கோட் செய்யுட்களை எடுத்தாண்ட களவியற்காரிகை உரை காரர் ஏனைய கோவை நூல்களிலிருந்து அத்தகைய செய்யுட் களை எடுக்கத் தவறியது ஏன்? ஏனைய கோவை நூல்கள் அவருக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம். அவருடைய காலத் தில் அவை இயற்றப்படாமல் இருந்து இருக்கலாம் ஏனைய கோவைகளிலிருந்து அவர் மேற்கோட் செய்யுட்களைத் தரத்தவறி யமைக்குரிய காரணம் அவ்வுரைகாரர் அக்கோவைகளுக்குக் காலத்தால் முற்பட்டவராய் இருக்கலாம். உரைகாரரின் காலத் துக்குப் பின்னர்த் தோன்றிய கோவைகளிலிருந்து அவர் தமது உரை நூலில் மேற்கோள்கள் தரவில்லை எனலாம்.

பல கோவைச் செய்யுட்களை மேற்கோள் காட்டிய களவியற் காரிகை உரைகாரர் தஞ்சைவாணன் கோவையிலிருந்து மேற் கோள் காட்டவில்லை. தஞ்சைவாணன் கோவை களவியற் காரிகை உரைகாரரின் காலத்துக்குப் பின்னால் தோன்றி இருக்க லாம். நம்பி அகப்பொருள் இயற்றப்பட்டது கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலே எனத் திருவாளர் மு. அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். நாற்கவிராச நம்பி இயற்றிய அகப் பொருள் விளக்கத்துக்கு இலக்கியமாகவே பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன் கோவையை இயற்றினார் என்றும் கூறி யுள்ளார். ஆகவே தஞ்சைவாணன் கோவையும் கி. பி 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதாகும். களவியற்காரிகையும் அதன் உரையும் தஞ்சைவாணன் கோவைக்கு முற்பட்டன எனலாம். இவ்வடிப்படையில் பார்க்கும்பொழுது பல்சந்தமாலை 12 ஆம் நூற்றாண்டளவில் அல்லது அதற்கு முன்னர் இயற்றப் பட்ட ஒரு நூலெனக் கொள்ளலாம் அல்லவா?

கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாட்டின் ஒரு பகுதியான வைப்பாற்றுக்கும் வைகையாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியைச் சுல்தான் சையதுஇப்றாகீம் ஆட்சிபுரிந்து வந்துள்ளார். அப்பொழுது பாண்டி நாட்டை ஆண்டுவந்த விக்கிரம பாண்டி யனுடன் போர் புரிந்தே சுல்தான் சையது இப்றாகீம் அப்பகுதியில் ஆட்சியைக் கைப்பற்றினார். அவருடைய ஆட்சி ஆரம்பிப்பதற்கு முன்னரேயே முஸ்லிம்கள் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டி

ருந்தனர். ஆக, அந்நாட்களில் வாழ்ந்த ஒரு முஸ்லிம் சிற்றரசனைப் பற்றி ஒரு முஸ்லிம் புலவரால் பாடப்பட்டது பல்சந்தமாலை என்று கூறலாம்.

வின்னன் என்னும் சொல் எவ்வாறு உருவாகி உள்ளது என்று பார்ப்போம். வின்னன் என்பது ஓர் அறபுச் சொற்றொடரின் மருஉ என்றே கொள்ளுதல் வேண்டும். அறபு, வழக்காற்றுக்கிணங்க ஒரு குறிப்பிட்ட பெயரை உடையவனின் மகன் என்பதையே இச் சொற்றொடர் குறிக்கும். ஒலிப்புடைய பகர வல்லெழுத்தைக் கொண்ட 'பின்' என்னும் அறபுச் சொல்லின் பொருள் மகன் என்பதாகும். அவனுடைய தந்தையின் பெயர் எதுவாயிருந் தாலும் இந்த 'பின்' என்னும் சொல்லை அத்தந்தையின் பெயருடன் சேர்த்துச் சொல்லுதலே வழக்காறாகும். பல்சந்த மாலைப் பாட்டுடைத் தலைவனின் தந்தையின் பெயர் 'அவ்ன்' என்றிருந்திருத்தல் வேண்டும். 'அவ்ன்' என்பது அறபுச்சொல். இச்சொல் இயற்பெயராகவும் உபயோகிக்கப்பட்டிருப்பதுடன் 'ஒன்' என மருவியும் வழங்கி வருதலைக் காண்கிறோம். 'அவ்ன்' என்பவன் மகன் என்பதைக் குறிக்க 'பின் அவ்ன்' என்னும் சொற் றொடர் பயன்படுத்தப்படுகிறது. 'அவ்ன்' என்னும் அறபுச் சொல்லுக்குரிய பொருள் 'நெருங்கிய நண்பர்' என்பதாகும்' எனவே 'பின்அவ்ன்' என்பது இயற்பெயராக இருப்பதோடு நெருங்கிய நண்பனின் மகன் என்பதையும் குறிக்கிறது. இந்த 'பின்அவ்ன்' என்பது காலப்போக்கில் சிற்சில மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கவேண்டும்.

தமிழ் அரிச்சுவடியில் வல்லெழுத்துக்கள் உருவம் மாறாது ஒலிப்புடைய வல்லெழுத்துக்களாகவும் ஒலிப்பில்லா வல்லெழுத் துக்களாகவும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். ''பின்அவ்ன்' என்பதில் உள்ள பகரம் ஒலிப்புடைய வல்லெழுத்தாகவே உச்சரிக்கப்படுதல் வேண்டும். ஒலிப்புடைய வல்லெழுத்தாக வரும் பகரம் பெரும்பாலும் எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் வகரமாக மாறியிருக்கிறது. சான்றாக ஒலிப்புடைய வல்லெழுத்தை முதலில் கொண்ட 'பஸ்' (Bus) என்னும் சொல் 'வசு' என இலங்கையின் சில இடங்களில் மாறி இருப்பதைக் காணலாம் முஸ்லிம் எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் இத்தகைய மாற்றம் ஏற்படுகிறது. முஸ்லிம் மக்களைத் தொழுகைக்கு அழைப்பதைப் பாரசீகத்தில் 'பாங்கு' என்பர். இங்கே முதலெழுத் தான பகரம் ஒலிப்புடைய வல்லெழுத்தாகவே உச்சரிக்கப்படல்

வேண்டும். இச்சொல்லை இதே கருத்தில் பயன்படுத்தும் தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்கள் பாங்கு என அதன் முதல் எழுத்தை ஒலிப் புடைய வல்லெழுத்தாக (Baangu) எனப் பயன்படுத்துவதோடு அந்த ஒலிப்புடைய வல்லெழுத்தாகிய பகரத்தை வகரமாக மாற்றி 'வாங்கு' எனவும் பயன்படுத்துகின்றனர். அதே அடிப்படை யில் அபூபக்கர் என்பதை அவூவக்கர் என்பர். அதேபோன்று இங்கே குறிப்பிடப்பட்ட 'பின் அவ்ன்' என்னும் பெயர் 'வின் அவ்ன்' என மாறிக் காலப் போக்கில் உச்சரிப்பு எளிமை காரணமாக 'வின்அன்' என மாறியிருக்கவேண்டும் வின் அன் இரண்டும் சேர்ந்து முன் னோக்கி ஓரினமாதல் என்று அடிப்படையில் வின்னன்என்ற சொல் ஏற்பட்டிருக்கவேண்டும்.

ஆக, பல்சந்த மாலையில் வரும் வின்னன் என்னும் சொல் அவ்ன் என்பவரின் மகன் எனப் பொருள்படலாம். அல்லது நெருங்கிய நண்பனின் மகன் எனவும் பொருள்படலாம்.

வின்னன் என்னும் பாட்டுடைத்தலைவன் பல்சந்தமாலையில் 'கலைமதி வாய்மைக் கலுபா' என்றும் 'இயவன ராசன் கலுபா' என்றும் 'வச்சிர நாட்டுக்கிறையாகிய கலுபா' என்றும் அழைக்கப் பட்டுள்ளான் என்று முன்னர் குறிப்பிட்டோம். இங்கே கலுபா என்னும் சொல் எதைக் குறிக்கிறது? பல்சந்தமாலையைப் பற்றி எழுதியவர்கள் அத்தனை பேரும் 'கலுபா' என்பது அறபுச் சொல் என்றும் அது 'கலிபா' என்பதிலிருந்து மருவி வந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

'கலிபா' என்னும் அறபுச்சொல் திருக்குர்ஆனிலே வருகிறது. பிரதிநிதி என்னும் கருத்தில் இச்சொல் திருக்குர்ஆனிலே ஆளப் பட்டுள்ளது. (2:30, 38:26) ஆட்சிப் பொறுப்பை வகித்ததோடு தொடர்புடையதாக அச்சொல் அங்கு அமையவில்லை. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் மறைவுக்குப் பின்னர் அவர் களின் பரிபாலனப் பொறுப்புக்களைச் செயல் முறைப்படுத்து வதற்கு அபூபக்கர் (றலி) அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்கள் தாம் 'கலிபத்றசூலுல்லாஹ்' (அல்லாஹ்வின் தூதரின் பிரதிநிதி)என்னும் சிறப்புப்பெயருக்குத் தகுதி உடையவரானார்கள். அவர்கள் அதனைத் தமது சிறப்புப்பட்டமாக உபயோகிக்க வில்லை எனலாம். அபூபக்கர் (றலி) அவர்களுக்குப்பின்னர் ஆட்சி பீடத்தில் அமர உமறு கத்தாப் (றலி)அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள், கலிபா என்னும் பட்டத்தை முதலில் சூடியவர் உமறு

கத்தாப் புலவர் (றலி) அவர்கள் என்பர். ஆனால் உமறுகத்தாப் (றலி) அவர்கள் கலிபத் கலிபத் றசூலுல்லா(அல்லாஹ்வின் தூதரின் பிர்திநிதியின் பிரதிநிதி)என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்கள். ஆனால் இந்தப் பட்டம் மிக நீளமானதொன்றாகக் கருத பட்டமையால் அது கலிபா எனச் சுருக்கிக் கொள்ளப்பட்டது என்பர். உமையாக்களும், அப்பாஸியாக்களும் கலிபா என்னும் பட்டத்தைப் பயன்படுத்தி வந்தனர். அப்பாஸியக் கலிபாக்களின் ஆட்சி வீழ்ச்சியுறும் சமயத்தில் அவர்கள் அல்லாஹ் என்னும் திருநாமத்தைத் தமது பட்டங்களில் சேர்த்துக்கொள்ளலாயினர். அதன் பயனாகக் குடிமக்கள் அவர்களுக்கு 'கலிபத்துல்லா' (அல்லாஹ்வின் பிரதிநிதி) போன்ற பட்டங்களைச் சூட்டலாயினர். அல் முத்லக் என்பவரின் காலத்திலே இந்தப்பழக்கம் முதன்முதல் தோன்றியது. பின்னர் உஸ்மானியப் பேரரசிலும் இந்த வழக்கு இருந்தது.

உமையாக்களும் அப்பாஸியாக்களும் எகிப்தை ஆண்ட பாத்திமிய்யாக்களும் ஸ்பெயினை ஆட்சி புரிந்த உமையாக்களும் பிற்காலத்தில் வந்த உஸ்மானியர் போன்ற அரசர்களுமே கலிபாப் பதவியைப் பயன்படுத்தி உள்ளனர். மற்றவர்கள் தம்மை சுல்தான் (மன்னன்) என்றே அழைக்கலாயினர். இந்தியாவில் ஆட்சி புரிந்தவர்களும் தம்மைச் சுல்தான் என்றே அழைத்தனர். ஆட்சி புரிந்தனர். அதன்காரணமாக ஆட்சி பீடத்தில் அமர்ந்தவர்களைக் கலிபா என அழைக்கும் பழக்கம் அருகிவிட்டது எனலாம். 12 நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி புரிந்த செய்யத் இப்றாஹீம் அவர்களும் சுல்தான் என்றே அழைக்கப் பட்டுள்ளார்.

பல்சந்தமாலையில் வின்னனைக் குறிப்பிட்ட 'கலுபா' என்னும் சொல்லுக்கும் 'வெற்றி வீரன்' என்று பொருள்படும் 'கலப' என்னும் சொல்லுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது புலனாகின்றது. வின்னனும் வெற்றி வீரன் என்னும் பொருளிலேதான் கலுபா என அழைக்கப்பட்டுள்ளான். ஆக, கலுபா என்னும் சொல் கலிபா என்பதின் மரூஉ எனச் சொல்வதை விட கலப என்னும் சொல்லின் திரிபு எனக் கொள்வது சாலப் பொருத்தமுடைத்தது அல்லவா?

பல்சந்தமாலையில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ள செய்யுட்களில் வந்துள்ள மற்றொரு அறபுச்சொல் அல்லா என்பதாகும். அந்த அறபுச் சொல்லைப் பிழையின்றி எழுதுவதாயின்

அது அல்லாஹ் என இருத்தல் வேண்டும். அல்லாஹ் என்பது இறைவனைக் குறிக்க இஸ்லாம் பயன்படுத்தும் ஒரு சொல். அதனைத் தமிழில் மொழிபெயர்க்க முடியாது. எனவேதான் அச்சொல் அவ்வாறே தமிழ் நூல்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

முஸ்லிம்களைத் தொழுகைக்கு வருமாறு முஅத்தின் அழைக்கும் பாங்கு சொல்லும் பொழுது அந்த அதானில் அல்லாஹ் என்னும் சொல் பதினொரு முறை வருகின்றது. ஆதலினால் பாங்கு ஒலிக்கக் கேட்டு முஸ்லிம்கள் பள்ளிவாசலுக்கு வந்தனர் என்று கூறுவதை விட 'அல்லாஹ்' என்று பலமுறை சொல்வதைக் கேட்டு முஸ்லிம்கள் பள்ளிக்கு வந்தனர் என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார் பல்சந்தமாலை ஆசிரியர் என்று கொள்ள லாம்.

பல்சந்த மாலையில் முஸ்லிம்களைக் குறிக்க யவனர், சோனகர், அஞ்சுவண்ணத்தர் என்னும் சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. யவனர், சோனகர் என்பனவற்றை முன்னர் அறிந் தோம். அஞ்சுவண்ணத்தார், ஒரு வணிகர் குழுவினர் என்றும், சுயேச்சையுடன் வாழ்ந்த குழுவினர் என்றும், ஐவகைச் சாதியினர் என்றும் பல்வேறு விதமாகச் சரித்திர ஆசிரியர் கூறி உள்ளனர்.

பல்சந்த மாலையில் இயவனரும் அஞ்சுவண்ணத்தவரும் ஒரே குழுவினர் என்பது

இயவன ராசன் கலுபா தாமுத வெண்ண வந்தோர்
இயன்மிகு தானையர் அஞ்சு வண்ணத்தார்......

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது,

சோனகர் வாழும் செழும்பொழில் அந்துபார்

என அதே குழுவினரைக் குறிக்கச் சோனகர் என்னும் சொல்லும் வந்துள்ளது. முஸ்லிம்களைக் குறிக்கவே இச்சொற்கள் பயன்படுத் தப்பட்டுள்ளன எனக் கூறலாம்.

கீழ்க்கடற்கரையில் பாண்டிநாட்டில் உள்ள தீத்தாண்டதான புரத்திலும் அக்குழுவினர் இருந்தனர் என்பது அவ்வூர்க் கல்வெட் டொன்றால் அறியப்படுகிறது. அன்றியும் சோழ நாட்டிலுள்ள துறைமுகப்பட்டினமாகிய நாகப்பட்டினத்தில் அவர்கள் வாணிகம் நடத்திக் கொண்டு சிறப்புற்றிருந்தமை பற்றிப் பழைய பாடல் ஒன்று தெளிவாகப் புலப்படுத்துவதைக் காணலாம். எனவே அவர்கள் தமிழகத்தில் யாண்டும் சென்று வாணிகம் நடத்திப் புகழ் படைத்தவர்கள் என்பது நன்கு தெளியப்படும்.

திருவாளர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் தமது 'கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்' என்னும் நூலில் (பக்கம் 16-22) கல்வெட்டுக்களிலே காணப்படும் சில குழுவின் பெயர்களுள் அஞ்சுவண்ணம் என்னும் தலைப்பில் அஞ்சுவண்ணத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் 'கடற்கரை நகரங்களில் அஞ்சுவண்ணம் என்ற குழு ஒன்று இருந்தது என்பது கோட்டயச் செப்பேடுகளாலும் கொச்சிச் செப்பேடுகளாலும் அறியப்படுகின்றது என்றும், இராமநாதபுர மாவட்டம் திருவாடானைத் தாலுகாவின் கடற்கரையிலுள்ள தீத்தாண்டதானபுரத்தில் காணப்படும் கல்வெட்டொன்றிலும் அக்குழுவின் பெயர் பயின்று வருகின்றது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். அக்குறிப்புக்களையும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

இவ்வாண்டு வேணாடு வாழ்கின்ற அய்யனடிகள் திருவடியும் அதிகாரரும்

பிரகிருதியும்... அஞ்சுவண்ணமும் புன்னைத் தலைப்பதியும் உள்வைத்து.

கோட்டயச் செப்பேடுகள் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சேரமான் தாணுரவியின் ஆட்சிக் காலத்தவை. கொச்சிச் செப்பேடுகள் பாஸ்கர ரவிவர்மன் காலத்தனவாகும். அச்சேரமன்னன் முதலாம் இராசராச சோழன் காலத்தவன். எனவே அச்செப்பேடுகளும் தொன்மை வாய்ந்தவை. தீத்தாண்டதானபுரக் கல்வெட்டு சடையவர்மன் வீரபாண்டியன் ஆட்சியில் கி.பி. 1269 இல் பொறிக்கப்பெற்றது.

கோட்டயம் என்பது தமிழகத்தில் மேற்குக் கடற்கரையிலுள்ள பட்டினம். தீத்தாண்டதானபுரம் என்பது கிழக்குக் கடற்கரையில் உள்ள ஓர் ஊர். இவை இரண்டும் முற்காலத்தில் சிறந்த கடற்கரைப்பட்டினங்களாகத் திகழ்ந்தன. எனவே அப்பட்டினங்களில் வாழ்ந்த ஒரு வணிகர் குழுவைச் சுட்ட அஞ்சுவண்ணம் என்பது பயன்படுத்தப்பட்டது.

பாரசீக மொழியிலே 'அஞ்சுமன்' என்னும் ஒரு சொல் உண்டு. அதனை Anjuman என ஆங்கில வரிவடிவங்களில் எழுதலாம். பாரசீக-ஆங்கில அகராதியில் அச்சொல்லுக்குரிய கருத்து— Assembly, Congress, Congregation என ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது. அவற்றிற்கான தமிழ்க் கருத்தினை முறையே ஒருங்கு கூடுதல், பேராண்மைக்கழகம்,வழிபாட்டிடங்களுக்கு வழக்கமாகச் செல்லும் மக்கள் தொகுதி எனலாம். இதே பொருளைத்தரும்

அறபுச்சொல் 'இன்ஜிமா' (Injima) என்பதாகும். கூட்டம் கூடுதல் என்ற பொருளைக் கொண்டது அச்சொல்.

இன்றும் வடஇந்தியாவில் வாழும் போறா (Bohra) முஸ்லிம் சமூகத்தினர் தாம் எங்கெங்கு வாழ்ந்தாலும் அங்கங்கெல்லாம் அவர்கள் அமைத்துக்கொண்டுள்ள சங்கங்களை அஞ்சுமன் என்பதனை முதற்சொல்லாகக் கொண்டே அழைக்கின்றனர். போறாச் சமூகத்தினர் எல்லா இடங்களிலும் வணிகச் சமூகமாகவே வாழ்ந்து வருகின்றனர். வட கனாறாவில் உள்ள ஒரு பொறியியற் கல்லூரி, அஞ்சுமன் பொறியியற் கல்லூரி என்றே அழைக்கப் படுவதை இன்றும் காணலாம்.

எந்த ஒரு கிராமத்திலும் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலைச் சார்ந்த அதன் அங்கத்தவர்களைக் கூட்டாக்கி குறிப்பிடும் பொழுது ஜமாஅத்தார் என்றே அழைக்கின்றோம். ஜமாஅத் என்னும் அறபுச் சொல்லுக்கு ஆர் விகுதி சேர்ந்தே ஜமாஅத்தார் எனப்படுகிறது. ஜமாஅத் என்று கூறும்பொழுது அது ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொருள்படும். ஜம்உ என்னும் சொல்லே அதற்குரிய வேர்ச் சொல்லாகும். முன்னர்க் குறிப்பிட்ட இன்ஜிமா என்னும் அறபுச் சொல்லும் இதிலிருந்தே தோன்றி உள்ளது. ஒரே நோக்கத்துக்காக ஒன்று சேரும் ஒரே இனமக்களை குறிப்பிட ஜமாஅத் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டது போல அஞ்சுமன் என்னும் பாரசீகச் சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

அந்த அஞ்சுமன் என்னும் சொல் காலப்போக்கில் அஞ்சுவன் என மாறி இருக்கலாம். கூட்டத்தாரையும் உள்ளடக்கிக் கூறுவதற்காக அம் சாரியை பெற்று அஞ்சுவன் + அம் = அஞ்சுவண்ணம் என உருவாகி இருக்கலாம். தென்பிராந்தியத்தைக் குறித்த தெக்கான் என்னும் சொல் காலப்போக்கில் தெற்கில் உள்ள எல்லாவற்றையும் உள்ளடக்குமுகமாகத் தெக்கானம் என வழங்கப்பட்டது போல் அஞ்சுவண்ணமும் தோன்றி இருக்கலாம். அஞ்சுவண்ணம் என்பது உருவான பின்னர் அந்த அஞ்சுவண்ணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிப்பிட அந்த அஞ்சுவண்ணம் என்னும் புதுச் சொல்லோடு அத்து என்னும் சாரியையும் அர் என்னும் விகுதியும் சேர்ந்து அஞ்சுவண்ணம் + அத்து + அர் = அஞ்சுவண்ணத்தர் எனத் தோன்றி வழக்கில் வந்திருக்கலாம். இன்றும் தமிழ்நாட்டில் சில இடங்களில் உள்ள முஸ்லிம் சங்கங்களைக் குறிப்பிடுவதற்கு அஞ்சு

வண்ணம் என்னும் சொல் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இச்சொற்றொடர் சில சமயங்களில் டண்ணகரத்தைப் பெற்று அஞ்சுவண்ணத்தார் எனவும், சில சமயங்களில் றன்னகரத்தைப் பெற்று அஞ்சுவன்னத்தர் எனவும் வழங்கப்படுவதைக் காணலாம். இலங்கையிலே வியாபாரத்துறையில் ஈடுபட்டிருக்கும் வடஇந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட போறா (Bohra) சமூகத்தினரே அஞ்சுமன் என்னும் சொல்லைத் தமது சங்கத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் அங்குள்ள தமது சங்கத்தினை 'அஞ்சுமன்-ஏ-சைபி' என அழைக்கின்றனர்.

வண்ணம் என்னும் சொல் சாதியைக் குறிக்கும் (தொல்காப்பியம்: பொருளதிகாரம் 82 உரை) வர்ணம் என்பதும் வருணம் என்பதும் அதே கருத்தைக் கொண்டுள்ளன.

நால்வேறு வருணப் பால்வேறு காட்டி

என மணிமேகலையில் (6:56) வருணம் என்னும் சொல் பிராமணன் சத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நால்வகைப்பட்ட சாதியினரைச் சுட்டிற்று என்பர். இரு தசாப்தங்களுக்கு முன்னர் தமிழகத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்கும்பொழுது ஒருவர் மற்றவரிடம் அவர் சார்ந்த வருணத்தை உசாவுவது வழக்கமாக இருந்தது என்பர். பண்டு முஸ்லிம்கள் வந்தபொழுது அவர்களிடமும் அவர்கள் எந்த வருணம் எனக் கேட்கப்பட்டதாம். நான்கு வருணத்தையும் நன்கு புரிந்து கொள்ளாத நிலையில் தாம் ஐந்தாம் வருணம் அல்லது அஞ்சாம் வண்ணன் என்று விடை கூறினார்களாம். இதனாலேயே முஸ்லிம் மக்கள் அஞ்சாம் வண்ணத்தார் என அழைக்கப்பட்டனராம். பின்னர் அஞ்சாம் வண்ணத்தர் என்பது அஞ்சுவண்ணத்தர் எனச் சுருங்கிற்றாம்.

அஞ்சுவண்ணத்தர் பற்றிய மற்றொரு செய்தியும் வழக்கில் உள்ளது. பாரசிக நாட்டின் கைஸ் (கீஸ்) தீவிலிருந்து தமிழகம்வந்து தமிழக அரசியலில் அன்று நெருக்கமாக ஈடுபட்டவர் சுல்தான் ஜமாலுத்தீன் என்பவர். அப்பெரியாரைத் தொடர்ந்து ஐந்து வமிசத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகம் வந்தனர். ஆசிம் வமிசத்தாரும் பக்கிரி வமிசத்தாரும் பாறூக் வமிசத்தாரும் உமையா வமிசத்தாரும் இராணுவ யுக்தர்களும் தமிழகம் புக்கனர். நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் வமிசாவழியினர் ஆசிம் வமிசத்தினர் என்றும், அபூபக்கர் (றலி) அவர்களின் வமிசாவழியினர் பக்கிரி வமிசத்தினர் என்றும், உமறே பாறூக் (றலி) அவர்களின்

வமிசாவழியினர் பாறுக்கி வமிசத்தினர் என்றும், உதுமான் (றலி) அவர்களின் வமிசாவழியினர் உமையா வமிசத்தினர் என்றும், இன்று இராவுத்தர் என வழங்கப்படும் குதிரை வாணிகம் குதிரை யேற்றம் முதலியவற்றில் சிறந்து விளங்கியவர்கள் இராணுவ யுக்தர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இந்த ஐந்து குழுவினரும் பின்னர் அஞ்சு வண்ணத்தவர் (அஞ்சாம் வருணத்தவர்) எனப் பட்டனர் என்பதே அச்செய்தியாகும்.

களவியற் காரிகை உரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள பாடல்கள் அமைந்துள்ளவரிசையில் பார்ப்போமேயானால் வச்சிர நாடு, வச்ர நாடர், வகுதாபுரி, வச்சிரநாட்டு அந்துபார் என்னும் இடப்பெயர்கள் இவ்வாறு அமைந்துள்ளன. இதிலிருந்து பல்சந்த மாலைப் பாட்டுடைத் தலைவனாகிய வின்னன் என்னும் குறுநில மன்னன் ஆட்சி புரிந்த நாட்டின் பெயர் வச்சிர நாடு என்பதும், அக்குறுநிலமன்னன் ஆட்சிபுரிந்த நகர் வகுதாபுரி என்றும் அந்து பார் என்றும் வழங்கப்பட்டது என்பதும் புலனாகின்றன.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி வச்சிரநாடு என் பதைப் பாண்டி மண்டலத்தில் உள்ள ஒரு கடற்கரைநாடு எனக் குறிப்பிடுகின்றது. வச்சிரம் என்றால் புல் எனப்படும். பாண்டி நாட்டுக் கிழக்குக் கடற்கரையிலே திருப்புல்லாணி உள்ளது. இது முன்பு திருப்புல்லணை என்று இருந்தது என்றும் பின்னர் மருவியது என்றும்கூறுவர். அந்தத் தர்ப்பம் என்னும் புல் காரணமாகத் தர்ப்பசயனம் என வழங்கலாயிற்று என்றும் கூறுவர். இராமர் இலங்கை செல்ல அணைகட்டிய காலத்தே தர்ப்பப்புல்லைப் படுக்கையாக அமைத்து அதில் படுத்து உறங்கிய இடமே தர்ப்பசயனம் ஆயிற்று என்றும் அது தமிழாக்கப்பட்டு திருப்புல்லணை என்று வந்து திருப்புல்லாணி என வழங்கப்பட்டது என்றும் அபிப்பிராயப் படுவர். இதனையே வச்சிரநாடு என்றும் கூறுவர். எது எவ்வாறாயினும் பல்சந்தமாலைப் பாட்டுடைத் தலைவரான வின்னன் குறுநிலமன்னனாக ஆட்சிபுரிந்த நாடே வச்சிரநாடு எனப்பட்டது எனத் துணிந்து கூறலாம்.

வின்னனுடைய வச்சிரநாட்டின் தலைநகராக அமைந்தது வகுதாபுரி. இந்த வகுதாபுரியை வகுதை என்பர். வகுத்தளித்த மண்டலம் என்பதிலிருந்து 'பிறந்தது வகுதை என்று' கூறுகிறார் எம். சையிது முகம்மது அவர்கள். அவர் பதிப்பித்த நபி அவதார அம்மானையில் இடம் பெற்றுள்ள அவர்தம் முன்னுரையில் 'பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சிபுரிந்த குல

சேகர பாண்டியன் தமது மகளை மணந்த தமது அமைச்சரான தகிய்யுத்தீன் பின் அப்துல் றகுமான் அவர்களுக்கு சீதனமாக வகுத்தளித்த மண்டலமே'வகுதை என்னும் பெயரோடு வழங்கப் பெற்றது' என்று குறிப்பிடுகிறார். கீழைநாட்டின் காஹிறா (கெய்ரோ) எனக் காயல் பட்டணம் விளங்குகிறது. அதே போன்று கீழக்கரை, கீழை நாட்டின் வகுதை யாக விளங்குகிறது. வகுதை என்பது பகுதாது என்பதன் திரிபாகும். பல்சந்தமாலையில் வகுதை ஒரு நகரமாகவே குறிப் பிடப்பட்டுள்ளது.

> நகுதா மரைமலர் சூழ்வாவிசூழ்வச்ர நாடர் தங்கள்
> வகுதாபுரி...........

என்றே வந்துள்ளது.

வகுதைக்குரிய மற்றொரு பெயரும் பல்சந்தமாலையில் குறிப் பிடப்பட்டுள்ளது. அந்துபார் என வழங்கப்பட்டுள்ளது.

சோனகர் வாழுஞ் செழும்பொழில் சூழ்அந்துபார னையாள் என்கிறது பல்சந்தமாலை. அந்து+பார் என்னும் இரண்டு சொற் களாலானது இப்பெயர். பார் என்பது கரை, நிலம், நாடு என்னும் பொருளில் அறபில் உபயோகிக்கப்படுகிறது. மலைநாடு என்பது மலபார் என்னும் கறுப்பர்நாடு என்பது ஸன்ஸிபார் என்றும் வழங் கப்படுவதைக் காணலாம். அந்துபார் இல் உள்ள பார் என்பதும் அதேபோன்ற கரை அல்லது நாடு என்பதைக் குறிக்கும். அந்து என்பதைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டால் அது அந்தம், முடிவு என்பதைக் குறிக்கும். சீவக சிந்தாமணியில் வரும் ஒரு செய்யுளில் இறுதி அடி,

> ஆதியந் தகன்ற நான்மைக்கொடியெடுத்
> திறைமை கொண்டான்
>
> (முத்தியிலம்பகம்: 484 (3082))

என வந்துள்ளது. அந்தம் என்னும் பொருளிலே இவ்வடியில் அந்து என்பது வந்துள்ளது. ஆக, தமிழ்ச்சொல் அந்து என்பதையும் பார் என்னும் அறபுச்சொல்லையும் அது கொண்டதாயின் கடைசியில் உள்ள கரை அல்லது நிலம் அல்லது பிராந்தியம் என்று அதற்குப் பொருள் கொள்ளலாம். அந்துபார் என்னும் பெயரில் வரும் இரண்டு சொற்களும் அறபுச்சொற்கள் எனக்கொள்ளின் அதற்கு வேறுவிதமாகப் பொருள் கூறலாம். அறபுமொழியில் ஹம்து என்பது புகழ் எனப் பொருள்படும். ஹம்து என்பது அம்து என்றும் அந்து என்றும் திரிந்ததாகக் கொள்ளலாம். எனவே அந்து பார்

என்பதைப் புகழ் பெற்ற கரை அல்லது புகழ் பெற்ற பிராந்தியம் எனப் பொருள் கொள்ளலாம். புகழ்பெற்ற நகரம் என்றும் பொருள் கொள்ளலாம். எவ்வாறாயினும் அந்துபார் என்பது பாண்டிமண்டலத்தில் உள்ள ஒரு கடற்கரை நாடான வச்சிரநாட்டின் துறைமுகப்பட்டினமாகப் புகழ்பெற்று விளங்கியது எனக் கூறலாம்.

வின்னன் இனத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றி மற்றொரு வருணனை இடம் பெற்றுள்ளது. அவர்கள் சிவந்த நிறத்தை உடையவர்கள். அவர்கள் அரசரைப் போன்றவர்கள். பகைவரின் மானத்தை அழிப்பவர்கள் மானதர். (இறையனார் அகப்பொருள் உரை மேற்கோட்செய்யுள்) (1:163) இறையனார் அகப்பொருளில் மானதவன் எனஒருமையில் வந்திருக்கப் பல்சந்தமாலைச்செய்யுள் மானதர் எனப் பன்மையில் பயன்படுத்தி இருப்பதைக் காணலாம். செம்மையான குங்குமப் பூக்களைப் போலான மாலை அணியப் பட்ட புயங்களை உடையவர்கள் அவர்கள். அத்தகையோரைப் பல்சந்தமாலை ஆசிரியர் இவ்வாறு வருணிக்கிறார்.

செம்முக மானதர் செங்குங்குமப் புயர் சீர்...

இச்சொற்றொடரை முதலாம் அடியின் முற்பகுதியாகக் கொண்டுள்ள செய்யுளில் பொழில் எனப் பெயராகவும் பொழிய என வினை எச்சமாகவும் பொழி எனப் பெயர் எச்சமாகவும் ஒரே வேரிலிருந்து பிறந்த சொற்கள் வந்திருப்பதைக் காணலாம். அங்கே ஒரு சோலை உண்டு. அந்தச் சோலையிலே நறுமணம் எங்கும் பரந்து கொண்டு இருக்கிறது. பச்சைப் பசேலெனப்பசுமை நிறம் மலிந்திருக்கின்றது. மரங்களும் அவ்வளவு அடர்த்தியாக இல்லை. அத்தகைய சோலையிலே தலைவி சந்திரனைப்போன்றும் தோழியர் சந்திரனைச் சூழ உள்ள நட்சத்திரங்களைப் போன்றும் இருக்கின்றனர். அப்போது அங்கே தலைவன் வருகின்றான்-தலைவியுடன் பேச வேண்டும் என்ற ஆசை தலைவனுக்கு ஏற்படுகின்றது. அவன் ஓர் உபாயத்தைக் கையாளுகின்றான். ஒளிபொருந்திய நெற்றிகளை உடையவர்களே! என வியந்து அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கிறான். காவலை உடைய உங்களுடைய இந்தக் காட்டு வழியாக ஒரு யானை போவதைக் கண்டீர்களோ என வினாவுகின்றான். அந்த யானை சாதாரணமான யானை அன்று. ஒரு மதம் பிடித்த யானை. கன்னமதம், கைமதம், கோசமதம் என்னும் மூன்று விதமான மதநீர் வடியும் யானை. அந்த மதநீர் மழை போன்று வடிகின்றது. மதம் பிடித்த யானை சத்தமிடுவது

வழக்கம். அந்த யானையின் சத்தம் சாதாரணமானதொன்றன்று. மழையைப் பொழிகின்ற முகில்கள் ஒன்றோடொன்று மோதும் பொழுது ஏற்படும் பேரிடி முழக்கம் போன்று முழங்கிக் கொண்டு வந்தது அந்த யானை. அது கையை உடைய மலைபோன்ற யானை. இவ்வாறு விவரித்துத் தலைவன் ஒரு சாட்டாக வினாவு கின்றான். இக்கருத்துக்களையே பல்சந்தமாலை ஆசிரியர்,

.....................சீர் சிறந்த
மைம்மலி வாசப்பொழில்வாய் மதியன்ன வாணுதலீர்
மும்மத மாரிபொழியப் பொழி முகில்போல் முழங்கிக்
கைம்மலை தான்வரக் கண்டதுண்டோநும்கடி புனத்தே.

என நயம் மிளிரப் பாடியுள்ளார்.

அந்துபாரிலே சோனகர் வாழ்ந்தனர். அவ்வந்துபாரில் செழுமையான பூஞ்சோலைகள் இருந்தன. அவர்களுடைய தனிச் சிறப்பு அவர்கள் எல்லோரும் உதவி செய்வதாகும், அருள் செய் வதாகும். உலகை வளர்ப்பதற்கு அந்தச் சோனகர் அருள் புரிந்தனர். தருமம் செய்து உலகை வளர்த்தினர். அள்ளி அள்ளிக் கொடுத்தனர். இல்லையெனாது கொடை வழங்கினர். வானமே வெட்கும்படியாக வள்ளன்மையில் சிறந்து விளங்கினர். பொது வாக வானம் மழையை வழங்கும். கேட்காமலே தரும். இல்லை என்னாது கொடுக்கும். எல்லோரும் பயன் பெற அளிக்கும். அத்தகைய வானத்திலிருந்து பொழியும் மழையும் வெட்கம் அடையும் அளவுக்கு வாரிவழங் கினர் சோனகர். முஸ்லிம்களாகிய சோனகர் வாரி வாரி வழங்கும் அளவுக்கு வழங்க முடியவில்லையே என்று வானம் நாணியது. இக்கருத்துக்களே,

வானது நாணக் கொடையா லுலகை வளர்த்தருளும்
சோனகர் வாழுஞ் செழும்பொழில் சூழந்துபார்.

என்று பல்சந்த மாலையில் உள்ள ஒரு செய்யுளின் முதல் இரண்டு அடிகளாக அமைந்துள்ளன.

கொடை வள்ளல் சீதக்காதி அவர்கட்கும் அவர்கள் மூதாதை யர்க்கும் அவர்கள் வழித்தோன்றல்களுக்கும் பொருந்துவதாக இப்பாடல் அமைந்திருக்கிறது அல்லவா?

தலைவனும் தலைவியும் பாலை நில வழியாகச் சென்றனர். அப்பாதையில் செல்லுதலினால் களைப்படைந்த அவர்கள் இருவரும் நிழல் உள்ள ஓர் இடத்தை நாடினர். அங்கே தங்கித்

சிறிது விளையாடிவிட்டு அப்பால் செல்லத் தலைப்பட்டனர். அப்பொழுது அவர்கள் ஒரு வழிப்போக்கர் கூட்டத்தைச் சந்தித் தனர். "நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்? எங்கே போகிறீர்கள்?" என வினவினர். அவர்கள் தாம் செல்லும் இடத்தைக் கூறினர். வழிநடை வருத்தமுற்ற இந்நங்கையோடு விரைவாகச் சென்றால் உனது நாட்டகம் அண்மையில்தான் இருக்கிறது! என்றும் கூறினர். 'அங்கே பல சோலைகள் உண்டு. அந்தச் சோலைகளில் நல்லார்தாம் பயில்கின்றனர். எத்தகைய நல்லவர்கள் என்றால் அவர்கள் அல்லாஹ் என்று ஒலி கேட்ட வுடனேயே வந்து அவர்கள் செய்த சத்தியம் தவறாது நாளொன்றுக்கு ஐவேளை அல்லாஹ்வைத் தொழும் நல்லவர்கள். அவர்கள் யவனர்கள். ஏழு பெருங்கடல்களையும் கடந்து செல் பவர்கள். வியாபாரத்தின் உபாயங்கள் அனைத்தையும் இரகசி யங்கள் எல்லாவற்றையும் நன்கு உணர்ந்தவர்கள்- அத்தகையோர் வாழும் இடத்தை வில்போன்ற வளைந்த நெற்றியை உடைய வளும் நீயும் விரைவாகச் சென்று அடைவீர்கள்' எனவும் கூறினர். இக்கருத்துக்கள் பல்சந்தமாலையில் சுவை மிக்கனவாய் அமைந் துள்ள பாடல் இதுதான்.

வில்லார் நுதலியு நீயுமின் றேசென்று மேவுதிர்சூ
தெல்லா முணர்ந்தவ ரேழ்பெருந் தரங்கத் தியவனர்க
ளல்லா வெனவந்து சத்தியநந்தா வகைதொழுஞ்சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே.

இங்கே 'அல்லாவெனவந்து'என்பதை முன்னர் விளக்கினோம். சத்தியம் நந்தாவகைதொழுவதென்றால் என்ன? இஸ்லாமிய மூலமந்திரமான கலிமாவை முஸ்லிம் மக்கள் மொழிய வேண்டும், இஸ்லாத்தைத் தழுவுபவர்கள் முதன் முதலில் உச்சரிக்க வேண்டியது அக்கலிமாவே. 'லாஇலாக இல்லல்லாஹு முஹம்மது றசூலுல்லாஹ்' என்பது அந்தக் கலிமாவென்னும் மூலமந்திரம். 'வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ் அன்றி வேறு யாருமில்லை; முகம்மது அவனின் திருத்தூதராவார் என்பதுவே அதன் கருத்து. இதனை நாம் மொழிதல் வேண்டும். உள்ளத்தால் சிந்திக்க வேண்டும். அதற்கு இணங்க ஒழுகுதல் வேண்டும். இதனையே செய்கு அப்துல்காதிர் நெய்னார் லெப்பை ஆலிம்புலவர் அவர்கள் தமது மக்காக் கலம்பகத்தில் உள்ள காப்புக் குறள் வெண்பாவில்,

வல்லான் முற்று முணர்ந்தான் றன்னைச்
சொல்லா லுளத்தாற் செயலாற் றொழுவாம்

எனத் தனித்தமிழில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார். இங்ஙனம் கலிமாச் சொல்லுதலை நமது வாக்குறுதி என்று கூறலாம். அது எமது சத்தியப் பிரமாணமாக அமைந்து விடுகிறது.

அல்லாஹ்வின் ஏவல்களை எடுத்து விலக்கல்களைத் தவிர்த்து ஒழுகுவதாக உறுதிமொழி வழங்குகிறோம். அந்தச் சத்தியத்தில் எவ்விதக் குறையும் இல்லாமல் ஒழுகுவதையே நாம் உறுதிப் படுத்துகிறோம். அவ்வாறு கூறிச் சத்தியப்பிரமாணத்தில் எவ்விதக் குறையும் இல்லாமல் நிறைவேற்றியவர்கள் அந்துபார் வாழ்ந்த சோனக மக்கள் என்பதைக் கூறவே,

'சத்திய நந்தா வகைதொழுஞ்சீர் நல்லார்'

என அவர்கள் பல்சந்தமாலையில் வருணிக்கப்பட்டுள்ளனர்.

வள்ளல் சீதக்காதியின் மரபினர் இன்றும் ஏழுகடல்களையும் கடந்து சென்று வாணிகம் புரிகின்றனர். வணிகக் கலையின் நுணுக்கங்களை எல்லாம் அறிந்து பணியாற்றுகின்றனர். அத்தகையோர் வாழும் இடத்தையே நல்லார் வாழும் இடம் என வருணித்துள்ளார்.

பல்சந்தமாலையும் நமக்கு முழுமையாகக் கிடைத்திருப்பின் தமிழக முஸ்லிம் மக்களின், கலை, கலாச்சாரம், மார்க்கம், பண்பாடு, நடைமுறை, முதலியவற்றோடு அவர்களின் வரலாற்றினையும் நன்கறிந்து கொள்வதற்கு அதனை நன்கு பயன்படுத்த முடியும் என்பது வெள்ளிடைமலை; கிடைத்துள்ள எட்டுப்பாடல்களாலே பல விஷயங்கள் அறியக்கூடியனவாக இருக்கின்றன. முழுமையாக எப்பொழுது கிடைக்குமோ ?

# யாக்கூபு சித்தர் பாடல்

ஒரு முஸ்லிம் புலவரால் இயற்றப்பெற்ற முதல் சித்தர் பாடல், யாகோப் சித்தரினது எனக் கருதப்படுகின்றது. இந்த 'யாகோப்' என்னும் பெயர் இஸ்லாமிய மரபுக்கியைய அமையவில்லை. இஸ்லாத்திலே அப்பெயர் யாகூப் என்றே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்தச் சித்தர் தம்மை யாகோப் என்றே அழைத்துள்ளார். இஸ்லாமியப் புலவர்களால் இயற்றப்பட்ட சித்தர் பாடல்களுள் காலத்தால் முந்தியது யாகோபு சித்தர் பாடல் என்பது பெருவழக்கு.

இவர் முன்பு இந்துவாக இருந்து பின்னர் இஸ்லாத்தைத் தழுவியுள்ளார். இந்த விவரங்களை இவ்வாசிரியரே தமது நூல் களில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். முன்பு தமது பெயர் இராமதேவர் என இருந்தது என்பதைப் பல இடங்களில் தமது பாடல்களில் இவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதியிலே என்பேரு ராமதேவர் எனக் (யாகோபு: குருநூல்-55) குறிப்பிட்டுள்ளார்.

யாகோபு சித்தர் தாம் எந்தக் குலத்தைச் சேர்ந்தவர் என்ப தையும் விளக்கமாகக் கூறி உள்ளார். பிறந்த குலத்தின் ஆதி மூதாதையர் யார் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு நின்று விடவில்லை. தமது குலத்துக்கு யார் பெயரிட் டார் என்பதையும் பாடி உள்ளார்.

அகலிகையைத் தேவேந்திரன் சிநேகஞ் செய்ய
அதிற்பிறந்த தெங்கள்குல மன்னாள் தன்னில்
சுகமாக மறைந்ததினால் கௌதமரும்
சூட்சமுள்ள மறவரென்றும் தேவரென்றும்

செகமெச்சப் பேருமிட்டா ரதிலிருந்து
　　தீரமுட னேராம தேவரென்று
மகபதியாம் அகத்தியரும் பேருமிட்டு
　　வாழ்த்தினார் முனிவரெல்லா மகிழ்ந்திட்டாரே.

(யாகோபு வைத்திய சிந்தாமணி 18)

மற்றொரு சந்தர்ப்பத்தில் இஸ்லாத்தைப் பின்பற்றியதன் பின்னர் தனக்குச் சூட்டப்பட்டுள்ள பெயரான யாகோபு என்பதனையும் அதற்கு முன்னர்த் தமது பெயரான இராமதேவர் என்பதனையும் ஒரு சேர ஒரே பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

உற்றுப்பார் யாகோபு இராமதேவர்
　　உறுதியாம் எழுநூறு குருநூல் முற்றே.

(யாகோபு வைத்திய சிந்தாமணி 700)

ஐம்பத்தைந்து பாடல்களைக் கொண்ட யாகோபு குருநூலில் உள்ள ஐம்பத்து நான்காவது பாடலில் தம்மை ஒரு சித்தன் என்றும், தாம் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை பதினேழு என்றும், அவை அனைத்தையும் பார்த்தவன் ஒரு சித்தன் என்றும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுந்தரம்போல் பதினேழு நூல்கள் சொன்னேன்
　　சுருக்கமாய் வாதத்தைப் பார்க்கச் சொன்னேன்
வந்தரச வாதமது செய்வ தற்கு
　　வகையுடனே நூல்களெல்லாம் சொல்லி வைத்தேன்
விந்தையுட னிடைபாகஞ் செய்பா கங்கள்
　　விரும்பியே தெரிவதற்குச் சொல்லி விட்டேன்
சிந்தைமகிழ் வாகயெந்நூல் முழுதும் பார்த்தோன்
　　சித்தனென்று யாகோபு செப்பி னாரே.

யாகோபு சித்தர் எப்பொழுதும் தம்மைப் பற்றித் தாமே குறிப்பிடும் பொழுது வினைச் சொற்களை உயர்திணைப் பன்மை விகுதியைக் கொண்டே-சௌரவப் பன்மை விகுதியைக் கொண்டே குறிப்பிட்டுள்ளார்.

சதுரகிரி ஒரு மலைப்பிரதேசம். ஸ்ரீவில்லிபுத்தூர் அருகாமையில் உள்ளது. அந்தச் சதுரகிரியிலே இராமதேவர் வாழ்ந்து வந்தார். அதனையே வைத்தியம் 300 என்னும் நூலில் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆதியிலே இராமனென்று பேரும்பெற்று
அன்புடனே சதுரகிரி தனிலிருந்து (300:1)

யாக்கோபு சித்தர்களின் நூல்களைப் பதிப்பித்தவர் ஜி. இராமசாமிக் கோன் என்பவர். அவர் மதுரை வடக்கு மாசி வீதியில் வாழ்ந்து வந்தவர் என்பதனை அவருடைய பதிப்புக்களே குறிப்பிடுகின்றன. அந்நூல்களைப் பதிப்பிப்பதற்காக மதுரை வித்வான் த. குப்புசாமி நாயுடு அவர்கள் பரிசோதித்தமை பற்றிய குறிப்பும் நூலின் முகப்புப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை குருசாமிக் கோனாருக்குச் சொந்தமான ஸ்ரீராமச்சந்திர விலாஸ் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

யாகோபு சித்தர் அவர்கள் இயற்றிய பதினேழு சாஸ்திரங் களையும் பதிப்பாசிரியர் இராமசாமிக்கோன் அவர்கள் பன்னி ரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். வைத்திய சிந்தாமணி, குருநூல், சுண்ணக்காண்டம், சுண்ணம், சுண்ண சூஸ்திரம், லோகச் செந்தூரம், செந்தூர சூஸ்திரம், வகாரக் களங்கு, பஞ்சமி மித்திரம், தண்டகம், இடைபாகம், செய்பாகம், வைத்ய வாத சூஸ்திரம், வைத்தியம், கல்லாட சாஸ்திரம், சாஸ்திரத்துக்கான அரும்பத உரை என்பன பதினேழு நூல்களுமாகும். இவற்றின் ஏழாவது பதிப்பு 1969ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

தாம் மக்காவுக்குச் சென்று வீதியிலே போகும் பொழுது தோழர் எனப் பொருள்படும் சாய்பு கண்டதாகவும் அந்தச் சாய்பு மூலமாக மெய்ஞ்ஞான அறிவைப் பெற்றதாகவும் பாடியுள்ளார் யாகோபு சித்தர் அவர்கள்,

ஆதிமுத லென்பேரு ராமதேவர்
அடைவாகக் குளிகையிட்டு மக்காதேசம்
வீதியிலே சென்று புக்கச் சாய்புகண்டு
விரும்பியே சாஸ்திரத்தில் மிகவும் பேசி
நீதியா யென்மனதிற் றோற்ற மாகி
நேராகக் கொண்டணைத்து நேர்ந்து பார்த்து
ஓதியதோர் ஞானத்தில் செயலுங் கண்டேன்
உற்றுணர்ந்து பிற்பாடு உறுதி யானேன்.

(யாகோபு வைத்திய சிந்தாமணி 700:6)

அல்லாஹ்வைப் பற்றி யாகோப் சித்தர் குறிப்பிட்டுள்ளார். அல்லா(ஹ்) என்னும் சொல்லையே தமது பாடலில் பயன்படுத்தி

உள்ளார். ஒவ்வொருவரினதும் முயற்சி நிறைவேற அல்லாஹ்வை மனதில் எண்ண வேண்டும். தாம் கூறியவற்றைச் செய்து பார்த்து அதில் சித்தி எய்த அல்லாஹ்வை நினைக்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வண்மையாய் அல்லாவை மனதில் எண்ணி
வடிவாக எல்லாமும் சித்தியாக

(யாகோபு சுண்ணம் 300:69)

மற்றோர் இடத்தில்

அதனையெடுத்து அல்லாவைத் தொழுது போற்றி

(யாகோபு சுண்ணம் 300:171)

என்றும் வந்துள்ளமை காண்க.

யாகோபு சித்தர் பாடல்களைப் பதிப்பித்தவர் முஸ்லிம் அல்லாதார் ஆகையால் அங்கு இடம் பெற்ற சில அறபுச் சொற்களை அவர் சரிவர உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டார் என்று தோன்றுகிறது. 'வலி' என்பது அறபுச் சொல், 'வலி' என்னும் சொல்லின் நேரடிக் கருத்து 'நெருக்கமானவர்' என்பதாகும். இறைவனுக்கு நெருக்கமானவர்கள், அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்கள் என்பதைக் குறிக்கவே அச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொதுப்படையாகக் கூறுவதாயின் 'வலி' என்னும் சொல் இறைநேசச் செல்வர்களை குறிக்கப் பயன்பட்டு வருகிறது. 'வலி' என்னும் சொல்லையும் அது குறிக்கும் பொருளையும் புரிந்து கொள்ள முடியாத இப்பதிப்பாசிரியர் அதனைப் பிழையான தொன்று எனக் கருதி அதனை 'நபி' என மாற்றி உள்ளார்.

இஸ்லாத்தைத் தழுவி அதன்கண் உறுதி பூண்ட எவரும் 'நபி' என்னும் அறபுச் சொல்லும் 'வலி' என்னும் அறபுச் சொல்லும் குறிக்கும் பொருளை உணர்ந்து அதனை உரிய முறையில் பயன் படுத்தத் தவறுவதில்லை. முகம்மது நபி (சல்) அவர்களையும் அவர்களுக்கு முன் உலகில் தோன்றிய தீர்க்கதரிசிகளையுமே 'நபி' என்னும் அறபுச் சொல்லால் அழைக்க முடியும். ஏனையவர்களைக் குறிக்க 'நபி' என்னும் சொல்லைப் பயன்படுத்த முடியாது. பிற்காலத்தில் வாழ்ந்த யாகோபு சித்தர் இதனை உணர்ந்திருத்தல் வேண்டும். எனவே இவர் தமது பாடல்களில் 'வலி' மார் எனக் குறிப்பிட்ட பெரும்பான்மையான இடங்களில் அதனை 'நபி' மார் எனத் திருத்தி உள்ளார் என்றே கொள்ளல்

வேண்டும். யாக்கோபு சித்தர் அவர்கள் மக்காவுக்குச் சென்றிருந்தால் அவர் 'நபி' மாரைக் கண்டிருக்க மாட்டார். 'வலி' மாரைத் தான் கண்டிருப்பார்.

யாகோபு சித்தர் பாடலில் இடம் பெற்றுள்ள அறபுச் சொற்கள் பல உருவம் திரிந்த முறையிலே அங்கு இடம் பெறக் காண்கிறோம். பதிப்பாசிரியர் அறபுப் பயிற்சி அற்றவரானமையினாலேயே அவ்வாறு அவ் அறபுச் சொற்கள் உருமாற்றம் அடைந்திருக்கலாம். யாகோபு வைத்தியம் 300 என்னும் பாடல் தொகுதியிலே இடம் பெற்றுள்ள ஏழாம் பாடலிலே அத்தகைய சொற்கள் இடம் யெற்றுள்ளன.

நாம் 'திருக்குர்ஆனை' ஓத ஆரம்பிக்குமுன்னர் 'அஊது பில்லாஹி மினஷ்ஷைத் தானிற்றஜீம் என்று கூறுகிறோம். இதன் கருத்து 'அல்லாஹ்வினால் சபிக்கப்பட்ட சாத்தானிடமிருந்து பாதுகாப்புத் தேடுகின்றேன்' என்பதாகும். இந்த அறபுச் சொற்றொடரைக் கொண்டே யாகோபு சித்தரும் தமது நூல்களை ஆரம்பித்திருத்தல் வேண்டும். யாகோபு சித்தர் ஏழாம் பாடலிலே முதலடி அவ்வாறு இருந்திருத்தல் வேண்டும். அதனைப் பதிப்பாசிரியர் அபூலணி பிகனில்லாஹீம் எனப் பதிப்பித்துள்ளார். இச் சொற்றொடர் எந்தக் கருத்தையும் தருவதாயில்லை. எனவே அவ்வடி

என்ற அஊது பில்லாஹி மினஷ்ஷைதானிற ஜீம்

என்று இருந்தால் முன் குறிப்பிட்ட கருத்துத் தொனிக்க நல்ல முறையில் பாடல் ஆரம்பிக்கும். அதே பாடலில் மற்றும் சில அறபுச் சொற்கள் உருக்குலைந்த நிலையில் இருக்கக் காணலாம். றஹீம், அல்லாயாறீம், றஹீமான் என்பன அத்தகைய சொற்களாகும்.

சுண்ணம் 300இல் உள்ள முதலாம் செய்யுளிலே இறைவனைக் குறிப்பிட றஹ்மான் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கே றஹ்மான் என்பதில் உள்ள றகரம் மொழிக்கு முதலில் வராதானமையினால் இகரத்தைப் பயன்படுத்தி இறஹ்மான் என்று கூறி அவனை வாழ்த்துகிறார். இவ்வாறு,

இறகுமானின் பாதமலர் துதியே செய்து

(யாகோபு சுண்ணம்:1)

முஸ்லிம் மக்கள் எதையும் தொடங்கும்போது அல்லாஹ்வை நினைத்தே ஆரம்பிப்பர். அளவற்ற அருளாளனும் நிகரற்ற

அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் என்று பொருள்படும். பிஸ்மில்லாஹிற் றஹ்மானிற் றஹீம் என்னும் அறபுச் சொற்றொடரை உச்சரித்தே எந்த கருமத்தையும் ஆரம்பிப்பர். யாகோபு சித்தரும் இவ்வறபுச் சொற்றொடரைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அச்சொற்றொடரைச் சற்றுக் குறுக்கியே ஆண்டுள்ளார். 'பிஸ்மில்லா றகுமான்' என்றே குறிப்பிட்டுள்ளார் இச் சொற்றொடர் இவ்வாறு ஒரு பாடலில் அமைந்துள்ளது.

'துடியாகப் பிஸ்மில்லா றகுமான் என்று'

(யாகோபு சுண்ணம் 300:928)

இவ்வாறு இடம் பெற்றுள்ள மற்றொரு சொல் 'இல்லல்லாஹ்' என்பதாகும். அவ்வறபுச் சொற்றொடரின் பொருள் 'அல்லாஹ்வன்றி' என்பதாகும். இறைதியானத்தில் ஈடுபடுவோர் 'இல்லல்லாஹ்' என்று பலமுறை உச்சரிப்பர். இச்சொற்றொடர்,

இல்லல்லா என்றுநீ இன்பமுற்று

(வாதவைத்தியம் 300:56)

என வந்துள்ளது.

மற்றொரு சந்தர்ப்பத்தில் கலிமாவின் முதற்பகுதியாகிய 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்பதன் கருத்து 'அல்லாஹ்வன்றி வணக்கத்துக்குரிய நாயன் வேறில்லை' என்பதாகும் இச்சொற்றொடர் இதே உருவில் ஒரு பாடலில் இவ்வாறு பாடப்பட்டுள்ளது.

கண்டுமே மக்காவின் தேசம்விட்டுக்
கலிமாவுங் கண்டுநான் கீழ்தே சத்தில்
தொண்டுபட்ட லாயில்லாக யில்லல் லாகூ
துணையாகப் பக்தியுடன் வழியே சென்று

(யாகோபு வகாரக்களஞ்கு என்னும் வாதவைத்தியம் 300:3)

தூதர் என்னும் பொருளில் இறசூல் என்பதும் ஆங்காங்கே ஆளப்பட்டுள்ளது.

பகுந்திட்டேன் இறசூலுங் கண்டா ரப்போ
பக்குவமாய்க் கைகொடுத்தார் பதவி யானே

(யாகோபு வகாரக்களங்கு என்னும் வாத வைத்தியம் 300:5)

எண்ணமுடன் சொல்லாதே இறசூலாகி
இல்லல்லா வென்றுநீ இன்ப முற்று

(யாகோபு வகாரக்களங்கு என்னும் வாத வைத்தியம் 300:56)

யாகோபு சித்தர் தமது வைத்திய நூலில் பயன்படுத்தியுள்ள மற்றொரு அறபுச் சொல் 'லெப்பை' என்பதாகும். ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்க மாநகருக்குச் செல்பவர்கள் எப்பொழுதும்போல் உச்சரித்துக் கொண்டிருக்கும் சொல் 'அல்லாஹும்ம லப்பைக்க' என்பதாகும். 'அல்லாஹ்வே இதோ நான் உனது சேவையில்' என்பது அதன் பொருளாகும். பின்னர் தமிழ்நாடு, இலங்கை போன்ற நாடுகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமது பெயர்களுக்குப் பின்னால் அல்லது முன்னால் லெப்பை என்னும் சொல்லைப் பயன்படுத்தலாயினர். காலப்போக்கில் தமிழ் நாட்டில் லப்பை என்னும் சொல்லால் 'பின் தங்கிய முஸ்லிம்கள்' எனக் கருதப்படும் முஸ்லிம்கள் அழைக்கப்படுகின்றனர். அது அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு சொல். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் மார்க்கக் கடமைகளை முன்னின்று நடத்துபவர்களும் குர்ஆன் பள்ளிக்கூடங்களில் ஓதிக் கொடுப்பவர்களும் பெரும்பாலும் லெப்பை என அழைக்கப்பட்டனர். இவர்கள் லெவ்வை என்னும் அழைக்கப்படுவதுண்டு. லெப்பை என்பதின் பலர்பாலே லெப்பைமார் எனப்பட்டது. மார்க்கக்கடமைகளைப் புரிகிறவர்கள் என்னும் கருத்தில் வரும் 'லெப்பைமார்' என்பதனையே யாகோப் சித்தர் தமது பாடல்களுள் ஒன்றில் இவ்வாறு அமைத்துள்ளார்.

சொல்லவே நால்வேதம் லெப்பை மார்கள்
சொற்பெரிய உலகத்தில் கர்மி தன்னை
மெல்லவே ஆண்டவனைக் காட்டு மென்பார்
மேதினியிற் பணம்பொன்னுக் காசை வைத்து
நல்லவே சொல்லியிட்டுப் பணம்பி டுங்கி
நலமாக உன்னையவ ரேய்ப்பா ரப்பா
உல்லவே நால்வேதக் கார னுக்கு
உண்மையுள்ள ஆண்டவனும் மெய்யு மாமே.

(யாகோபு வகாரக்களங்கு என்னும் வாதவைத்தியம் 300:79)

இந்த 'லெப்பை மார்கள்' என்னும் சொற்றொடரை யாகோப் சித்தர் தமது பாடலில் சேர்த்துள்ளமையால் மார்க்கக் கடமை

களைப் புரிபவர்களைச் சுட்டுவதற்கு இச்சொற்றொடர் பெரு வழக்கைப் பெற்ற ஒரு கால கட்டத்திலேதான் யாகோபு சித்தர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

யாகோபு சித்தர் தமது பாடல்களில் பல பாரசீகச் சொற்களைப் பயன்படுத்தி உள்ளார். 'பீங்கான்' என்பது அத்தகைய ஒரு சொல். அது பாரசீக மொழியில் 'பின்ஜான்' என்றே வழங்கப் படுகிறது. 'புன்ஜான்' என்னும் சீனமொழியிலிருந்து அச்சொல் பெறப்பட்டது என்பர். உணவு உண்ணப் பயன்படுத்தப்படும் தட்டையான ஒரு பாத்திரம் பீங்கான் எனப்படுகிறது. இச்சொல் இவ்வாறு ஆளப்பட்டுள்ளது.

துஞ்சாமல் பொடிபண்ணிப் பீங்கா னிட்டுத்
துடியாகப் பட்சமொன்று பணியில் வையே
(யாகோபு சுண்ணம் : 300:8)

கடுஞ்சுண்ண மூதியதைப் பீங்கா னிட்டுக்
கதிர்பனியில் நாளைந்து வைத்தெடுக்க
(யாகோபு வைத்திய சிந்தாமணி 700:220)

சீசா என்பது மற்றொரு பாரசீகச் சொல். கண்ணாடியினாலான ஒரு குப்பி இவ்வாறு அழைக்கப்படுகிறது. யாகோபு சித்தரும் இதே கருத்தில் இச்சொல்லை

தனியாக நீரிறுத்துச் சீசாதன்னில்
தாக்கியடை பின்புதான் சாற்றக் கேளு
(யாகோபு சுண்ணம் 300:9)

என்றும்

பரிசைபெற யிறக்கியே சீசா தன்னில்
பரிவுடனே தானடைக்கச் சொன்னார் பாரே
(யாகோபு வைத்திய சிந்தாமணி 700:462)

என்றும் பயன்படுத்தியுள்ளமையைக் காணலாம்.

'கந்தூரி' என்பது துருக்கி மொழியைச் சார்ந்த ஒரு சொல் என்பர். விழா என்பது அதன் பொருள். உறுது பேசும் மக்களிடையே இச்சொல் பெருவழக்கில் உள்ளது எனக் கூறுவர். பாரசீகமொழியில் இச்சொல் வழக்கு இழந்துவிட்டது என்றும் சொல்வர். பெரும்பாலும் சமயச் சார்பானதாகவே கந்தூரி என அழைக்கப்படும் விழா அமையும். கண்ணியத்துக்கும் மரியாதைக்குமுரிய இறைநேசர் ஒருவரின் ஞாபகார்த்தமாகக் கந்தூரி விழாக்கள் நடைபெறுவது உண்டு. இலங்கையிலும் தமிழ் பேசும் மக்கள்

வாழும் இந்தியாவிலும் ஒரு பெரியாரின் பிறப்பை அல்லது மறைவை நினைவுகூரு முகமாக நடத்தப்படும் விழாக்கள் இவ்வாறு அழைக்கப்படும். பெருமானார் முகம்மது (சல்) அவர்கள் முதல் இறைநேசச் செல்வர்கள் ஈறாக உள்ளவர்கள் பற்றியதாக இத்தகைய கந்தூரி விழாக்கள் அமையும். இத்தகைய விழாக்களில் ஏழை எளியவர் முதல் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும். தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் எங்கெங்கு சென்று குடியேறினார்களோ அங்கங்கெல்லாம் இச்சொல்லும் இச்சொல் கருதும் பொருளும் பரவி உள்ளமையைக் காணலாம். தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் மூலமாகவே இந்தோனீசியா போன்ற நாடுகளிலும் கந்தூரி என்னும் சொல் அதே முக்கியத்துவத்துடன் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கந்தூரி என்னும் இவ்வேற்றுமொழிச்சொல் முஸ்லிம் மக்களிடையே பேச்சு வழக்கில் கந்திரி என வழங்கப்பட்டு வருகிறது. யாகோபு சித்தர் அவர்களும் கந்திரி என்னும் இச்சொல்லை அதே கருத்தில் பல இடங்களில் உபயோகித்திருப்பதைக் காண்கின்றோம். உலோகங்களைப் பொன்னாக்கும் விதத்தை நுணுக்கமாக விவரிக்கும் யாகோபு சித்தர் அத்தகைய பொன்னான உலோகத்தை அதிக விலைக்கு விற்றுத் தான தர்மம் செய்யுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். கந்திரிகளாக்கிக் கொடுக்கும்படி ஆலோசனை கூறியுள்ளார். கந்திரி என்னும் சொல்லைத் தனிமையாக உபயோகிக்காமல் 'கந்திரிகளாக்கி என கந்தூரி விழாக்களில் அழைக்கப்படும் உணவுவகைகளைக் கருத்திற் கொண்டே இவ்வாறு பாடி உள்ளார்.

உயருமே இப்படிக்கு மட்டந் தன்னை
    உயர்த்தியே விற்றுத்தான் செலவு செய்து
நயந்துமே கந்திரிக ளாக்கித் தானும்
    நலமாகக் கொடுத்துமே பின்னும் கேளு

(யாகோபு சுண்ணம்: 300:238)

மற்றொரு சந்தர்ப்பத்திலும் கந்திரி ஆக்கச் சொல்லி உள்ளார். அவ்வாறு ஆக்கிய சோற்றை எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கச் சொல்லி உள்ளார். அதன் பின்னர் தொழுகையை நிறைவேற்றவேண்டும் என்கிறார். உலோகத்தை மாற்றியமைக்கப்பட்ட பொன்னை விற்றுப் பல பள்ளிவாசல்களைக் கட்டி எழுப்பினால் இறைநேசர்கள் வாழ்ந்தது போல் வாழலாம் என்று கூறி உள்ளார். அப்பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

ஒன்றாக தொழுதிடவே மாற்று கேளு
உறுதியாய்ப் பதினாறு மாற்றுக் காணும்
நன்றாக விற்றும் செலவு செய்து
கந்தரிக ளாக்கியே சோறு தன்னைப்
பன்றாக எல்லோர்க்கும் கொடுத்துப் பின்பு
பதிலாகத் தொழுதுநீ பாரி லேதான்
நன்றாகப் பள்ளிவா சலைத்தான் கட்டி
நாடியே வலிமார்போ லிருந்து வாழே

(யாகோபு சுண்ணம் : 300:289)

இன்னொரு பாடலிலும் யாகோபு சித்தர் தருமத்துக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதைக் காணலாம்,

'ஹஷ்ஹாஷ்' என்பது யாகோபு சித்தர் உபயோகித்துள்ள மற்றொரு பாரசீகச் சொல்லாகும். இதனை கசகசா என்றே தமது பாடலில் பயன்படுத்தி உள்ளார். சாமை அரிசி போன்ற சிறு அளவினையுடையது கசகசா. அது எள்ளுப் போன்றும் இருக்கும். இச்சொல்லை இரண்டு பாடல்களில் யாகோபு சித்தர் பயன்படுத்தி உள்ளார். முஸ்லிம் மக்கள் குளிர் பானங்களில் இதனைச் சேர்த்துப் பருகுவர். யாகோப் சித்தர் தமது இரண்டு பாடல்களில் கசகசாவைக் குறிப்பிட்டுள்ளார்.

ரஸ்தாளிப் பழமூவேழ் தோலைபோக்கி
நாட்டினிய சர்க்கரைசேர் நெய்யும்நாழி
மஸ்தான கசகசா பலமோபத்து
மையாக அரைத்தொன்றாய் மெழுகதாக்கி

(யாகோபு வைத்திய சிந்தாமணி 700 : 302)

இங்கே போதை என்னும் பொருளில் மற்றொரு பாரசீகச் சொல்லான மஸ்து என்பதையும் ஆசிரியர் உபயோகித்திருப்பதையும் காணலாம்

மிக்க அதி மதுரமுடன் அமுக்கிராவும்
விதமான வால் மிளகு கசகசாவும்

(யாகோபு வைத்திய சிந்தாமணி 700 : 612)

என்றும் கசகசா வந்துள்ளமையைக் காணலாம்.

யாகோபு சித்தர் தமது வைத்திய சிந்தாமணியில் மூலிகைகளைக் குறிப்பிடும்பொழுது அவற்றின் பெயரை நேரடியாகக் குறிக்கவில்லை. மறைமுகமாகவே குறிப்பிட்டுள்ளார் 'பூனையது வணங்கியிலை' (50) என்று குப்பை மேனியைக் குறிப்பிட்டுள்ளார்.

'குமரனுடைய மனைவியைத்தான் மூலம் வாங்கி' (346) என ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். குமரனுடைய மனைவியின் பெயர் வள்ளி. மூலம் என்பது கிழங்கு. எனவே இங்கே வள்ளிக்கிழங்கை வெளிப்படையாகக் கூறாமல் மறைமுகமாக அறிமுகப்படுத்தியுள் ளார். பாமரமக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாமல் அறிஞர் மாத்திரமே அறிந்து கொள்ளட்டுமே என்னும் நோக்கத்தி னால் இவ்வாறு கூறி உள்ளார் போலும்.

வாழை என்னும் சொல்லை நேரடியாகக் கூறி இருக்கலாம். ஆனால் யாகோபு சித்தர் அவ்வாறு கூறவில்லை. அதனைக் குறிக்கத் 'தாயதனைக் கொன்றவனை' (412) எனக் குறிப்பிட்டுள் ளார். 'வாழைக்குத் தான்ஈன்ற காய் கூற்றம்' என்பதனைக் கருத்தில் கொண்டு இவ்வாறு அதனை உணர்த்தி உள்ளார். மற்றொரு பாடலில்.

வடிவு கொண்ட சூரனுட கனியைத்தட்டி
வகைபருப்புப் பலமெடுத்து உரலிலிட்டு (426)

என வந்துள்ளது. இங்கே மாங்கனியை எடுத்துத் தட்டி அதனுள் இருக்கும் மாமுட்டைப் பருப்பு எடுத்து உரலிலிட்டு மருந்து வகை செய்தல் வேண்டும். இதனைக் குறிப்பிடவே, கண்கவரும் மாம் பழம் எனச் சுட்டாது 'வடிவு கொண்ட சூரனுட கனி' என உணர்த்தி உள்ளார். சூரன் மாமரமாக நின்றான் என்னும் புராணக்கதையைக் கொண்டு இவ்வாறு கூறினார் புலவர். தக்கனை வென்றவர் சிவபெருமான். எனவே 'தக்கனைத் தரித் தவன் பேர்மூலி' (428) என்று கூறும்பொழுது அது சிவன் வேம்பு குறண்டியைக் குறிப்பிட்டுள்ளது எனக் கொள்ளலாம்.

தேங்ககாய்க்கு முக்கண் என்று பெயர். தேங்காயில் மூன்று கண்கள் போன்ற அடையாளங்கள் இருப்பதனாலேயே அப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. எனவே தான் ஒரு பாடலில் 'முக்கணு டைத்தே சுரண்டிச் சட்டியிட்டு' (449) எனத் தேங்காய் முக்கண் என அழைக்கப்பட்டுள்ளது. தேங்காயை உடைத்து அதனைச் சுரண்டி,:சட்டியில் இட்டு, தேங்காயில் உள்ள நீரை விட்டு, அத் தேங்காயைப் பிழிந்துகொள்ளும்படி ஒரு பாடலில் இவ்வாறு கூறி உள்ளார்.

முக்கணுடைத் தேசுரண்டிச் சட்டியிட்டு
முன்னீரை விட்டதைப் பிழிந்துகொண்டு (449)

யானைக்கொம்பைச் சுண்ணம் ஆக்கும் முறையைக்குறிப்பிடவந்த யாகோபு சித்தர் யானைக் கொம்பு என்று சுட்டாது,

முக்கணுடை பெலிகொடுக்கும் மூத்தோன்கையில்
முனிவாகப் பிடித்தகொம்பை பொடியாய்ப் பண்ணி(452)

எனக் குறிப்பிட்டுள்ளார். இளநீர் என்பதை இலகுவாகக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு கூறாது கண்ணை உடைய இளையோன் என இளநீரைக் குறிப்பிட்டுள்ளார்.

முக்கணுட யிளையோனை வெட்டிநீரை
முழுச்சட்டி தன்னிலிட்டு......(484)

கொடுப்பக்கீரை என்று தமிழ் நாட்டிலும் பொன்னாங்காணி என்று இலங்கையிலும் பெருவழக்கில் உள்ள கீரையைக் குறிப்பிட வந்த யாகோபு சித்தர் அதனை இவ்வாறு கூறாது பொன் என்னும் கன்னி என்று திருமகளைக் குறிப்பிட்டுள்ளார். திருமகளின் அவதாரமாகிய சீதையைக் குறிப்பிட்டு சீதை இராவணனால் சிறை எடுக்கப்பட்டதையும் சுட்டி உள்ளார். இவற்றை எல்லாம் குறிப்பிட்டே பொன்னாங்காணீ என்னும் கொடுப்பைக் கீரையை அறிமுகப்படுத்தியுள்ளார், அந்தப் பாடலில் முதலாம் அடி இவ்வாறு அமைந்துள்ளது.

தோணாம விராவணன் சிறையெடுத்த
தோகைபொன்னாங் கன்னிதனைப் பிடுங்கிவந்து
(457)

மற்றொருவகைக் கீரையைச் 'சிறிய நங்கை' (450) எனக் குறிப்பிட்டுள்ளார் யாகோபு சித்தர்.

'அரிதாரம்' என்பதை நேரடியாகக் குறிப்பிடாது மறைமுகமாக அதனை 'சீர்பெறவே விஷ்ணுவின் பெண்டீர் தன்னை' (480) என்றும் 'ஆதிமகாவிஷ்ணுவின் மனையாள் தன்னை' என்றும் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

தென்னை மரத்துக்குத் தென்னம்பிள்ளை என்று மற்றொரு பெயருண்டு. அதனைப் பிள்ளை என்றே யாகோபு சித்தர் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பிள்ளையின் மகன் தேங்காய். அவன் இளையான் இளநீர். ஆக இளநீரை நேரடியாகக் குறிப்பிடாமல் மறைமுகமாக.

பிள்ளை மகன் இளையோனை முகத்தைச் சீவி (589)

எனப் பாடியுள்ளார் யாகோபு சித்தர். இவ்வாறு பல்வேறு உத்திகளைக் கையாண்டுள்ளார் ஆசிரியர் தமது நூல்களில். அவற்றைச் சுவைமிக்கனவாய் அமைத்துள்ளார்.

வாதநாடி, பித்தநாடி, சிலேற்பன நாடி, பூதநாடி ஐயநாடி என நாடிகளின் வகைகளையும் அவற்றின் இயல்புகளையும் எந்த நாடி எந்த வேகத்தில் வந்தால் என்ன நடக்கும் என்பதையும் விளக்கி உள்ளார் யாகோபு சித்தர் தமது பாடலில். வியாதிகள் ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றைத் தீர்ப்பதற்கான மருந்து வகைகளையும் வழிமுறைகளையும் விரிவாக எடுத்துக் காட்டி உள்ளார்.

இறைநேசச் செல்வர்களான அவுலியாக்களுள் ஒருவரையே யாகோபு சித்தர் குறிப்பிட்டுள்ளார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த முகியத்தீன் அப்துல் காதிறு ஜெயிலானி (றலி) அவர்களை மாத்திரமே குறிப்பிட்டுள்ளார்.

யோக ஹளரத்து வுய்யதப்துல்
உற்ற காதர்கயி லாணி என்றே

(யாகோபு வைத்தியம் 300:6)

என அப்பெரியார் ஒரு பாடலில் இவ்வாறு இடம் பெற்றுள்ளார்.

சித்தர்களின் காலத்தை நிர்ணயிக்க முடியாது எனச் சித்த வைத்திய முறையில் கைதேர்ந்தவர்கள் கூறுவர். இராமதேவர் நீண்ட காலத்துக்கு முன் வாழ்ந்தவர் என்பது ரி. வி. சாம்பசிவம் பிள்ளை அவர்களின் கருத்து. வைத்திய வாதயோக ஞானங்களில் மகா வல்லவராகத் திகழ்ந்தார். இவர் பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் கருதப்பட்டு உள்ளார். இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னரே பல நூல்களை எழுதி உள்ளார்.

இராமதேவராக வாழ்ந்து இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் யாகூப் ஆக மாறிய இவருடைய காலத்தை நிர்ணயிக்கக் கூடிய அகச்சான்றுகள் கிடைக்கவில்லை. முகியத்தீன் அப்துல் காதிர் ஜயிலானி (றலி) அவர்களைத் தமது நூலில் குறிப்பிடுவதிலிருந்து யாகோபு சித்தர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்பது புலனாகிறது.

கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தலை சிறந்த இறைநேசச் செல்வரான சாகுல்சமீது ஆண்டகையை இவர் குறிப்பிடாத காரணத்தினால் இவர் சாகும்கமீது ஆண்டகையின் காலத்துக்கு முற்பட்டவர் என்று கூறலாம். இவர் வாழ்ந்த காலம் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு என்று சிலர் கூறுவர்.

# ஆயிர மசலா

இந்நூலின் முழுப்பெயர் 'ஆயிரமசலா வென்று வழங்கும் அதிஜய புராணம்' என்பதாகும். இப்பெயரில் உள்ள ஆயிரம் மசலா என்பது ஆயிர வினாக்கள் என்பதையே குறிக்கும். இவ்விலக்கியத்தின் முதற் பக்கத்தில் இஃது 'நபிநாயகம் முகம்மது சல்லலாகு அலைகிவ சல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள்' என்று குறித்திருப்பதிலிருந்து இந்நூலின் உள்ளடக்கச் செய்திகள் அதாவது ஆயிர மசலாவிற்கான பதில்கள் அவ்ஹதீதுகளை மூலாதாரமாகக் கொண்டுள்ளன என்பதை அறியலாம்.

ஆயிரமசலாவை இயற்றியவர் வண்ணப்பரிமளப் புலவராவர். நூலாசிரியரின் குறிப்பை நூலின் முகப்பிலமைந்த பாடலில்

புயலாய்ந்த மதுரைகீழ்பாற் பொருந்திய சுலையுமானிற்
செயலாய்ந்த மூல்லாமிய்யா செயிதுரை செய்ய விந்நூல்
இயலாய்ந்த முதலிசெய்து இசுஹாக்கென்னும் வகுதைநாடன்
பயஹாம்ப ரருள்சேர் வண்ணப் பரிமளம் பகரலுற்றான்

(ஆயிரமசலா: கடவுள் வாழ்த்து : 32)

எனக் குறிக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் மூலம் நூலாசிரியரின் இயற்பெயர் செய்து இசுஹாக்கென்பதையும், அவர் வகுதை நாட்டினைச் சேர்ந்தவர் என்பதையும் அறிகிறோம்,

வகுதை என்பது கீழக்கரையாகும். பிற இடங்களில் வாழ்ந்தோரும் இப்பெயர் தத்தம் ஊர்களைச் சுட்டும் எனக் கொண்டனர். ஆசிரியர் வகுதை நாட்டைச் சேர்ந்தவர் என்பதும், மதுரையிலிருந்து ஆயிரம் மசலா இயற்றி உள்ளார் என்பதும் இந்நூலிலிருந்து புலனாகின்றன.

மற்றொரு செய்யுளில் நூலின் காலம் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

இயலிறசூல் திருவடிசாய்ந்த தொளாயிரத்தி
னுடனெண்பதாண்டின்
முயலும்ப்ரமாதூ தாவருடத்தில் முழுங்குபுளி
யங்குளத்து முல்லாமிய்யா செயிதுமகுதூம்
வயதுமுப் பத்தொன்பான் தன்னிலிந்நா லுரைத்திட
முத்தமிழாற் போற்றிப்
பயிலுமையேழெனும் வாலப்பி ராயந்தன்னிற் பரிந்து
வண்ணப் பரிமளஞ் சொற் பகர்ந்தவாறே.
(ஆயிர மசலா : கடவுள் வாழ்த்து33)

இச்செய்யுளில் 'இயலிறசூல் திருவடி சாய்த்த' என்ற குறிப்பு வந்துள்ளது. 'திருவடி சாய்ந்த' என்பது எதனைக் குறிக்கின்றது? உமறுப்புலவர் தமது சீறாப்புராணத்தில் 'உயிர்நீத்தார்' என்னும் பொருளில் 'திருவடி சாய்ந்தார்' என்னும் சொற்றொடரைப் பயன்படுத்தி உள்ளார்.

வகுத்த நாயகன் விதிவழி குவைவிது மகளார்
இகத்தி னிற்புகழ் நிறுத்திவிண் ணகம்புகழ் இலங்கத்
தகுத்தொ டும்பெரும் புதுமையிற் றிருவடி சாய்ந்தார்
(பிராட்டியார் பொன்னுலகு புக்க படலம் :12)

இங்கே இயலிறசூல் திருவடி சாய்ந்த 980 ஆம் ஆண்டு குறிப்பிடப் பட்டுள்ளது. இதனை ஹிஜ்றி ஆண்டெனக் கொண்டால் அதற்குச் சரியானது கி. பி. 1572ஆம் ஆண்டாகும். ஆனால் பரிமளப்புலவர் கூற்று முகம்மது நபி அவர்கள் மறைந்து திருவடி சாய்ந்த 980 ஆம் ஆண்டெனில் ஏறத்தாழ பதினொரு வருடங்கள் பிந்தியதாகும். ஹிஜ்றி நிகழ்ச்சியின் போது பெருமானாருக்கு வயது 52. மறையும் பொழுது வயது 63. இது காரணமாக ஆயிர மசலாவின் பழமையில் எவ்வித மாற்றமும் இல்லை. நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ள மிகப் பழமையான இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல் ஆயிர மசலாவாகும்.

ஆயிர மசலாவிற்குரிய மற்றொரு பெயர் அதிஜய புராணம் என்பது. இதனை ஒரு காப்பியம் என்றும் சிலர் கூறினர். இது மதுரையில் செந்தமிழ் அறிஞரின் சங்கத்திலே அரங்கேற்றப் பட்டது என ஆசிரியர் ஒரு செய்யுளில் குறிப்பிடுள்ளார்.

அந்தமுறு மதுரைதனிற் செந்தமிழோர் சங்கத்திலரங்கேற்றிச்
சந்தமுறு மீமானு மிசுலாமுந் தழைத்தோங்கத் தகுதிபூண்டு
வந்து நெறி மனுநீதி வளர்ப்பவர் முன்னுளப்பாவின் மகிழ்ந்து போற்றிக்
கொந்துலவு மெம்மிறசூல் நபிசொல்லா யிரமசலாக் கூறலுற்றேன்.

(ஆயிர மசலா : கடவுள் வாழ்த்து:34)

இச்செய்யுளில் தாம் பெருமானார் (சல்) அவர்களின் பொன் மொழியாம் ஹதீதுகளை ஆயிரமசலாவாகக் கூறுவதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாயிர மசலாவில் அப்துல்லா இப்னு சலாம் என்பார் இஸ்லாம் பற்றிக் கேட்ட கேள்விகளும் அவற்றிற்கு முகம்மது நபி அவர்கள் அளித்த விடைகளும் தரப்பட்டுள்ளன. யூதர்களுடன் வந்த அவர்,

கொண்டாடிய மாமச லாவாயிரங் கொண்டே வந்தேன்யான்
எனக் கூறி அவற்றிற்கு விடை பகர வேண்டும் என வேண்டினார்.

இந்த ஆயிரம் வினாக்களையும் அவற்றிற்குரிய விடைகளை யும் முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக அமைத்து 1092 செய்யுட்களில் பரிமளப்புலவர் பாடியுள்ளார். காப்புச் செய்யுட்களாக இரண்டு செய்யுட்களும் கடவுள் வாழ்த்தில் 35 பாடல்களும் உள்ளன.

இப்பகுதிக்கு அடுத்து பதிக வரலாறு என்னும் தலைப்பில் உள்ள பத்து பாடல்களில் நாயகத்தின் (சல்) பிறப்பு மற்றும் பெருமானார் (சல்) மக்காவிலிருந்து மதீனநகர் வந்து வீற்றிருக்கும் செய்திகள் குறிக்கப்படுகின்றன. இத்தகைய பதிக வரலாறு மிகுறாசு மாலையைத் தவிர்த்து பிற இஸ்லாமிய தமிழிலக்கியங்களில் இடம் பெறவில்லை என்பது இங்கு குறிக்கத்தக்கதாகும். இதற்கடுத்து 11வது பாடல் முதலாக 57 வது பாடல் வரையிலான 46 பாடல்களில் ஆயிரமசலாவிற்குரிய சூழல் பின்னணிகள் விவரிக்கப் படுகின்றன. இப்பகுதியில் வானவர் ஜிப்றயீல் (அலை) நாயகத்திற்கு அப்துல்லா இப்னு சலாம் பற்றி தெரியப்படுத்துவதும், நாயகம் (சல்) அவர்கள் அதன் பயனாய் உக்காஸ் (றலி) அவர்களைத் தூதனுப்புவதும் அப்துல்லா இப்னு சலாம் ஆயிர மசலாக்களுடன் நாயகத்தைத் தரிசிக்க மதீனம் வந்தடைவது

மான நிகழ்வுகள் ஆயிரமசலாவிற்குரிய பின்புலமாகச் சுட்டப்படு கின்றன. இதற்குப்பின் 58 வது பாடல் முதலாக இறுதி வரை அப்துல்லா இப்னு சலாமின் கேள்விகளும் அவற்றிற்கு நாயகத்தின் பதிலுரைகளும் இடம் பெறுகின்றன.

ஆயிரமசலா ஒரு நீதி இலக்கியத்தைப் போல் விளங்குகிறது. இதில் அடங்கியிருக்கும் கருத்துக்கள் இஸ்லாமிய மார்க்கப் போதனைகளாகவும் வாழ்க்கை நெறிப்படி இஸ்லாம் காட்டும் நல்வழிமுறைகளாகவும் உள்ளன. ஆயிரமசலா வகுத்துக்காட்டும் வழியின்கண் நடப்போருக்குரிய நன்மைகளை ஆசிரியர்.

மூதறி வுண்டாம் நாளு முதலவன் கிருபை தோன்றுந்
தீதறுந் துன்பத் தீருஞ் செல்வமுஞ் சிறப்பு முண்டாம்
பூதலத்துயிர்கள் யாவும் புகழ்ச்சியும் மகிழ்ச்சி யான
ஆதியை யிறசூல் தம்மை யகமகிழ்ந்த தருளு வோர்க்கே

(ஆயிர மசலா : 2)

என நூலின் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டுகின்றார்.

இஸ்லாமிய தமிழிலக்கிய மசலா வடிவத்தில் முதற்கண் ஆயிர மசலாவில் எழுப்பப்படும் வினாக்களிலும் அதற்குரிய விடைகளிலும் ஒரு சங்கிலிப் பிணைப்பையும் தொடர் செய்திகளையும் காண முடிகிறது. இத்தொடர்பும், பிணைப்பும் ஆரம்பம் முதல் இறுதி வரையில் மானுட வாழ்வின் துவக்க முதல் உலகம் அழியும் வரையிலான ஒரு .முறையான வளர்ச்சி, முடிவு என்பதை படிப் போருக்கு நன்குணர்த்தி நிற்கின்றன. ஆயிரம் மசலாவைப் படிப் போர் மனத்தில் வெறும் வினாவிடை என்ற எண்ணம் மட்டுமே ஏற்படாவண்ணம் அதற்கு ஒரு இலக்கியச் சுவையை ஏற்படுத்தித் தரும் வண்ணம் ஒரு வினாவிற்கும் அதற்குரிய விடைக்கும் அடுத்த வினாவிற்கும் அதற்குரிய விடைக்கும் பிணைப்பினைக் காட்டும் படிச் செய்யுள்களை ஆக்கியுள்ளார் ஆசிரியர்.

வண்ணப்பரிமளப்புலவர் உணர்வுகளை ஓசை மூலம் தம் படைப்புகளுக்குக் கொண்டு வருவதில் சிறப்புப் பெற்றுள்ளார் என்றே கூறலாம். அவரது பாடல்களில் உணர்வுக் குறிப்புச் சொற்கள் அதிகம் பயன்பட்டிருப்பது போல் அந்தந்த உணர்வு களுக்கும், பொருள்களின் தன்மைகளுக்கும் ஏற்ப அடுக்குச் சொற் களும் பாடல்களின் யாப்பமைதி கெடாதவாறு பயன்பட்டுள்ளன. இத்தகைய அடுக்குச் சொற்கள் உணர்வு பூர்வமான பல பாடல்

களில் அமைந்துள்ளன. மது அருந்துவோர்கள் நரகத்தில் அடையும் தண்டனை குறித்த விளக்கத்தை அளிக்கும் பாடலில் அடுக்குச் சொற்கள் அடிள்கதோறும் அமைந்து பாடலின் கருத் தமைவிற்கும், யாப்பமைவிற்கும் ஏற்பச் சிறக்கின்றன.

மதுவினை மாயை காரணமாக அருந்துவோர் மரணத்திற்குப் பின் மறுமை வாழ்வில் அடையும் இன்னலை நபிமொழி மூலமாக எடுத்துரைக்கின்றார் ஆசிரியர்.

மதமுறு மதுவையுண்ட மாந்தர்கள் வயிற்றின் மீதே
கொதுகொது கொதெனக் காய்ந்து குமுறிய கனல்
வெந்நீரைக்
கதக தகதென வார்க்கக் கனங்குட லீர லெல்லா
மொதுமொது மொதெனத்தள்ளி வீழ்ந்திடு
முறண்டுதானே
(ஆயிரமசலா : 597)

மது உண்பதால் மனிதர் மதம்பிடித்த நிலைக்குள்ளாவதால் வண்ணப்பரிமளப்புலவர் 'மதமுறு மது' என்று மதுவின் தன்மைக் கேற்ப அடைமொழியைப் பயன்படுத்துகின்றார். மேலும் மது பானம் வயிற்றிற்குள் சென்று உணர்வுகளை மறக்கச் செய்யும் காரணத்தினாலேயே அத்தகு பாவத்திற்கு மறுமை நாளில் வயிற்றின் மீதே கொது கொது கொதெனக் காய்ந்து குமுறிய கனல் நீர் ஊற்றப்படும். அவ்வாறு ஊற்றும்போது மதுவின் காரணமாக மயக்கத்திலிருந்த குடல் குமுறிய கனல் நீரின் விளை வால் மொது மொது மொதெனத் தள்ளி வீழ்த்திடும். இப் பாடலில் உள்ள இரட்டைக்கிளவிகள் மதுவின் மயக்கத்தையும் அதனால் பெறும் தண்டனையின் துன்பியல்களையும் உள்ளத்தில் உணர்த்தும்படிச் சிறப்புற அமைந்துள்ளன.

வண்ணப்பரிமளப் புலவர் தாம் எடுத்துக்கொண்ட பொருள் விளக்கத்திற்கு ஏற்ற சொற்கள் கையாள்வதுடன் இஸ்லாமியக் கொள்கைகளை விளக்கும் வண்ணம் எளிய உவமைகளையும் ஆங் காங்கே பயன்படுத்தியுள்ளார். மானுடருள் தம் இளமை வாழ்வில் அல்லாஹ்வை மறந்தோரின் மறுமை வாழ்வு நிலை குறித்துக் கூறும்போது அவர்கள் தூண்டில் மீனெனத் திகைத்துப் போய்த் தம் இளமை தடுமாறித் துன்பம் அடைவார்கள் என்றார்.

உளமகிழ வாதியை யுவந்துற நினைந்தே
வளமைப யிலும்வா லிபத்தில் வணங்காதார்
விளமது றுந்தூண் டில்தனின் மீனென மலைத்தங்
கிளமை தடுமா றிமிக வீடுபடு வாரே
(ஆயிரமசலா;565)

# மிகுறாசு மாலை

பெருமானார் முகம்மது நபி அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த அதி அற்புதமான ஒரு நிகழ்ச்சியே மிஃறாஜ் என அழைக்கப்படுகிறது. நபிகள் நாயகம் அவர்கள் நபித்துவம் பெற்று ஏறத்தாழ 12 ஆண்டுகளுக்குப் பின்னர் மிஃறாஜ் என்னும் விண்ணேற்றப்பயணம் நிகழ்ந்தது.

நாயகத்தின் வாழ்வில் மட்டுமல்ல; இஸ்லாமிய வரலாற்றிலேயே முக்கிய நிகழ்வாக இவ்விண்ணேற்றம் அமைகிறது. இஸ்லாமியர்களின் ஐந்து முக்கிய கடமைகளுள் இரண்டாவது கடமையாக வலியுறுத்தப்பெறுவது எல்லாம் வல்ல அல்லாஹ்வை நாள்தோறும் ஐந்துமுறை வழிபாடு செய்யும் தொழுகையாகும். இது ஸலாத் எனப்படும். பெருமானார் நபி (சல்) அவர்கள் 'ஒன்றே இறை' என்ற கொள்கையை இஸ்லாத்தின் மூலம் உலகறியச் செய்யத் துவங்கும்போது, இறைவழிபாட்டினைக் குறிப்பிட்ட எண்ணிக்கை வரன்முறையில் நிகழ்த்தவில்லையாம். நாயகம் (சல்) அவர்களின் விண்ணேற்றப் பயணத்தின்போதே முஸ்லிம்களின் மீது 'ஐவேளைத் தொழுகை' என்பது அல்லாஹ்வால் முதன் முதலில் கடமையாக்கப்பட்டது.

இத்தகு சிறப்பு மிக்க வரலாற்றுச் சம்பவத்தைத் தமிழுலகம் நன்கறியச் செய்யவேண்டும் என்ற ஆலிப்புலவரின் ஆதங்கமே மிஃறாஜ் நிகழ்ச்சி தமிழிலக்கிய உருவம் பெறக் காரணமாயிற்று. ஆலிப்புலவரின் உணர்வுத் தூண்டுகோலுக்குக் கிடைத்த உருவமே இன்று நம்மிடையே இருக்கும் 'மிகுறாசு மாலை' என்னும் சிறப்பு மிகு இஸ்லாமியத் தமிழிலக்கியமாகும். மிகுறாசுமாலைதோன்றிய காலச் சூழலில் படித்து இன்புறுவதற்கும், படிப்பதைக் கேட்டுச்

சிறப்புறுவதற்கும் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் இல்லை என்ற எண்ணம் ஆலிப் புலவருக்கு ஏற்பட்டமை மிகுறாசு மாலை தோற்றத்திற்கு ஒரு காரணமாக அமைகிறது. தமிழிலக்கிய உலகில் இஸ்லாம் தழைத்தோங்கத் தொடங்கியபோது ஏனைய பிற சமய இலக்கியங்கள் போன்று காவியச் சுவை நன்கு அமையப் பெற்று விளங்கிய முதல் இஸ்லாமியத் தமிழிலக்கியம் மிகுறாசு மாலையே ஆகும். இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் இத்தகு சிறப்பு மிக்க தமிழிலக்கியத்தை இயற்றித் தந்த ஆலிப்புலவர் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராவார். இளமையிலேயே இயற்கையாகத் தமிழ்ப்புலமை மிக்கவரான ஆலிப்புலவர் தமிழ் கூறும் நல்லுலகம் அறியும்படி இனிய இஸ்லாமியத் தமிழிலக்கியம் ஒன்றினைத் தம் புலமைத்திறத்தால் ஏற்படுத்திட முடிவு செய்து, அதற்குத் தம் நெஞ்சில் நிறைந்த அண்ணல் நபி (சல்) அவர்களின் விண்ணேற்றப் பயணத்தையே பாடுவது என்று தீர் மானித்தார். விண்ணேற்றப் பயணம் தொடர்பாக முழு விவரமும் அறிந்திட ஆலிப்புலவர் அறபு நூல்களின் துணையை நாட வேண்டியதாயிற்று. நாயகம் (சல்) அவர்களின் மிஃறாஜ் நிகழ்ச்சியான வரலாற்றுச் சம்பவத்தை விளக்கிக் காட்டும் அறபுக் கித்தாபு (புத்தகம்) காயல்பட்டினத்தில் முகம்மதப்பு மரைக்காயரின் மரபில் வந்த ஒருவரிடம் இருப்பதை அறிந்து ஆலிப்புலவர் அவரிடம் சென்று அந்நூலினைப் பெற்றார். காயல் மாநகரில் வாழ்ந்த முகம்மதப்பு மரைக்காயர் மரபில் வந்தோர் அண்ணல் நபி (சல்) அவர்களின் அரிய விண்ணேற்ற நிகழ்ச்சியை உலகறியச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தமக்கு நூல் கொடுத்து உதவியிருப்பதை ஆலிப்புலவர் தம் நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

மண்டலமென் காயல்வளர் முகம்மதப்பு
    மரைக்காயர் மரபி லானோர்
திண்டிறத்தி லிப்பெருநூல் விளங்கவெனப்
    பெருந்தலீல்கள் செய்கை யாலும்
அண்டர்தரு வெனக்கொடுக்கு மஞ்சுவன்ன
    முசுலிம் களவர்கள் முன்னே
கொண்டல்முகம் மதுநபிதம் மிகுறாஜை
    யிசைத்தமிழாற் கூற லுற்றேன்.

(மிகுறாசு மாலை: 23)

முகம்மதப்பு மரபிலானோர் நூல் கொடுத்து உதவியவுடன் அந்நூலின்கண் உள்ள செய்திகளைப் படித்து விரிவுரை அறியு

வேண்டி அன்றைய காதி (நீதிபதி)யாக காயல்பட்டினத்தில் பதவி வகித்த செய்கு முகம்மது அலாவுத்தீனின் உதவியை ஆலிப் புலவர் நாடினார். அறபு மொழியில் சிறந்த பாண்டித்தியம் பெற்ற அன்றைய காயல் பட்டினத்துக் காதி ஷெய்கு முகம்மது அலாவுத் தீனே ஆலிப்புலவரின் எண்ணம் நிறைவு பெறுவதற்கு வேண்டிய கருத்துக்களை அறபு மொழியிலமைந்த கித்தாபிலிருந்து தமிழாக் கம் செய்துதவினார். இச்செய்தியை மிகுறாசு மாலையில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் அமைந்த பாடல் தெளிவிக்கிறது.

களித்தசிறை வண்டுலவக் கமலம் விள்ளுங்
காகிரியில் வாழ்செய்கு முகம்ம தின்பா
லளித்தவவு லாதிறசூ லறிஞர் பீரா
மடல்மகுதூம் காவியலா வுத்தீ னன்பாற்
றெளித்தவறி விவையெவர்க்குந் தெரியா தென்றே
திருத்துமிகு மிகுறாஜென் னுங்கித் தாபில்
விளைத்தஹறு பதையறபா லோதி யோதி
விரிதமிழ்நூ லுரையாக்கி விளக்கி னாரே.
(மிகுறாசு மாலை: 17)

இப்பாடலில் காகிரியில் வாழ் செய்குமுகம்மது என்னும் இரண்டா மடியில் வரும் காகிரி என்பது அறபுச் சொல்லாகும். கெய்ரோவை குறிக்கும் இவ்வறபுச் சொல்லால் தமிழ் பேசும் முஸ்லிம்களால் காயல்பட்டினம் அழைக்கப்பட்டிருக்கிறது. இம்மரபிற்கிணங்கவே பல இஸ்லாமியத் தமிழிலக்கியங்களிலும் காயல்பட்டினம் காகிறு என்றே சுட்டப்பட்டுள்ளது. தமக்குத் தமிழுரை அளித்துதவிய காலி (காலி என்பதும் காதி என்பதும் ஒன்றே) அலாவுத்தீனின் பால் தமக்குள்ள உயர்ந்த மதிப்பினை வெளிப்படுத்தும் பொருட்டே 'அவுலாது இறசூலறிஞர் பீராமடல் மகுதூம் காவிய லாவுத்தீன்' என்று ஆலிப்புலவர் குறித்துள்ளார். அவுலாதிற சூலறிஞர் பீராம்' என்பதிலுள்ள பீர் என்னும் பார்சிச்சொல் ஆன்மிகத் தலைவரைக் குறிப்பதாகும். அவுலாதிறசூல் என்னும் சொற்றொடர் நபிபெருமானாரின் மரபினர் என்று பொருள்படும். இப்பாடலில் மிகுறாஜென்னும் கித்தாபிலிருந்து மிகுறாசுமாலைக் குரிய வரலாற்றுச் செய்திகளை ஆலிப்புலவர் பெற்றது தெளிவாக இடம் பெற்றுள்ளது.

காயல் செய்கு முகம்மது அலாவுத்தீன் உதவியால் தமிழ் உரையைக் கேட்டு அதனைத் தம் தாய்த்திரு மொழியாம் தீந் தமிழில் மிகுறாசு மாலையாகத் தொடுத்ததையும் ஆலிப்புலவர் பின்வருமாறு பாடியுள்ளார்.

மருவளர் காகிரி னாடுறு செய்குமு
கம்மத லாவுதினோ
ரருள்வளர் நந்நபி தம்மிகுறாஜை
யருந்தமிழ் செய்திடலால்
பொருள்வளர் மங்கைந கர்ப்பதியான
புதுப்படை வீட்டினில்வாழ்
திருவளர் செய்கபு பக்கர்தன் னாலி
செழுங்கவி செய்தனனே.

(மிகுறாசு மாலை : 20)

ஆலிப்புலவர் மிஃறாஜ் மாலையை இயற்றிய காலத்தை நன் கறியும் வகையில் நூலின் அகச் சான்றுகள் அமைந்துள்ளன.

தோன்று ஹிஜு றத்துத் தொளா யிரத்தித்தொண்ணூற்றெட்
டேன்றுவரு மாண்டினிடை ஜமாத்துலவ்வ லென்று
சான்றோர்புகழ் திங்களிடை தானிருப தில்வே
ருன்றுமிகு றாஜுரை யினைத்தமிழ் செய்தாரே.

(மிகுறாசு மாலை : 18)

இப்பாடலின் கருத்தினடிப்படையில், காயல் முகம்மதப்பா மரபினரிடையே ஆலிப்புலவர் பெற்ற மிஃறாஜ் கித்தாபினை அன்றைய காதி ஷெய்கு முகம்மது அலாவுத்தீன் தமிழில் விளக்கம் செய்ய, அதனை ஆலிப்புலவர் ஹிஜ்றி 998 ஆம் ஆண்டு ஜமாத் துலவ்வல் மாதம் இனிய தமிழ்க் காவியமாக்கினார் என்பதனை அறியலாம். கிறித்துவ ஆண்டின்படி கி.பி. 1589 ஆம் வருடம் நவம்பர் மாதமே முஸ்லிம்களின் ஹிஜ்றி 998 ஆம் ஆண்டு துவக்கம் பெறுகிறது. ஆலிப்புலவர் குறித்திருக்கும் ஜமாத்துலவ்வல் என்னும் இஸ்லாமிய மாதம் ஹிஜ்றி ஆண்டின் ஐந்தாவது மாத மாகும். எனவே ஹிஜ்றி 998, ஜமாத்துலவ்வலுக்கு இணையான கிறித்தவ ஆண்டின் காலம் 1590 மார்ச்சு மாதமாகும். மேலும் ஹிஜ்றி 998 ஆம் வருடத்திய ஜமாத்துலவ்வல் மாதம் கிறித்துவ ஆண்டிற்குச் சரியாக கி.பி. 1590 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8ந் தேதியே துவக்கம் பெறுகிறது. ஆலிப்புலவர் மிகுறாசு மாலையைத் தமிழில் செய்வித்ததாக மேற்சொன்ன பாடலில் குறித்திருப்பதோ ஜமாத்துலவ்வல் மாதம் 20 ஆந் தேதியாகும். அப்படியாயின் இதற்கு இணையான தேதி மார்ச்சு 27 ஆகும். கி.பி. 1590 ஆம் வருடம் மார்ச்சு மாதம் 8ந் தேதி வியாழக் கிழமையாகும் அதாவது ஹிஜ்றி 998 ஆம் வருடம் ஜமாத்துலவ்வல் 1ந் தேதி செவ்வாய்க்கிழமையாக இருத்தல் வேண்டும். எனவே மேற்

குறித்த பாடலின்படி ஹிஜ்றி 998 ஆம் வருடம் ஜமாத்துலவ்வல் 20 ந் தேதிக்கு இணையான கிறித்துவ ஆண்டு, மாதம், தேதி, கிழமையானது கி.பி. 1590 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 27ந் தேதி செவ்வாய்க் கிழமையாகும். இத்தேதியிலேயே மிகுறாசு மாலையைத் தமிழ்க் காவியமாக்கினார் ஆலிப்புலவர். ஹிஜ்றி ஆண்டிற்கிணையான கிறித்துவ ஆண்டினை உறுதிப்படுத்துவது போல் ஹிஜ்றி ஆண்டினைக் குறித்துள்ள பாடலுக்கு அடுத்த செய்யுளில் மிகுறாசு மாலையை இயற்றுவித்த காலத்தை ஆசிரியர் கொல்ல மாண்டில் தருகின்றார்.

இங்கிலகு கொல்லமெழு நூற்றறுப தையாண்
டங்குவரு பைங்குனி யதின்றெயிதி மூவா
றுங்கந பிவள்ளலிற சூல்தமிகு றாஜை
மங்கைநக ராலியுயர் வண்டமிழின் வைத்தான்

(மிகுறாசு மாலை : .9)

இங்கு ஆலிப்புலவர் மங்கை நகரினைச் சேர்ந்தவர் என்ற செய்தியுடன் கொல்லம் 765 ஆம் ஆண்டு மிகுறாசு மாலையை வண்டமிழின் வைத்தான் என்ற செய்தியும் பெறப்படுகிறது. இக்கொல்லமாண்டிற்கு இணையான கிறித்துவ வருடம் கி. பி. 1590 ஆகும். இப்பாடலில் தமிழ் ஆண்டின் அடிப்படையிலான மாதம், தேதியையும் ஆசிரியர் குறித்துள்ளார். மிகுறாசு மாலை பங்குனி மாதம் 18 ஆந் தேதி இயற்றப்பட்டதாக அறிகிறோம்,

மிகுறாசு மாலையை ஆலிப்புலவர் கடவுள் வாழ்த்து உள்பட 744 செய்யுள்களில் யாத்துள்ளார். இது தவிர்த்துக் காப்பு என்ற தலைப்பில் ஒரு செய்யுள் மட்டும் அமைந்துள்ளது. ஆக 745 செய்யுள்களைக் கொண்ட மிகுறாசு மாலையில் அறுசீர்க் கழி நெடிலடி யாசிரியவிருத்தம், எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம், எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம், கலிவிருத்தம், நேரிசை வெண்பா, கட்டளைக்கலித்துறை, கொச்சகக்கலிப்பா, கட்டளைக் கலிப்பா, வஞ்சிவிருத்தம், கலிவெண்பா, பஃறொடை வெண்பா, தாழிசை, கலிநிலைத்துறை, நில மண்டில வாசிரியப்பா முதலான 14 வகையான யாப்பமைப்பில் செய்யுள்கள் இடம் பெற்றிருப்பது ஆலிப்புலவரின் தமிழ்ப் பாண்டித்தியத்தைத் தெற்றென விளங்கச் செய்கிறது. மேற்குறித்த யாப்பமைப்பில் அதிகமான பாடல் எண்ணிக்கைகள் நேரிசை வெண்பா, எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம், அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம், கலிவிருத்தம் முதலான நான்கு வகைகளுக்குள்ளேயே காணப்படுகின்றன,

கடவுள் வாழ்த்து, நாட்டுச் சிறப்பு, பாயிரச் சிறப்பு என்பன மிஃறாஜ் மாலை நூலுக்குப் பீடிகையாக அமைந்துள்ளமையால் பாயிரச்சிறப்பு பகுதியிலே வருபொருள் உரைத்தல் அமைந்துள்ளது. தாம் கூறப்போகும் கருத்துக்களை முன்கூட்டியே வரிசைப் படுத்திக் காட்டி உள்ளார் ஆசிரியர். ஐந்து செய்யுட்களைக் கொண்ட இப்பகுதியில்

அந்நகர் தன்னில் வாழும் அகுமது நபிக்குச் சொர்க்க
முன்னுகர் மிகுறா ஜேணி முழுமையும்

(43)

என முதற் செய்யுளின் முதலிரண்டு வரியும்,

முன்பினால் உதித்த எங்கள் முகம்மது மிகுறா ஜேறும்
இன்பமாய்க் கதைத்திரட்டு வாறினை இயம்பக் கேண்மோ.

என இறுதிச் செய்யுளின் கடைசி இரண்டு அடிகளும் மிஃறாஜ் நிகழ்ச்சியின் முழுவரலாற்றையும் சுருக்கமாக அறிமுகப்படுத்து கின்றன. அதனை அடுத்த 'நூல்' என்னும் தலைப்பில் வந்துள்ள பத்துப் பாடல்களும் விண்ணேற்றப் பயணத்துக்குப் பின்னணி யாக அமைந்த சூழலை விவரிக்கின்றன.

மக்கத்தி னின்றுநபி வண்மைஹிசு றத்தினுக்குத்
திக்குமதி னாவினிடை செல்லுமுன் - மிக்குடைய
நாவிரண்டு திங்க ணடக்குமுன் னேகினார்
கோலமிகு றாஜிடையே கூர்ந்து

(மிகுறாசு மாலை:55)

எனவே ஆலிப்புலவரின் கருத்துப்படி மிகுறாசு நிகழ்வு ஹிஜ்றத் பயணம் துவக்கம் பெறுவதற்கு நாலிரண்டு திங்கள்களுக்கு முன்பே நிகழ்ந்திருக்கிறது.

புனித மக்காவிலிருந்து துவங்கும் அல்இஸ்றாப் பயணம், பைத்துல் முகத்தீஸைச் சென்றடைந்து அங்கு பெருமானார் நபி (சல்) அவர்கள் இறை வழிபாட்டினை நிகழ்த்தும் நிகழ்வுகளும், அல்இஸ்றாப் பயணத்தின் போது மக்கமா நகருக்கும் பைத்துல் முகத்திஸிற்கும் இடைப்பட்ட நிலையில் நாயகம் அவர்கள் எதிர் கொள்ளும் நிகழ்ச்சிகளும் பைத்துல் முகத்தீசியல் என்னும் தலைப் பின் கீழ் விரிவாக ஆலிப்புலவரால் விவரிக்கப்படுகின்றன. இன்றும் முஸ்லிம்களுக்கு மக்கா, மதீன நகர்களுக்கு அடுத்தபடியாகப் புனித நகரமாக பைத்துல் முகத்திஸ் விளங்குகிறது. இத்தகு முக்கியத்

துவம் வாய்ந்த பைத்துல் முகத்திஸைச் சென்றடைந்து இறைவழிபாடு நடாத்தும் முன்னர் அண்ணல் நபி (சல்) அவர்களுக்குப் பல செய்திகளை ஜிப்றயில் (அலை) அவர்கள் உணர்த்துகின்றார்கள். பைத்துல் முகத்திஸிற்குச் செல்லும் வழியில் எதிர்ப்பட்ட தூர் சீனாய் மலையினைக் கண்ட நபிகளார் அவர்கள் ஜிப்றயில் (அலை) அவர்களிடம் அதுபற்றி வினவ அதற்கு வானவர் கோன் பதிலளிக்கிறார்கள்.

மேரிதி யாதஃதே சொலு வீரென விண்ணவ ரோதினர்மா
தூரிசி னாமலை யாமிது மூசா தொடர்ந்துமல் லாவுடனே
வீரிய மாய்வச னித்தது மிம்மலை மீதினி லேதவுறாத்
தேரருள் வேத மிறங்கிய தும்மிது தன்னிடை யென்றனரே.

(மிகுறாசு மாலை:86)

தூரிசினாய் மலையினைக் கடந்து சென்றபோது தங்களுக்கு எதிர்ப்பட்ட வாசலினை நாயகம் (சல்) அவர்கள் கண்டார்கள். அவ்விடத்திலே உடனடியாகத் தொழுகை நடத்தும்படி ஜிப்றயீல் (அலை) அவர்கள் தெரிவித்தாக ஆலிப்புலவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தம காமலை யைப்புற மிட்டுற வப்புற மாகையிலே
வந்தொரு வாசல் தெரிந்தது வாமது மையிரு ளாய்
வனமாய்ச்
சிந்திய முட்பல சேரிட மாமதி லேஜிபு ரீலெமைநீர்
சந்தப மின்றியி ரண்டுறக் காத்திங்ஙன் றான்றொழு
மென்றனரே

(மிகுறாசு மாலை:92)

எழுவானியல் தலைப்பின்கீழ் அமைந்த செய்யுள்களில் ஆலிப் புலவர் நாயகம் (சல்) அவர்கள் எழு வானத்திலும் கண்ட புதுமைகளையும், அல்லாஹ்வின் பெருமைகளையும் எடுத்துக் கூறுகிறார். ஒவ்வொரு வானத்திலும் பல நபிமார்களை நாயகம் (சல்) அவர்கள் சந்தித்தார்கள் என்பது விரிவாக மிகுறாசு மாலையில் இடம் பெற்றுள்ளது. முதல் வானத்திற்கு நாயகம் (சல்) அவர்கள் சென்ற போது அங்கு பல மாட மாளிகைகளைக் கண்டார்கள். அம்மாளிகைகள் யாருக்காக அமைக்கப்பட்டிருந்தன என்பதையும் ஆலிப் புலவர் குறிப்பிடுகிறார்.

முகம்மது நபி அவர்கள் தங்களது விண்ணேற்றப் பயணத்தில் முதலாம் வானத்தை அடைந்கதும் அங்கிருந்து பூமியைப் பார்த்தார்கள் அப்பொழுது நாயகத்தின் காட்சிக்குத் தென்பட்ட

பூமியின் உருவம் ஒரு சிறிய விளக்குப் போல் இருந்ததாக ஆலிப் புலவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு நின்று மித்துனியா வாலமதை நன்நயினார்
செங்குவளைக் கண்ணாற் றெரிசித்தா - ரங்கே
சுருக்கமாய்க் கிந்திலொன்று தோன்றுவது போல
இருக்கின்ற திப்பூ விடம்.

(மிகுறாசு மாலை-326)

அண்மைக் காலத்தில் 'அப்போலோ' விண்வெளிக் கலம் வான வெளிப் பயணத்தை மேற்கொண்டு சந்திரனில் அடிவைத்தவர்களுள் ஒருவர் நீல் ஆம்ஸ்ட்ரோங் என்ற அமெரிக்கராவார். அவர் சந்திரனிலிருந்து பூமியைப் பார்த்தார். அப்பொழுது அவருடைய கண்களுக்குப் பூமி ஒளிவிளக்காகத் தென்பட்டது என அவரே குறிப்பிட்டுள்ளார். நாம் பூமியிலிருந்து பார்க்கும் பொழுது சந்திரன் ஒளிமயமாய் எவ்வாறு நமக்குத் தோன்றுகின்றதோ அதே போன்று சந்திரனிலிருந்து பார்க்கும் பொழுது பூமி தென்பட்டது என்பதே அவர்தம் கூற்றின் கருத்தாகும். 1400 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பெருமானார் கண்ட காட்சியாக அவர்களின் பொன் மொழிகளில் வந்துள்ள கருத்துக்களும் 400 ஆண்டுகளுக்கு முன்னர் அக்கருத்துக்களை அடிப்படையாக வைத்து ஆலிப்புலவர் தமது மிஃறாஜ் மாலையில் பெருமானார் கண்ட காட்சியைப் பற்றிய குறிப்பு அமையப் பெற்ற மேற்குறிப்பிட்ட செய்யுளும் விஞ்ஞான ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்பதை அண்மைக்கால நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் அனுபவக் கூற்று உறுதிப் படுத்துவதாகக் கொள்ளலாம் அல்லவா?

விண்ணேற்றப் பயணத்தின் போது விதிக்கப்பட்ட இறைவனது கட்டளைகளுள் முக்கியமானது முஸ்லிம்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஐந்து நேரத் தொழுகையாகும். நாயகம் (சல்) அவர்களிடம் பல் வேறு கட்டளைகளையும் அல்லாஹ் உரித்தாக்கிய பின் இறுதியாக நபி (சல்) அவர்களுக்கும் அவரது உம்மத்தோருக்கும் ஐம்பது நேரத் தொழுகையை கடமையாக்கினான்.

வல்லாய் பறுலை விதித்தியென் றோத வரிசைநபி
அல்லா மொழிந்தன நன்னபி யேதின மன்புவைத்துச்
சொல்லாருமைம்பது நேரத் தொழுகையைத் தூய்புவியின்
மெல்லாய்த் தொழுமென நன்நபி யோம்பட்டு மீண்டனரே

(மிகுறாசு மாலை:630)

இத்தகு கட்டளையைப் பெற்று மீண்டிடும்போது வழியில் மூசாநபி அவர்களைப் பெருமானார் சந்தித்த போது அல்லாஹ்வின் கட்டளையை எடுத்துக்கூற, அதற்கு மூசா நபி அவர்கள் நபி (சல்) அவர்களின் உம்மத்தோர் இத்தகு எண்ணிக்கையில் தொழு கையைச் செய்ய இயலாதவர்கள் என்று எடுத்துக்கூறி மீண்டும் அல்லாஹ்விடம் சென்று கேட்கும்படிக் கூறினார்கள்.

துய்யோன் றினமொன்றிற் கைம்பது நேரந் தொழவிதித்தான்
கையேற்று வந்தனன் யானென்று சொல்லக் கழறவர்தாஞ்
செய்சீர் நபியே நுமதுவும் மத்தினர் செய்யப் பற்றார்
மெய்யா னிடஞ்சென்று கேளுமென்றார் மீண்டுஞ் சென்றே
(மிகுறாசு மாலை:633)

மூசா நபியவர்கள் சொல்லிற்கிணங்க மீண்டும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அறுஷிடத்துச் சென்று நாயகம் இறைஞ்சினார்கள். அண்ணல் நபி (சல்) அவர்களின் இறைஞ்சுதலை ஏற்ற வல்ல அல்லாஹ் இவ்வாறு பணித்தான்:

ஆராரும் போற்று முகம்மத ரேயுமக் கானவெந்த
மாராய முன்கொடுத் தேன்களி கூர்ந்திட மாவணக்கஞ்
சீராக வைம்ப தொகுத்துத் தொழுமச் செயவரிசை
நேராக வைந்தொகுத் திற்றந் தனென்றொழு நித்தமுமே.
(மிகுறாசு மாலை:640)

இவ்வாறு நாயகம் நபி (சல்) அவர்கள் பெற்று வந்த இறை கட்டளையே முஸ்லிம்களால் அன்றிலிருந்து ஐந்துநேர இறை வணக்க வழிபாடாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

மிஃறாஜ் பயணத்தை முடித்துக் கொண்டு முகம்மதுநபி அவர்கள் இனிதே மக்கம் மீண்ட செய்தி நபியுல்லாஹ் 'மக்கம் வந்தவியல்' என்னும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வியலில் 165 செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன.

பெருமானார் முகம்மது நபி அவர்களின் அதிசயமிக்க விண்ணேற்றப் பயணம் என்னும் மிஃறாஜ் நிகழ்ச்சி பிற்காலத்தில் வாழ்ந்த முஸ்லிம் அல்லாத பெரும் புலவர்களின் கற்பனாசக்தியை வளர்ப்பதற்குத் தூண்டுகோலாய் அமைந்திருந்ததை அத்தகை யோரால் இயற்றப்பட்ட இலக்கியங்களிலிருந்து புலனாகின்றது. லத்தீன் போன்ற ஐரோப்பிய மொழிகளிலும் இந்நிகழ்ச்சியின் தாக்கம் ஏற்பட்டிடுப்பதைக் காண்கிறோம்.

மட்ரிட் பல்கலைக்கழகத்தில் அறபுப் பேராசிரியராகக் கடமை ஆற்றிய ஸ்பானிய நாட்டவரான மிகெல் அசின் (Michael Asin) என்பவர் அன்று தோன்றிய மிஃறாஜ் பற்றிய இலக்கியங்கள் ஐரோப்பாவின் மத்தியகால இலக்கியங்களிலே பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள விதத்தினைச் சுட்டிக் காட்டி உள்ளார். இத்தாலிய மொழியிலே தாந்தே என்பவர் டிவைன் கொமெடி (Divine Comedy) என்னும் கவிதையினை இயற்றி உள்ளார் என்றும் மத்திய கால ஐரோப்பிய இலக்கியத்திலே சிறந்து விளங்கிய இக்கவிதைகளில் மிஃறாஜ் நிகழ்ச்சியின் தாக்கம் பெரிதும் காணக் கூடியதாக உள்ளது என்றும் அப்பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

# திருநெறி நீதம்

திரு + நெறி + நீதம் என்னும் மூன்று சொற்களைக் கொண்டது திருநெறிநீதம் என்னும் சொற்றொடர். திரு என்னும் சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. அழகு, புனிதத்தன்மை, செல்வம். திவ்வியம் போன்ற பல கருத்துக்கள் உண்டு. நெறி என்றால் வழி, சமயம், விதி, நல்லொழுக்கம் முதலிய பல பொருள்களைக் குறிக்கும். நீதம் என்பது தகுதியானது, நீதியானது என்பனவற்றைச் சுட்டும். நல்லொழுக்க நீதிகளை விவரிக்கும் புனிதநூல் என்பது திருநெறிநீதம் என்பதன் விளக்கம் எனலாம். திருநெறிநீதம் என்னும் தலைப்புக் குறிப்பிடுவது போன்று இந் நூல், புனிதமான இஸ்லாமிய சமய நல்லொழுக்க நீதிகளைத் தன்னிடத்தே கொண்டுள்ளது.

தமிழில் எழுதப்பட்ட இஸ்லாம் பற்றிய வேறு நூல்களில் கூறப்படாத இஸ்லாமிய நல்லொழுக்க முறைகள் திருநெறி நீதத்தில் இடம் பெற்றுள்ளன. இங்கு விளக்கப்படும் இஸ்லாமிய ஒழுக்கங்கள் வினாவிடைகளாக அமைந்துள்ளன. யூதர்கள் நபிகள் பெருமானார் முகம்மது (சல்) அவர்களிடம் கேட்ட கேள்விகளும் அவர்கள் அவற்றிற்கு அளித்த விடைகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றோடு பெருமானார் முகம்மது (சல்) அவர்களின் விடையில் விளக்கம் தேவைப்படின் பெருமானார் தோழர்களின் அவ்விளக்கத்துக்கான வினாக்களும் அவ்வினாக்களுக்குப் பெருமானார் அளித்த விடைகளும் இங்கு இடம் பெற்றுள்ளன.

திருநெறி நீதம் நான்கு பெரும்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நான்கு படலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதற் படலத்தில் பொதுப்படையான இஸ்லாமியக் கொள்கைகளும்,

இரண்டாவது படலத்தில் ஆண்பெண் இருபாலாரும் பற்றிய அனுமதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய விதிமுறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. திருமணம் நிகழ்த்தப்படும் விவரங்களும் இப்படலத்தில் தரப்பட்டுள்ளன. மூன்றாம் படலத்தில் இஸ்லாத்தில் விலக்கப்பட்ட கருமங்களில் ஈடுபடுபவர் அவற்றை அறியும் வகையும் அவ்வாறு பாவ நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றோடு முஸ்லிம்களிடையே சொத்துப் பிரிக்கப்படவேண்டிய நியாயமான விதிமுறைகளும் இப்படலத்தில் விதந்தோதப் பட்டுள்ளன. நான்காவது படலம் இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளது முதலாவது பிரிவில் இறுதிநாளின் அடையாளங்களும் அந்நாள் அமையும் முறையும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பிரிவில் உலகம் அழிந்தபின் இஸ்லாமிய போதனைகளுக்கு இணங்க மறுமை நாளில் ஏற்படும் நிகழ்வுகளும் அவற்றின் தாத்பரியங்களும் நுணுக்கமாக வருணிக்கப்பட்டுள்ளன.

திருநெறிநீதம் என்னும் நூலில் உள்ள நான்கு படலங்களிலும் ஈராயிரத்து இரு நூற்றிருபத்தாறு செய்யுட்களே இடம் பெற்றுள்ளன. ஆனால் இப்பொழுது பதிக்கப்பட்டுள்ள நூலில் மொத்தப்பாடல்களின் எண்ணிக்கை ஈராயிரத்து இருநூற்றிருபத்தொன்பது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்காம் படலத்தின் இரண்டாம் பாகத்திலுள்ள நானூற்றுத் தொண்ணூற்றிரண்டாம் செய்யுளுக்குப் பின்னர் இடம் பெற்றுள்ள மூன்று செய்யுட்களும் திருநெறி நீத ஆசிரியரால் இயற்றப்பட்டவை போல் தோன்ற வில்லை. அதன் பதிப்பாசிரியர் தாம் நிறுவவேண்டி உள்ள ஒரு குறிக்கோளை நிறுவுவதற்காகப் பின்னால் சேர்க்கப்பட்டவை என்று கூறலாம். அம்மூன்று பாடல்களின் யாப்பமைதியும், அம் மூன்று பாடல்களும் இடைச் செருகல்களாகவே கொள்ளப்பட வேண்டியவை ஆகும் என்பதை வலியுறுத்துவதாகும்.

திருநெறிநீதத்தில் உள்ள விஷயங்கள் அனைத்தும் முகம்மது றசூல்(சல்)அவர்கள் திருவாய் மலந்தருளியவையே என்றும் அவையே திருநெறிநீதமாக அமைந்துள்ளன என்றும் உலகத்தாசை வெறுத்தவனே ஈடேற்றம் பெறுவான் என்றும் அவ்வாறு உலகத்தாசைகளை வெறுக்காவிட்டால் அவனுடைய ஈமானும் வணக்கமும் அவனை விட்டேகிவிடும் என்றும் கூறுகின்றது. இக்கருத்துக்களை கொண்ட பின்வரும் பாடல் திருநெறிநீதம் என்னும் சொ

நூலைக் குறிக்காது நூலில் உள்ள பொருளினை இயம்புவதாக அமைந்திருப்பதைக் காணலாம்.

வள்ளலாரிறசூ லுல்லா வவரிரு பேரைச் சேர்த்து
தெள்ளிய மறையோர்க் கெல்லாம் திருநெறி நீதஞ்
சொல்வார்
உள்ளத்தி லுலகத் தாசை உகந்திடான் சரகுக் கேறான்
கள்ளனாம் வணக்க மீமான் கருத்தை விட்டே குமென்றார்

(இரண்டாம் படலம்:8)

திருநெறி நீதம் என்பதை ஆசிரியர் தீனெறிநீதம் என்றும் குறிப்பிட்டுள்ளார். தீன் என்பது இஸ்லாத்தைக் குறிக்கும். ஆதலால் தீன் நெறி நீதம் என்பது இஸ்லாமிய நெறிமுறைகளைப் பற்றிய நீதிகள் எனப் பொருள்படும். திருநெறி நீதம் என்னும் இந் நூலுக்கே தீனெறிநீதம் என்னும் பெயரும் சூட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

திருநெறி நீதம் என்னும் நூலில் அடங்கியுள்ள பொருள் அனைத்தையும் முதன் முதலில் உலகுக்களித்தவர் முகம்மது நபி (சல்) அவர்களே யாவர். எனவே திருநெறிநீதம் என்னும் நூலிலே பல தடவைகள் அவர்கள் திருநெறி நீதர் என அழைக்கப் பட்டுள்ளார்கள்.

திருநெறி நீதம் என்பது தீனெறி நீதம் என எவ்வாறு அழைக்கப்பட்டதோ அவ்வாறே திருநெறி நீதர் என்பது தீனெறி நீதர் என்றும் இந்நூலில் அழைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

முகம்மது நபி (சல்) அவர்கள் பல பாடல்களில் திருநெறி நபி என்றும் வருணிக்கப்பட்டுள்ளார்கள். சில சமயங்களில் திருநெறி நீதம் என்பதில் உள்ள நீதம் குன்றி திருநெறி என்றும் வழங்கப்படு கிறது.

திருநெறி நீதம் என்னும் நூலின் ஆசிரியர் பீர் முகம்மது என்பவர், இந்நூலைப் பதிப்பித்தவர்கள் இது தற்கலை பீர் முகம்மது சாஹிபு ஒலியுல்லாஹ் அவர்கள் திருவாய் மலர்ந் தருளியது எனக் குறிப்பிட்டுள்ளனர். இது 1929 ஆம் ஆண்டு பதிப் பிக்கப்பட்டது. இதன் சுருக்கமான வேறொரு பதிப்பும் உண்டு. திருநெறி நீதத்தில் உள்ள எந்தப் பாடலிலும் பீர் முகம்மது சாகிபு ஒலியுல்லாஹ் அவர்களைப் பற்றிய செய்தியைக் காண

முடியாது. ஒரு சில பாடல்களிலே பீரு முகம்மது என்னும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பீர் என்பது பாரசீகச் சொல். ஆன்மீகக் குருவை அல்லது தலைவரைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

இந்நூலின் முதலாவது படலத்தில் இடம் பெற்றுள்ள பதினைந்தாம் பாடலில் புலவர் தன்பெயரைக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பாடலில் இறசூலுல்லாஹ்வின் வாழ்க்கையில் அறுபத் திரண்டாம் ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களை வருணிப்பதாகக் கூறித் தமது பெயரையும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மீதனி யிறசூ லுல்லா இருந்துல காளு நாளில்
ஆதி யில்நபி வயத பறுத்தி ரண்டா மாண்டில்
காதலன் விளங்கும் வள்ளல் காரண கவிதை யாகப்
பேதையென் றெளியேன் பீரு முகம்மதன் பேசு குருவே

பீரு முகம்மது என்னும் இவ்வாசிரியர் பெயர் பெருமானார் முகம்மது (சல்) அவர்களையும் குறிக்கு முகமாக ஒரு பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருநெறிநீதம் என்னும் நூலை இயற்றிய பீருமுகம்மது என அவர்களையும் குறிக்கும். திருநெறி நீதம் வகுத்த பெருமானார் (சல்) என்னும் பீர் முகம்மது என அவர்களையும் குறிக்கும். அவ்வாறு இரண்டு பெயர்களையும் குறிக்குமுகமாக இந்நூலாசிரியர் பீர்முகம்மது என்னும் அச்சொற் றொடரைத் தமது நூலில் உள்ள ஒரு பாடலில் அமைத்துப் பாடி யுள்ளார்.

நூறெொளி துலங்கும் முகம்மதர் பவனியின் வருந்திரள்
சூழ்சபையில்
பீரு முகம்மதன் திருநெறி நீதம் பிரபந்த மனர் சபையறியக்
கூறவு முகம்மத ரிறசூல் மகிழ்ச்சி கொண்டன பேருமே புகழ
பெருமையு மிருபதி யறிய பிரியம் வைத்தடி யேனைப் பேணி
(நான்காவது படலம்: இரண்டாம்பகுதி: 378)

மற்றொரு பாடலில் ஆசிரியர் தம்மைக் கவி என்று மாத்திரமே குறிப்பிட்டுள்ளார். எல்லோரும் பெருமானார் முகம்மது (சல்) அவர்களைப் புகழும் இறுதி நாளில் தாமும் பெருமானாரைப் புகழ்வதாக இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கவியும் முகம்மது நபிபதம் புகன்றே
காரண சோபன முரைப்பார்
(நான்காவது படலம் : இரண்டாம் பகுதி : 438)

திருநெறி நீதம் இயற்றப்பட்ட காலம் ஒரு பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலுக்கியையத் திருநெறி நீதம் ஹிஜ்றி 1022ஆம் ஆண்டு றபியுல்லாஹிர் இருபதாம் நாள் வெள்ளிக்கிழமை பாடி முடிக்கப்பட்டது என்பது புலனாகின்றது. இக்குறிப்புக்கள் ஒரு பாடலில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

குருநபி கிசுறத் தாகி குவலயத் தாயி ரத்தின்
இருபத்தி ரண்டா மாண்டி லியம்பிடும் றப்பி யுலா
கருமென் றிருபதன்று காரண வெள்ளி நாளில்
திருநெறி நீதம் பாடத் திருவருள் பெருகத் தானே (17)

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ஹிஜ்றி ஆண்டுக்குச் சமமான ஆங்கில ஆண்டு கி.பி. 1613 ஆம் ஆண்டாகும். அந்த ஆண்டின் இஸ்லாமிய மாதமான றபியுல்லாஹிர் மாதம் முதலாம் பிறை (அதாவது முதலாம் நாள்) மே மாதம் 10 ஆந் தேதியாகும். எனவே றபியுலாகிர் 20 ஆம் நாள் ஜுன்மாதம் 7ஆந்தேதியாகும். இதற்கிணங்க திருநெறிநீதம் கி.பி. 1613 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஏழாம் நாள் வெள்ளிக்கிழமை இயற்றப்பட்டதாகும். இந்தத் தேதியை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்பொழுது திருநெறிநீதத்தில் இடம் பெற்றுள்ள 16 வது செய்யுள் இடைச் செருகலாகப் புகுத்தப் பட்டுள்ள ஒரு செய்யுளாகும் என்பது தெரியவரும். இந்தப் பதினாறாவது செய்யுள் சதக்கத்துல்லா (றலி) அவர்கள் திருநெறி நீதம் இயற்ற அதன் ஆசிரியருக்கு உரைவழங்கினார் எனக் குறிப்பிடுகிறது. ஆனால் இக்குறிப்பு உண்மைக்கு முரணாக அமைந்துள்ளது.

செய்கு சதக்கத்துல்லா அப்பா அவர்கள் ஹிஜ்றி 1042 ஆம் ஆண்டில் பிறந்தார்கள். இது ஆங்கில ஆண்டு 1632/1633க்குச் சமமாகும் ஹிஜ்றி 1042 இல் பிறந்த செய்கு சதக்கத்துல்லா அப்பா அவர்கள் ஹிஜ்றி 1022இல் பீர்முகம்மதுப்புலவரால் இயற்றப்பெற்ற திருநெறி நீதத்துக்கு உரைவழங்கி இருக்க முடியாது. எனவேதான் சதக்கத்துல்லா அப்பா அவர்கள் உரைவழங்கியதாகக் கூறப்படும் கூற்று இடம் பெற்றுள்ள திருநெறி நீதச் செய்யுள் (17) இடைச் செருகலாகும். நடைபெற்றிராத ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடும் ஒரு செய்யுளாகும். பேரறிஞர் செய்கு சதக்கத்துல்லா அப்பா அவர்களைத் தத்தம் நூல்களுடன் தொடர்பு படுத்திக்கொள்வது மரபாக இருந்தது. இதனையே திருநெறிநீதம் பதிப்பாசிரியரும் பயன்படுத்தி உள்ளார் என்று கூறுவது தவறாகாது. பதிப்பாசிரியர்

சதக்கத்துல்லா அப்பா அவர்களின் பிறந்த ஆண்டைக் கருத்தில் கொள்ளாது இச்செய்யுளை இங்கே சேர்த்துள்ளார் என்றே கூறுதல் வேண்டும்.

திருநெறிநீதத்தில் முன்னுரையில் அதன் பதிப்பாசிரியர் மற்றொரு தவறான செய்தியையும் குறிப்பிட்டுள்ளார். 'காயல் பட்டணத்து குதுபு செய்கு சதக்கத்துல்லா லெப்பை ஆலிம் அவர்கள்...தற்கலைக்கு வந்த காலம் கொல்லம் 620 ஆம் ஆண்டு என்று சொல்லப்படுகிறது. பீர் முகம்மது சாய்பு அவர்கள் சரித்திரத்தில் செய்கு சதக்கத்துல்லா என்பவர் செய்கு பீர் முகம்மது சாய்பு அவர்களுக்கு இதைப் பாட உத்தரவுகொடுத்தார்கள். நல் மாராயம் பெற்றார்கள்' என்று முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். கொல்லம் ஆண்டின் ஆரம்பம் கி. பி. 825 ஆகும். இதன் அடிப் படையில் கொல்லம் 620 ஆம் ஆண்டு கி. பி. 1445க்குச் சமமாகும். கி.பி. 1445 ஆம் ஆண்டு ஹிஜ்றி ஆண்டு 849க்குச் சமமாகும். ஹிஜ்றி 1042 ஆம் ஆண்டில் பிறந்த செய்கு சதக்கத்துல்லா அப்பா அவர்கள் ஹிஜ்றி 849ஆம் ஆண்டுக்குச் சரியான கொல்லம் ஆண்டு 620 இல் தற்கலைக்கு வந்திருக்க முடியாது. வந்ததாகக் கூறுவது பெருந்தவறாகும். இதனைக் கொண்டு பார்க்கும்பொழுது திருநெறிநீதம் பாட சதக்கத்துல்லா அப்பா அவர்கள் உரை வழங்கினார் என்பது ஏற்கமுடியாத ஒரு கூற்றாக அமைகின்றது. பொருத்தமற்ற குறிப்பாகி விடுகிறது.

திருநெறி நீதத்திலுள்ள பாடல்கள் அனைத்தும் அந்தாதித் தொடையாக அமைந்திருப்பதைக் காணலாம். திருநெறிநீதத்திலே இடம் பெற்றுள்ள முதற் படலத்திலே உள்ள முதல் பத்தொன்பது பாடல்களும் ஏனைய இஸ்லாமியத் தமிழ் நூல்களில் இடம் பெறும் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களாகவே அமைந்துள்ளன. திருநெறி நீத ஆசிரியர், பீர் முகம்மது அவர்கள் அப்பாடல்களைக் கொண்ட படலத்தைக் கடவுள் வாழ்த்துப் படலம் என அழைக்கவில்லை. ஆனால் அப்பத்தொன்பது செய்யுட்களும் கடவுள் வாழ்த்தில் இடம்பெறும் செய்யுட்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. தமது திருநெறி நீதம் என்னும் நூலுக்கு மூலாதாரமாக அமைந்தது கன்சுல் ஆரிபீன் என்பதை முதலாம் செய்யுளின் ஆசிரியர் பீர் முகம்மது அவர்கள் இவ்வாறு பாடியுள்ளார்.

திருநெறி நீதமென் றுரைத்திடும் வாசகந்
திசையெங்கும் படைத்திடும் திறலோன்
அருமறைப் பொருளை அகமதா யிருந்த
அனைத்தையு மறிந்துல மாக்கள்
குருமறைப் பொருளாய்க் கூறிய பலதும்
கோர்வையென் றெடுத்தன ரிமாமுலஃலம்
விரிவொடு கன்சில்ப் பலமுறை விதமும்
விரித்திடு தமிழிதின் விதமே (1)

திருநெறிநீத ஆசிரியர் பீர் முகம்மது அவர்கள் ஏனைய கவிஞரைப்போன்று கடவுள் வாழ்த்தில் இடம்பெறும் பெரியோர்கள் ஒவ்வொருவரையும் பற்றி ஒவ்வொரு பாடல் இயற்றவில்லை. மாறாக ஒரே பாடலில் பல பெரியார்களைப் பற்றிப் புகழ்ந்துள்ளார். ஒரே பாடலில் அவர்கள் அனைவருடைய ஆசீர்வாதத்தை நாடி உள்ளார். பீர் முகம்மதுப் புலவர் அவர்கள் தமக்கே உரிய பாணியில் கடவுள் வாழ்த்தைப் பாடி உள்ளார் என்பது இதிலிருந்து புலனாகின்றது. அப்பாடலில் முகம்மது நபி (சல்) அவர்களையும் அவர்களைத் தொடர்ந்து வந்த நான்கு கலிபாக்களையும் பெருமானார் (சல்) அவர்களின் திருப்பேரர் இருவர்களையும் முகையதீன் அப்துல்காதிர் (றலி) அவர்களையும் ஏனைய இறைநேசச் செல்வர்களையும் மறையோர்களையும் புகழ்ந்து பாடி உள்ளார். முதல் நான்கு கலிபாக்களையும் புகழ வந்த ஆசிரியர், பீர் முகம்மதுப்புலவர் அவர்கள், ஒரு புதிய உத்தியைக் கையாண்டுள்ளார். அந்தக் கலிபா நால்வரின் பெயரைக் கூடக் குறிப்பிடவில்லை. ஆனால் ஆசிரியர் குறிப்பிட்டுள்ள முறையிலிருந்து அவர்கள் யாவர் என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. அந்த நான்கு கலிபாக்களுள் முதல் இருவரும் பெருமானார் முகம்மது (சல்) அவர்களின் மாமனாராகும் பாக்கியத்தைப் பெற்றவர்கள். அபூபக்கர் (றலி) அவர்களின் புதல்வி ஆயிஷா அம்மையார் அவர்களையும் உமறு கத்தாப் (றலி) அவர்களின் புதல்வி ஹப்ஸா அம்மையார் அவர்களையும் பெருமானார் முகம்மது (சல்) அவர்கள் திருமணம் புரிந்தமையினால் அபூபக்கர் (றலி) அவர்களும் உமறுகத்தாப் (றலி) அவர்களும் பெருமானாரின் மாமானாராகும் பாக்கியத்தைப் பெற்றார்கள்: குலபாஉறாசிதீன் வரிசையில் வந்த நால்வருள் கடைசியாக வந்த இருவரும் அண்ணல் நபி (சல்) அவர்களின் மருகராகும் வாய்ப்பைப் பெற்றவர்களாவார்கள். மூன்றாவது கலிபாவாகிய

உதுமான் இப்னு அப்பான் (றலி) அவர்கள் அண்ணல் நபி (சல்) அவர்களின் றுகைய்யா அம்மையார் உம்முகுல்தூம் அம்மையார் ஆகிய இரண்டு புதல்வியர்களை ஒருவர்பின் ஒருவராகத் திருமணம் முடித்தார்கள். நான்காவது கலிபாவாகிய அலி இப்னு அபீதாலிப் (றலி) அவர்கள் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் இளைய புதல்வி பாத்திமா அம்மையார் அவர்களைத் திருமணம் புரிந்தார்கள். இதன் பயனாக உதுமான் இப்னு அப்பான் (றலி) அவர்களும் அலி இப்னு அபீத்தாலிப் (றலி) அவர்களும் அண்ணல் நபி (சல்) அவர்களின் மருகராகும் வாய்ப்பைப் பெற்று விளங்கினர். இந்நால்வரையுமே பீருமுகம்மதுப்புலவர் அவர்கள் மாமருமிருபேர் மருகருமிருபேர் எனக் குறிப்பிட்டுள்ளார். இனி இக்கருத்துக்களைக் கொண்ட பாடல்களைப் பார்ப்போம்.

மக்கமா நகரின் வள்ளல் முகம்மதர்
　　இருபதத் தையும் போற்றி
மாமரு மிருபேர் மருகரு மிருபேர்
　　இருப தத்தையும் போற்றி
திக்கெல் லாம்பு கழும சனுசன்
　　இருபதத் தையும் போற்றி
தீன்கொ டிமுகைய தீனப்துல் காதிர்
　　பதமென் சிரசி லேற்றி (4)

இப்பாடலில் அடுத்த இரண்டு அடிகளிலும் ஏனைய இறை நேசர்களும் பெரியோர்களும் புகழப்பட்டுள்ளனர், போற்றப் பட்டுள்ளனர்.

திருநெறிநீதம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளவை வினா விடையாகவே அமைந்துள்ளன. மேற்குத் திசையிலுள்ள மஃறிப் நாட்டில் இருந்து வந்த யூதர்கள் பெருமானார் (சல்) அவர்களிடம் இஸ்லாம் பற்றிய கேள்விகள் கேட்க அவ்வினாக்கட்கு அண்ணல் நபி (சல்) அவர்கள் இறுத்த விடைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. வினாக்கேட்டவர்கள் மஃறிபு நாட்டைச் சேர்ந்த யூதர்கள். இவர்களைப் பற்றிய குறிப்பு பல பாடல்களில் வந்துள்ளன.

அரிதானது எது என்பதை 26 செய்யுட்களிலும் (268-293) பெரிது எது என்பதை 28 செய்யுட்களிலும் (294-321) சிறிது எது என்பதை 8 செய்யுட்களிலும் (322-329) உரிது எது என்பதை 5 செய்யுட்களிலும் (330-334) எது கொடிது என்பதை 26 செய்யுட்

களிலும் (335-360) ஆசிரியர் நுணுக்கமாக வருணித்துள்ளார். அரிது, பெரிது, சிறிது, உரிது, கொடியது என இவ்வைந்தினையும் விளக்குமாறு யூதர்கள் நபிகள்நாயகம் (சல்) அவர்களிடம் வினவினர். அவற்றைப் படிப்படியாக அதே முறையில் விளக்கினார்கள் அண்ணல் நபி (சல்) அவர்கள். இக்கருத்தினையே பீரு முகம்மதுப்புலவர் இவ்வாறு ஒரு பாடலில் வருணித்துள்ளார்.

அரிதொரு பெரிதே என்றும் அருகிய சிறிதே என்றும்
உரிதொரு கொடிதே என்றும் உலகினி லுகமை யாக
பெரியவன் தூதே ஐந்தும் பேசுமென் றரசர் கேட்க
சரியிணை இல்லான் தூதர் சாற்றினார் கேளீ ரரிதே

(268)

முதலாம் படலத்திலுள்ள 517 செய்யுட்களுள் ஏனையவை படைக்கப்பட்ட விதத்தினையும் அப்படைப்போடு தொடர்புடைய மற்றைய விவரங்களையும் கொண்டவையாக அமைந்துள்ளன. வரிசையாக எண் இடப்பட்ட 39 பகுதிகளைக் கொண்டன. திருநெறி நீதத்தில் இடம்பெற்றுள்ள இரண்டாம் படலத்தில் 20 ஆம் பகுதிக்கும் 21ஆம் பகுதிக்கும் இடையே உள்ள ஒரு பகுதி எண் இடப்படாமல் இருக்கக் காணலாம். பொருளடக்கத்திலும் இவ்விடை வெளியைக் காணலாம். இந்தப் படலத்தில் மாத்திரமே அதன் பல்வேறு பகுதிகள் வரிசையாக எண் இடப்பட்டுள்ளன.

இரண்டாம் படலத்தின் மனித இயல்பான விதிமுறைகள் விதந்தோதப்பட்டுள்ளன. ஆண்பெண் இருபாலாரையும் பற்றிய ஒழுக்கமுறைகள் இப்படலத்தின் விவரிக்கப்பட்டுள்ளன. கணவன் மனைவி உறவு, அனுமதிக்கப்பட்ட (சுரியத்) வைப்பாட்டிகளின் விவரம், விலக்கப்பட்ட (ஹறாம் ஆன) பெண்களின் தன்மை, விரும்பத்தகாத (மக்ரூஹ் ஆன) பெண்களின் தன்மை, அனுமதிக்கப்பட்ட (ஹலால் ஆன) பெண்களின் தன்மை, எந்தெந்த ஆண்கள்எந்தெந்தப்பெண்களை மணக்கக்கூடாது, விரும்பத்தகாத கணவரின் தன்மை, அனுமதிக்கப்பெற்ற கணவரின் தன்மை முதலியன இப்படலத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. திருமணச்சடங்கு (நிக்காகு) எவ்வாறு நிறைவேற்றப்படல் வேண்டும். அதற்கான இன்றியமையாத நிபந்தனைகள் எவ்வாறு நிறைவேற்றப்படல் வேண்டும், அதன் அத்தியாவசிய நிபந்தனைகளான மகர் (மணமகளுக்குச் செலுத்தப்படவேண்டிய பணம்) என்பதன் அளவு,

அம்மகர் கடனாகும் விதம், அவ்வாறு அமையக்கூடாதவர்கள், திருமணநாள் அறியும்வகை, சுபநாளின் பலாபலன்கள், கணவன் மனைவியைக் கட்டுப்படுத்த வேண்டிய முறைகள் முதலிய இல்லற வாழ்க்கையுடன் தொடர்புள்ள பல்வேறு விஷயங்கள் இப்படலத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. விவாக விலக்கு (தலாக்), விவாக விலக்குபற்றிய ஆண்களின்உரிமைகளும் பெண்களின் உரிமைகளும், மறுவிவாகத்துக்குரிய நிபந்தனைகள், கணவன் இறந்தால் அல்லது விவாக விலக்குக்கு ஆளானால் மனைவி அனுட்டிக்க வேண்டிய (இத்தா) மறைந்து வாழுமுறை பற்றிய விவரங்கள் முதலியனவும் இப்படலத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

திருமணச் சடங்கு என்னும் நிக்காகு எவ்விதம் நடத்தப்படல் வேண்டும் என்று உமறுகத்தாப் (றலி) அவர்கள் குறுக்கிட்டுக் கேட்டனர். யூதத்தலைவர்கள் பிரதானமான கேள்விகளைக் கேட்க அபூபக்கர் (றலி), உமறுகத்தாப் (றலி), உதுமான் (றலி) அலி (றலி) போன்றோர் குறுக்கிட்டு மேலும் விளக்கங்கோரிய பல சந்தர்ப்பங்கள் திருநெறி நீதத்தில் இடம் பெற்றுள்ளன. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் தான் உமறுகத்தாப் (றலி) விளக்கங்கோர இறசூல் நாயகம் (சல்) அவர்கள் நிக்காகு முறையைத் தெளிவுபடுத்தினார்கள். 95 பாடல்களில் (127-222) இத்தகைய விவரங்கள் தரப்பட்டுள்ளன. அத்தகைய பாடல்களுள் ஒரு நிக்காகுச் சடங்கின்போது என்ன என்ன ஓதப்படல் வேண்டும் என்பதை இவ்வாறு விவரிக்கிறது.

வேதமே இறையி னாமம்
　　விதிமுறை வகையும் ஓதி
ஆதியின் நாம முன்னே
　　அகமதர் பேரும் ஓதி
ஆதம்பின் நபிக ளான
　　அம்பியா பேரும் ஓதி
சோதியின் கலிமா ஆமீன்
　　சொல்லிட முகியுந் தானே (2:133)

ஆமீன் (அப்படியே ஆகுக) என்று கூறுவதுடன் திருமணச் சடங்கு முடிவுறும் என்று இவ்வாறு கூறி உள்ளார் திருநெறிநீத ஆசிரியர் பீர் முகம்மதுப்புலவர் அவர்கள்.

இஸ்லாமிய முறைப்படி அனந்திரச் சொத்துக்களைப் பிரிக்கும் விதிகள் பற்றிய விளக்கம் திருநெறிநீதத்தின் மூன்றாம் படலத்தில் இடம்பெற்றுள்ள 102 செய்யுட்களில் (98-199) பொதிந்திருப்

பதைக் காணலாம். 240 செய்யுட்களைக் கொண்ட மூன்றாம் படலத்தில் எஞ்சியுள்ள 41 செய்யுட்களில் விலக்கப்பட்ட (ஹறா மான) பொருள்கள் எவை என்பது பற்றியும் சிலை வணக்கத்தின் தீமையும் இஸ்லாமிய முறைப்படி ஒழுகுவதனால் ஏற்படும் நன்மையும் விவரிக்கப்பட்டுள்ளன. எனினும் 212 செய்யுட்களுடன் மூன்றாம் படலம் முடிவடைகிறபோதிலும் 240 வரையுள்ள 28 பாடல்களும் பிற்சேர்க்கையாக அமைந்துள்ளன. அவற்றுள்ளும் 213 முதல் 217 வரை உள்ள செய்யுட்கள் எந்த தலைப்புக்குள்ளும் அமையவில்லை. திருநெறி நீதத்தின் 212 ஆம் பாடலுடன் மூன்றாம் படலம் முற்றுப்பெற்றது என்று கூறிவிட்டு மேலும் 28 பாடல்கள் முடிந்தபின்னர் மூன்றாம் படலம் முற்றுப்பெற்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிந்திடப் பதினெண் ணாயிரம்
ஆலங்கள் அனைத்தும் செங்கோல்
நிறைந்திரு பதிக்கும் கோமான்
முகம்மத ருரைத்தார் முத்தே (3:240)

என இந்தப் படலம் முற்றுப்பெறுவதைக் காணலாம்,

திருநெறிநீதத்திலுள்ள மிகு நீண்ட படலம் நாலாவது படலம் ஆகும். இந்த நான்காவது படலம் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாம் பாகத்தில் 541 செய்யுட்களும் இரண்டாம் பாகத்தில் 'பீர் முகம்மதருரைத்தார் முத்தே' என்னும் செய்யுள் வரை 492 செய்யுட்களும் இடம் பெற்றுள்ளன. நாலாவது படலம் முழுமையாக இஸ்லாமிய சமயத்திற்கிணங்க இறுதிநாள் பற்றிய விரிவான விளக்கமாக அமைந்துள்ளது. ஆகிர் சமான் என்பது கடைசி யுகம் அல்லது இறுதிக் காலம் எனப் பொருள்படும். இந்த ஆகிர் சமான் எப்படி அமையும் என நபி பெருமானின் தோழர்கள் நபி பெருமானாரிடம் கேட்க விளக்கம் தரப்பட்டது என பீருமுகம்மதுப்புலவர் குறிப்பிட்டுள்ளார். நபிகள் பெருமானாரிடம் அசுகாபித் தோழர்கள் இவ்வாறு வினாக்கள் கேட்டனர் என்பதை இந்நூலாசிரியர் ஒரு செய் யுளில் இவ்வாறு விவரித்துள்ளார்.

நபிகளின் நாயக நவமணிச் சுடரே
நானிலத் தவர்க்கறி வுரைத்தீர்
புவியினில் மனுக்குல மடங்கலு நடக்கின்ற
புகழ்ச்சியும் மகிழ்ச்சியும் உரைத்தீர்

கெவிமலை புவிவான் அனைத்தையும் அழிக்க
கியாமத் துக்கிறை விடுமமளி
இவ்வுல கழிவது மினிவரு மமளியும்
எங்களுக் குரையுமென் றுரைப்பார். (4:1:3)

இங்கே கெவி என்பது பள்ளம் என்பதைக் குறிக்கும்.

நிலையான மறுமை வாழ்வைப் பற்றிக் கூறுகிறது திருநெறி நீதத்தின் நான்காவது படலத்தில் உள்ள இரண்டாம் பாகம். எழுபிறப்பு அறியும் விபரத்தை இரண்டாம் பகுதியாகக் கொண்டுள்ளது நான்காவது படலத்தில் இரண்டாவது பாகம். முதல் பிறப்பு ஒளியிலிருந்து பிறந்தது. கடலுடன் சேர்ந்த பிறவி இரண்டாவதாகும். மழை மூன்றாம் பிறவியாகும். இவற்றினால் தானியம் உண்டானது. தானியமாயுயிர்கள் தரணியெல்லாம் நிறைந்து பூணிய விளைந்துயிர்கள் இருந்தமை நான்காம் பிறவியாகக் கணிக்கப்படுகிறது. தாய்வயிற்றினின்றுப் பொருத்தி வளர்ந்தது ஐந்தாம் பிறப்பாகும். உலகத்திலுள்ள உயிரனைத்தும் ஒன்றாய்ச் சேர்ந்து உருவாகிப் பிறந்து உடலும் ஆவியும் சேர உள்ள பிறவி ஆறாம் பிறப்பாகும். இவ்வாறு உலகில் வாழ்ந்து, இறந்து பின்னர் இறுதிநாளில் மீண்டும் பிறப்பது ஏழாம் பிறப்பாகக் கொள்ளப்படுகிறது. 10 முதல் 14 வரை உள்ள செய்யுட்களில் ஏழு பிறப்புக்களையும் குறிப்பிட்ட ஆசிரியர், உலகம் நிலையற்றது, மறுமை நிலையானது என்பதனை 16 ஆம் பாடலில் உறுதிப்படுத்தி உள்ளார். பிறப்பது மறுஉலகில் இறப்பது இவ்வுலகில் இது உண்மை. பிறப்பு, இறப்பு இரண்டும் உண்மையே. சதா வாழலாம் என்று இருப்பது பொய்யாகும். ஆனால் இறப்பது உண்மையேயாகும். தத்துவ அடிப்படையிலான இக்கருத்துக்களை பீருமுகம்மதுப்புலவர் அவர்கள் ஒரு பாடலில் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

பிறப்பது கியாம மீதில்
இறப்பது உலக மீதில்
பிறப்பிறப் பிதுதான் இரண்டும்
பொய்யில்லை நிசமே யாகும்
இருப்பது பொய்யே யாகும்
இறப்பது நிசமே யாகும் (4:2:16)

எந்த முஸ்லிம் கவிஞரும் அல்லாஹ்வையும் அவனது அழகிய திருநாமங்களையும் அவன் தன் பண்புகளையும் வருணிக்காமல்

விடுவதில்லை. கலிமாவை விளக்கும்பொழுது முகம்மது நபி (சல்) அவர்கள் அல்லாஹ்வை வருணித்தார்கள் என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய வருணனைகள் 'அவன் ஒருவன், அவனுக்கு இணை எதுவும் இல்லை, எவருமில்லை; அவனே எல்லாவற்றையும் படைத்தான். அவனைப்போன்ற பிறிதொன்றும் இல்லை; அவன் எந்த உருவத்தைப் போன்றும் அமையவில்லை. உருவமற்றவன்; உடலற்றவன்; உயிரற்றவன்; அவனுக்கு நிகர் அவனே' என ஒரு பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

ஒருவனென் றுரைப்ப தல்லால்
 ஒருவரு மிணையு மில்லை
சரியிணை யெதுவுமில்லை
 சகலமும் படைத்த கோமான்
வருவிய அவனைப் போல
 அதிலொரு படைப்பு மில்லை
உருவுக ளொன்றைப் போல
 உடலுயிர் உள்ளோன் அல்லன் (1:98)

ஆதி, இறை, இறைவன், நிகரில்லான், தக்கவன், பெரியவன் முதலிய அடைமொழிகளால் அல்லாஹ்வை வருணித்த ஆசிரியர் சிறப்பான சொற்றொடர்களால் அல்லாஹ்வின் பண்புகளை விளக்கத் தவறவில்லை. எப்பொழுதும் நிலைத்தவன் என்னும் பொருளில் 'சாகாத வேதன்' (102), என்றும், எல்லாம் படைத்தவன் என்னும் பொருளில் 'வானமும் புவியமைத்து வகுத்தனன்' (152) என்றும், தொழுகை முறையை அமைத்தவன் என்னும் பொருளில் 'வணக்கமும் நெறிய மைத்த வல்லவன்' (331) என்றும் வந்துள்ளமை காண்க.

கலிமாவைப் பொறுத்தவரையில் அது கடுகைவிடச் சிறியதாகும். அம்பைவிடக் கூர்மையாகும். அது மனதைவிட வேகமாகும். மயிரிலும் அதிகம் நேர்மையாகும். நிலத்தைவிடப் பொறுமை உடையதாகும். கண்களைவிட ஒளியுடையதாகும். பஞ்சாமிர்தம் போன்றதாகும். பளிங்கைப் பார்க்கிலும் தெளிவாக இருக்கும். இங்கே கலிமா இனிமையில் பஞ்சாமிர்தம் போன்றது என்று ஆசிரியர் கூறி உள்ளார். வாழைப்பழம், தேன், சர்க்கரை, நெய், திராட்சை என்னும் இனிய பண்டங்களால் ஆக்கியதும் அபிஷேகத்துக்கு உபயோகிப்பதுமான பண்டம் பஞ்சாமிர்தம் எனப்படும். சுவையில் பஞ்சாமிர்தத்தை ஒத்திருக்கும் கலிமா இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

ஆகிய கடுகில் அதில்சி றிதாகும்
அம்பிலும் அதிகமாங் கூர்மை
மாய்கையா மனதின் வேகம தாகும்
மயிரிலு அதிகமாம் நேர்மை
தோகையா மண்ணிலும் பொறுமைய தாகும்
தோத்திய விழியிலும் ஒளிவாம்
பாகிய பஞ்ச அமிர்தமி லாஞ்சனை
பளிங்கியில் பார்க்கவுந் தெளிவே (89)

இக்கால கட்டத்தில் தோன்றிய இஸ்லாமிய அடிப்படையிலான தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் இறுதிநாளில் அடையாளங்களையும். இறுதிநாளின்போது நடைபெற உள்ள நிகழ்வுகளையும் குறிப்பனவாக அமைந்திருப்பதைக் காணலாம். இன்று போல் அன்றும் இத்தகைய விவரங்களை அறிவதற்கு முஸ்லிம் மக்கள் ஆர்வம் காட்டி இருக்கலாம். எல்லாக் கிரந்தங்களிலும் இத்தகைய விவரங்கள் இடம் பெறுவதில்லை. எனவேதான் இறுதிநாள் ஏற்படுவதற்கான அறிகுறிகளையும் இறுதிநாளின் தன்மையினையும் முஸ்லிம் மக்கள் உணர இத்தகைய நூல்கள் தோன்றுவது இன்றியமையாதது என அன்று உணர்ந்திருக்கலாம்.

# சக்கூன் படைப்போர்

காலத்தால் முந்திய நூல்களுள் மற்றொன்று சக்கூன் படைப் போர். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் தோன்றிய புதுவகை யான இலக்கிய வடிவம் படைப்போர் என்பது. பரணி நூல் களைப் போன்று இல்லாவிட்டாலும் பரணி நூல்கள் போன்று போர்ச் செய்திகளையே படைப்போர் இலக்கிய வடிவம் விவரிக்கின்றது. படை + போர் என்னும் இரண்டு சொற்களாலா கியது படைப்போர் என்னும் சொற்றொடர். யானைப் படை' தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை என்பனவற்றையே நாற்படை என்பர். இத்தகைய படைகளைக் கொண்டு நிகழ்த் தப்படும் போரே படைப்போர் எனப்படும். போர்ச் செய்தி களையே கருவாகக் கொண்டுள்ளமையால் இவற்றை ஆங்கில மொழியில் உள்ள (War Ballad) என்னும்வகையில் சேர்க்கலாம். இத்தகைய படைப்போர் இலக்கியங்கள், இஸ்லாமியக் கருத்துக் கள் அல்லாத வேறு இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆதலால், இவற் றைப் 'புதுவகை இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவம்' என்றே கூறலாம்.

படைப்போர் என்பதனை வினைத்தொகையாகக் கொண்டு அதன் பொருளை உணரலாம். படைக்கப்பட்ட போர் என்பதே அதன் பொருள் எனக் கொள்ளலாம். இஸ்லாமிய வரலாற்றிலே நிகழ்ந்த போர்கள் தற்காப்புப் போர்களாகவே அமைந்திருந்தவை யாதலால் படைப்போர் இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ள போர்கள் பகைவர்களால் ஏற்படுத்தப்பட்ட போர்களாகவே நிகழ்ந்துள்ளன. பெரும்பாலான படைப்போர்களில் வருணிக்கப் படும் போர்கள் இஸ்லாத்தை எதிர்த்தவர்களின் பெயர்களா

லேயே அழைக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் இருசாரார்க்கிடையே நடைபெற்ற போர்கள் விவரிக்கப்படும் சந்தர்ப்பங்களிலும்கூட அத்தகைய போர்கள் ஏற்படக் காரணமாக இருந்தவர்களின் பெயர்களாலேயே அப்போர்களை விவரிக்கும் படைப்போர்கள் அழைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பெரும்பான்மையான படைப்போர்களில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்துள்ளமை விவரிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் அல்லாதார் தோல்வி உற்றனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

அறபு மொழியில் 'கிதாபுல் மகாசி' என்னும் நூல் முகமது இப்னுல் உமருல் வாக்கிதி என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. கிதாபுல் மகாசி என்பதன் பொருள் போர்களின் நூல் என்பதாகும் இது பெருமானார் நபி (சல்) அவர்கள் நிகழ்த்திய போர்களை விரித்துரைக்கிறது. இந்நூலே முஸ்லிம் புலவர்களுக்கு படைப் போர் என்னும் புதுவகை தமிழிலக்கியங்களை உருவாக்குதற்குத் தூண்டுதலாக இருந்தது எனலாம். இதன் அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றில் எதிர்கொண்ட பல போர் நிகழ்ச்சிகளையும் படைப்போர் என்னும் இலக்கிய வடிவத்தின் அடிப்படையில் முஸ்லிம் புலவர்கள் விவரித்துள்ளனர். இதுவரையில் படைப் போர் இலக்கிய வடிவத்தின் அடிப்படையில் பதின்மூன்று இலக்கியங்களை இஸ்லாமியத் தமிழிலக்கியம் பெற்றுள்ளது. அவற்றுள் முதற்கண் தோன்றிய பெருமையைப் பெறுவது சக்கூன் படைப் போர் என்னும் இலக்கியமே ஆகும்.ஏனையன சையிதத்துப்படைப் போர், இரவுசுல்கூல் படைப்போர், காஸிம் படைப்போர், உஸைன் படைப்போர், இபுனியன் படைப்போர், உச்சி படைப் போர், வடோச்சி படைப்போர், தாகி படைப்போர், இந்திராயன் படைப்போர்,நபுஸு படைப்போர்,மலுக்கு முலுக்குபடைப்போர், சூறாவளிப் படைப் போர் என்பனவாகும்.

சக்கூன் படைப்போர் முஸ்லிம் அல்லாத கூட்டத்திற்கும் முஸ்லிம்கட்கும் நடைபெற்ற போரினை விவரிப்பதாகும். சக்கூன் என்பவன் முஸ்லிம் அல்லாதவர்களின் கூட்டத்திற்குத் தலைவனாவான். இது பெருமானார் நபி (சல்) அவர்கள் காலத்தில் நடைபெற்ற போர்களுள் ஒன்றாகும். முஸ்லிம் அல்லாத அரசனான சக்கூன் இறாக் நாட்டின் அரசனாக இருந்தவன். அவனிடத்துப் பெருமானார் நபி (சல்) அவர்கள் இஸ்லாத்தின் ஏகத்துவ இறை வழிபாட்டு நெறிமுறைகளை வலியுறுத்த வேண்டி மேற்கொண்ட

முயற்சியின் பயனாகவே போர் நிகழ்கிறது. போரில் சக்கூன் தோற் கடிக்கப்பட, இறுதியில் சக்கூனும் அவனது கூட்டத்தாரும் நபி (சல்) அவர்களுக்கு கீழ்படிந்து இஸ்லாத்தின் மீது ஈமான் கொண்டு முஸ்லிமாக மாறுகின்றனர். இறுதியில் இஸ்லாத்தின் ஏற்றத்தை சக்கூனும் அவனைச் சார்ந்தவர்களும் ஏற்றுக் கொண்டதால் அவன் இழந்த நாட்டினை அவன் வசமே மீண்டும் ஒப்படைத்து அவனையே அரசனாக இருந்து இஸ்லாத்தின் வழியில் ஆட்சி புரியும்படிச் செய்வித்தார்கள் நபி (சல்) அவர்கள். இதுவே சக்கூன் படைப்போரின் கதையம்சமாகும்.

சக்கூன் படைப்போர், மதுரை நாளெட்டில் வென்றா னென்றும், பீர்கானென்றும் வழங்காநின்ற முகம்மதுப் புலவ ரவர்கள் குமாரர் வரிசை முகியித்தீன் புலவரவர்களால் இயற்றப் பட்டதாகும். இவ்விலக்கியம் முதன் முதலில் காயற்பட்டினம் கண்ணகுமது மகுதூமுகம்மது புலவரவர்களால் பார்வையிடப் பட்டு ஏ. குப்புசாமி நாயுடு அவர்களால் 1908ஆம் ஆண்டு தமது சென்னை கருணாநிதி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சக்கூன் படைப்போரின் காப்பு வெண்பா செய்யுளிலேயே ஆசிரியர் நபி பெருமானார் (சல்) அவர்கள் சக்கூனை வென்ற கதை இஃது என்பதைக் கூறுகிறார்.

> பொன்னுலகு கண்டநபி போர்பொருது சக்கூனை
> இந்நுலகில் வென்றகதை யான்பாட— முன்நூல்கள்
> பூண வரிதான பொற்புளதெல் லாம்படைத்தும்
> காணவரி தாகிநின்றோன் காப்பு

(சக்கூன் படைப்போர்:காப்புவெண்பா)

இக்காப்புச் செய்யுளைத் தொடர்ந்து கடவுள் துதி என்ற தலைப்பில் முதல் பத்து கண்ணிகள் அமைந்துள்ளன. இக்கண்ணி கள் அல்லாஹ்வின் பெருமையினையும் அவனது ஆற்றல்களையும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைப்பனவாக உள்ளன.

ஆசிரியர் தாம் சார்ந்த ஊர், கூடல் திருநகராம் மதுரை என்பதையும் நயினார் என்பவரின் புதல்வன் மீறான் பொன்னும் பொருளும் தந்து தமக்கு சக்கூன் படைப்போர் பாடச் சொன் னார் என்பதையும் இரண்டு செய்யுட்களில் குறிப்பிட்டுள்ளார்.

வைகைநதி பூரணமாய் வளமோடு சூழ்ந்தநல்ல
செய்கையுள்ள கூடற் றிருநகர்க் கதிபதியாய்
வாழுமிசு லானுடைய மைந்தனயி னானுதவும்
ஆளும் நயினார் தமக்கும் அன்பான புத்திரனாம்
மிக்கபு கழுடைய மீறான் மனமகிழ்ந்து
அக்க னுதவியினா லநேகங் கொடைகொடுத்து
சந்தோஷ மாகத் தான்பாடிக் கேட்டதனாற்
சிந்தா குலந்தவிரச் செப்பினே னிக்கதையை
(கடவுள்துதி கண்ணி; 21—24)

சக்கூன் படைப்போரின் காலத்தை நிர்ணயிக்கக் கூடிய அகச் சான்றுகள் இந்நூலில் இவ்வாறு இடம் பெற்றுள்ளன.

வல்ல நயினார் மாமதின மூர்போகச்
செல்லுமாண் டாயிரமுஞ் செப்புந்தொண்ணுற்
றெட்டதிலே
அட்சய வருடமதி லானதிங்க ளாவணியில்
இச்சைகொளுந் தெய்தி யிருபத்தைந் தானதிலே
மெத்தபுகழ் பெருகும் வெள்ளிக்கிழமை யன்று
குத்துபாப் பின்னர் கூறினே னற்றமிழால்
நூறுத்தீ னென்பவரி னோக்கமுறு மைந்தனல்ல
மீறிசு மாயில் விளங்கப் படித்திருந்த
விருத்தத்தை வேண்டாவை மேதினி யிலேதெளிவாய்த்
திருத்த முடனதனைச் சேர்த்தேன் தெரிந்தெடுத்து
பெரியோ னுதவியினாற் பீருகானின் புதல்வன்
வரிசை முகியித்தீன் மகிழ்வாகப் பாடினனே.
(கடவுள் துதி : கண்ணி 25—30)

இவ்வரிகள் சக்கூன் படைப்போர் இயற்றப்பட்டது ஹிஜ்றி 1098 ஆம் வருடம் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன. ஹிஜ்றி ஆண்டாக இதற்கு இணையான கிறித்துவ வருடம் 1686 ஆகும். வருடத்தை குறித்ததற்குப் பின் ஆசிரியர் மாதம், தேதி, கிழமை களையும் நமக்கு உணர்த்துகின்றார். நூலின் அகச் சான்றுகளின் படி 1686ஆம் வருடம் ஆவணி மாதம் இருபத்தியைந்தாம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் நேர குத்துபாத் தொழுகைக்குப் பின்னரே வரிசை முகியித்தீன் புலவரவர்கள் சக்கூன் படைப்போரை அரங்கேற்றம் செய்துள்ளார். இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்

றில் காலத்தால் எட்டாவது இடத்தைப் பெறினும் படைப்போர் இலக்கிய வடிவங்களுக்கு முன்னோடியான முதன்மை இடத்தை சக்கூன் படைப்போர் பெறுகிறது எனவே ஒரு புதுவகை இலக்கிய வடிவத்தைத் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்வித்த பெருமை வரிசை முகியித்தீன் புலவரையே சாரும்.

பெருமானார் நபி (சல்) அவர்களது வாழ்வியல் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் அல்லாஹ்வின் மேலான கட்டளைகளுக்கிணங்கவே நடைபெற்றிருக்கின்றன. இறையருள் பெற்று நபி (சல்) அவர்கள் அல்லாஹ்வின் வழித் தம் செயல்கள் அனைத்தையும் மேற் கொண்டதால் அவர்கள் ஈடுபட்ட காரியங்கள் அனைத்தும் பெரும் வெற்றியாக முடிந்தன. உலகுக்கு ஓர் முன் மாதிரியாகவே நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாழ்வியலை உலகுக்கு அல்லாஹ் அமைத்துக் காட்டினதால் அவர்களின் வாழ்வில் எல்லாச் செயலும் அல்லாஹ்வின் முன்னறிவிப்புடனேயே நடைபெற்றது. இதற் கேற்பவே சக்கூன் படைப்போருக்குரிய முன்னறிவிப்பும் கூட அல்லாஹ்விடமிருந்து வருவதாகவே வரிசை முகியித்தீன் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

சக்கூன் படைப்போரின் 191வது கண்ணியிலிருந்து போர் நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுகின்றன. சக்கூன் அரசன், சுனாபீல் சுகாபீல் என்னும் படைத் தலைவர்களும் தம் மக்கள் நால்வரும் தலைமையேற்க நபி (சல்) அவர்களைச் சென்று பொருதுகின்றார். சக்கூன்அரசனின் படைகளோ எண்ணற்ற எண்ணிக்கையில் காணப் படுகின்றன. படைத்தலைவர் பதினாறிலக்கமும், பரிகள் ஆறிலக்க மும், காலாட்கள் எண்பதாயிரமும் தம்பட்டங்கள் ஐயாயிரத்து முன்னூற்று அறுபதும் ஆக அனைத்தும் ஒன்றுபட்டு நாயகம் பெருமானர் (சல்) அவர்களின் படைகளை எதிர்த்தன. இந்நிலை யில் சக்கூனரசனுடைய படைத்தளபதிகளுள் ஒருவனான மாலிக் என்பான் நபி (சல்) அவர்களின் படைகளைக் கண்ணுற்று இப் படை எனக்கு ஒப்பாகுமா என்று விவேகம் பேசிட, அது கண்ட காசிம் நபி அவர்கள் அலி (றலி) அவர்களைக் கண்டார்கள். இக் காட்சியை வரிசை முகியித்தீன் புலவர் சிறப்பாக எடுத்துக் காட்டு கின்றார். இஸ்லாமிய வரலாற்றில் போர் என்றவுடன் நம் நினைவிற்கு வருபவர்கள் பெருமானார் நபி (சல்) அவர்களுடைய மகன் ஆன அன்னை பாத்திமாவின் கணவரான அலி (றலி) அவர் களே ஆவார். இஸ்லாம் எதிர்கொண்ட பத்ருப் போர். உஹத் போர், கைபர்ப் போர் போன்ற பிற முக்கியமான போர்களில் தம்

வீரத் திறமையினால் இஸ்லாத்திற்கு எண்ணற்ற வெற்றிகளை ஈட்டித் தந்த பெருமையை உடைய அலி (றலி) அவர்களுடைய போர்த் திறமையைப் பெரும்பாலான கண்ணிகளில் ஆசிரியர் எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

சக்கூன் படைப்போர், போர் நிகழ்ச்சியை மையமாகக் கொண்ட இலக்கியமாயினும் இப்போர் நிகழ்வின் நோக்கம் இஸ்லாத்தைப் பரப்புதல் என்னும் அண்ணல் நபி (சல்) அவர்களுடைய அரிய முயற்சியே ஆகும். எனவே படைப்போர் இலக்கியத்துள் ஆங்காங்கே இலக்கியப் போக்கின் கட்டமைப்புச் சிதைவுறாத வகையில் இஸ்லாமியக் கோட்பாடுகள் எடுத்துரைக்கப் படுகின்றன. இக்கோட்பாடுகள் இஸ்லாமிய நெறியையும் பழக்க வழக்கங்களையும் விளக்கும் வண்ணம் ஆசிரியர் அமைத்துள்ளார்.

சக்கூன் படைப்போரில் ஆசிரியர் ஆங்காங்கே கருத்துக்களைத் தெளிவுற விளக்குவதற்குப் பல்வேறு உவமைகளைக் கையாண்டுள்ளார். இவ்வுவமைகள் அந்தந்தக் கருத்துக்களுக்கேற்ப அமைந்திருப்பதுடன் எளிமையாகவும் உள்ளன. சக்கூன் படைப் போரின் தொடக்கத்தில் அசுகாபிமார்கள் நாற்பதினாயிரம் பேர் பெருமானார் நபி (சல்) அவர்களைச் சூழ்ந்திருந்தது, வான் மதியை வான் மீன்கள் சூழ்ந்தது போலிருந்ததாகக் குறிப்பிடுகிறார். இதுபோன்றே போருக்குசெல்லும் போது நபி(சல்) அவர் களைச் சுற்றி அசுகாபிமார்கள் சூழ்ந்து செல்லும் காட்சியை.

''வட்டமதி தன்னை வான்மீன்கள் சூழ்ந்தபோல்
இட்டமுள்ள நந்நபியை எல்லவருஞ் சூழ்ந்துவர''

சென்றதாக உவமிக்கின்றார். நபி (சல்) அவர்கள் பல இடங்களில் வான் மதிக்கும் அசுகாபிமார்கள் விண்மீன்களுக்கும் உவமிக்கப் பட்டுள்ளார்கள்.

சக்கூனரசனுடைய பெரும் பதியைக் கண்ட எண்ணிக்கையில் குறைந்த அசுகாபிமார்கள் அச்சமுற்று வியப்படைகின்றனர், இந் நிலையை.

நாடிய சக்கூன் பதி நற்புரிசை கண்டனரே
புரிசைதனைக் கண்டு புலிகாணும் மானதைப்போல்
வரிசைநபி தோழரெல்லா மனதிற் பயந்திருந்தார்.

என ஆசிரியர் சுட்டுகின்றார். இங்கு, 'புலி காணும் மானதைப் போல்' என்பதில் என்பதில் புலி என்பது சக்கூன் அரசனுக்கும்,

மான் அசுகாபிமார்களுக்கும் உவமிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சக்கூன் படைப்போரின் தொடக்கத்திலேயே சக்கூனரசன் புலி போன்ற கொடிய தன்மைகளுடையவன் என்பதையும், அசுகாபிமார்கள் மான் போன்ற மென்மைத் தன்மை உடையவர்கள் என்பதையும் ஆசிரியர் வெகு எளிதாக உணர்த்தி விடுகின்றார். இதே புலி உவமையை வீரத்திற்காகப் பயன்படுத்தும் போது அலி (றலி) அவர்களுக்கு ஆசிரியர் உவமித்து உள்ளார். அலி (றலி) அவர்கள் சக்கூன் படைகளுக்கிடையே பாய்ந்து அங்குள்ள யானைகளையும் வெட்டி வீழ்த்தும் காட்சியைக் கூறும் போது, ஆயன் பசுக்களுக்கிடை வரும் புலிபோல் பாய்ந்து வந்ததாக வரிசை முகியித்தீன் புலவர் குறித்துள்ளார்.

உவமைகளை வரிசை முகியித்தீன் பயன்படுத்தியிருப்பது போல் ஆங்காங்கே சக்கூன் படைப்போரில் சூழல் வெளிப்பாட்டிற்குப் பழமொழிகளையும் கையாண்டுள்ளார். போரில் சக்கூனின் இளைய மகன் அலி (றலி) அவர்களையும், அசுகாபிமார்களையும் கண்டு இழிவான வார்த்தைகளைக் கூற அதனைக் கேட்ட அலி (றலி) அவர்களின் நிலைமையை விளக்கும்போது

மந்தவெளியில் வருகையிலே நாய் குலைத்தால்
கையிற் றடியிருக்கக் கரிபரியுந் தேடுவாரோ

என்னும் பழமொழியைப் பயன்படுத்துவதன் மூலம் சக்கூனரசனுடைய மகனுடைய நிலையையும் அலி (றலி) அவர்களது போர் வலிமையையும் ஆசிரியர் விளக்கியுள்ளார். இதே போல் சக்கூனரசனுடைய மூத்த மகன் மாலிக் அலி (றலி) அவர்களை வெட்டி வீழ்த்தக் கருதிப் போர்க்களத்திற்கு வரும் போது,

புலியொடு எதிர்த்துப் பொருதுமே ாஆட்டுக்கிடாய்
(கண்ணி :225)

என்னும் பழமொழியின் மூலம் அலி (றலி) அவர்களின் வலிமையை ஆசிரியர் உணர்த்துகிறார். இந்த சூழலில் அலி (றலி) அவர்களைக் கண்ணுற்ற சக்கூனுடைய மகன் மாலிக் அவரது தோற்றத்தைக் கண்டு அச்சம் அடைந்தபோது அலி (றலி) அவர்கள் கூற்றில் ஒரு பழமொழி இடம் பெற்றுள்ளது.

பஞ்சவர்ண நற்கிளிகள் பல பேச்சுத்தான் பேசும்
மிஞ்சவது தன்னை விரகு பிடித்தழைக்கில்
கிளிகளந்தப் பேச்சுவிட்டுக் கீகீயெனுங் கண்டாயே
(கண்ணி: 528—529)

எனக் கூறுவதாக உள்ளது. ஏற்கனவே தம்மை இகழ்ந்து கூறியதை மறந்துவிட்டு போர்க்களத்தில் தம் வலிமையைக் கண்டு அச்சமுறும் மாலிக்கின் நிலையை அலி (றலி) அவர்கள் கிளியின் பழமொழி மூலமாக உணர்த்துவதாக உள்ளது.

# முதுமொழி மாலை

சீறாப்புராணம் பாடப்படுவதற்கு முன்னோடியாக அமைந்தது முதுமொழிமாலை எனக் கூறப்படுவதனாலேயே அது இங்கு கூறப்படுகிறது.

முதுமொழி மாலையை இயற்றியவர் சீறாப்புராணம் எழுதிய உமறுப்புலவர் என்ற க்ருத்தே பெரிதும் நிலவுகிறது. இக்கருத்து முதுமொழி மாலையைப் பதிப்பித்துள்ள பதிப்பாசிரியர் கண்ணகு மது மகுதா முகம்மதுப் புலவரவர்கள் மூலமாகவே பெரிதும் நிலை நிறுத்தப் பெற்றுள்ளது. உமறுப்புலவரே முதுமொழி மாலையை இயற்றியவர் என்ற கருத்திற்குப் பின்புலமாகச் சில கருத்துக்களும் நிலவுகின்றன.

சீறாப்புராணம் பாடுவதற்காகச் சீதக்காதியின் அறிவுறுத்தலின் பேரில் உமறுப்புலவர் சதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் சென்றார் என்றும், முஸ்லிம் அல்லாத ஒருவர் போல் உமறுப் புலவர் காட்சி அளித்தமையினால் சதக்கத்துல்லா அப்பா உதவி புரிய மறுத்துவிட்டார் என்றும் இதனை அறிந்த சீதக்காதி மரைக்காயரும் மனம் வருந்தினார் என்றும் உமறுப்புலவரும் உள்ளங் கலங்கினவராய்ப் பள்ளிவாசலுக்குச் சென்றார் என்றும் செய்தி கூறப்படுகிறது.

மனம் பெரிதும் சஞ்சலமடைந்த உமறுப்புலவரவர்கள் பள்ளிக்குச் சென்று இறைவனை எண்ணியும் றசூல் நாயகத்தை நினைத்தும் துவா இறைஞ்சினார்கள். இந்நிலையில் பெருமானார் நபி (சல்) அவர்களை நினைந்து உமறுப்புலவர் 'என்று காண்பேனோ' என்று முடிவிலமைந்த முதுமணிமாலையென்னும்

முனாஜாத்தொன்றைப் பாடிக் கொண்டிருக்கும் போதே கண்ணயர்ந்து கவலையுடன் நித்திரையில் ஆழ்ந்தார்கள். அப்போது நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உமறுவுக்குகனவில் திருக்காட்சிநல்கினார்கள். உமறென்று பெயர் சொல்லி அழைத்து 'என்னுடைய சதக்கு உம்முடைய உள்ளத்தை அறியாமல் உடை பாவனையைக் கொண்டு கோபமாகச் சொன்னதேயன்றி வேறில்லை. நானவரிடத்திலும்மைக் குறித்துச் சொல்கிறேன். ஆதலால் நீர் சுபகு (அதிகாலைத் தொழுகை) தொழுதுவிட்டு மனம் நாணாமலவரிடத்திற் போம். உம்மைச் சங்கை செய்து சீறாவுரை எழுதித் தருவார், பாடுமென்று சொல்லினார்கள். பெருமானார் நபி (சல்) அவர்களின் குரல் கேட்டுப் புலவரவர்கள் விழித்துப் பார்த்தார். அது சமயம் உலகத்தில் உள்ள ஒளிகள் யாவும் ஒன்றுபடுத்தி ஒப்பிட்டாலும் ஒவ்வாத பெரிய ஒளியொன்று தோன்றக் கண்டு சீறாவின் முதல் காப்புச் செய்யுளாம், 'திருவினும் திருவாய்' என்னும் செய்யுளையும் அதற்கடுத்த சில செய்யுட்களையும் பாடி எழுதிக் கொண்டு சுபகு தொழுதுவிட்டு சதக்கத்துல்லா அப்பா அவர்களின் இல்லம் நோக்கிச் சென்றார் உமறு.

அங்கே சதக்கத்துல்லா அப்பா அவர்களின் கனவிலும் நபி (சல்) அவர்கள் தோன்றி உமறு பற்றி எடுத்துரைத்து சீறாவிற்கு உரை கொடுக்குமாறு கூறிச் சென்றார்கள். விழித்தெழுந்த சதகத்துல்லா அப்பா உமறுவின் வரவினை எதிர்நோக்கிக் காத்திருந்து அவர் வந்தபின் சில தினங்களில் பல அரிய அறபு கித்தாபுகளின் துணைகொண்டு பெருமானார் அவர்களின் வாழ்க்கையைத் தமிழில் உரைசெய்து தர அதனைச் சீறாவென்னும் இனியபெருங் காப்பியமாக உமறுப்புலவர்கள் உருவாக்கினார்கள்.

மேற்சொன்ன கருத்து சீறாப்புராணம், மற்றும் முதுமொழி மாலை தோன்றிய பின்புல வரலாறாக இஸ்லாமியத் தமிழிலக்கிய உலகில் பெரிதும் நின்று நிலவுகின்றது. இக்கருத்துக்கள் சீறாப் புராணஞ் செய்யப்பட்ட சரித்திரச் சுருக்கமாகப் பதிப்பாசிரியர் கண்ணகுமதுமகுதூ முகம்மதுப் புலவரவர்கள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு பதிப்பிட்ட சீறாப்புராணம் பதிப்பின் இறுதியில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இக்கருத்துக்களின் அடிப்படையிலேயே தமிழுலகில் முதுமொழிமாலை உமறுப் புலவரவர்களால் இயற்றப்பட்டது என்ற கருத்து நிலவுகிறது.

நம்க்குக் கிடைத்திருக்கும் முதுமொழி மாலையின் முந்திய பதிப்பும் கண்ணகுமது மகுதூ முகம்மதுப் புலவரவர்களாலேயே பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பு ஹிஜ்றி ஆயிரத்தி முன்நூற்றி யெட்டாமாண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கிணையான கிறித்துவ ஆண்டு ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறு ஆகும். கண்ணகுமதுமகுதூ முகம்மதுப் புலவரவர்கள் கொழும்பில் நெடு நாளாய்ப் புத்தக வியபாரஞ் செய்தவரான நெ வா.காதிர்நெயினா லெவ்வையவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க முதுமொழி மாலையைச் சென்னை மனோன்மணி விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பித்துள்ளார். இவர்தம் பதிப்பில் திருத்தமான பதிப்பு என்று குறித்திருப்பதால் இதற்கு முந்திய தொண்ணூறில் முது மொழிமாலை என்று பதிப்பித்திருக்கும் கண்ணகுமது மகுதூ முகம்மதுப்புலவர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்பதா மாண்டு சீறாப்பதிப்பில் அதே நூலை ‘முதுமணிமாலை’ (சீறாப் புராணம் கண்ணகுமது மகுதூ முகம்மதுப்புலவர் பதிப்பு !919,பக். 705) என்று குறிப்பிட்டுள்ளார். எனவே முதுமொழி மாலைக்கு முதுமணி மாலை என்ற ஒரு பெயரும் இருந்திருக்க வேண்டும். அல்லது முதுமணி மாலை என்ற பெயரை மாற்றம் செய்து கண்ணகுமது மகுதூ முகம்மதுப் புலவர் முதுமொழி மாலை என்று மாற்றியிருக்கவேண்டும். இப்பெயர் மாற்றம்போலவே முதுமொழி மாலையின் ஆசிரியர் உமறுப்புலவர் என்ற கருத்தும் கண்ணகுமது முகமதுப் புலவர் மூலமாகவே இலக்கிய உலகில் நிலைபெற்றுள்ளது.

முதுமொழிமாலையின் காலம்பற்றிய கருத்தும் தெளிவுறத் தெரியவில்லை. முதுமொழி மாலையை, பதிப்பாசிரியர் கருத்துப் படி, உமறுப்புலவரவர்களே இயற்றி இருந்தால் இது சீறாப் புராணத்திற்கு முந்தியதாகத்தானிருக்க வேண்டும்.

ஆனாலும் நூலினுள் காலம் பற்றிய செய்தியை அறிவதற்கு எவ்வித அகச்சான்றுகளும் இல்லை.

முதுமொழிமாலையுள் எண்பத்தெட்டுச் செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. செய்யுள்கள் அனைத்தும் எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தமாகும். இச்செய்யுள்கள் ஒவ்வொன்றும் ‘முகம்மதை யென்று காண்குவனே’ என்னும் ஈற்றடியுடன் முற்றுப் பெறுகின்றன. நூலின் இறுதிச் செய்யுள் முடிவில்லாத

தாக உள்ளது. முதுமொழி மாலையுள் இடம் பெற்றிருக்கும் எண்பத்தெட்டுச் செய்யுள்கள் அனைத்திற்கும் ஒரு தொடர்ப் பொருளைக் கூறுதல் இயலாது. செய்யுள்களில் உள்ள பொதுத் தன்மை அனைத்துச் செய்யுள்களிலும் பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் புகழ் பாடுவதாகும்.

முதுமொழி மாலையில் ஆசிரியர் நாயகத்தைப் புகழும் தம் நோக்கத்தை நிறைவு செய்யும் வண்ணம் தம் செய்யுளுள் பெரும் பாலானவற்றில் முற்பகுதி வரிகளை நபி (சல்) அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் அடைகளாகவே அமைத்துள்ளார், பின்வரும் செய்யுளை எடுத்துக் கொள்வோம்.

வேதபூ ஷணரை யாதிபுங் கவரை
  வினைப்பவக் கடல்கடந் தோரைத்
தீதுறுங் கொடிய பாவமோ சனரைத்
  திரிமலத் தகனரைச் சிறந்த
பூதர மனைய சர்ப்பத கனரைப்
  பூரணச் சந்த்ரவ தனரைச்
சோதியா ஜானு வாகரைச் சுடரார்
  முகம்மதை யென்றுகாண் குவனே.

(முதுமொழி மாலை : 1)

இதில் வேதபூஷணர், ஆதிபுங்கவர், வினைப்பவக்கடல் கடந் தோர், பாவமோசனர், திரிமலத்தகனர், சர்ப்பதகனர், பூரணச் சந்த்ரவதனர், ஜோதி யாஜானுவாகர், சுடரார் முதலிய பத்து அடைகளும் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கப்பட்டு இறுதியில் உள்ள முகம்மது என்னும் பெயரையே சிறப்பிப்பதாகத் தழுவி அமைந் துள்ளன. இத்தகு முறையிலான செய்யுள் அமைப்பில் இடையில் இரு வரிகள் நீக்கப்படினும் பாடலின் பொருளமைதி சிதைவுறாது. காரணம் தொடர் கருத்துக்கள் என்ற முறையில் முதுமொழி மாலையில் உள்ளடக்கக் கருத்துக்கள் அமையாதிருப்பதே ஆகும்.

முதுமொழி மாலை ஆசிரியர் பெருமானார் நபி (சல்) அவர் களின் பெருமைகளைக் கூறும் போக்கில் சில செய்யுள்களில் மக்கா, மதின நகர்களின் சிறப்புக்களையும் இணைத்துப் பாடியுள்ளார். நபிகளார் அவர்கள் பிறந்தது மக்கா நகரிலாயினும் இஸ்லாத்தின் ஏற்றத்தையும் சிறப்பையும் முதலில் ஏற்று உலகிற்கு வழிகாட்டி யாக இருந்தவர்கள் மதினத்தவர்களே ஆவர். முதலில் மறுத்த மக்கத்தவர்கள் பின்னுல் இஸ்லாம் தம் நெறியெனப் போற்றினர்.

அத்துடன் மக்கா, மதீன நகர்களில் இஸ்லாத்தின் பெருமைகள் தழைத்தோங்கிச் சிறந்தன. நபி பெருமானாரின் ஆட்சியும் அரசு செலுத்தியது. இக்கருத்தமைவுள்ள பாடல் இதுதான்,

பஞ்ச விடைய மறுத் தெறிந்த
படிவ ரெஞ்ஞான் றினுமுவந்து
துஞ்சு மக்க மீதுதித்தே துறக்க
நகர்க்கோ ரேணி யெனச்
செஞ் சொன் மதினத் திருந்தரசு
செலுத்தும் வேந்தை யடியவருக்
கஞ்ச லெனவந் தருள் கொடுக்கு
நபியை யென்று காண்குவனே.

(முதுமொழி மாலை: 78)

பொதுவாக முதுமொழி மாலையுள் பெருமானார் (சல்) அவர்களின் வாழ்வில் நடைபெற்ற முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் அவர்தம் பெருமையை எடுத்துக் காட்டிப் புகழ் சேர்க்கும் வண்ணமே அமைந்துள்ளன. ஆனால் எந்தவொரு நிகழ்ச்சியும் தொடர் நிகழ்வுகளாக விளக்கப்படவில்லை. ஆங்காங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஒரே நிகழ்ச்சியும்கூடப் பல செய்யுள்களில் இடம் பெற்றுள்ளது.

முதுமொழிமாலையுள் குறிப்பிடத் தக்க மற்றொரு அம்சம் அதனுடைய மொழி நடையாகும். ஆசிரியர் பயன்படுத்தியுள்ள மொழிநடை சற்றுக் கடினமானதாகவே உள்ளது. முதுமொழி மாலையுள் அறபு சொல்லாட்சி இடம்பெற்றிருப்பது வெகு சிலவே ஆகும் குறிப்பாக முகம்மது, நபி, குப்ர், ஜிப்றயீல் இவை போன்ற சில சொற்களே இடம் பெற்றுள்ளன. அதே நேரத்தில் வடசொல் கலப்பு மிக அதிகமாக உள்ளது. இவ்விரண்டு இயல்புகளும் முதுமொழி மாலையை ஏனைய பிற இஸ்லாமியத் தமிழிலக்கியங்களிலிருந்து பெரிதும் வேறுபடுத்துகின்றன. குறிப்பாகக் கூற வேண்டுமானால் சீறாப்புராணத்தையும், முதுமொழி மாலையையும் மொழி அடிப்படையில் ஒப்பு நோக்குவோமானால் பெரும் வேறுபாடுகள் இருப்பது நன்கு வெளிப்படுகிறது. சீறாப்புராணத்தில் அறபு, பாரசீகச் சொல்லாட்சிக்குரிய முக்கிய இடத்தை முதுமொழி மாலையில் வடசொல் பெற்றுள்ளது. அதேபோல் உள்ளடக்கம் என்ற நிலையிலும் இஸ்லாமியக் கருத்துக்கள் சீறாப்புராணத்தில் விரித்துரைப்பதுபோல் முதுமொழி மாலையுள் காண

முடியவில்லை. குறிப்பாக முதுமொழி மாலையுள் முக்கியமாகப் பல செய்யுள்களில் குறிக்கப்பட்டுள்ள 'மும்மலம்', இருவினை' மற்றும் பிற மெய்ஞ்ஞான வழி முறைகள் தொடர்பான விளக்கக் கருத்துக்கள் சீறாவில் காணப்படவில்லை என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் முதுமொழி மாலையையும் சீறாப்புராண ஆசிரியரான உமறுப்புலவரே இயற்றினார் என்ற கருத்து இதனடிப்படையில் ஐயப்பாட்டிற்குட்பட்டதாகிறது. முது மொழி மாலையுள் உள்ள எந்தவொரு செய்யுளும் அகராதியின் துணையின்றிப் புரிதல் கடினமாகவே உள்ளது. இத்தகு நிலை சீறாப்புராணச் செய்யுட்களுக்கில்லை. எனவே மொழி அடிப்படை யில் மேற்கொள்ளப்படும் முறையான விரிவான ஒப்பீட்டு ஆய்வு சீறாப்புராணத்தையும், முதுமொழி மாலையையும் இயற்றியவர் ஒருவரா? இருவரா? என்ற ஐயப்பாட்டிற்கு விடையளிக்கும். முது மொழி மாலையுள் இடம் பெற்றிருக்கும் சரோசரட்சகர், சததள பதயுகளர், சலசலேசர், சுகாதிரப் பொருள், சகத்தி நிருமலப் புனிதர். சசிவானவர், புயாசல வேந்தர், யூனிக்கிய வேந்தர்' பூதரம், ஏடலம், சசி, சரர்கணாயகர், திவனாதாபரர் போன்ற இன்னபிற சொல்லாட்சிகள் நாயகம் (சல்) அவர்களுக்கு அடைகளாக வரப்பெற்றுள்ளன. இவைபோன்ற சொல்லாட்சி களைச் சீறாப்புராணத்தில் காண்பதரிதாகும்.

முதுமொழி மாலையுள் உள்ள மொழி நடையின் பிறிதொரு இயல்பு அடைகளை பாடல்தோறும் அடுக்கிச் செல்லுதலேயாகும். இதில் இடம்பெற்றுள்ள செய்யுள்களில் அனைத்தும் வரிகள் தோறும் நபி (சல்) அவர்களின் புகழ் சேர்க்கும் அடைகளைப் பெற்றே வருகின்றன. ஆங்காங்கே சிலசெய்யுள்களில் உவமைகளை ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார். உலக வாழ்வின் யாக்கை புல்நுனி யில் உள்ள பனித்துளிக்கு உவமிக்கப்படுகிறது (பா: 12) இதேபோல் இவ்வுலகில் அடுத்தது காட்டும் கண்ணாடிபோல் உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் உணர்ந்த மாதவராக நபி (சல்) அவர்கள் பின்வருமாறு புகழப்படுகிறார்கள்.

தற்பனந் தெரிசித் தோர்தொழி லனைத்தும்
காட்டிய பாவைபோற் சகத்தின்
உற்பவித் திடும்பல் லுயிர்களு மியங்க
உறைந்திடும் புநிதமா தவரை

(முதுமொழி மாலை: 13)

உவமைகள், உருவகங்கள், வர்ணனைகள் இவற்றின் நிலையிலும் சீறாப்புராணத்திற்கும் முதுமொழி மாலைக்குமிடையே மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. முதுமொழி மாலையுள் எந்தவொரு செய்யுளிலும் அதனை இயற்றிய ஆசிரியர் பற்றி அகச் சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே முதுமொழி மாலையின் ஆசிரியர் உமறுப்புலவர் என்னும் கூற்று இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் முற்றும் முடிந்த கருத்தல்ல. மேலும் ஆய்வுக்குரியதே ஆகும். "

# திருமக்காப்பள்ளு

பள்ளு என்பது ஒரு நாடகப் பிரபந்த வகை. இந்த நாடகத்திக்கு நிலைக்களனாக அமைவது மருதநிலம். அந்நில மக்களே இந்த நாடகப் பிரபந்தத்தில் முக்கியமான பங்கு எடுப்பர். பள் என்பதே பள்ளு ஆயிற்று. இப்பள்ளு வகையிலான பிரபந்தம் சிற்றிலக்கியங்களைச் சார்ந்தது. பள்ளுப் பிரபந்தங்களுக்கு முன்னோடியாக விளங்கியது முக்கூடற் பள்ளு என்பர். அதன் பின்னரே ஏனைய பள்ளுக் கிரந்தங்கள் தோன்றின என்பர்.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய ஒரு பள்ளு நூல் உள்ளது. அது 'திருமக்காப் பள்ளு' என்று பெயர் பெற்றுள்ளது. பள்ளு நூலுக்குரிய சிறப்பியல்கள் அத்தனையும் மக்காப் பள்ளில் இடம் பெற்றுள்ளன. அதில் பங்கேற்பவர்களும் ஏனைய பள்ளு நூல்களில் உள்ளவர்கள் போன்று மருதநிலமக்களே. திரு மக்காப் பள்ளுக்கு நிலைக்களனாக அமைவது மக்க மாநகரம். முகம்மது நபி (சல்) அவர்கள் பிறந்த நகரம். அறபு நாட்டிலே பிரதான மான நகரங்களுள் ஒன்று. முஸ்லிம் மக்கள் புனிதமான நகரமாக அதனைக் கருதுவர். ஆண்டுதோறும் முஸ்லிம் மக்கள் புனித ஹஜ் பயணத்தை மேற்கொண்டு மக்காவுக்குத்தான் செல்கின்றனர். 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் பெருவழக்கைப் பெற்றுள்ள ஒரு பழமொழி. அப்பழமொழியை மெய்ப்பிக்கும் வகையிலேயே திரு மக்காப்பள்ளு என்னும் நூலும் தோன்றி உள்ளது.

திரு மக்காப்பள்ளின் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. இப்பள்ளு முகம்மது நபி (சல்) அவர்கள் பேரில் பாடப்பட்டுள்ளது.

பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து பரிசோதித்துத் திருத்தி பி. றஹீம்கான் சாய்பு என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவர் தூத்துக்குடியைச் சேர்ந்த மகா ா.ா ஸ்ரீ பாக்கர்கான்சாய்பு அவர்களின் மூத்த புதல்வர் ஆவார். பி. றஹீம்கான் என்பவர் தூத்துக்குடி மாவட்ட முன்சீபுநீதிமன்றத்திலே பணிபுரிந்துள்ளார். இந்த நூலை வெளியிட சின்னத்தம்பி மரைக்காயர் அவர்கள் புதல்வர் எஸ். கே. முகியித்தீன் காதர்ஷா மரைக்காயர் அவர்கள் பொருளுதவி புரிந்துள்ளார். இத் திருமக்காப்பள்ளு தூத்துக்குடி அருணோதய அச்சகத்தில் 1900-ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பட்டுள்ளது.

மேத்தர் முகிதீன் அவர்கள் முக்கூடற் பள்ளின் முதலாம் பதிப்பை 1863இல் வெளியிட்டுள்ளார். திருமக்காப்பள்ளின் முதற் பதிப்பு 37 வருடங்களுக்குப் பின்னர் 1900-ஆம் ஆண்டு வெளி வந்துள்ளது. திருமக்காப்பள்ளினை அதே ஆண்டில் சென்னை ஆவணக் காப்பகம் பெற்றுள்ளது. இதற்கு ஆதாரமாக அந்த நூலில் முத்திரை இடப்பட்டுள்ளது. அந்த முத்திரையில் திருமக்காப்பள்ளு ஆவணக் காப்பகத்துக்குக் கிடைத்த நாள் 1900-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதி எனப் பொறிக்கப் பட்டுள்ளது.

திருமக்காப்பள்ளு நூலில்இடம் பெற்றுள்ள கடவுள் வணக்கம் என்னும் பகுதியில் ஒன்பது செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டு செய்யுட்கள் அல்லாஹ்வைப் பற்றிய புகழ்ச்சியாகவும் மூன்று செய்யுட்கள் நபி துதியாகவும் அமைந்துள்ளன. தொடர்ந்து வரும் 91 அடிகளைக் கொண்ட நிலமண்டில ஆசிரியப்பாவில் பெருமானாரின் வரலாறு விரிவாகத் தரப்பட்டுள்ளது. முகியித்தீன் ஆண்டவர் புகழ் மூன்று செய்யுட்களிலே பாடப்பட்டுள்ளது.

முக்கூடற் பள்ளிலே காப்புச் செய்யுளோடு வேறு நான்கு பாடல்களே கடவுள் வணக்கம் என அழைக்கப்படும் பகுதியில் இடம் பெற்றுள்ளன. பள்ளியர் வரவுடன் முக்கூடற்பள்ளு ஆரம்பிப்பதுபோல் திருமக்காப்பள்ளும் பள்ளியர் வரவுடன் ஆரம்பமாகிறது. பள்ளு நூல்களில் மூத்த பள்ளி இளையபள்ளி பள்ளன் அல்லது குடும்பன், பண்ணைக்காரன் அல்லது பிச்சர் என்பவர்களே பிரதான பாத்திரங்களாக இடம் பெறுகின்றனர்.

முக்கூடற் பள்ளு நூலிலே மூத்த பள்ளி

நெற்றியி லிடும் மஞ்சணைப் பொட்டும்
மற்றொரு திருநாமப் பொட்டும்

இட்டுவந்தாள் எனக் கருதப்படுகிறது.

திருமக்காப்பள்ளு ஆசிரியர் 'மஞ்சணைப்பொட்டு கன்னத்தில் இடப்பட்டது' என்றும் 'சந்தனம் கழுத்தில் பூசப்பட்டது' என்றும் குறிப்பிட்டுள்ளார். இன்றும் சில விழாக்களில் முஸ்லிம்கள் கழுத்தில் சந்தனம் பூசுவதுண்டு.

மயில் போன்றவளை மயில் என்பர். மயிலின் நிறம் சற்றுக் கருமையாக இருக்கும். இதனால்தான் போலும் மூத்தபள்ளி மயிலப்பள்ளி எனக் குறிப்பிடப்பட்டுள்ளாள். திருமக்காப் பள்ளு நூலிலே மூத்தபள்ளியை மக்கத்துப்பள்ளி என்றும் இளைய பள்ளியை மதினத்துப்பள்ளி என்றும் வழங்கப்பட்டுள்ளமையைக் காணலாம். முக்கூடற் பள்ளிலே இரண்டு பள்ளியரும் முறையே முக்கூடற் பள்ளி, மருதூர்ப்பள்ளி எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இரண்டு பள்ளிப் பெண்களிலும் அழகில் கூடியவர் இளையபள்ளி. ஆதலினால் அவள் ஒளிவுப்பள்ளி என அழைக்கப்பட்டுள்ளாள். நாட்டுவளம் பள்ளு நூல்களிலே விதந்து ஓதப்படுகின்றது. முக்கூடற்பள்ளில் மூத்தபள்ளியும் இளையபள்ளியும் தத்தம் நாட்டு வளங்களை வெவ்வேறாகவே கூறுகின்றனர். நகரவளமும் அவ்வாறே பேசப்படுகிறது. ஆனால் திருமக்காப் பள்ளிலே மூத்த பள்ளியும் இளையபள்ளியும் சேர்ந்தே நாட்டு வளம்கூறி உள்ளனர். முக்கூடற்பள்ளு நூலிலே இரண்டு பள்ளியரும் தத்தம் ஊரே சிறந்தது என வாதாடுவதுபோல் நாட்டுவள வருணனை அமைந்துள்ளது. ஆனால் திருமக்காப்பள்ளு நூலிலே இரண்டு பள்ளியரும் ஒன்றாகத் தமது நகரங்களின் பெருமையைப் பாடுவதாக நாட்டு நகர வருணனை அமைந்துள்ளது ஈண்டு நோக்கற்பாலது.

மழைவேண்டிப் பாடிய சிந்து, அடுத்ததாகத் திருமக்காப் பள்ளு நூலில் இடம் பெறுகின்றது. முக்கூடற் பள்ளு நூலில் உள்ளதுபோல் இந்தச் சிந்தும் புன்னாகவராளி இராகத்திலும் அடதாளத்திலும் பாடக்கூடியதாக அமைந்துள்ளது.

அல்லா வொருவனை யஞ்சுநேரத்தால் தொழுதார்
நல்லறம்ளான் மாதத்திலே நாயனுக்கு நோன்பு இருந்தார்
காட்சியா யாதிநபிக்குக் கலிமாச்சொலித் தான் பணிந்தார்
சூட்சியாய் இசுமாயில் நபிக்குச் சூட்டுக்கறி ஆக்கிவைத்தார்

பந்தமாய் ரொட்டிசுட்டுப் பணிந்தார் முகியிதீனை
சொந்தமுட னபூபக்கர்க்குச் சோறுகறியாக்கி வைத்தார்
உகந்து நேத்திக் கடன் கொடுத்தே உமறுகத்தா
வைப்பணிந்தார்
புகழ்ந்து துமானார் சாய்பைப் பொறுமையுடன் தான்பணிந்து
பத்திவைத்த அலியார் பீவிக்குப் பால்ச்சோறு ஆக்கிவைத்து
உத்த அசறுசைனாருக்கு உரிமையாய்ப் பானக்கம் வைத்தார்
காரணக் காதிரொலிக்குக் கந்திரியாக்கித் தான் பணிந்தார்
பூரணமாய்க் காட்டுவாவுக்குப் புதுச்சந்தனக் குடமெடுத்தார்
இங்கிதமாய் துவாவுஞ் சொல்லி யீசாநபியைத் தான்
பணிந்தார்
நேத்தியாய்ப் பூப்பழமும் வைத்து நெயினாரைத்தான்
பணிந்தார்
வாழ்த்தி மிகது வாவோதி மதாறு சாய்பைத்தான் பணிந்தார்
சீருடனே கறிசமைத்துச் சிக்கந்தரைத் தான் பணிந்தார்
பேருடனே யிபுறாம்சாய்பைப் பிலாச்சோ றாக்கித்தான்
பணிந்தார்
செல்வமுடன் தீன்தீன்கூறி சோதிசாய்பைப் பணிந்தார்
சட்டமாய்ச் சாம்பிறாணியிட்டுச் சதகத்துல்லாவைப்
பணிந்தார்
அட்டதிக்கு விளங்கும் எல்லா அவுலியாக் களைத்தான்
ஓதிவரும் லெப்பைமாரையும் அதபுடன் முன்பணிந்தார்
ஆதிநபி யாண்டவரி னடிமையான பள்ளியர்கள். (44)

இந்தச் சிந்திலே கலிமாச் சொல்வதையும், தொழுவதையும் றம்ளான் நோன்பு வைப்பதையும் சுட்டி உள்ளார் ஆசிரியர். இறைநேசர் பலருக்கும் பல்வேறு வகையான உணவு வகைகள் படைத்துவைக்கப்பட்டன என்றும் யாருக்கு, எந்த வகையான உணவு படைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சிந்தில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ் நாட்டு இறை நேசச் செல்வர் களைக்கொண்டு இந்நூல் எந்தக் காலத்தில் இயற்றப்பட்டது என்பது ஊகிக்கக் கூடியதாக இருக்கிறது.

இங்கே சூட்டுக்கறி என்னும் சொற்றொடர் வந்துள்ளது. இஸ்மாயில் நபிக்குச் சூட்டுக்கறி ஆக்கிவைத்தார் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. சூட்டுக்கறி என்பது தமிழ்நாட்டில் பக்றீத் பண்டிகையைக் குறிக்கும். பெரியபண்டிகையான இது ஹஜ்ஜுப்

பெருநாள் பண்டிகையைச் சுட்டும். இஸ்மாயில் நபி (அலை அவர்களை அவர்களுடைய தகப்பனார் இப்றாகீம் நபி (அலை) அவர்கள் பலியிட முயன்றதை நினைவு கூருமுகமாக இவ்விழா கொண்டாடப்படுகிறது. இங்கே ஒரு ஆடு பலியிடப்பட்டது. ஆதலினால்தான் போலும் தமிழ் நாட்டு முஸ்லிம்கள் ஹஜ் பெரு நாள் என்னும் பக்றீத் பண்டிகையைச் சூட்டுக்கறிவிழா என்று அழைப்பர். இம்மாத நோன்பைச் சூட்டுக்கறி நோன்பு என்றும் அழைப்பர்.

மற்றச்சொல் பானக்கம் என்பது. பானக்கம் என்றால் இனிமையாகத் தயாரிக்கப்பட்ட பானம் என்பது பொருள். சந்தூரி என்பது கந்திரி என விழாவைக் குறிக்கின்றது. அதபு என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும் அறபுச் சொல்லாகும்.

பள்ளியர் மழை வேண்டிப்பாட மழைக்குறியே தென்படலா யின. முக்கூடற் பள்ளு அதனை இவ்வாறு குறிப்பிடுகிறது.

...... ...... .. ... சேரிப்பள்ளரெல்லாம்
புத்தியுடன் தெய்வநிலை போற்றியபின் வானமுகில்
எத்திசையும் பெய்யமழை யின்குறி உண்டாகியதே (34)

திருமக்கத்துப்பள்ளு அதனை இவ்வாறு அறிமுகப்படுத்துகின்றது.

போற்றியபின் நாயனுட புதுமையாய்ப் பூமியெங்கும்
சூத்திரமாய்க் கார்மேகம் சூழ்ந்து மிருட்டாவதுவே
வாழ்த்திப் புகழ்ந்து இன்னிசை நபியைப் பணிந்து
நேத்தியுடன் பெய்யுமழை நிலையறிந்து சொன்னாரே
(45)

அடுத்து வருவது ஏசற் சிந்து. மக்கத்துப் பள்ளியும் மதீனத்துப் பள்ளியும் ஒருவரை ஒருவர் தாக்கி ஏசிக் கொள்கின்றனர். ஒருவர் மற்றவரை ஏசும்பொழுது சிக்கி எனக் குறிப்பிடுகின்றனர். சிறுக்கி என்பதுதான் சிக்கியாக மாறி இருத்தல்வேண்டும். இளம் பெண்ணைச் சிறுக்கி எனத் திருப்புகழ் 'சிறுக்கிகளுறவாமோ' (145) என்பதன் மூலம் குறிப்பிடுகிறது. வேலைக்காரி என்றும் அதற்குப் பொருள் கூறுவர்.

மூத்தபள்ளியும் இளையபள்ளியும் ஒருவர் மற்றவரை ஏசுவ தாக அமையும் பாடல் படிக்க இனிமையாக இருக்கும். ஓசை நயம் அமைந்ததாய் இருக்கும். தத்தம் சொந்தக் குறைபாடு களைச் சுட்டியே மக்கத்துப்பள்ளியும் மதினத்துப்பள்ளியும்

ஒருவரை ஒருவர் ஏசினர். இறுதியில் பண்ணைக்காரன் தலையீட்டால் இருவரும் சமாதானமாகின்றனர். இருவருக்குமிடையே நடைபெற்றதாக வருணிக்கப்பட்டுள்ள ஏசல் சிந்தின் முதற்பகுதி இது.

கெட்டியே மயிலடி
மக்கத்துப்பள்ளி சிக்கி
    கேவலமோ நானுனக்கு
    மக்கத்துப்பள்ளி
அட்டியென்னடி யொளிவே
மதினத்துப்பள்ளி சிக்கி
    ஆரறிய வந்தாயடி
    மதினத்துப்பள்ளி
எத்துவாய் மயிலி
மக்கத்துப்பள்ளி சிக்கி
    ஏதடியுறவுமினி
    மக்கத்துப்பள்ளி
தொத்திலே வந்தாய் வொளிவே
மதினத்துப்பள்ளி பள்ளன்
    சொந்தமோ உனக்குமட்டும்
    மதினத்துப்பள்ளி.

முக்கூடற் பள்ளு நூலில் உள்ள ஏசற் சிந்திலிருந்து சற்று வேறுபட்டுள்ளது திருமக்காப்பள்ளு நூலில் இடம் பெற்றுள்ள பள்ளியருக்கிடையிலான ஏசற் சிந்து. முக்கூடற் பள்ளு நூலில் இடம் பெற்றுள்ள பள்ளியர் ஏசலில் பள்ளியர் இருவரும் ஒருவர் மற்றவருடைய தனிப்பட்ட குறைகளைச் சுட்டிக் காட்டுவதாக ஏசல் சிந்தின் ஆரம்பம் அமைந்துள்ளது. அவற்றுள் சில இவ்வாறு அமைந்துள்ளன.

முண்டை முறையிட்டதென்ன
முக்கூடற் பள்ளி உங்கள்
    மூப்புச்சொம் எனக்குதந்தால்
    மூதலியடி
தொண்டைகட்டிக் கூப்பிடாதே
கூப்பிட்டு என்னை வைது
    சொன்னபேச்சைப் பண்ணையார்க்குச்
    சொல்லு வேண்டி

சொன்னாலெனக் கொன்னபயம்
மருதூர்ப்பள்ளி சென்று
சொல்லிலுன் காசுசெல்லாது
சொல்லடி போடி
என்னாலேயா காத்துண்டோ
முக்கூடற்பள்ளி பள்ளன்
இங்குவந்தான் உன்சலுகை
எல்லாந் தெரியும் (153

முதலில் சொந்தக் குறைபாடுகளை எடுத்துக் காட்டி இருவரும் ஒருவரையொருவர் ஏசிக்கொண்ட பின்னர் அப்பள்ளியருடைய ஏசல் சமயச் சார்புடையதாக மாறியது. முக்கூடற்பள்ளி வைணவ சமயத்தைச் சேர்ந்தவள். இளைய பள்ளியான மருதூர்ப் பள்ளி சைவ சமயத்தைச் சார்ந்தவள். ஒருத்தி மற்றவருடைய சமயத்தையும் சமயப்பெரியார்களையும் தாக்கி ஏசினாள். இந்த ஏசலில் கிண்டல் பேச்சு பிரதான இடம் பெறுவதைக் காணலாம். ஒவ்வொரு ஏசல் சிந்திலும் முதல் பகுதி மூத்தபள்ளியான முக்கூடற் பள்ளியின் கூற்றாகவும், இரண்டாம் பகுதி இளைய பள்ளியான மருதூர்ப் பள்ளியின் கூற்றாகவும் அமைந்துள்ளன.

சாதிப்பது உனக்குவரும்
மருதூர்ப்பள்ளி நரிதான்
பரியாய்ச்சாதித்தான் உங்கள்
சம்புவல்லோடி
வேதிக்கச் சாதிக்க வாராய்
முக்கூடற்பள்ளி கல்லைப்
பெண்ணாகச்சாதித்தானுங்கள்
கண்ணனல் லோடி. (161)

இவ்வாறு கிண்டல் செய்வதுபோல் முக்கூடல் பள்ளு ஏசல் சிந்து அமைந்திருந்தபோதிலும் அவற்றிலுள்ள குறிப்புக்கள் புகழாப்புகழ்ச்சியாய் அமைந்துள்ளமையும் புலப்படுகின்றது.

திருமக்காப்பள்ளு நூலில் இடம்பெற்ற ஏசற்சிந்தைத் தொடர்ந்து அறுவடையைப் பற்றிய சிந்து இடம் பெற்றுள்ளது. கதிரறுப்பு தொங்கற் சிந்து என அது பெயரிடப்பட்டுள்ளது. ஆதி தாளத்தில் நாட்டை இராகத்தில் பாடக்கூடியது அச்சிந்து. அல்லாஹ், நபி, இறைநேசர் எல்லோரும் அங்கு போற்றப்படுகின்றனர். அதனைத் தொடர்ந்து கணக்குரைத்தல் சிந்து இடம்

பெற்றுள்ளது. அறுவடை எவ்வளவு என்பதும், அந்த அளவு எவ்வாறு பலரிடை பகிர்ந்து அளிக்கப்பட்டது என்பதும் கணக்குரைத்தல் சிந்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கே கோட்டை என்னும் முகத்தல் அளவை பேசப்பட்டுள்ளது. ஒரு கோட்டை என்பது 21 மரக்கால் கொண்ட ஒரு முகத்தலளவை என திருநெல் வேலி மாவட்டக் கஸட்டியர் (1:238) குறிப்பிடுகிறது. திருமக்காப் பள்ளில் மொத்த அறுவடை 'ஆறுகோடி எண்பத்து நான்கு நூறாயிரத் தெழுநூறுஞ் சொச்சங் கோட்டை' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அடதாளத்தில் சங்கராபரண இராகத்தில் பாட அமைந்துள்ள கணக்குரைத்தல் சிந்து இவ்வாறு ஆரம்பமாகிறது.

ஆதிமக்கநபியின் கிருபைகொண்டு
    ஆறுகோடியுமெண்பத்து நான்குநா
றுயிரத்தெழுநூறுஞ் சொச்சம் கோட்டை
    யான நெல்லின் வல்லாண்டவன் பேருக்குப்

பாதியைப் பாத்தியாவுக் களந்தினிப்
    பாதியில் நன்னபியைப் புகழும்
பாவலர்க்குமளந்து கொடுத்த நெல்
    பத்துலட்சத் தீராயிரங் கோட்டை

ஏதுமற்ற அகதிபரதேசி
    எளியவர்கட்கு மெண்ணாயிரங் கோட்டை
ஏர்ச்சுதந்திரக் கம்மாளர் தங்கட்கு
    எழுபதினாயிரங் கோட்டையளந்தேன்

கோதிலா நற்புலவ்களுழுத நங்
    குடும்பத்தார்க்கேழு நூறாயிரம் கோட்டை
குளம்பழுதுகள் பார்த்தவ கையிலுங்
    கூலிக்காயிரங் கோட்டையுண் டாண்டே (140)

இவ்வாறு இரண்டு சிந்துக்களில் கணக்குரைத்தல் இடம்பெற் றுள்ளது. இறுதியாகத் திருமக்காப்பள்ளு கடவுளைப் போற்றுதலும் வாழ்த்துதலும் இடம் பெற்று முடிவடைகின்றது.

# கனகாபிஷேகமாலை

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய முதல் காப்பியத்துக்கு வருவோம். மிகுறாசு மாலையை ஒரு குறுங்காப்பியம் என்று கூறினும் காப்பியங்களுக்குரிய பல்வேறு அம்சங்களையும் கொண்டு திகழும் முதலாவது இஸ்லாமியத் தமிழ்க் காப்பியம் கனகாபிஷேக மாலையாகும்.

கனகாபிஷேகமாலையை இயற்றியவர் கனகவிராயர். இது இவருடைய சிறப்புப் பெயர். இவருடைய இயற்பெயர் காப்பியத்தில் குறிப்பிடப்படவில்லை. இராஜகம்பீரன் என்னும் ஊரைச் சேர்ந்தவர். முகவை மாவட்டத்தில் உள்ள ஊர் அது. பாண்டி நாட்டைச் சேர்ந்தது அவ்வூர். இவ்விவரங்கள். ஒரு பாடலில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

மாதரு வரசர் மணிமுடி புனைந்த வாறெலாம் வகைவகையாக
வேதிய ரிருவர் விரித்துரை செய்யும் விழுப்பொருள்
உளத்தினில் தரித்து
ஏதிலார்க் குதவு பாண்டிமா தேசத் திராஜகெம் பீரநன் னாடன்
பூதலம் புகழும் கனகவி ராயன் புகன்றனன் புதுமொழி தமிழால்
(கடவுள் வாழ்த்துப் படலம்:22)

நிலைமண்டில ஆசிரியப் பாவாக அமைந்துள்ள சிறப்புப் பாயிரத்தில் கனகாபிஷேக மாலை ஆசிரியர் சிறப்புப்பெயர் இவ்வாறு சுட்டப்படுகிறது.

மாசிலா மனத்தினர் வதிந்திடும் அழகிய
ராஜகம் பீர மெனநவி லூரினர்
புலவர்கண் மதிக்கும் பூசித நாவலர்
கலைபல தேர்ந்த கனக விராயர்

மற்றொரு பாடலில் கனகவிராயரின் இயற்பெயர் குறிப்பிடப் படுவதைக் காணலாம். அந்தச் செய்யுளிலே கனகாபிஷேக மாலை யின் கருப்பொருளாக அமைந்த நிகழ்ச்சியும் குறிப்பிடப்படுகிறது. நபிகள் பெருமானாரின் பேரரான உசைன் (றலி) அவர்களின் வரலாறு இங்கே காணப்படுகிறது. கனகாபிஷேகமாலை பாடிய கனகவிராயரின் இயற்பெயர் செய்கு நயினார் கான் என்பதாகும் இக்குறிப்புகளைக் கொண்ட பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

நபிகள் தம் பெருமான் நல்லொளி மேனியில்
தழீஇய பெயரர்தம் மொழீஇய சரிதம்
கனியெனத் தேனைக் கண்டென இயற்றுப
காரணத் தொருபெயர் கனகா பிஷேக
மாலை என்றாக்கிய மாண்பு செய்புலவர்
புவியெலாம் கனக கவிராயர் என்னும்
மெய்வரும் செய்கு நயினார்கான்

(கவிச்சக்கரவர்த்திகளுக்கெல்லாம் பொன் போன்றவர் என்று பொருள்பட) கனககவிராயர் என்னும் சிறப்புப்பெயர் காலப் போக்கில் கனகவிராயர் எனச் சுருங்கியது என்பர். இப்புலவர் அவர்தம் சிறப்புப் பெயராலே அன்றி இயற்பெயரால் அறிமுகப் படவில்லை என்பது புலனாகின்றது. கனகாபிஷேக மாலையில் ஆசிரியரின் பெயர் கனகவிராயர் என்றே குறிப்பிடப்படுவதால் அச்சொற்றொடர் கனக இராயன் என இருந்து கனகவிராயன் (கனகராஜன்) ஆக மாறியுள்ளது. கனக என்னும் சொல் இந்நூலுக்கும் இந்நூலாசிரியருக்கும் புரவலருக்கும் அடைமொழி யாக அமைந்திருப்பது இன்று நோக்கற்பாலது, இவருடைய பரம்பரையில் வந்தவர் மஸ்தான் சாகிபுப் புலவர் என்றும் கூறப் படுகிறது.

கனகாபிஷேகமாலை தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவர் மதுரையைச் சேர்ந்தவர், கொந்தாலகான் என்னும் பெயரினை உடையவர். அவர் கொடை வள்ளல். பெருஞ் செல்வந்தர். வரை யாது வழங்கும் மழைபோன்ற வள்ளண்மையை உடையவரா யிருந்தவர். செய்யதுகான் என்பவரின் புதல்வர்.

கனகாபிஷேக மாலையிலும் அதன் ஆசிரியர் தமது புரவலரை இரண்டுமுறை கடவுள் வாழ்த்துப் படலத்தில் குறிப்பிட்டுள்ளார். இஸ்லாமிய நெறி முறை மாறாமல் இக்காப்பியம் பரிணமிக்க இருவர் உரை வழங்க, அவ்வாறு வழங்கப்பட்ட உரையினை

அடிப்படையாக வைத்து உலகெலாம் விளங்கக் கனகாபிஷேக மாலையை எல்லோராலும் புகழத் தக்கதொன்றாய் இயற்ற இல்லையெனாது நிதி அளித்தார் கனககொந்தாலகான் என்னும் கொடைவள்ளல்.

சரகினில் நெறிவ ழாமல் தாங்குநூ லிருவர் சொல்லும்
உரையினைத் தமிழில் கூறி உலகெலாம் விளங்கச் செய்ய
விரைவினில் கருணை கூர்ந்து விஞ்சை நாவலர்கள் போற்றக்
கரையிலா நிதிய முய்த்தான் கனககொந் தால கானே.

(கடவுள் வாழ்த்து: 23)

என மேலே கூறப்பட்ட கருத்துக்கள் அமைந்துள்ளமையைக் காணலாம்.

கடவுள் வாழ்த்திலுள்ள மற்றொரு பாடலிலும் தமது கொடை வள்ளலைக் குறிப்பிட்டுள்ளார் கனகாபிஷேகமாலை ஆசிரியர்.

நபிமுதல் எண்மர் வேத நாயகர் ஆகி என்றும்
கவினுற உலகில் செய்த கனகா பிஷேக மாலை
புவியினில் தமிழி னாலே புகலமா நிதிய முய்த்தான்
தவமுயர் அறிவின் கூடல் சைதுகொந் தால கானே.

(கடவுள் வாழ்த்துப்படலம்: 24)

இச்செய்யுளிலே எட்டு அரசரின் வரலாறு கூறப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முகம்மது நபி (சல்), அபூபக்கர். (றலி உமறு (றலி), உதுமான் (றலி), அலி (றலி) ஹசன் (றலி) ஹுஸைன் (றலி) செயனுலாபுதீன் (றலி) ஆகியோரே அவ்வெட்டு அரசருமாவர். அத்தகையோருடைய வரலாற்றைத் தமிழில் பாடவே செய்யது கொந்தாலகான் என்பவர் தமக்குப் பெருமளவு பணம் தந்தார் எனக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். நூலிலே பல இடங்களில் கொடைவள்ளலின் பெருமை பேசப்படுகிறது.

கனக+அபிஷேக+மாலை என இச்சொற்றொடரைப் பிரிக்கலாம். கனகம் என்றால் பொன். அபிஷேகம் என்றால் குளித்தல். ஸ்நானம் செய்தல். சிறப்பாக அபிஷேகம் என்னும் சொல் புனிதமான அல்லது அரசு சார்ந்த குளித்தலைக் குறிப்பிடும் என்பர். ஓர் அரசனை முடிசூட்டும் பொழுது குளிக்க வைத்தலையும் அபிஷேகம் செய்தல் என்பர். அபிஷேகம் என்னும்பொழுது தலையில் வார்த்தல் என்றும் பொருள்படும் என்பர். கனகாபிஷேகம்

என்று குறிப்பிடும்பொழுது பொன்னை வார்த்தல் என்று பொருள் படும். பொன்னால் குளிப்பாட்டுதல் என்றும் பொருள் கொள்ள லாம். பொதுவாகப் பார்க்கும்பொழுது அபிஷேகம் என்னும் சொல் பரந்த அடிப்படையில் ஒரு மன்னன் முடிசூட்டப்படுவதைக் குறிக்கும் எனக் கொள்ளலாம். இக்கனாபிஷேகமாலையில் எட்டு மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றனர். எனவே முடிசூட்டப்படுகின்றனர். அபிஷேகம் செய்யப்படுகின்றனர். அந்த எட்டு மன்னர்களின் ஆட்சிக்கு வருவது பற்றிய விவரங்கள் கன்காபிஷேகமாலையில் சிறப்பாக ஒரு மாலை போன்று தொடுக்கப்பட்டு இடம் பெறுவதால் இந்நூல் அப்பெயர் பெற்றுள்ளது எனலாம். வடமொழிச்சந்தி முறைக்கு இணங்க 'அ' வை இறுதியிலே உடைய சொல்லோடு 'அ' வை முதலிலே உள்ள சொல் புணரும்பொழுது இடையிலே 'ஆ' தோன்றும். கனக + அபிஷேக + மாலை = கனகாபிஷேகமாலை.

கனகாபிஷேகமாலையைப் பாடுவதற்குக் கனகவிராயருக்கு அடிப்படையாக அமைந்தது 'முக்கத்தீலூசன்' என்னும் கித்தாபே (நூலே). உசைன் (றலி) அவர்களின் படுகொலை பற்றியது இந்நூல். முக்கத்தீலூசன் (முக்காத்திலு ஹுஸைன்) என்றும் அறபுச் சொற்றொடரின் பொருளும் அதுவே. இந்நூல் அறபு மொழியிலும் பாரிசு மொழியிலும் உள்ளது. ஆசிரியருக்கு முதனூலாக அமைந்த இந்நூல் வஹாவுத்தீன் மகுதூம் என்பவரின் படைப்பாகும்.

கனகாபிஷேகமாலை இயற்றப்பட்ட காலம் ஒரு செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் வருடக் கணிப்புக்கிணங்க 'நரபதி சகாத்தம் ஆயிரத்து ஐந்நூற்றறுபத்து நான்கு' கழிந்துவிட்ட பின்னர் இயற்றப்பட்டுள்ளது. அதற்குச் சமமான ஹிஜ்றி ஆண்டு ஆயிரத்து ஐம்பத்தெட்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஹிஜ்ரி ஆண்டு முகம்மது நபி (சல்) அவர்கள் மக்கத்தை விட்டு மதீனமாநகருக்குச் சென்ற நிகழ்ச்சியிலிருந்து ஆரம்பமாகிறது. அவ்வாண்டு இந்திய ஆண்டான விரோதிகிருது என்பதற்குச் சம்மானதாகும். இக்குறிப்புகளைக் கொண்ட செய்யுள் இது தான்.

நரபதி சகாத்த மாயிரத் தைந்நூற்
றறுபத்து நான்கினு மேலாய்
வரபதி இறசூல் மக்கம்விட் டெழுந்து
மாமதி னாவினின் வைகி

முருகவிழ் தொடையல் புனைந்தவா யிரத்து
முப்பதோ டிருபத்தெட் டினிலே
விரவிய விரோதி கிருதெனும் வருடம்
விளம்பினன் பெருங்கதை சிறியேன்.

(கடவுள் வாழ்த்துப் படலம்:20)

இங்கே ஹிஜ்றி ஆண்டு 'ஆயிரத்து முப்பதோ டிருபத்தெட்டு' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஹிஜ்றி ஆயிரத்து ஐம்பத்தெட்டையே குறிக்கிறது. இதற்குச் சமமான ஆங்கில ஆண்டு ஆயிரத்து அறுநூற்று நாற்பத்தெட்டாகும்.

முகம்மது நபி (சல்) அவர்களை முதல்வராகவும் செயினுலாபுதீன் (றலி) அவர்களை இறுதியாகவும் கொண்டு அவர்கள் உலகினை ஆண்ட வரலாற்றினைக் கூறுகிறது கனகாபிஷேக மாலை இந்த வரலாற்றினைச் சிறந்த முறையில் கற்பவர்களும் அதனைப் படிப்பதைக் கேட்பவர்களும் கனகநாட்டை (சொர்க்கத்தை)ப் பெறும் முகமாக இந்த உலகத்தில் வாழ்வார்களாக என்று வாழ்த்துகிறார் ஆசிரியர். அவ்வாழ்த்தே இவ்வாறு ஒரு செய்யுளில் அமைந்துள்ளது.

திருநபி முன்னும் செய்னு லாபிதீன் பின்னு மாக
அருநிலம் புரந்து செங்கோல் இயற்றிய காதை தன்னைக்
கருதியே கற்போர் கேட்போர் கனகநா டனைத்தும் கொள்ள
மருவிய தலைவ ராகி வாழ்வர்மா நிலத்தி லன்றே

(கடவுள் வாழ்த்துப் படலம்: 25)

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களின் கடவுள் வாழ்த்தைப் பொறுத்தவரையில் ஒரு சீரான ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. முதற்கண் ஏக இறைவனை அல்லாஹ் கடவுள் வாழ்த்தில் வருணிக்கப்படுகிறான். அவனுடைய பண்புகள் விளக்கப்படுகின்றன. அவன்றன் ஆசியைப் பெறவே கவிஞர் அவ்வாறு பாடுகின்றனர். அதனைத் தொடர்ந்து தீர்க்கதரிசிகள் என பொருள் கொள்ளப்படும் நபிமார் வருணிக்கப்படுகின்றனர். நபிமாரைக் குறிப்பிடும்பொழுது முகம்மது நபி (சல்) அவர்கள் வாழ்த்தப் படுகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து முன்னூற்றுப் பதிமூன்று முறுசலான (தூதரான) நபிமார்களும் ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களும் வருணிக்கப்படுகின்றனர். துணிந்தவர்கள் எனப் பொருள்படும் உலுல் அஸ்மி என்னும் நபிமார் வருணிக்கப்படுகின்றனர்.

நபிமார்களுக்குப்பின்னர், அபுபக்கர் (றலி) அவர்களும் உமறு (றலி) அவர்களும் உதுமான் (றலி) அவர்களும் அலி (றலி) அவர்களும் முறையே வருணிக்கப்படுகின்றனர். அப்புறம் வருணிக்கப் படுபவர்கள் நபிகள் பெருமானாரின் திருப்பேரர்களான அசன் (ஹஸன்) (றலி) அவர்களும் (ஹுஸைன்) உசைன் (றலி) அவர் களுமாவர். கடவுள் வாழ்த்துக்களில் பின்னர் இடம் பெறுபவர்கள் நபிகள் நாயகம் அவர்களின் தோழர்களாவர். பெருமான் முகம்மது (சல்) அவர்களின் வீட்டைச் சேர்ந்தவர்களும் கடவுள் வாழ்த்தில் இடம் பெறுவதுண்டு. இஸ்லாமியச் சட்ட நுணுக்கங்களை விளக்கும் முகமாக மதுகபுகளை நிறுவிய இமாம்கள் (தலைவர்) நால்வரையும் பற்றிய குறிப்பு இடம் பெறும். அடுத்து இறை நேசர்கள் எனப்படும் வலிமார் (அவுலியா) கடவுள் வாழ்த்தில் துதிக்கப்படுகின்றனர். முகியீத்தீன் ஆண்டவர், சாகுல் கமீது ஆண்டவர், செய்கு சதக்கத்துல்லா அப்பா ஆகியோர் அடுத் தடுத்து போற்றப்படுகின்றனர்.

கனகாபிஷேகமாலையிலே பாட்டுடைத் தலைவராக அமை பவர் பெருமானாவர்களின் பேரரான உசைன் (றலி) அவர்கள் ஆனமையினால் அவரையும் அவருடைய சகோதரரையும் பற்றிய செய்திகளுக்கே இக்காப்பியத்தில் முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. நபிகள் பெருமானார் ஆட்சி புரிந்தமையையும் அவர்கள் நோய் வாய்ப்பட்டமையையும் இறைவனடி சேர்ந்தமையையும் நல்லடக்கம் செய்யப்பட்டமையையும் வருணிப்பதாக அமைந் துள்ளது முதன்முறைப்படலம். இந்த முதன்முறைப் படலத்திலும் அசன், உசைன் (றலி) அவர்கள் இருவரினதும் செய்தியே முதன்மை யாக இடம் பெற்றுள்ளது. அசன், உசைன் (றலி) அவர்கள் இரு வரினதும் செய்தியே முதன்மையாக இடம் பெற்றுள்ளது. அசன், உசைன் (றலி) ஆகிய இருவர் பற்றிய துக்ககரமான செய்தியே பெருமானார் நோய்வாய்ப்பட்டமைக்குரிய காரணம் என முடிவு கட்டும் அளவுக்கு அவ்விருவர் பற்றிய சோகச் செய்திக்கு முதல் முறைப்படலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

கவிஞர்கள் பெண்களை வருணிக்கும்பொழுது அவர்களைக் கேசாதிபாதமாக அல்லது பாதாதி கேசமாக வருணிப்பர். இத்தகைய வருணனைகள் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களில் மிக அருமையாகவே பயன்படுத்துவதைக் காணலாம். இஸ்லாமியத் தமிழ்க்காப்பியங்களின் காப்பிய நாயகர்

களின் துணைவியரை இவ்வாறு வருணிப்பதை அவர்கள் கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனால் அத்தயை வருணனைகள் காப்பிய அமைப்புக்கு இன்றியமையாதன எனக் கருதப்பட்டன. எனவே அத்தகைய வருணனைகளைச் சமயம் வாய்க்கும்பொழுது கவிஞர்கள் தமது காப்பியங்களில் இடம்பெறச் செய்துள்ளனர். முஸ்லிம் அல்லாத பெண்களையே அவ்வாறு தமது காப்பியங்களில் வருணித்தனர். முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்ட நவசேருவானின் புதல்விகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் அத்தகைய வருணனைகளுக்கு இலக்காக்கப் பட்டனர். கனகவிராயர் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி உள்ளார். நவசேருவானின் புதல்வியரைக் கேசாதி பாதமாகக் கனகவிராயர் தமது காப்பியத்தில் வருணித்துள்ளார். மகதி அரசியற் படலத்தில் அத்தகைய வருணனைகள் இடம் பெற்றுள்ளன. சகருவான், நாசுநூசு என்பன அவர்களின் பெயர்கள்.

கம்பராமாயணத்திலும் நளவெண்பாவிலும் இடம்பெற்ற திருமண சுயம்வரம் போன்று ஒரு சுயம்வர விழாவை இங்கு ஒழுங்கு செய்துள்ளார் ஆசிரியர். இதுவும் காப்பியத்துக்கு அழகூட்டுவதற்கேயாம். சுயம்வர நாள் குறிக்கப்பட்டு எல்லா மன்னர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. உமறுகத்தாப் (றலி) அவர்களின் உத்தரவின் பேரில் எல்லா மன்னர்களுக்கும் முடங்கல் அனுப்பப் பட்டது. சுயம்வர விழாவில் பங்குபற்ற வந்த மன்னர்கள் பலர் எனக் குறிப்பிட்ட கனகவிராயர் அவர்கள் ஒவ்வொருவரையும் கற்பனை நயம் தொனிக்க வருணித்துள்ளார். ஒருவர்பின் ஒருவராக அம்மையார் முன் அவர்கள் வந்தனர் என்றும் அவர்கள் எவரையுமே அம்மையார் ஏற்கவில்லை என்றும் பல செய்யுட்களில் கனகவிராயர் வருணித்துள்ளார்.

உசைன் (றலி) அவர்களையும் எசீது அவர்களையும் தவிர எல்லோரும் சுயம்வர விழாவுக்கு வந்துவிட்டனர் என்று கூறுவதனால் படிப்போர் உள்ளத்தில் ஓர் அலாதியான எதிர்பார்ப்பினை ஏற்படுத்தி உள்ளார் ஆசிரியர். போரில் உசைனாருக்குப் பகைவராக அமைவது போன்று இந்த சுயம்வரவிழாவிலும் உசைனாருக்குப் போட்டியாக எசீது வந்துள்ளார் ஆதலால் முடிவு எப்படி இருக்குமோ என்னும் சந்தேகத்தை முதலில் உருவாக்கியுள்ளார். இருவரும் எத்தகைய அழகுடையவராய் இருந்தனர்

என்றும் இருவருக்கிடையே வேறுபாடு அவ்வளவாகத் தோன்ற வில்லை என்றும் கூறும் பொழுது; படிப்போரிடையே ஏற்படும் ஆசங்கையைத் தீவிரமாக்கி உள்ளார்.

இறுதியில் உசைன் (றலி) அவர்களுக்கும் சகருவான் அம்மை யாருக்கும் திருமணம் நிகழ்ந்தது. அதற்கு முன்னர் திருமண உலா ஒன்றினை உருவாக்கி உள்ளார் காப்பிய ஆசிரியர். எல்லா வீதி களிலும் ஊர்வலத்தைக் காண மக்கள் நிறைந்துவிட்டனர் என்றும் ஏழு பருவங்களையும் சார்ந்த பெண்கள் அங்கு கூட்டம் கூட்ட மாக வந்திருந்தனர் என்றும் வருணிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றமை குறிப் பிடப்படுகிறது. அபூகுறைறா (றலி) அவர்கள் வலியாக நின்று கடமையாற்றினார்கள். வலி என்றால் மணவாட்டியின் பிரதி நிதியைக் குறிக்கிறது. திருமண உடன்பாட்டிற்கு மணமகளின் சம்மதம் அவசியமாகிறது. மணமகளின் தந்தை அல்லது குறிப் பிட்ட நெருங்கிய உறவினர் மணமகளிடமிருந்து சம்மதத்தைப் பெறுவர். சகருவான் அம்மையாரின் தந்தை இறந்துவிட்டமையால் அபூகுறைறா அவர்கள் வலியாகக் கடமையாற்றிச் சம்மதத்தைப் பெற்றார்கள் எனக் கனகவிராயர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதி மாமறை ஓதிய அபூகுறை றாவை
மாது சம்மதம் கேண்மென்றார் கேட்டொலி நவில
வேத நூல்வழி யேயுது மானெனு மேலோர்
ஓது மாமணங் கன்னிக்கும் உசைனுக்கும் முடித்தார்.

(உசைனார் திருமணப் படலம்:42)

இங்கே வலி என்பது ஒலி என வந்துள்ளது. வகரத்தால் ஆரம்பிக் கும் அறபுச் சொற்களைப் பெரும்பாலும் முஸ்லிம் புலவர்கள் ஒகரமாக்கியே பயன்படுத்துவர்,

முஸ்லிம் மக்களிலே இருபெரும் பிரிவுகள் உள்ளன. ஒன்று சுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள். மற்றது சியாக் கொள்கை உடையவர்கள். நபிகள் பெருமானாரின் வாழ்க்கை முறைகளை நடை உடை பாவனைகளைப் பின்பற்றுபவர் சுன்னத் ஜமாஅத்தை சேர்ந்தவர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களையே ஆங்கிலத் தில் SUNNI என்று அழைக்கின்றனர். முகம்மது நபி (சல்) அவர் களின் மறைவுக்குப் பின்னர் ஆட்சி பீடத்தில் அமர்ந்தவர் அபூபக்கர் (றலி) அவர்கள். ஆனால் முகம்மது நபி (சல்) அவர்களின்

பின்னர் ஆட்சிப் பதவியை வகித்திருக்கவேண்டியவர் அலி (றலி) அவர்கள் என்று ஒரு கூட்டத்தினர் வாதாடினர். அவ்வாறே அவர்கள் சுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களினின்றும் பிரிந்து சென்றனர். அத்தகையோரே சீயா வகுப்பினர் என அழைக்கப்படு கின்றனர். அவர்கள் அண்ணல் (சல்) அவர்களுக்குப் பின்னர் அலி (றலி) அவர்களுக்கே பிரதானமான இடத்தை அளிக்கின்றனர்.

கனகாபிஷேகமாலை ஆசிரியரான கனகவிராயரும் சீயாக் கொள்கைகளில் ஓரளவுக்கு ஊறித்திளைத்தவர் போலத் தோன்று கின்றது. இக்காப்பிய வருணனைகளிலே அத்தகைய அவருடைய கருத்துக்கள் மறைந்திருக்கக் காணலாம்.

எசீது படையைச் சேர்ந்த ஒருவனுக்கும் தோகாந்துறுக்கு என்பவனுக்கும் இடையே நடைபெற்ற ஒரு வாக்குவாதத்தை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். (30:29-34) தோகாந்துறுக்கு வாயிலாக சீயாக்கருத்தொன்றை ஆசிரியர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார். உலகத்திலே வாழ்ந்த 'அமீறுல் மூமிளீன்' என அழைக்கப்பட்டவர் அலி (றலி) அவர்கள் ஒருவர் மாத்திரமேயாம். அந்த மொழி பெறக்கூடியவர் மற்றொருவர் உளரேல் அது அவர்கள் தம் புதல்வரேயாம். எசீதுக்கு உரித்தாகாது என அமைத்து இவ்வாறு ஒரு செய்யுளில் பாடியுள்ளார்.

மண்ணின்மே லமீறுல் மூமின் வாளலி ஒருவர் அன்றோ
எண்ணுமோ ரந்த நாமம் எழிலவர் புதல்வர்க் கல்லால்
உண்ணிறை விலருக் கெல்லாம் ஏற்குமோ இவணீ யோதல்
திண்ணிய சிங்க மென்று பூனையைச் செப்பல் போலும்

(முகம்மது கனிபா விசிக்கிலானுக்கு வந்த படலம்:33)

இங்கே நேர்வழி நடந்த முதல் நான்கு கலிபாக்களும் அமீறுல் மூமினீன் (நம்பிக்கை கொண்டவர்களுக்கெல்லாம் தலைவர்) எனச் சிறப்பாக அழைக்கப்பட்டனர் என்பது நோக்கற்பாலது.

காப்பியங்கள் பாட்டுடைத் தலைவரின் வாழ்க்கையை விவரிப்பதோடு நின்றுவிடாது பல அரிய பெரிய போதனைகளைப் போதிப்பனவாகவும் அக்காப்பியங்கள் அமைந்துவிடுகின்றன. பெருமானார் முகம்மது (சல்) அவர்கள் இறையடி சேர்ந்த ஆறு மாதங்களில் அவர்கள்தம் அருமைப் புதல்வியார் பாத்திமா (றலி) அவர்கள் தமது கணவரான அலி (றலி) அவர்களுக்கு இறுதி உரை பகர்ந்தார்கள்.

துங்கநற் கொழுநர் நோக்கி துவர்நிகர் வாய்தி றந்து
தங்கியற் றாதை முன்னா ளுரைத்தவர் மரணஞ் சாற்றி
(அபூபக்கரரசுரிமைப்படலம்:41)

அந்த இறுதி உபதேசத்தில் ஓர் உண்மையையும் கூறினார்கள். உலகத்திலே பிறக்கின்ற உயிர்கள் எல்லாம் என்றோ ஒரு நாள் இறப்பது திண்ணம் என்றும் மொழிந்தார்கள். இதனையே பாத்திமா (றலி) அவர்கள் மூலமாக இவ்வாறு கூறுகிறார் கனகவி ராயர்.

உலகினின் மனுவா யுற்றோ ரியாவரும் இறப்ப துண்மை
(அபூபக்கரரசுரிமைப்படலம்:42)

இக்கருத்து அல்குர்ஆனிலே இரண்டு இடங்களில் வலியுறுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். அல்குர்ஆனிலே உள்ள ஓர் வசனத் தின் ஒரு பகுதி

''எல்லோர் ஆத்மாவும் மரணத்தைச்
சுகித்தே தீரும் (3:185)

என்றும், மற்றொரு வசனத்தின் ஒரு பகுதி,

''நீங்கள் எங்கிருந்தபோதிலும்,
மரணம் உங்களை அடைந்தே தீரும்
மிகப்பலமான உயர்ந்த (கோட்டை)
கொத்தளங்களின் மீது நீங்கள் இருந்த
போதிலும் சரியே'' (4:78)

என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

'மூப்புக்கு மருந்தில்லை' என்பது பெருமானார் பொன்மொழி. எல்லா நோய்களுக்கும் மருந்து உண்டு. அவற்றைக் குணப்படுத்தி விடலாம். ஆனால் ஒருவன் வயது முதிர்ச்சி அடைந்துவிட்டால் அவனை அந்நிலையிலிருந்து காப்பாற்றுவதற்கு எவ்வித மருந்தும் பயன்படாது. உமறுகத்தாப் (றலி) அவர்கள் கொடியவன் ஒருவனால் வாளால் குத்தப்பட்டுக் குற்றுயிராய் இருந்த பொழுது அவர்தம் புதல்வர் அப்பதுல்லா (றலி) அவர்களும் அருகிருந்தனர். அவர்களை நோக்கி உமறுகத்தாப் (றலி) அவர்கள் இறுதி உபதேசம் செய்தார்கள். அந்த இறுதி உபதேசத்தை விளக்கவே பெருமானாரின் பொன்மொழி ஒன்றினை ஆசிரியர் இங்கு மேற்கொண்டுள்ளார். அந்தப் பொன்மொழியை மேற்

கோள் காட்டுவதோடு நின்று விடாது அதனை விளக்க வேறோர் உவமையையும் கையாண்டுள்ளார். ஒரு மரம் வளர்ந்து பல நாட்களுக்குப் பின்னர் பூத்துக் காய்க்கும். அவ்வாறு காய்த்த காய்கள் முற்றிக் கனிந்து கனியாகும். அவ்வாறு கனிந்த கனிகள் பின்னர் காயாகாது போவது போல மனிதரும் மூப்பெய்திய பின்னர் இறந்து விடுவர். இக்கருத்துக்களையே கனகவிராயர் இவ்வாறு அமைத்து விளக்கி உள்ளார்.

மாய்க்கு நாள்வரின் மருந்திலை மரத்தினி னாளாய்க்
காய்க்குங் காய்களே கனிந்தபின் காயென வாகா
நீக்கு காகுல நெஞ்சினில் அஞ்சன்மின் என்று
சேய்க்கும் ஏனையோர்க் கும்திடம் செப்பினர் சோர்ந்தார்.

(12:50)

திருக்குறள் கருத்துக்கள் கனகாபிஷேகமாலையில் இடம் பெற்றுள்ளன. ஒரு மன்னனுக்கு இன்றியமையாதன பல. அவனுக்குப் படைவலிமை இருத்தல் வேண்டும். குடி மக்களது அன்பை அவன் பெற்றிருத்தல் அவசியம். விளைவு பெருக்கம் அவனுடைய நாட்டில் இருத்தல் வேண்டும். அவனுடன் இருக்க வேண்டிய மற்றொரு அமிசம் சிறந்த அமைச்சாகும். பலரது நட்பும் அத்தகைய அரசனுக்கு இன்றியமையாதது. அவனது நாட்டைக் காக்கும் அரண்கள் அவனுக்கு மிக மிக அவசியம். இந்த ஆறு சிறப்புகளும் உடையவனே அரசருக்கெல்லாம் சிங்கம் போன்றவன் ஆவான். இக்கருத்துக்களையே இவ்வாறு சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளார் திருவள்ளுவர் தமது திருக்குறளில்.

படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசரு ளேறு (39:இறைமாட்சி:1)

இஸ்லாமிய வரலாற்றிலே சிறப்பு மிக்க இரண்டாம் கலீபாவாக ஆட்சி புரிந்தவர் உமறு கத்தாப் (றலி) அவர்கள். அப்பெரியாரின் ஆட்சியை வருணிக்கப் போந்த கனகவிராயர், உமறு கத்தாப் (றலி) அவர்களின் ஆட்சி சிறப்புற்றோங்கியமைக்குரிய காரணம் அவரது ஆட்சியில் திருக்குறளில் விதந்தோதப்பட்டுள்ள ஆறு சிறப்புக்களும் குறையாது இருந்தமையாகும் என இவ்வாறு வருணித்துள்ளார்.

ஊன்றுபெரும் படைக்குடி கூழமைச் சரொடு
நட்பர ணாறுடை யராகி

(உமறுகத்தாப் அரசுநிலைப்படலம்:12)

கைசறு என்னும் நாடு அறபுநாட்டுக்கு அணித்தாய் இருந்தது. அந்நாட்டை ஆட்சி செய்து வந்தவன் நவ்சேருவான் என்ற பெயரை உடையவன். அவனை வருணிக்கும் பொழுது கனகவி ராயர் மேற்கூறிய குறளின் கருத்துக்களைப் பயன்படுத்துகிறார். யானை, குதிரை முதலிய படைகள் அவனிடமிருந்தன. குடிமக்கள் செழுமையோடு வாழ்ந்தார்கள். ஒப்பிடமுடியாத அளவுக்கு விளைச்சல் அங்கு இருந்தது. கல்வி கேள்விகளில் சிறந்த அமைச்சர்கள் அவனைச் சூழஇருந்தனர். அவனுக்கு எப்பொழுதும் பெரியவர்களுடைய நட்பு இருந்தது. வலிமை மிக்க அரண்கள் அவன் நாட்டைப் பாதுகாத்துக் கொண்டிருந்தன. குறளின் கருத்தை அமைத்து விரிவாக இவ்வாறு பாடியுள்ளார் கனகவிராயர்.

கரிபரி முதல வான கருதருஞ் சேனை என்னும்
திரைகட லுள்ளான் நாளுஞ் செழித்திடும் குடிக ளுள்ளான்
பொருவறுங் கூழு ளான்சூழ் புந்திகூர் அமைச்சு முள்ளான்
பெரியவர் நட்பு ளான்மால் பிறங்கிய அரணு ளானே

(உமறுகத்தாபு அரசு நிலைப்படலம்:38)

ஒரு மன்னனிடம் இருக்க வேண்டிய பண்பு தனது குடிமக்கள் எளிதாக வந்து அவனைக் காண்பதற்கு ஏற்றவனாக இருத்தலாகும். அடிக்கடி மக்கள் கூறும் குறைகளைக் கேட்டுக் கடுஞ்சொல் வழங்காதவனாகவும் அவன் திகழ்தல் வேண்டும். அத்தகைய மன்னனையே உலகம் மிகுதியாகப் போற்றும். இக்கருத்தினையே திருவள்ளுவர் தமது குறளில் இவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார்.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறும் மன்ன னிலம் (39:இறைமாட்சி:6)

இத்திருக்குறட் கருத்துக்களையும் பயன்படுத்தி ஆசிரியர் நவசேருவானை இவ்வாறு பாடியுள்ளார்.

காண்டலுக் கெளிய னியாதுங்
கடுஞ் சொல்லே இல்லான்......

(உமறுகத்தாபு அரசுநிலைப்படலம்:39)

நவசேருவான் தோற்கடிக்கப்பட்ட பின்னர் மகதி என்பவர் ஆட்சி பீடத்தில் அமர்த்தப்பட்டார். மகதி அரசனை வருணிக்கும்

பொழுதும் மேற்கூறிய இரண்டு குறள்களிலும் உள்ள கருத்துக் களையே ஆசிரியர் பயன்படுத்தி உள்ளார். அவர் செங்கோல் நடத்திய முறைமை இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

படைகுடி கூழமைச்சு நட்பரண் படைத்தி யாதும்
கடுமொழி இலராய்க் காட்சிக் கெளியராய்க் கைச றுள்ளார்
இடறில ராகி யோங்க எவர்க்குமே சரியாய்த் தன்சீர்
குடையினா னிழற்றிச் செங்கோல் சிறிதுங் கோடாது
காத்தார்

(மகதி யரசியற்படலம்: 26)

சங்ககாலச் செய்யுள்களிலே உள்ள கருத்துக்களையும் கனகவி ராயர் ஆங்காங்கே சுட்டிச் செல்வதைக் காணலாம். குறுந் தொகையிலே வருகின்ற ஒரு நிகழ்ச்சி. தலைவன் பொருளீட்டச் செல்கிறான். விரைவாகத் திரும்பி வந்து தலைவியைத் திருமணம் முடித்துக் கொள்ளுமாறு தோழி தலைவனை நோக்கி வேண்டு கிறாள். தலைவனை நோக்கி கூறும்பொழுது ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறாள் தோழி. 'ஒரு தாய் மாறுபட்டுத் தனது குழந்தையைத் துன்புறுத்தும் பொழுதும் அக்குழந்தை தன் வாயைத் திறந்து அம்மா என்று அழைக்கிறது. தாயிடமே அடைக் கலம் தேடுகிறது அக்குழந்தை. தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்புதான் உனக்கும் என் தலைவிக்கும் என்று கூறுகிறாள் தோழி. பிள்ளைகள் எச்சந்தர்ப்பத்திலும் தாயினிடமே அடைக் கலம் புகுவர் என்பதை உறுதிப்படுத்தவே இக்கூற்று குறுந்தொகை யில் உள்ள அம்மூவனாரால் இயற்றப்பட்ட பாட்டில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

தாயுடன் றிலைக்கும் காலையும் வாய்விட்
டன்னா யென்னும் குழவி............

(குறுந்தொகை: 397:4-5)

இதே கருத்தைச் சற்றுத் திரித்து ஆண்டுள்ளார் கனகவிராயர். எசீது என்பவனின் கொடுங் கோன்மையிலிருந்து தங்களைக் காப்பாற்றவேண்டும் என்று நபிகள் நாயகத்தின் எஞ்சி இருந்த தோழர்கள் முகம்மது அனிபா அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். அந்த வேண்டுகோளைக் குறிப்பிடும்பொழுதுதான் ஆசிரியர் பிள்ளைகள் தாயாரிடமில்லாது வேறு யாரிடம் இரந்து கேட்பார்கள் என அமைத்துப் பாடுகிறார். இக்கருத்து இடம் பெற்றுள்ள செய்யுள் முழுமையாக இவ்வாறு அமைந்துள்ளது.

இந்நகர் தன்னில் நம்மோர்க் கிடஞ்சல் செய்பகை வேறில்லை
மன்னவர் மன்ன எங்கட் காமன மிரங்கி ஈதை
வன்னியிற் சுட்டெ ரிக்கா வகைபுரிந் திடுதல் வேண்டும்
அன்னைபா லன்றிச் சேய ராரிடம் இரந்து கேட்பார்

(எசீது பதுங்கிய படலம் : 66)

மன்னருக்கு இருக்க வேண்டிய தகுதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் கனகவிராயர். தமது ஆட்சியில் உள்ளவர்களுக்குத் தாய் போன்று கடமை ஆற்ற வேண்டியவர் அம்மக்களின் மன்னர் என மன்னருடைய சிறப்பினை விவரித்துள்ளார். கடலால் சூழப் பட்ட உலகினில் வாழ்கின்றவர்களுக்கு அவர்களுடைய மன்னன் தாய் போல் பணிபுரிய வேண்டும் என்று பாடியுள்ளார். சுயநலத்தையே மறந்து தனது பிள்ளைகளின் நலமே தன்னலம் என வாழ்கின்றவள் அல்லவா தாய்? அத்தகைய தாய்க்கு அரசனை ஒப்பிட்டுள்ளார். உதுமான் (றலி) ஆட்சியைப் பற்றிக் குறிப்பிட வந்த ஆசிரியர் இக்கருத்தினை ஒரு செய்யுளின் முதலிரண்டு அடிகளில் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

தோயமா ருவரி சூழ்ந்த வசுமதி உறுவோ ரியர்க்கும்
தாயென இருந்து காக்குந் தகுதியே மன்னர்க் காகும்

(உதுமான் வதைப் படலம் :85)

(தோயம்—நீர்; உவரி-கடல்; வசுமதி-வசுதை; பூமி)

அரசன் தாயைப் போன்று தன் குடிமக்களைப் பாதுகாக்க வேண்டும் என்னும் கருத்து சங்ககாலத்திலே நிலவியது. இதற்கு ஆதாரமாகச் சங்க இலக்கியங்களிலே பாட்டுக்கள் அமைந்துள்ளமையைக் காணலாம். தாயைப் போல் மன்னன் தானே விருந்தினருக்கு உணவு ஊட்டுதல் பற்றிச் சங்ககால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுபாணாற்றுப் படையில்

விளங்கு பொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆறா விருப்பிற் றானின் றூட்டி (244—245)

என்றும், பெரும்பாணாற்றுப் படையில்

மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்
தானா விருப்பிற் றானின் றூட்டி (478—479)

என்றும் மலைபடுகடாம் என்னும் பாட்டில்

நயந்தளிர் சென்ற நும்மினுந் தான்பெரி
துவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி (359—360)

என்றும் தாய் தன்பிள்ளைகளைப் பாதுகாப்பது போன்று மன்னன் தன்னை வந்து அடைந்தவர்களை எவ்வாறு உபசரித்தான் என்பது விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

உசைன் (றலி) அவர்களின் மறைவுக்குப் பின்னர் வாழ்ந்த அசுகாபித் தோழர்கள் அலி (றலி) அவர்களின் மற்றொரு புதல்வரான முகம்மது ஹனீபா என்பவரை அண்மி உசைன் (றலி) அவர்கள் மறைவுக்குக் காரணமாயிருந்த எசீது என்பவனிடமிருந்து நாட்டைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டார்கள். அவ்வாறு வேண்டும்பொழுது சில உண்மைகளைக் கூறினார்கள், எனக் கனகவிராயர் குறிப்பிட்டுள்ளார். யாருக்கு யார் தெய்வம் என்பது பற்றியவையே அவ்வுண்மைகள். பெரியோர் கூறிய அவ்வுண்மைகளை அசுகாபித் தோழர் வாயிலாகப் புலவர் கூறுகின்றார். பத்தினிப் பெண்டிர்களுக்குத் தெய்வம் அவர் தம் கணவரே. புதல்வர்க்கு மனிதத் தெய்வம் தந்தையும் தாயுமே. துறவோர்கட்குத் தெய்வம் அவர்தம் குருவே. மற்றவர்களுக்கெல்லாம் தெய்வம் ஆட்சிபுரிகின்ற அரசனே. அத்தகைய கருத்துக்களைக் கனகவிராயர் கனகாபிஷேகமாலையில் புகுத்தி உள்ளார். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய ஒரு காப்பியத்தில் இத்தகைய கருத்துக்களை இடம் பெறச் செய்வது ஏற்புடைத்தா என்பதை ஆசிரியர் சிந்திக்கத் தவறி விட்டார். ஆசிரியர் இங்கே தெய்வம் என்னும் சொல்லுக்கு இறைவன் என்னும் பொருளை மனதில் கொண்டிருந்தாரேயானால் அவர் கூறியது தவறானதாகும். தெய்வம் என்னுஞ் சொல்லுக்குக் கடவுள், தெய்வத் தன்மை, தெய்வத்தன்மை உள்ளது எனப் பல கருத்துக்கள் அகராதியில் தரப்பட்டுள்ளன. ஆசிரியர் கடவுள் எனத் தெய்வம் என்னும் பதத்தை இங்கே ஆண்டிருப்பின் அது இஸ்லாமிய ஏக தெய்வக் கொள்கைக்கு முரணாவதாகும். அன்றியும் இஸ்லாமிய ஓர் இறைவன் என்னும் கொள்கையில் ஊறித்திளைத்த அசுகாபித் தோழர்கள் வாயிலாகக் கூறுவதாயின் அதுமிகப் பெருந்தவறாகி விடுகின்றது. கனகவிராயர் தமது கனகாபிஷேகமாலையில் இக் கருத்துக்களை அமைத்து இவ்வாறு பாடியுள்ளார்.

குலமகல டனக்குத் தெய்வங் கொழுநனே புதல்வ ருக்கு
நலமிகுந் தந்தை தாயே நரர்த் தெய்வந் துறவோர் கட்குப்
பலநலக் குருவே தெய்வம் பகரியா வர்க்குந் தெய்வம்
இலைமுக வணிமன் னேயென் றியம்புவர் பெரியோ ரையா

(எசீதுபதுங்கிய படலம் : 64)

குமரகுருபர சுவாமிகளும் தமது நீதி நெறிவிளக்கத்தில் இத்தகைய கருத்துக்களை அமைத்துப் பாடி உள்ளார். அவரும் குலமகளுக்குத் தெய்வம் கணவன் என்றும் புதல்வருக்குத் தெய்வம் தந்தையும் தாயும் என்றும் அறவோர்க்குத் தெய்வம் அடிகளே என்றும் எல்லோருக்கும் தெய்வம் அரசனே என்றும் ஒரு வெண்பாவில் பாடிப் போந்துள்ளார். அவர் பின்பற்றிய பண்பாட்டிற்கு இயைய இக்கூற்றுப் பொருத்தமானதே. குமர குருபர சுவாமிகளுடைய இக்கருத்துக்களைக் கொண்ட பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை

(நீதிநெறி விளக்கம் : 26)

இரண்டு பாடல்களுக்கிடையே ஒரு சிறு மாற்றம் இருப்பதைக் காணலாம். பிள்ளைகளுக்கு நலமே புரியும் அவர் தம் தாய் தந்தையே மனிதத்தெய்வம் என்னும் பொருள்படி 'புதல்வர்க்கு, நலமிகுந் தந்தை தாயே நரர்த்தெய்வம்' என்று கனகவிராயர் அவர்களும் நிச்சயமாகப் பிள்ளைகளுக்குத் (தெய்வம்) தந்தையும் தாயுமே என்று பொருள்பட, 'மன்ற புதல்வர்க்குத் தந்தையும் தாயும்' என்று குமரகுருபரசுவாமிகளும் பாடியுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. பிள்ளைகளுக்குத் தந்தையும் தாயும் மனிதத் தெய்வம் எனக் கனகவிராயர் கூறியமை இஸ்லாமிய இறைக் கொள்கையை நினைவிற் கொண்டதனாலாயிருக்கலாம்.

'இலைமுகவணிமன்' என்று கனகவிராயரும் 'இலைமுகப்பைம் பூண் இறை' என்று குமரகுருபரசுவாமிகளும் மன்னனைச் சுட்டி உள்ளனர். இருவரும் அரசனையே சுட்டி உள்ளனர். இரண்டு பாடல்களிலும் 'இலை போன்ற வடிவத்தை உடைய' என்னும் பொருளில் 'இலைமுக' என்ற தொடரும் மாறாது இருக்கின்றது. அத்தொடர் அடையாக உள்ள ஆபரணத்தைக் கனகவிராயர் அணி என்றும் குமரகுருபர சுவாமிகள் 'பைம்பூண்' என்றும் வருணித்துள்ளனர். அரசனைச் சுட்ட முன்னவர் 'மன்' என்னும் சொல்லையும் பின்னவர் 'இறை' என்னும் சொல்லையும் பயன் படுத்தி உள்ளமையைக் காணலாம். குமரகுருபர சுவாமிகள் தமது பாடலில் 'அறவோர்' என துறவாது விரதங் காப்போரைக்

குறிப்பிட்டுள்ளார். ஆனால் கனகவிராயர் தமது பாடலில் 'துறவோர்' என துறந்தோரைக் குறிப்பிட்டுள்ளார்.

உசைனாருக்கு மாலையிட்ட படலம் உண்மையிலேயே சகருவானின்சுயம்வரம் பற்றிய படலமாகவே அமைந்துள்ளது. மணிமாடம், மண்டபம் முதலியன அலங்கரிக்கப்பட்டமையைக் கனகவிராயர் விவரமாகப்பாடி உள்ளார். ஏழு பாடல்களில் (10 45-51) அவை அலங்கரிக்கப்பட்ட முறையினை நுணுக்கமாகப் பாடி விவரித்துள்ளார் கனகவிரர்யர். ஒரு பாடலிலே அங்குத் தொங்கவிடப்பட்ட விளக்குகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். முத்தினால் அழகான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பல்வேறு படங்கள் பத்திபத்தியாக எல்லாப் பக்கங்களிலும் வரிசையாகத் தொங்க விடப்பட்டிருந்தன. ஒளிபரப்பிப் பளபளப்புடன் விளங்கும் விளக்குகள் அங்குத் தொங்கவிடப்பட்டிருந்தன. நவமணிக்குஞ்சங்களும் ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. இக்காட்சியையே கனகவிராயர் இங்கு இவ்வாறு பாடி உள்ளார்.

முத்தி னாலெழிற் பந்தரே யமைத்தனர்
மொழிந்திடு நாற்புறமும்
பத்தி யாகவே நிரைத்தனர் விசித்திரப்
படங்களை நிறமேவு
லத்த ராநிறம் பலகொள் குளோப்புகள்
நலமிகச் செறித்தார்கள்
மத்தி யாகவே நவமணிக் குஞ்சங்கள்
வாகொடு மொளிசெய்ய (10:46)

இப்பாடலில் 'லஸ்தரா நிறம் பல கொள் குளோப்புகள்' என்னும் சொற்றொடர் பளபளப்புடன் விளங்கிய விளக்குகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இங்கே 'லஸ்தரா' என்பதும் 'குளோப்' என்பதும் பிறமொழிச் சொற்கள். 'குளோப்' என்னும் இனத்தைச் சேர்ந்த விளக்குகள் இன்றும் முஸ்லிம் வணக்கத் தலங்களை அலங்கரித்துக் கொண்டு இருப்பதைக் காணலாம். முஸ்லிம் பெருவழக்கிலும் 'குளோப்' என்றே வழங்கப்படுகிறது. எண்ணெய் வார்த்துத் திரி இட்டு எரிக்கக் கூடியனவாகவும் மெழுகுதிரி பொருத்தி எரிக்கக் கூடியனவாகவும் அத்தகைய 'குளோப்' அமைந்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் மின் குமிழ்களைக் கொண்டும் அவை ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. 'லஸ்தர்', 'குளோப்' என்னும் இரு சொற்களும்

ஆங்கிலச் சொற்கள். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி லஸ்தர் என்பதற்கு அலங்காரத் தொங்கல் எனக் கருத்துத் தருகிறது. அது ஓர் ஆங்கில சொல் என்றும் குறிப்பிடு கிறது. கண்ணாடியாலான தொங்கவிடப்படும் ஒருவகை அலங்கார விளக்கு என்றும் கூறுகிறது. 'குளோப்' என்பதும் கண்ணாடியா லான தொங்கவிடப்படும் ஒரு வகை விளக்காகும். இங்கே 'லஸ்தரா நிறம் பல கொள் குளோப்புகள்' என்று கூறும் பொழுது பளபளப்பாகக் காட்சி அளிக்கும் பல நிறங்களைக் கொண்ட கண்ணாடி விளக்குகள் என்றே பொருள் கொள்ளவேண்டி இருக் கிறது.

இஸ்லாமியஅடிப்படையிலே தோன்றியதமிழ்க்காப்பியங்களுள் தலைக்காப்பியம் என்று அழைக்கப்படும் பெருமை கனகாபிஷேக மாலையையே சாரும். உமறுப்புலவர் பிறந்து ஆறு வருடங்ளில் கனகாபிஷேகமாலை கனகவிராயரால் இயற்றப்பட்டுள்ளது.

# சீறாப்புராணம்

நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் வாழ்க்கையைக் 'கருப்பொருளாகக் கொண்டு சிறந்து விளங்குகிறது சீறாப்புராணம்' 'நபியின் வாழ்க்கை' என்பதே அறபு மொழியில் 'சீறதுன்னபி' என வழங்கப்படுகிறது. இச்சொற்றொடரை 'சீறத் அல் நபி' எனப் பிரிக்கலாம். சீறத் என்றால் வாழ்க்கை; நபி என்றால் தீர்க்கதரிசி; அல் என்றால் அந்த அல்லது இந்த (the) என்று பொருள்படும். அறபு எழுத்து வடிவில் 'சீறத்' என எழுதப்படினும் அது உச்சரிக்கப் படும் பொழுது 'சீறா' என்றே சொல்லப்படுகிறது. இங்கே சீறத் அல்லது சீறா என்பது வாழ்க்கை எனப் பொருள்படினும் அறபு அறிஞரும் சிறப்பாக முஸ்லிம் அறிஞரும் சீறத் அல்லது சீறா என்னும் அறபுச் சொல்லைப் பெருமானார் முகம்மது (சல்) அவர்களின் வாழ்க்கையை சிறப்பாகச் சுட்டும் ஒரு சொல்லாகவே கொள்வர். எனவேதான் சீறத் என்று எழுதப்பட்டு சீறா என்றே உச்சரிக்கப்படும் இச்சொல்லே சீறாப்புராணம் என்னும் சொற்றொடரின் முதற்சொல்லாய் விளங்குகிறது. இச்சொற்றொடரின் மற்றச்சொல்லான 'புராணம்' என்பது வடமொழிச் சொல்லாகும். சங்கத மொழியில் புராணம் என்பது 'புனிதமான கதை' அல்லது 'பழைமையான கதை' என்று பொருள்படும். அறுபத்து நாலு கலையுள் ஒன்றும் வியாச முனிவரால் இயற்றப்பட்டதும், சருக்கம் பிரதிசருக்கம்' வமிசம், மன்வந்தரம், வமிசானு சரிதம் என்னும் இவற்றைப் பற்றி கூறுவதுமான பழைய நூல் வகையும் கூட புராணம் என வழங்கப்படும். 'புனிதமான வரலாறு' என்பதுவே இங்கே புராணம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது எனலாம். ஆக சீறா என்னும் அறபுச் சொல்லும் 'புராண' என்ற சமஸ்கிருத மொழி

யில் இருந்து வந்த புராணம்' எனத் தமிழ்ப்படுத்தப்பட்டுள்ள சொல்லும் சேர்ந்தே 'சீறாப்புராணம்' என்பது அமைந்துள்ளது என்பதைக் காண்கின்றோம். பெருமானார் முகம்மது நபி (சல்) அவர்களின் புனிதமான வாழ்க்கை வரலாற்றினைப் புகழ்ந்து பாடப்படும் காப்பியங்களுள் தலைசிறந்த ஒன்றாகச் சீறாப் புராணம் திகழ்வதைப் பார்க்கிறோம். பொதுவாக அறபு மொழி யில் றகரம் வரும்பொழுது அது வல்லின எழுத்தாகவே அமைந்து விடுகிறது. எனவே வல்லின றகர உச்சரிப்பை உடைய அறபு எழுத்தினை இடையின ரகர உச்சரிப்புடையதாக எழுதுவது தவறானதாகும். இஸ்லாமியத் தமிழிலக்கியத்தில் தோன்றிய தமிழ் நூல்களின் பழைய பதிப்புக்கள் அனைத்திலும் அறபு றகரம் வல்லின றகரமாக இருப்பதைக் காணலாம். அதன் பயனாகவே சீறாப்புராணம் என்னும் நூலின் பெயரும் வல்லின றகரத்தைக் கொண்டதாகத் திகழ்கிறது. அபூபக்கர், உமர் போன்ற பெயர் களை எழுதும் பொழுது றகர ஒற்று இறுதியில் வரும் சந்தர்ப்பங் களில் இடையின ரகரத்தைப் பயன்படுத்துவது தவறாகாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் கூட செய்யுட்களில் அமைவதுபோல அப்பெயர்களை அபூபக்கரு, உமறு என எழுதுவது பொருத்த முடைத்து எனக் கொள்ளலாம்.

காப்பிய இலக்கியங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றது சீறாப்புராணம். இது ஒரு பெருங்காப்பியம். விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்றத்துக் காண்டம் என முப்பெருங்காண்டங்களைக் கொண்டது சீறாப்புராணம். விலாதத் என்பது அறபுச் சொல். அது பிறப்பு எனப்பொருள்படும். சீறாப்புராணத்தின் பாட்டுடைத்தலைவரான, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் தலைமுறை, பிறப்பு, இளமை, இளமையில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் முதலியன விலாதத்துக் காண்டத்தில் இடம் பெற்றுள்ளன. இக்காண்டத்தில் 24 படலங்கள் உள்ளன. 24 படலங் களிலும் 1240 திருவிருத்தங்கள் இடம் பெற்றுள்ளன.

சீறாப்புராணத்தின் இரண்டாவது காண்டம் நுபுவ்வத்துக் காண்டம் ஆகும். நபி என்னும் சொல்லோடு தொடர்புடையது நுபுவ்வத் என்னும் அறபுச் சொல். நபி என்றால் தீர்க்கதரிசி என்று பொருள் கூறுவர். தீர்க்கதரிசி என்னும் சொல் நபி என்னும் அறபுச் சொல்லின் சரியான பொருளைக் குறிக்கின்றது எனக் கூறி விடமுடியாது. தீர்க்கதரிசனம் என்று ஒருவாறு பொருள் கூறக்

கூடிய நபித்துவம்-நபியாகும் தன்மை-நுபுவ்வத் எனப்படுகிறது. எம்பெருமானார் முகம்மது (சல்) அவர்கள் நபிப்பட்டம் பெற்ற நிகழ்ச்சியிலிருந்து ஆரம்பமாகிறது நுபுவ்வத்துக் காண்டம். பெருமானாரின் 'ஆறாறிரண்டு' (முப்பத்தெட்டு) வயது நிரம்பியதிலிருந்து பதின்மூன்று ஆண்டுகளில் நிகழ்ந்த சம்பவங்கள் நுபுவ்வத்துக் காண்டத்தில் வருணிக்கப்பட்டுள்ளன. இக்காண்டத்தில் 21 படலங்கள் அமைந்துள்ளன. 21 படலங்களிலும் 1104 திருவிருத்தங்கள் இடம் பெற்றுள்ளன.

மூன்றாவதான ஹிஜ்றத்துக் காண்டம் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் இறுதிப் பதினோராண்டுகளில் ஆறாண்டு கால வரலாற்றினைக் கூறுவதாகும். ஹிஜ்றத் என்னும் அறபுச் சொல் குடி பெயர்ந்து செல்லுதல் என்று பொருள்படும். மக்கமா நகரைத் துறந்து நபி பெருமானார் (சல்) மதீனமா நகரம் சென்று குடியேறிய நிகழ்ச்சியையே ஹிஜ்றத் என்னும் சொல் குறிப்பிடுகிறது. ஹிஜ்றத்துக்குப் பின் நடந்த நிகழ்ச்சிகளை மதீனத்தார் ஈமான் கொண்ட படலத்திலிருந்து தொடங்கி உறனிக் கூட்டத்தார் படலம் வரை 47 படலங்களில் 2683 திருவிருத்தங்களில் கூறுகிறது இக்காண்டம்.

சீறாப்புராணத்திலுள்ள மூன்று காண்டங்களிலும் மூன்று முறையான காலக் கணிப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாம் காண்டமான விலாதத்துக் காண்டத்தில் யானை ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. நுபுவ்வத்துக் காண்டத்தில் நபிப்பட்டம் அருளப்பெற்ற நிகழ்ச்சியின் அடிப்படையில் ஆண்டு கணக்கிடப்பட்டுள்ளது ஹிஜ்றத்துக் காண்ட ஆண்டுக் கணக்கீட்டுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது ஹிஜ்றி நிகழ்ச்சியாகும். யானை ஆண்டு தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது ஒரு வரலாற்று நிகழ்ச்சி. யெமன் நாட்டை ஆட்சிபுரிந்த அப்றஹா அஷ்றம்என்னும் பெயரை உடைய அபிசீனிய ஆளுநர் மக்காவிற்குப் படை எடுத்து வந்தார். அப்பொழுதுதான் மக்காவில் யானைகள் முதன்முதலாகக் காணப்பட்டன. இதுநிகழ்ந்தது கி.பி.570-இல் என்பர். யானைகள் முதன் முதல் மக்காவில் காட்சி அளித்தமையினால் அவ்வாண்டு யானை ஆண்டு என அழைக்கப்பட்டது. அந்த யானை ஆண்டிலேதான் பெருமானார் முகம்மது நபி (சல்) அவர்கள் பிறந்தார்கள். அதனாலேயே இன்ன நிகழ்ச்சி இன்ன யானை ஆண்டில் அல்லது நபிகள் நாயகத்தின் இத்தனையாம் வயதில் நிகழ்ந்தது என விலாதத்துக் காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யானைகள்

முதன்முதல் மக்காவில் காணப்பட்டதும் முகம்மது (சல்) அவர்கள் பிறந்ததும் ஒரே ஆண்டானமையினால் யானை ஆண்டைக் கொண்டு கணக்கிடும் முறையும் பெருமானாரின் பிறப்பைக் கொண்டு கணக்கிடும் முறையும் ஒரே விதமாகவே இருக்கின்றன.

செம்மையங் கோட்டுக் கடகரிக் கலகந்
தீர்ந்தபி னைம்பதா நாளில்

(நபியவதாரப்படலம்:89)

பெருமானார் (சல்) அவர்கள் பிறந்தார்கள் என யானை ஆண்டின் ஆரம்பமும் பெருமாரின் பிறப்பும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

முருகவிழ் அலங்கல் திண்தோள் முகம்மது தமக்குச் சார்ந்த
திருவயது இருபத் தைந்து நிறைந்தன சிறக்க வன்றே

(பாதைபோந்த படலம்:1)

விலாதத்துக் காண்டத்தில் இவ்வாறு ஆண்டுகள் குறிப்பிடப் படுகின்றன. நுபுவ்வத்துக் காண்டத்தில் பெருமானாரின் வயது நபிப்பட்டம் பெற்ற படலத்தில்

விள்ளருங் கணக்கா றாறிரண் டதின்மேல் (2)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் அக்காண்டத்தில் வரும் படலங்களில் நபிப்பட்டம் பெற்ற இத்தனையாம் ஆண்டு என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

தூதென நபியின் பட்டந் துலங்கிய நான்கா மாண்டில்

(தீனிலை கண்ட படலம்;1)

திமிர வெங்குபிர் கடிந்துதீ னிலைநெறி நிறுத்திக்
கமை தரும்படி யாண்டுநான் கெனக்கடந் ததற்பின்

(உமறுகத்தாபு ஈமான்கொண்ட படலம்:1)

பரிவுறு நபியெனும் பட்டமாகிய
வருடமே ழினிற்றனி முஹற மாத்தையில்

(ஒப்பெழுதித்தீர்ந்த படலம்:1)

இவ்வாறு நபிப்பட்டத்தை அடிப்படையாக வைத்து நுபுவ்வத்துக் காண்டத்தில் ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம் ஹிஜ்றத்துக் காண்டத்திலும் முதலில் உள்ள படலங்களில் நுபுவ்வத்துக் காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு முறைமையே பின்பற்றப்பட்டுள்ளது. ஹிஜ்றத்து நிகழ்ச்சிக்குப் பீடிகையாக அமைந்துள்ள படலங்களிலே இந்த முறைமை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

உயர்புகழ் முகம்மதுக் கும்பர் கோனபிப்
பெயரளித் தாண்டுபன் மூன்று பேர்பெற
நயமுற நடக்குமந் நாளில்

(மதீனத்தார் வாய்மை கொடுத்த படலம்:1)

ஹிஜ்றத்துக் காண்டத்தில் வரும் பதினோராம் படலத்திலிருந்தே ஹிஜ்றி ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

பூண்டநன் கலம்பொற் காரண வரைகள்
புடையுடுத் திருந்தமக் காவில்
கூண்டிருந் தெழுந்து மதினமா நகரில்
குலத்தொடு மினிதுறப் புகுந்தோர்
ஆண்டுசென் றதற்பின் ... ...

(சல்மான் பாரிசுப் படலம்:)

மருந்தெலு னுங்கலி மாவுரை விதைத்துமக் காவில்
இருந்து மாமதீ னாவிடத் தினிதெழுந் தருளித்
திருந்த வாண்டொரு மூன்றினில் தீன்பயிர் விளைத்துப்
பொருந்து நாளினில் ... .........

(அசனார் பிறந்த படலம்:1)

வந்த தெண்ணிய கிசுறத்து நான்கெனும் வருடம்

(உசைனார் பிறந்த படலம்:1)

விலக்கரிய வருடமொரு நான்கு நிறைந்
தைந்தாண்டு மேவும் போதில்

(ஹுமாம் ஈமான் கொண்ட படலம்:1)

தனிமுதற் றூத ராறா மாண்டினில்...

(மழையழைப்பித்த படலம்:1)

இவ்வாறு ஹிஜ்றத்துக் காண்டத்தில் ஹிஜ்றி ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உமறுப்புலவர் பற்றிய அகச் சான்றுகள் எதுவும் சீறாப் புராணத்தில் காணப்படவில்லை. அதே போன்று உமறுப்புலவர் பற்றிய ஆதாரபூர்வமான செய்திகளும் கிடைத்தற்கரிதாக உள்ளன. கர்ணபரம்பரையான கதைகளை ஆதாரமாக வைத்தே உமறுப்புலவரின் வாழ்க்கையை அறிய வேண்டியிருக்கிறது. சீறாப் புராணத்தை முழுமையான காப்பியமாகப் பாடிய பின்னர் கடைசியாக முத்திரைக் கவியையும் ஏனைய கவிஞர்களைப் போல்

வாழ்த்துக் கவியையும் பாட உமறுப்புலவர் எண்ணியிருக்கலாம். ஆனால் எதிர்பாராத சூழ்நிலையில் உமறுப்புலவர் உயிர் நீத்திருக்கலாம். அதன் காரணமாகச் சீறாப்புராணத்தை முழுமையாகப்பாடி முடிக்க இயலாமல் போனது போன்று தமது பெயரை அமைத்து முத்திரைக் கவியைப் பாடவும் இயலாது போயிருக்கலாம். முழுமையாகப் பெறாத ஒரு காப்பியத்தை உமறுப் புலவர் அரங்கேற்றி இருப்பார் என்று கொள்ளவும் முடியாது.

உமறுப்புலவரின் தந்தை பெயர் முகம்மது நயினார்பிள்ளை என்றும் உறுப்புலவர் ஹிஜ்றி 1052 ஆம் ஆண்டு ஷஅபான் மாதம் பிறை 9 இல் பிறந்தார் என்றும் ஹிஜ்றி 1115 ஆம் ஆண்டு றபீஉல் அவ்வல் மாதம் பிறை 14இல் காலமானார் என்றும் ஒரு செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஹிஜ்றி 1052ஆம் ஆண்டு ஷஅபான் தலைப்பிறை 1642 ஆம் ஆங்கில ஆண்டு அக்டோபர் மாதம் 25ஆம் தேதி சனிக்கிழமை ஆகும். எனவே ஷஅபான் மாதம் 9ஆம் பிறை 1642ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். அதே போன்று உமறுப்புலவர் உயிர் நீத்தநாள் ஹிஜ்றி 1115ஆம் ஆண்டு றபீஉல் அவ்வல் மாதம் பிறை 14இல் என்றும் கூறப்பட்டுள்ளது. ஹிஜ்றி 1115ஆம் ஆண்டு றபீஉல் அல்வல் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். இதற்கிணங்க ஹிஜ்றி 1115ஆம் ஆண்டு றபீஉல் அவ்வல் மாதம் 14ஆம் பிறை கி.பி 1703ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆந் திகதி சனிக்கிழமை ஆகும். இதன்படி பார்க்கும்பொழுது உமறுப்புலவர் அவர்கள் 63 ஹிஜ்றி ஆண்டுகள் அதாவது 61 ஆங்கில ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந் தார்கள் என்பது புலனாகின்றது.

1953ஆம் ஆண்டின் கழக வெளியீடான தமிழ்ப்புலவர் வரிசை பகுதி-உ ஐந்தாம் புத்தகத்தில் அதன் ஆசிரியர் திரு. சு.அ. இராம சாமிப் புலவர் அவர்கள் உமறுப்புலவர் பற்றி இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

> ‘உமறுப்புலவர் என்பவர் சேரநாட்டில்உள்ள(?) கீழக்கரையைச் சேர்ந்தவர். அவர் தோன்றிய காலம் ஏறக்குறைய இருநூற்றைம்பது யாண்டுகட்கு முன்பு என்பர். உமறுப்புலவருடைய மதம் முகமதியம் (இஸ்லாம்).
>
> ‘உமறுப்புவரின் தந்தை முத்து வாணிகத்தில் ஈடுபட்டிருந் தார். அவர் அடிக்கடி எட்டையபுரச் சிற்றரசரிடம் செல்வது வழக்கம். அங்குச் செல்லும் போதெல்லாம் கடிகை முத்துப்

புலவரையும் பார்த்து அவரோடு உரையாடி மகிழ்தல் வழக்கம். கடிகை முத்துப் புலவரின் சொல்லாற்றல் உமறுப் புலவரின் தந்தை உள்ளத்தைக் கவர்ந்தது. உமறுப்புலவரை யும் அவர் அடிக்கடி உடனழைத்துச் செல்வது வழக்கம். கடிகைமுத்துப் புலவருக்கு அரசரிடமும் மக்களிடமும் இருந்த செல்வாக்கும் புகழும் உமறு தந்தையின் உள்ளத்தைக் கவர்ந்தன. தம் மைந்தனையும் தமிழறிஞராக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டார். தம் விருப்பத்தைக் கடிகை முத்துப்புலவரிடம் தெரிவித்தார். புலவருடைய உடன் பாட்டைப் பெற்றுத் தம் மைந்தனைப் புலவரிடம் ஒப்பு வித்துச் சென்றார்.

'கடிகை முத்துப் புலவரிடம் ஒப்புவிக்கப் பெற்ற உமறு தமிழ்க் கல்வியிலே மிகுந்த விருப்பங் காட்டினார். கடிகை முத்துப் புலவர் இயற்கையிலேயே சொல்லாற்றல் மிக்கவராக விளங் கினமையின் மிக விரைவிலே தமிழ் இலக்கண இலக்கியங் களைக் கற்பித்தார். நாளடைவில் உமறு, உமறுப்புல வரானார்.

'உமறு, தமிழ் மொழியை நன்கு கற்றார். தம் மதத்தினிடத் தில் அழுந்திய பற்றுடையவராக விளங்கினார். முகமது நபியின் வரலாறு கூறுவதாகிய சீறாப்புராணத்தை ஐயாயிரம் பாடல்களாகப் பாடிமுடித்தார். இப்புராணம் தமிழர்களாற் பாடப்பெற்றதுபோலவே செந்தமிழ் நடையில் அமைந் துள்ளது.

(தமிழ்ப்புலவர் வரிசை ஐந்தாம் புத்தகம்: பக். 103-104)

பெருமானார் முகம்மது நபி அவர்களின் வாழ்க்கையைக் காப்பியமாகக் கொண்டு வரவேண்டும் என்று நினைத்த சீதக்காதி எனப் புகழ்ப் பெயர் பெற்றவரும் பெரிய தம்பிமரைக்காயரின் புதல்வருமான செய்கு அப்துல்காதிர் மரைக்காயர் உமறுப் புலவரைச் சந்தித்தபொழுது தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அவருக்கு உரை வழங்கும்படி கூறி அவரைச் செய்குசதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் அனுப்பினார். உமறுப்புலவருடைய தோற்றத்தைக் கண்ட செய்கு சதக்கத்துல்லா அப்பா அவர்கள் உரை வழங்க மறுத்துவிட்டார். பின்னர் நபிகள் நாயகம் அவர்கள் இருவரின் கனவிலும் தோன்றினார்கள். தோன்றி ஒருவரை மற்ற வருக்கு அறிமுகம் செய்து வைத்தபின்னர் உமறுப்புலவருக்கு

செய்கு சதக்கத்துல்லா அப்பா அவர்கள் உரை வழங்கினார். சீறாப்புராணமும் இயற்றப்பட்டது. இவ்வரலாறு முன்னரே கூறப்பட்டது.

பரங்கிப்பேட்டை மகுமூது பந்தரைச் சேர்ந்த காதரசனா மரைக்காயர் இதே போன்று கர்ண பரம்பரைக் கதை ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார். உமறுப்புலவர் சீறாப்புராணம் இயற்றுவதற்கான உரையைப் பெற மகுமூது பந்தர் முகம்மது செய்கு லெப்பை என்னும் காலி மஹ்மூது என்பவரை அண்மினார் என்றும், புலவரின் தோற்றத்தை விரும்பாத அவரும் உரை வழங்க மறுத்தார் என்றும், பின்னர் நாகூர் அடைந்து சாகுல் கமீது ஆண்டகையிடம் முறையிட்டு நல்லாசி பெறவிரும்பினார் என்றும், அங்கே 'திருவினுந்திருவாய்' என்னும் அசரீரி கேட்டதாகவும் அச்செய்யுளை முழுமையாக்கி 'பெருந்தலம் புரந்த கருத்தனைப் பொருத்துதல் கருத்தே' என முடித்து மஹ்முது பந்தர் சென்று காலி மகுமூது அவர்களை அடைந்து அச்செய்யுளைக் காட்டி, நல்லாசியும் உரையும் பெற்றுச் சீறாப்புராணத்தை இயற்றினார் என்றும், க. வு. காதரசனாமரைக்காயர் 'நபியவதாரப்படல உரை கடிலகம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கதை சதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் உமறுப்புலவர் சென்றமை பற்றிய கதையிலிருந்து வேறுபட்டதாக உள்ளது.

சீறாப்புராணம் இயற்றப்பட்டு ஏறத்தாழ 140 ஆண்டுகள் சென்ற பின்னரே அது அச்சியற்றப்பட்டது. சீறாப்புராண ஆசிரியர் உமறுப்புலவர் ஹிஜ்றி 1115 (கி.பி. 1703)இல் உயிர் நீத்தார் என்று கூறப்படுகிறது. சீறாப்புராணத்தில் முதற்பதிப்பு கி.பி. 1842 (ஹிஜ்றி 1258)இல் வெளிவந்துள்ளது. அதனை அச்சிற் பதிப்பித்தவர் செய்கு அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம் அவர்களாவார். தமது ஆக்கப்பணிகளை முடித்த பின்னரே அவர் சீறாப்புராணத்தைப் பதிப்பித்துள்ளார். சீறாப்புராணத்தின் இந்த முதற்பதிப்பு உவைசு நயினார்ப் புலவராலும் யாழ்ப்பாணத்து பக்கீர் முகியித்தீன் என்பவராலும் பரிசோதிக்கப்பட்டது. இப்பதிப்புக்கு உதவிய உவைசு நயினார் அவர்களின் பெயர் முதற் பக்கத்திலும் யாழ்ப்பாணத்து பக்கீர் முகியித்தீன் அவர்களின் பெயர் கடைசிப்பக்கத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பதிப்போடு சீறாப்புராணம் நின்றுவிடவில்லை. தொடர்ந்து பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. ஹிஜ்றி 1279

(கி.பி. 1862)இல் புலவர் செய்யித் என்பவர் சீறாப்புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இருபது வருட இடைவெளிக்குப் பின்னர் இப்பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பாசிப்பட்டணம் பீர் முகம்மது சாகிப் என்பவரின் புதல்வர் நயினார் முகம்மதுப் புலவர் ஹிஜ்றி 1283 (கி.பி. 1866)இல் சீறாப்புராணத்தின் மற்றொரு பதிப்பை வெளியிட்டுள்ளார். கண்ணகுமது மகுதூ முகம்மதுப் புலவர் ஹிஜ்றி 1336 (கி.பி. 1917) இல் சீறாப்புராணத்தின் வேறொரு பதிப்பை வெளியிட்டுள்ளார். இந்தப் பதிப்பின் பின் இணைப்பாக உமறுப்புலவர் பற்றிக் கர்ண பரம்பரைக் கதை இடம் பெற்றிருப்பதைக் காணலாம். செய்குத் தம்பிப் பாவலர் அவர்களால் பொழிப்புரையுடன் சீறாப்புராணம் இரண்டு பாகங்களாக 1912இல் வெளியிடப்பட்டுள்ளது. முகம்மது யூசுப் என்னும் கவிஞர் நாச்சிகுளத்தார் 1974இல் சீறாப்புராணத்தின் ஒரு புதுப்பதிப்பை வெளியிட்டார்.

வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கியையவே சீறாப்புராணம் இயற்றப்பட்டது என்று கர்ண பரம்பரைக்கதை கூறுகின்றது. ஆனால் சீதக்காதி அவர்களைப் பற்றிய எவ்விதக் குறிப்பும் சீறாப்புராணத்தின் இடம் பெறவில்லை. எனினும் சீறாப்புராணம் அபுல் காசிம் மரைக்காயரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அபுல்காசிம் என்பது கதிஜா அம்மையார் அவர்கள் நபிகள் நாயகம்(சல்) அவர்களை அன்பாய் அழைத்த பெயர். காசிமின் தந்தை என்பது அதன் பொருள். பெருமானாரின் பொன்மொழி 'அபுல்காசிம்' எனப் பெயர் சூட்டுவதை ஆதரிக்கவில்லை.

சீறாப்புராணத்தில் மொத்தமாக உள்ள 5027 திருவிருத்தங்களுள் முதலில் உள்ள 2488 திருவிருத்தங்களிலே 22 தடவை அபுல் காசிம் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 1240 திருவிருத்தங்களை உடைய 24 படலங்களைக் கொண்ட விலாதத்துக் காண்டத்தில் 11 தடவையும் 1104 திருவிருத்தங்களைக் உள்ளடக்கிய 21 படலங்களைக் கொண்ட நுபுவ்வத்துக் காண்டத்தில் 9 தடவையும் அபுல்காசிம் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 2683 திருவிருத்தங்களை உள்ளடக்கிய 47 படலங்களைக் கொண்ட ஹிஜ்றத்துக் காண்டத்தில் உள்ள முதல் 234 திருவிருத்தங்களில் இரண்டு தடவையும் அபுல்காசிம் அவர்களின் புகழ் பாடப்பட்டுள்ளது. ஹிஜ்றத்துக் காண்டத்தில் உள்ள முதல் மூன்று படலங்களும் மதீனத்தார் ஈமான் கொண்ட படலம்,

மதீனத்தார் வாய்மை கொடுத்த படலம், யாத்திரைப் படலம் என்னும் மூன்றில் முதலாவதிலும் மூன்றாவதிலும் அபுல்காசீம் அவர்கள் பெயர் சுட்டப்பட்டுள்ளது. ஹிஜ்றத்துக் காண்டத்தில் ஏனைய திருவிருத்தங்களில் அபுல்காசீம் அவர்கள் பெயர் விடுபட்டுள்ளது. இவ்வாறு விடுபடுதற்கான காரணத்தை ஊகிக்க வேண்டி இருக்கிறது ஒருவேளை அபுல்காசீம் அவர்களின் உதவி கிடைக்காமல் போயிருக்கலாம் அல்லது அபுல்காசீம் அவர்கள் உயிர்நீத்திருக்கலாம் அல்லது 'அபுல்காசீம் என்னும் பெயரை உபயோகிப்பது விரும்பத்தகாத ஒன்று' என்னும் பெருமானாரின் பொன்மொழியை யாராவது சீறாப்புராண ஆசிரியரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம். அல்லது 27 தடவைகள் அபுல்காசீம் புகழைப் பாடியது போதுவதாகும் எனத் திருப்தி அடைந்திருக்கலாம்.

அபுல்காசீம் மரைக்காயரின் பிறப்பிடம் வகுதை எனப் பல பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னவன் வகுதைத் துரையபுல் காசீம்
வளமனைச் செருக்குமொத் திருக்கும்

(நாட்டுப் படலம்: 41)

சீறாப்புராணத்தின் மற்றோர் இடத்தில் அபுல்காசீம் மரைக்காயர் அவர்கள்

மடலவிழ் வனச வாவி வைகையம் பதிக்கு வேந்தன்
அடலுறை அபுல்கா சீம்தம் அருங்குடிச் செல்வம் போல

(இசுறா காண் படலம்: 18)

என வைகை அம்பதிக்கு மன்னன் எனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து வைகையம்பதியும் வகுதையம்பதியும் ஒரே இடத்தைக் குறிக்கும் சொற்கள் எனக் கருதமுடியும்.

உமறுப்புலவர் தமது காப்பியமான சீறாப்புராணத்தைத் தமது இல்லத்திலேயே எழுதி முடிக்க ஆசிரியருக்கு எல்லா வசதிகளையும் வகுதையைச் சேர்ந்த அபுல்காசீம் மரைக்காயர் செய்து கொடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது. உமறுப்புலவர் அவர்கள் மஹ்மூது பந்தரிலுள்ள புதுப் பள்ளிவாசலின் அருகே உள்ள மேடையில் வைத்து சீறாப்புராணத்தை எழுதி உள்ளார் என்றும் சிலர் கூறுகின்றனர்.

உமறுப்புலவர் கீழக்கரையிலே திருமணம் புரிந்து அங்கே வாழ்ந்தார் என்றும் அந்த ஊரில் நடக்கும் ஒவ்வொரு திருமணத்திலும் 'புலவர் பணம்' என்று ஒரு மகமையும் ஏற்படுத்தி அதனை நடைமுறைப்படுத்தி வந்தனர், வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறு உமறுப்புலவர் அவர்கள் அங்கு கௌரவிக்கப்பட்டார்கள்.

ஹிஜ்றிப் பிரயாணத்தின் ஆரம்பம் அது. மக்காக் குறைஷிக் காபிர்கள் இன்னல்கள் பொறுக்கமுடியாதவையாயின. மக்காவிலிருந்து புறப்பட அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பார்த்திருந்தார்கள் அண்ணல் நபி (சல்) அவர்கள். மக்காவை விட்டு மதினாவுக்குப் புறப்படுமாறு அல்லாஹ்வின் கட்டளை ஜிப்றயீல் (அலை) அவர்கள் மூலம் கிடைக்கப் பெற்றது. அபூபக்கர் (றலி) அவர்களின் துணையோடு பெருமானார் (சல்) அவர்கள் மதினா நோக்கிப் புறப்பட்டார்கள். முதலில் தௌர் என்னும் குகையிலே மூன்று நாள் தங்கி இருந்தார்கள். அங்கிருந்து தப்பிப் பயணத்தை ஆரம்பித்தார்கள். அப்பொழுது சுறாக்கத் என்பவன் அவர்களைப் பின் தொடர்ந்தான். அவனும் பின்னர் இஸ்லாத்தை ஏற்று மக்காவுக்குத் திரும்பி விட்டான். அவர்கள் இருவரும் மதீனமாநகரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

அண்ணல் நபி (சல்) அவர்களும் அபூபக்கர் (றலி) அவர்களும் இரவில் பிராயணம் செய்தார்கள். இருளில் பிராயணம் செய்தார்கள். இரவுக் காலத்தில் முட்கள் நெருங்கிய காட்டினை அடைந்து நடந்து சென்றார்கள். இரவில் சற்று மெதுவாகவே சென்றார்கள். சூரியன் உதயமான பின்னர் விரைவாகப் பயணமானார்கள். நண்பகலாயிற்று. கரடு முரடான பாதை சூடு பிடித்திருந்தது. வெப்பமான பாலை நிலத்தில் நண்பகல் சூடு என்றால் அகோரமாகத்தான் இருக்கும். அங்கே ஒரு குன்று இருந்தது. நிழலில்லாத வெயில் மிகுந்துள்ள இடத்தில் தங்கினார்கள். அந்தக் குன்றுக்கு அணித்தாய் இருந்தது அந்த இடம்.

ஆறு ஹிஜ்றி ஆண்டுகளில் நிகழ்ந்த சம்பவங்களுள் ஒரு சிலவற்றை விவரிப்பதுடன் சீறாப்புராணம் முடிவுறுகின்றது. உறனிக் கூட்டத்தார் படலம் சீறாப்புராணத்தின் இறுதிப் படலமாக அமைந்துள்ளது. அண்ணல் நபி (சல்) அவர்கள் மக்க மாநகரிலிருந்து மதீன மாநகரத்துக்கு ஹிஜ்றத்துச் சென்று அங்குப் பதினொரு ஆண்டுகள் வாழ்ந்திருந்தார்கள். ஹிஜ்றி பதினேராவது

ஆண்டிலே தான் நபிகள் பெருமானார் (சல்) அவர்கள் வபாத் (மரணம்) ஆனார்கள். இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது நபிகள் பெருமானாரின் மதீனா வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுள் ஏறத்தாழ சரி பாதி கால நிகழ்ச்சிகளே சீறாப் புராணத்தின் இறுதிக் காண்டமான ஹிஜ்றத் காண்டத்தில் இடம் பெற்றுள்ளமையைக் காணலாம் ஆறாண்டுக்கான வரலாற்று நிகழ்ச்சிகளை விவரிக்க சீறாப்புராணத்தில் 47 படலங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஹிஜ்றத்துக்கு முந்திய நபிகள் பிரானின் வாழ்க்கை சீறாப்புராணத்தில் 45 படலங்களிலே விவரிக்கப் பட்டுள்ளமை கண்டு நோக்கற்பாலது. எனவே, நபிகள் பெருமா னாரின் இறுதி ஐந்து அல்லது ஆறு ஆண்டு வாழ்க்கையை வருணிக்க உமறுப்புலவர் மேலும் நாற்பதுக்கு மேற்பட்ட படலங்களைப் பயன்படுத்தி இருத்தல் வேண்டும். ஏனெனில் நபிகள் நாதரின் வாழ்க்கையில் இறுதி ஐந்து ஆறு ஆண்டுகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் நிகழ்ந் துள்ளன. நபிகள் நாயகத்தின் இறுதி ஐந்து ஆறு ஆண்டுகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் நிகழ்ந் துள்ளன. நபிகள் நாயகத்தின் இறுதி ஐந்து ஆறு ஆண்டுகளில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் சீறாப்புராணத்தில் இடம் பெறாமைக்குரிய காரணம் இவற்றை வருணிக்க முயல்வதற்கு முன்னரே உமறுப்புலவர் இறையடி சேர்ந்துள்ளார்கள் என்பதே யாகும். வாய்ப்புக் கிட்டி இருந்தால் நிச்சயமாக உமறுப்புலவர் நபிகள் பெருமானார் (சல்) அவர்களின் வபாத்து உட்பட வரலாற்று முக்கியத்துவம் உள்ள பல சம்பவங்களை வருணித்திருப் பார். அத்தோடு சீறாப்புராணத்தையும் பூரணத்துவம் பெற்ற தொன்றாக அமைந்திருப்பார்.

எனவே, இதுகாறும் கூறியவற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது உமறுப்புலவர் தமது சீறாப்புராணத்தில் நபிகள் பெருமானார் (சல்) அவர்களின் வாழ்க்கையோடு நெருங்கிப் பின்னப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகளை மிக நுணுக்கமாக வருணித்துள்ளார். அவற்றைச் சொற்சுவை மிக்கனவாய்ப் பாடியுள்ளார். பொருளாழம் உடைத் தனவாய் அமைத்துள்ளார். கவி வளம் நனி சொட்டச் சொட்ட அவற்றை செய்யுட்களாக வடித்துள்ளார். ஓசை நயம் ததும்புவன வாய் அவற்றைக் கவிதை உருவில் அளித்துள்ளார். சந்தர்ப்பத்துக்

கும் சூழலுக்கும் ஏற்ப அவற்றைப் பல் சுவையும் வழிந்தோடுவன வாகப் பா வடிவில் தீட்டியுள்ளார். சுருங்கக்கூறின் தமிழ் மரபைப் பேணும் அதே நேரத்தில் இஸ்லாத்துக்கு முற்றிலும் முரணாகாத வகையில் நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர் களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைத் தத்ரூபமாக வருணிப் பதில் உமறுப்புலவர் மாபெரும் வெற்றி ஈட்டி உள்ளார் எனக் கூறின் அது மிகையாகாது.

ஒரு காப்பியத்தில் அதன் ஆசிரியர் தமது கூற்றை வலியுறுத்தப் பிற இலக்கியங்களிலிருந்து சில பொன்மொழிகளைப் பயன்படுத்து வதுண்டு. அத்தகைய பிரயோகம் அந்த இலக்கியங்களில் அவ்வா சிரியருக்கு இருந்த ஈடுபாட்டைக் காட்டுவதோடு அவ்வாறு பயன் படுத்துவதனால் அவருடைய காப்பியமும் மெருகூட்டப்படுகிறது என்பதும் காட்டப்படுவது புலனாம். வெவ்வேறு காலங்களில் தோன்றிய பல்வேறு புலவர்கள் இத்தகைய உத்தியைக் கையாண்டு பெரு வெற்றியைக் கண்டுள்ளனர். சீறாப்புராணத்திலும் பிற இலக்கியங்களில் உள்ள கருத்துக்கள் கூட்டியும் குறைத்தும் பெருக்கியும் சுருக்கியும் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம். சீறாப்புராண ஆசிரியர் தமது கருத்தோடு ஒத்துவரும் கருத்துக் களைத் திருக்குறளிலிருந்து எடுத்து ஆண்டிருப்பதைக் காணலாம். திருக்குறட் கருத்துக்களை மேற்கோள்காட்டி இருப்பதையும் காணலாம்.

நபிகள் பெருமானார் (சல்) அவர்களும் அவர்தம் கூட்டத் தவரும் ஒரு வழியிலே சென்று கொண்டிருந்தார்கள். இரவு வந்ததும் ஓரிடத்தில் தங்கினார்கள். அங்கே கள்வர் கூட்ட மொன்று வியாபாரிகளை வழிமறித்துக் கொள்ளையிட உள்ளது என்பதை அறிந்தார்கள். ஆனால், இரவோடு இரவாக அங்கே ஓர் ஆறு பாய்ந்து ஓடியது; அந்த ஆற்றின் மறுகரையிலே கள்ளர் அகப் பட்டுவிட்டனர். ஆற்றைக் கடந்து வியாபாரிகளைச் சூறையாடும் அவர்கள்தம் நோக்கம் கைகூடவில்லை. இத்தகைய பல இன்னல் களுக்கு அவ்வியாபாரக் கூட்டம் ஆளாகியது. இந்த இன்னல் களிலிருந்து தம்மைக் காப்பாற்றியது பெருமானார் (சல்)அவர்களே என்றனர் அங்குள்ளோருள் பலர். ஆனால் பெருமானாரின் பகை வனான அபூஜகிலோ இந்த இன்னல்கள் அனைத்துக்கும் காரணம் முகம்மது நபி அவர்களே என்றான். இதனைப் பொறுக்கமுடியாது அபூபக்கர் (றலி) அவர்கள் அதனைக் கண்டித்தார்கள். ஆனால்

முகம்மது நபி (சல்) அவர்கள் ஒன்றும் கேளாது வழி நடந்தார்கள். இவ்வாறு அபூஜகில் கூற்றினைப் பொருட்படுத்தாது நடந்தார்கள் தீய்ந்து கரிந்து கறுப்புண்ட நெஞ்சை உடையவர்கள் கூறிய கூற்றைக்கல்வி கேள்விகளிற் சிறந்தவர்கள் காதுக்கு எடுக்க மாட்டார்கள். அதனைப் பொறுத்துக் கொள்வர். இந்தப் பேருண்மையையே பெருமானார் கடைப்பிடித்தார்கள் என உமறுப்புலவர் இவ்வாறு பாடி உள்ளார்.

> கரிந்த புன்மனச் சிறியவர் கழறிய கொடுஞ்சொல்
> தெரிந்த மேலவர் செவிக்கிடார்........
>
> (கள்வரை நதிமறித்த படலம்:12)

இங்கே திருக்குறள் கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

> இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயஞ் செய்து விடல். (314)

என்னும் குறளில் உள்ள கருத்துக்களை உமறுப்புலவர் பயன்படுத்தி உள்ளார் என்பது புலனாகின்றது.

உகுதுப்போர் நடைபெற இருந்த சமயம் அது. பகைவரைக் கண்ட முஸ்லிம்கள் தமது படை அளவிற் குறைந்தது என உணர்ந்தனர். வெளியில் அதனைச் சொல்லவில்லை. அம்முஸ்லிம் மக்களின் உள்ளத்திலே ஏற்பட்ட இந்த ஐயத்தை உடனே உணர்ந்து விட்டார்கள் நபிகள் நாயகம் (சல்) அவர்கள். அந்தச் சூழ்நிலையே இப்பாடலில் இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது.

> அடுத்தவை காட்டுகின்ற பளிங்குபோ லகத்தினூடு
> தொடுத்திடு நலித லியாவு முகத்தினாற் றோன்றக் கண்டு
>
> (உகுதுப் படலம்: 113)

அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பர். தன்னையடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்குபோல் ஒருவன் நெஞ்சத்து மிக்கதனை அவன் முகம் தானே கொண்டு காட்டும். இதனைத் திருவள்ளுவர்,

> அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம். (706)

எனக் கூறி உள்ளார்.

முஸ்லிம் மக்கள் கலிமா என்ற உடன் அது இஸ்லாத்தின் மூல மந்திரத்தைக் குறிக்கும் ஒரு சொல் எனச்சொல்வர். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் மலிந்து காணப்படும் அறபுச் சொற்களுள் கலிமாவும் ஒன்று. கலிமா என்று ஒரு தமிழ் சொற்றொடர் உண்டு என்பது பலருக்குத் தெரியாது. அச்சொற்றொடர் கலி, மா என இரண்டு சொற்களைக் கொண்டது. கலி என்றால் வேகம். மா என்றால் குதிரை. ஆக கலிமா என்பது வேகமாகச் செல்லும் குதிரையைக் குறித்தது. அகநானூற்றிலே வேகமாகச் செல்லும் குதிரையைக் குறிக்கக் கலிமா என்னும் சொற்றொடர் இவ்வாறு உபயோகிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

நிரைபறை அன்னத் தன்ன விரைபரிப்
புல்லுளைக் கலிமா ...... ...... (மணிமிடைப் பவளம்:234)

'நிரல்பட வானத்திலே பறக்கின்ற அன்னங்களைப் போன்று விரைகிற செலவினை உடைய நமது புல்லிய பிடரிமயிரை உடைய குதிரை' என்பது இதன் பொருளாகும்.

கல்லாதனாரின் திரிகடுகத்திலும் இச்சொற்றொடர்ப் பிரயோகத்தைக் காணலாம். இங்கும் குதிரை என்ற பொருளிலே கலிமா என்னும் சொற்றொடர் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

கால்தூயுமை யில்லாக் கலிமாவும் ......... (46)

கலிமா என்னும் அறபுச் சொல்லைப் பல இடங்களில் பயன் படுத்தி உள்ள உமறுப்புலவர் ஓர் இடத்தில் கலிமா என்னும் தமிழ்ச்சொல்லையும் பயன்படுத்தி உள்ளார். நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களும் அபூபக்கர் (றலி) அவர்களும் மதீனா வுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்பொழுது குதிரையில் யாரோ ஒருவர் அவர்களைப் பின்தொடர்ந்து வருவதை அபூபக்கர் (றலி) அவர்கள் கண்டார்கள். அந்த குதிரையைத்தான் உமறுப் புலவரவர்கள் வருணித்துள்ளார்கள். ஒருவன் குதிரையில் வருகிறான். கசையினால் குதிரையின் விலாப்புறத்தில் அடிக்கிறான். பூமி அதிர்ச்சி அடையும்படி அதனை ஓட வைக்கி றான். வேகமாக வருகிறான். கையிலே பிடித்துச் சுழற்றி வரும் வேலாயுதத்தையும் உடையவனாக மிக நெருங்கி வருகிறான். அவன் ஏறி வரும் குதிரையையே உமறுப்புலவர் கலிமா என இவ்வாறு குறிப்பிட்டு வருணித்துள்ளார்.

கசைபு றம்புடைத் திடப்புவி யதிர்ந்திடக் கலிமா
விசையும் வேகமுங் கையினிற் சுழற்றிய வேலும்
நசைவி டாதுகொண் டிவணடுத் தனன்.........

(சுறாக்கத் தொடர்ந்த படலம்:23)

சீறாப்புராணத்தில் இடம் பெற்றுள்ள சில விருத்தப்பாக்கள் சிறப்பியல்புகளை உடையனவாய்த் திகழ்கின்றன. ஒரு செய்யுளில் உள்ள ஒன்றைத் தவிர மற்றெல்லாச் சொற்களும் குற்றெழுத்துக் களாகவே உள்ளன.

படர்ந்து கொன்றனர் சிலர்சிலர் இழிந்துவெம் பரியை
நடந்து கொன்றனர் சிலர்சிலர் நடையுமற் றொழிந்து
கடந்தி ருந்துகொன் றனர்சிலர் சிலர்மனம் கனன்று
கிடந்து கொன்றனர் சிலர்சிலர் வீரர்கள் கெழுமி.

(பதுறுப்படலம்:201)

இரண்டு சீர்கள் மாத்திரமே நெட்டெழுத்துக்களைக் கொண்டனவாகவும் ஏனையவை குற்றெழுத்துச் சீர்களாகவும் அமைந்துள்ள பாடல் இது.

கவரி யும்பல கவிகை யும்பல
சிவிகை யும்பல சிவிறி யும்பல
துவட ருங்கொடி பலவுந் தோன்றலால்
குவித ரும்படி கொள்ளை கொண்டனர்

(உகுதுப் படலம்:210)

குற்றெழுத்துக்களை மாத்திரமே கொண்ட ஒரு பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

செரும டிந்தன சிரம டிந்தன
கருதி யெங்கணுங் கழுது துன்றின
பருதி மண்டல மனைய பண்பெனக்
குருதி மண்டின குடர்மி தந்தன

(உகுதுப் படலம்: 203)

# திருமணக்காட்சி

மறுமை வாழ்வைப் பற்றியும் சிறப்பாகச் சுவர்க்கலோக வாழ்வைப் பற்றியும் பல புதுமையான கருத்துக்கள் முஸ்லிம் மக்களிடையே நிலவுகின்றன. அத்தகைய நம்பிக்கைகள் பலவற்றை தமிழகத்திலும் இலங்கையிலும் வாழும் முஸ்லிம் மக்களிடையே பரவலாக இருக்கக் காணலாம். அத்தகைய புதுமையான கருத்துக்களுள் ஒன்று நியாயத் தீர்ப்பு நாளைத் தொடர்ந்து நடக்க இருக்கும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றியது. அப்பொழுது பிர்' அவ்னின் தாயாரான ஆஸியா (றலி) அவர்களும் ஈசா நபி (அலை) அவர்களின் தாயாரான மரியம் (அலை) அவர்களும் நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களுக்குத் திருமணம் செய்து 'வைக்கப்படுவர். அதன்பின்னர் அவர்கள் மஹ்மூத் என்னும் பெயரை உடைய யானையின்மீது அமர்ந்தவர்களாய்ச் சுவர்க்கத்தின் தெருக்களின் ஊடாக ஊர்வலமாகப் பவனிவருவதாகக் கருதப்படுவதே அத்தகைய மறுமை நாள் நிகழ்ச்சியாகும். இது முஸ்லிம் மக்களிடையே நிலவும் வெறும் நம்பிக்கை மாத்திரமே என்று கூறி விட முடியாது. இதற்கான சான்றுகள் இஸ்லாமியக் கிரந்தங்களிலே இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

காப்பிய இலக்கணங்கள் அமையப் பெற்றது திருமணக் காட்சி, கடவுள் வாழ்த்து, நாட்டுப்படலம், நகரப்படலம் உட்பட முப்பத்தொரு படலங்களைக் கொண்டது திருமணக் காட்சி. இங்கு இடம்பெற்றுள்ள செய்யுட்களின் மொத்த எண்ணிக்கை தொளாயிரத்து நாற்பத்தேழாகும். முப்பத்தேழு பாடல்களைக் கொண்ட கடவுள் வாழ்த்துப் படலத்தில் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களிலே பின் பற்றப்பட்டுள்ள கடவுள் வாழ்த்து பேணப்பட்டுள்ளது.

திருமணக்காட்சி என்னும் காப்பியத்தின் ஆசிரியர் சேகாதி நயினான் என்பவரே. இவர் வகுதையைச் சேர்ந்தவர். செய்கு அப்துல் காதிறு நயினான் என்பதே சேகாதி நயினான் எனத் திரிந்திருத்தல் வேண்டும். இச்செய்தியை ஒரு பாடலில் இவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார் திருமணக்காட்சி ஆசிரியர்.

வள்ளனபி திருமணக் காட்சியை யுயர்ந்தோர் நவிலுமுறை
வழிவ ழாமல்
வெள்ளமக ராலயஞ்சூழ் மேதினியிற் செழுந்தமிழால்
விளக்கஞ் செய்தான்
தள்ளருஞ்சீர் வகுதையபு துல்காதிர் நயினார்சொற் றனையன் வாசக்
கள்ளவிழ்குங் குமப்புயன்சே காதிநயி னான்புகழ்மேற்
கருதினானே.

(கடவுள் வாழ்த்து: 29)

உமறுப்புலவர் உயிர்நீத்து ஏழு வருடங்களில் திருமணக் காட்சி இயற்றப்பட்டுள்ளது. உமறுப்புலவர் தமது சீறாப்புராணத்தில் இடம்பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப்படலத்தில் நாகூர் ஆண்டகை சாகுல் ஹமீது (றஹ்) அவர்களைக் குறிப்பிடவில்லை. ஆனால் திருமணக்காட்சி என்னும் காப்பியத்தில் நாகூர் ஆண்டகை ஒரு பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளார். தமக்குக் கருப் பொருளாய் அமைந்த செய்தியை ஆசிரியர் ஒரு பாடலில் குறிப் பிட்டுள்ளார். தீன் என்னும் இஸ்லாம் மார்க்கத்தை உலகில் போதித்தவர் முகம்மது நபி (சல்) அவர்கள். அங்ஙனம் நிறுவிய தீன் பயிரை-தீன் என்னும் பைங்கூழை வாடிப்போகாமல் பாதுகாத் தார்கள். கார்மேகம் என்னும் வேதச் சொற்களால் தீன் என்னும் பைங்கூழை வாடாமல் வழி வகுத்தார்கள். இறைவனால் அளிக்கப் பட்ட வேதத்தைப் பாரினில் வளர்த்தார்கள். மா பதத்தவராயும் அழகிய புயத்தவராயும் மணி போன்ற பிரகாசத்தை உடையவ ராயும் விளங்கிய முகம்மது நபி (சல்) அவர்கள் சுவர்க்க லோகத்திலே நிகழ்த்திக் காட்டும் திருமணக்காட்சியை விவரிக்கப் போவதாக ஆசிரியர் ஒரு பாடலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆரணத்தாற் சொற்சோனை கொடுதீன் பைங்கழ்வாடா
தாகச் சீலப்
பூரணத்தாற் றனிமுதல்வன் றன்பாங்க ரெனவிடுக்கப்
புவிசேர் வால

வாரணத்தார் மாரதத்தார் அணியுத்தா ரணியொளியே
வளர்பொன் னூரில்
காரணத்தார் பொருந்துதிரு மணக்காட்சி யுரைத்தவழி
கருத லுற்றாம்.
(கடவுள் வாழ்த்து:21)

கடவுள் வாழ்த்தில் உள்ள ஆறு பாடல்களில்(30-35)திருமணக் காட்சி இயற்றுதற்குப் பொருளுதவி புரிந்த கொடை வள்ளல் புகழப்பட்டுள்ளார். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய ஏனைய காப்பியங்களில் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறைப்படி கொடைவள்ளல் தம் புகழ் காப்பியம் முழுவதிலும் குறிப்பிடப்படு வதைக் காண்கிறோம். ஆனால் திருமணக் காட்சி என்னும் காப்பியத்திலோவெனின் கொடை வள்ளலின் புகழ் கடவுள் வாழ்த்திலேயே பாடி முடிக்கப்பட்டுள்ளது. நூலில் வேறு எங்கும் அத்தகைய பாடல்களைக் காணமுடியாது. திருமணக் காட்சி என்னும் காப்பியத்துக்குக் கொடை நாயகரால் அமைந்தவர் லெப்பை நயினார் என்பவரே. திருமணக் காட்சி என்னும் காப்பியம் இயற்றப்பட்டு இருபத்துமூன்று ஹிஜ்றி ஆண்டுகளுக்குப் பின்னர் அரங்கேற்றப்பட்ட பனி அகுமது மரைக்காயரின் சீறாப் புராணம் ஹிஜ்றத்துக் காண்டம் (சின்னசீறா) என்னும் காப்பியத் துக்கும் கொடைவள்ளலாகத் திகழ்ந்தவர் இதே லப்பை நயினான் அவர்களே யாவார். வாலிபராக இருக்கும்பொழுது திருமணக் காட்சி என்னும் காப்பியத்துக்கும். பிற்காலத்தில் சின்னசீறா என்னும் காப்பியத்துக்கும் லெப்பை நயினான் அவர்கள் கொடை நாயகராய் இருந்திருத்தல்வேண்டும். செய்கு சதக்கத் துல்லா ஆலிம் அப்பா அவர்கள் ஹிஜ்றி 1040 (கி. பி. 1630) ஆம் ஆண்டில் பிறந்தார்கள். அந்தக் கால கட்டத்தில் ஔரங்கசீப் மன்னர் இந்தியாவை ஆட்சி புரிந்து வந்தார். நாகை நாயகர் சாஹுல் கமீது (றஹ்) அவர்கள் இவ்வுலகை நீத்து 60 வருடங்கள் கழிந்த பின்னரே இது நிகழ்ந்தது. தமிழகத்திலே ஒப்பாரும் மிக்காரும் இல்லாப் பெருந்தகையாகவும் ஆத்ம ஞானியாகவும் விளங்கிய செய்கு சதக்கத்துல்லாஹ் (றஹ்) அவர்கள் ஹிஜ்றி 1115 ஆம் ஆண்டு சபர் மாதம் 5 ஆம் பிறை அன்று (கி. பி. 1703 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை) இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். செய்கு சதக்கத்துல்லா ஆலிம் அப்பா அவர்களுக்கு ஒரு புத்திரரும் ஐந்து புத்திரிகளும் இருந்தனர்.

புத்திரரின் பெயர் முகம்மது லெப்பை ஆலிம் என்பது. ஹதீஜா, உம்மா, ஆமினா உம்மா, சைனபு உம்மா, உம்முஹானி உம்மா சாறா உம்மா என்பவர்கள் அவர்களுடைய புத்திரிகளாவர். அவர்களுள் இளையவரான சாறா உம்மா என்பவருக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தனர். ஒருமுறை இவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று சீதக்காதி அவர்கள் சேதுபதி மகாராஜாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். செய்யிது அப்துல் காதிர் மரைக்காயர் என வழங்கப்பெற்ற கொடை வள்ளல் சீதக்காதி அவர்கள் மறைவுக்குப்பின்னர் மேற் குறிப்பிட்ட இருவருள் மூத்தவரான பெரிய மரைக்காயர் என வழங்கப்பெற்ற லெப்பை நயினா மரைக்காயரை அழைத்து அவரைத்தமது அமைச்சராகச் சேர்த்துக் கொண்டார்கள் சேதுபதி மகாராஜா அவர்கள். சின்ன மரைக்காயர் என்று வழங்கப் பெற்ற அப்துல் காதிர் ஆலிம் புலவர் அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். பெரிய மரைக்காயர் என அழைக்கப்பெற்ற லெப்பை நயினார் அவர்களே திருமணக் காட்சி என்னும் காப்பியத்துக்குக்கொடை நாயகராய் விளங்கினார். அவருடைய பெயரைக் குறிப்பிடாது அவருடைய பண்புகளை மாத்திரம் சேகாதி நயினாப்புலவர் அவர்கள் இவ்வாறு பாடியுள்ளார்.

வேதவித்தாம் நபியிறசூல் திருமணக்காட் சியையுலகில்
விளக்கஞ் செய்ய
பூதலத்திற் பொன்றாது புகழெனச்செந் தேன்மழைபோற்
பொழிந்தான் றூய
மாதவத்தார் செறிகாயற் பதியதிப னிதியதிபன் வளங் குலாவு
நீதமுற்ற வுபயகுலோத் துங்கன் அறி ஞோர்புகழ்நிருபன் றானே
(கடவுள் வாழ்த்து:30)

மற்றொரு பாடலில் லெப்பை நயினார் என்பவர் செய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களின் பேரர் என்றும், செய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்கள் செய்கு சுலையுமான் அவர்களின் புதல்வர் என்றும், இருவரும் காயலைச் சேர்ந்தவர்கள் என்றும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலகெலா மொருசுடர்போ லோங்குகல்வி யெனுங்கடலா
யுற்றே பார்மேல்
அலகிலாப் புகழிறசூல் தீன்பயிரைத் தழைப்பிக்கும்
அண்ணல் காயல்

இலகுபொறி யாழியெனு மாலிம்சுலை மான்லெப்பை
ஈன்ற பாலர்
குலபதியா லீம்சதக்கத் துல்லாதம் பேரரெனுங்
கொற்ற வேந்தே. (கடவுள் வாழ்த்து:31)

இதுவரை லெப்பைநயினார் அவர்களின் தாய்வழி மூதாதை யரைக் குறிப்பிட்ட ஆசிரியர் வேறொரு பாடலில் கொடை நாயகரின் தந்தை வழி மூதாதையரையும் குறிப்பிட்டுள்ளார். லெப்பை நயினார் அவர்களின் தந்தையார் பெயர் அபூபக்கர் லெப்பை என்றும், அபூபக்கர் லெப்பை என்பவர் தந்தையார் பெயர் மாமு நயினார் என்றும், அவர் எல்லா நகரங்களிலும் பேரும் புகழும் பெற்று விளங்கும் வர்த்தக சிரோமணியார் என்றும், காயல் நகரைச் சேர்ந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அந்நகர்வாழ் வுறுங்குரிசில் வர்த்தகர்சி ரோமணியார்
அலைபாய்ச் சீர்த்தி
எந்நகரும் பேர்விளங்கு மாமுநயி னாவரத்தால்
ஈன்ற பாலர்
மன்னவரை யுலாம்வேட்டு மபூக்கர் லெப்பை செல்வர்
வளர்பொன் மேரு
இந்நகரைத் தனிபுரக்கும் லெப்பைநயி னாவென்னும்
இசைகொள் வேந்தே.
(கடவுள் வாழ்த்து:32)

அப்துல் காதர் நயினா லெப்பை அவர்கள் ஓர் ஆலிமாகவும் (அறிஞராகவும்) ஒரு புலவராகவும் திகழ்ந்தவர்கள். அறபு மொழியிலும் தமிழ் மொழியிலும் பல பிரபந்தங்களை இயற்றி உள்ளவர்கள். நாகூர் ஆண்டகை அவர்கள் பேரில் பல பாடல் களை இயற்றியவர்கள். அடைக்கலமாலை என்னும் சிறந்த ஒரு நூலின் ஆசிரியர் ஆக இருந்தவர்கள். அத்தகைய பெரியாருடைய மூத்த சகோதரர் லெப்பை நயினான் எனப் படுபவர் என ஒரு செய்யுளில் ஆசிரியர் இவ்வாறு வருணித்துள்ளார்.

எத்தமிழுந் தெரிந்தமையாற் கற்றோர்கள் வரிசையறி
வியல்பாய் வந்த
வித்தகரா கியவப்துல் காதிர்நயி னாலெப்பை
வேந்தர் முன்னோன்
சத்தமுகி லென்னவிந்த தமிழ்க்காதைக்கு அளவறுசீர்
தந்தான் செங்கை
நத்தனைய கொடையிலப்பை நயினானென் றோங்குமொரு
நாம வேந்தே. (கடவுள் வாழ்த்து:33)

பொதுவாக ஒரு காப்பியத்தில் இடம்பெறும் நாட்டு நகரப் படலங்களில் அக்காப்பியத்தின் பாட்டுடைத் தலைவரின் வாழ்க்கைக்குக் களனாக அமைந்த நாடும் நகரமுமே முறையே வருணிக்கப்படுவதைக் காணலாம். உமறுப்புலவரின் சீறாப் புராணத்தில் அதன் பாட்டுடைத்தலைவரான நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாழ்க்கைக்குக் களனாக அமைந்த அறபுநாடு அதன் நாட்டுப் படலத்திலும் மக்கமா நகரம் அதன் நகரப்படலத்திலும் வருணிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில், மறுமைநாளில் நியாயத் தீர்ப்பு நாளுக்குப் பின்னர் நடைபெற இருக்கும் பெருமானார் (சல்) அவர்களின் திருமண ஊர்வலத்தை வருணிக்கும் திருமணக் காட்சி என்னும் காப்பியத்தில்நிலைக்களனாக அமைவது சுவர்க்க லோகமாகும். காப்பியங்களில் அமையும் முறைமையின் அடிப்படையில் பார்க்கும் பொழுது திருமணக் காட்சியின் நாட்டு நகரப் படலங்களில் முறையே சுவர்க்க லோகத்தில் உள்ள நாட்டு நகர வருணனைகள் இடம்பெற்றிருத்தல் வேண்டும் என எதிர் பார்ப்பது இயற்கையே. நாடு நகர வேறுபாடுகள் அங்கு இல்லையாதலால் அம்முறைமை இக் காப்பியத்தில் பின்பற்றப்படவில்லை எனலாம். நபிகள் நாயகம் (சல்) அவர்களின் சுவன பதித் திருமண ஊர்வலம் இக்காப்பியத்தில் வருணிக்கப்படுவதால் அண்ணல் அவர்கள் பிறந்து வாழ்ந்த அறபு நாடும் மக்க மாநகரும் இங்கு நாட்டுப்படலத்திலும் நகரப்படலத்திலும் விவரிக்கப்பட்டுள்ளன.

காப்பியங்களில் அமையும் சிறப்பியல்புகளில் ஒன்று பெண்களின் வருணனையே. பெண்களைக் கேசதிபாதமாக அல்லது பாதாதி கேசமாக வருணிப்பது காப்பிய ஆசிரியர் பின்பற்றும் கவி மரபாகும். கேசாதிபாதமாக வருணிப்பதையே சிறப்பு எனக் கொள்வர் கவிஞர். எனவேதான் தமது காப்பியங்களில் வரும் பெண்களைக் கேசாதி பாதமாக வருணிக்க முற்படுவர் கவிஞர். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் பாட்டுடைத் தலைவருடன் நெருங்கிய தொடர்புடைய பெண்களைக் கேசாதி பாதமாகவோ பாதாதிகேசமாகவோ வருணிப்பதைத் தவிர்க்கவே முஸ்லிம் கவிஞர்கள் விரும்புவர். அத்தகைய சிறப்பியல்பினை இடம்பெறச் செய்வதற்காக முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் பெண் பாத்திரங்களைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையில் படைத்துக்கொள்வர். சீறாப்புராணத்தில் இடம் பெற்றுள்ள தசைக் கட்டியைப் பெண் உருவாக்கிய படலத்தை இதற்கான தகுந்த எடுத்துக்காட்டாகச் சுட்டலாம். சேகாதி நயினாப்

புலவரும் இதேபோன்ற ஓர் உத்தியைத் தமது திருமணக் காட்சி என்னும் காப்பியத்தில் பயன் படுத்தி இருப்பதைக் காணலாம். திருமணக் காட்சியில் பாட்டுடைத் தலைவர் திருமணம் புரியும் இரு பெண்மணிகளைப் பாதாதி கேசமாகவோ கேசாதிபாத மாகவோ வருணிப்பது நன்றன்று என நினைத்திருக்கலாம். அதன் காரணமாகச் சுவனத்து அழகிகளான ஹூறுல் ஈன்களை வருணிக்க முற்பட்டுள்ளார் கவிஞர்.

ஹூறுல் ஈன்கள் சிறப்புப் படலம் அத்தகைய ஹூறுல் ஈன்களை வருணிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்குதான் சேகாதி நயினாப் புலவர் அவர்கள் ஹூறுல் ஈன்களைக் கேசாதிபாதமாக வருணித்துள்ளமையைக்காணலாம். முப்பத்திரண்டு பாடல்களில் ஹூறுல் ஈன்களின் சிறப்பைப் பாடியுள்ள திருமணக் காட்சி ஆசிரியர் ஹூறுல் ஈன்களின் கேசாதி பாத வருணனையை இருபது செய்யுட்களில் அமைத்து நயம்பெறப் பாடியுள்ளார்.

சில அறபுக்கல்வி நிலையங்களில் பயின்று பட்டம்பெற்ற வர்கள் தத்தம் பட்டங்களைச் சூடிக்கொள்வதற்கு முன்னர்த் திருமண ஊர்வலம் பற்றி ஓர் உரை நிகழ்த்தல் வேண்டும். அவ்வுரை திருப்திகரமாய் அமையின் அத்தகையோர் மௌலவி என்னும் அத்தகைய பட்டங்களைச் சூட்டிக் கொள்வதற்குத் தகுதி உடையோர் எனக் கருதப்படுவர். தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் இத்தகைய நம்பிக்கை நிலவுவதைக் காணலாம். திருமணக் காட்சி என்னும் காப்பியத்தின் கருப் பொருளுடன் இத்தகைய ஒரு பழக்கம் நெருங்கி இருப்பதைக் காணலாம்.

கருப்பொருளைப் பொறுத்தவரையில் திருமணக்காட்சி தனிச் சிறப்புப் பொருந்தியது எனலாம். எவரும் அறியாத எவராலும் அறிய முடியாத எதிர்காலத்தில் நிகழும் என எதிர்பார்க்கப்படும் ஒரு நிகழ்ச்சியே திருமணக் காட்சிக்குக் கருப்பொருளாக அமைந் திருப்பது தெற்றெனப் புலனாகின்றது. இத்தகைய கருப்பொரு ளைக் கொண்ட காப்பியம் தோன்றுவது அருமையிலும் அருமை யாகும். ஆனால் சேகாதி நயினான் புலவர் அவர்கள் தாம் மேற் கொண்ட பவனியைக் கற்பனை நயம் சிறந்து விளங்கச் செவ்வனே நிறைவேற்றி உள்ளார் என்றே கூறலாம்.

# சின்ன சீறா

உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம் முழுமைத்துவம் பெறவில்லை. முகம்மது (சல்) அவர்களின் வாழ்க்கை அங்கு முழுமையாக விவரிக்கப்படவில்லை. இது ஒரு பெரும் குறை யாகவே இருந்தது. இந்தக் குறை நிறைவு செய்யப்பட வேண்டிய தொன்றாகக் கருதப்பட்டது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் கழிந்தபின்னரே இக்குறையை நிரப்பும் பணி வெற்றி அளித் துள்ளது. இந்தக் குறையை நிறைவு செய்யவே சீறாப்புராணம்-ஹிஜ்றத்துக் காண்டம் என்னும் நூல் தோன்றியது. இச் சீறாப் புராணத்தின் முதற்பதிப்பின் பாயிரத்தில் இக்குறை இவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

எல்லாம் வல்ல இறைவன் தூதாய்
நல்லார் உலகில் நண்ணிய நபியாம்
அகுமது நயினார் அற்புதச் சரிதையை
மிகுபுகழ்ச் செந்தமிழ் விருத்தச் செய்யுளால்
எத்தகை யோரும் இன்புறப் புலவருள்
உத்தம ராகிய உமறுப் புலவர்
காண்டமோர் மூன்றெனக் கணித்தனர் மூன்றாம்
காண்டச் சரிதம் கடைவற முற்றாக்
குறையை அறிந்தக் குறைதவிர்த் திடவே

இந்தக் குறையை நிவர்த்தி செய்ய முன் வந்தார் பனீ அகுமது மரைக்காயர் புலவர். அவர் தம்மை அறிமுகம் செய்யும் பாயிரப் பாடலில் தம்மை 'அகுமது' என்று மாத்திரமே குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அவர் தம் பெயர் குறிப்பிடப்பட்ட பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

சிலையுமான் நிலவும் ஏத்தும் திருநபி சரிதை காயல்
சுலையுமான் லெப்பை ஆலிம் துணைஜமா லுத்தீன் சேய்பொன்
மலையுமான் சுலையு மான்சொல் கல்விமான் அகமதின்சொல்
மிலையுமான் முதியோர் தேரும் தமிழினால் விளம்பினானே

(பாயிரம்: 10)

பனீ அகுமது மரைக்காயர் எனப் பெயர் பெற்ற இக்கவிஞர் தாம் எந்த ஊரைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடப்படவில்லை. தமது மூதாதையரான சுலையுமான் என்பவர் காயல் நகரைச் சேர்ந்தவர் எனச் சுட்டி உள்ளார். காயல் என்பது சிறப்பாக இன்று காயல்பட்டணத்தையே சுட்டுகின்றது. காயல் மாநகரைச் சேர்ந்த சுலையுமான் என்பவரின் புதல்வர் ஜமாலுத்தீன். அவருடைய புதல்வரே பனீ அகுமது மரைக்காயர். இவர் பனீ இசுறாயீல் கூட்டத்தைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது. அதனாலேயே அவருடைய பெயருக்கு முன்னால் 'பனீ' என்னும் சிறப்புச் சொல் வழங்கப் படுகிறது. அவர் நல்லொழுக்கம் உடையவர் என வருணிக்கப்பட்டுள்ளார். அறிவாற்றல் உள்ளவர் அவர். தருமம், தவம், நற்கிரியைகளில் சிறந்து விளங்கியவர். உலகிலே எவ்வாறு வாழவேண்டுமென்று அறிந்திருந்தவர். இல்லற வாழ்வில் இருந்து கொண்டே துறவறமும் மேற்கொண்டவர். கூர்ந்த புத்தி உடையவர். நல்லோர் எல்லோருக்கும் நன்மையே செய்பவர். இவ்விவரங்களையே இந்நூலின் முதலாம் பதிப்பின் பாயிரம் இவ்வாறு தந்துள்ளது.

மறையை அறிந்த மனத்திடை மதித்துப்
பண்புறு நெறிசேர் பனி இசுறாயில்
நண்புறு குலத்தில் நண்ணிய நலத்தார்
தேங்கமழ்ச் சோலைத் திருநகர்க் காயலின்
ஓங்கிய அறிவால் உயர்ஜமா லுத்தீன்
கண்மணி சுலையுமான் களிப்புற அளித்த
அண்ணல் பேரறிவிற்கு அணிஎனத் திகழ்வோர்
தருமமும் தவமும் சாந்தமும் தக்கசற்
கருமமும் ஒழுக்கமும் கருணையும் உடையோர்
உலகியல் வழுவா உயர்நெறி உடையோர்
அலகில் நல்யோகத்து அரும்பொருள் கண்டோர்
கூரிய மதியினர் குணம்கொளும் தகவினர்

சீரியர் யார்க்கும் செம்மையே செய்வோர்
இல்லறத் திருந்தும் இயன்மரை நீர்போல்
சொல்லுறு துறவறத் தொன்மையி னின்றோர்
வண்பனீ அகுமது மரைக்காயர் என்னும்
ஒண்பெயர் உடைய உயர்மொழிப் புலவர்.

பனீ அகுமது மரைக்காயர் தமது சீறாப்புராணத்தை இயற்று வதற்கு முன் ஒரு கனவு கண்டாராம். நபிகள் நாயகம் (சல்) அவர்களைக் கனவில் கண்டார்களாம். அந்தக் கனவிலே தமக்கு இடப்பட்ட கட்டளையைத் தலைமேற்கொண்டே இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இதனையும் முதற்பதிப்பின் பாயிரம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

கண்வளர் காலைக் கனவில் நன்னயினார்
தண்வளர் மேனித் தரிசனம் காட்டித்
தேம்பட மொழிந்த திருவாக் கின்படி
தாம்பட லங்கள் தகவுற அமைத்து
........ ........ ........ ........
தண்டமிழ்ச் செய்யுளில் ததும்ப இயற்றி
நிறைவுறச் செய்தனர் ...... ......

சின்ன சீறாவின் இரண்டு பதிப்புகள் வெளிவந்துள்ளன. முதலாம் பதிப்பு ஹிஜ்றி 1271ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஹிஜ்றி ஆண்டு கி. பி. 1854ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 24 ஆந் தேதி ஆரம்பமாகி 1855 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 12 ஆந் தேதி முடியவடைந்துள்ளது. சின்ன சீறாவின் இரண்டாம் பதிப்பு ஹிஜ்றி 1272 ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஹிஜ்றி 1272 துல்ஹஜ் மாதம்' கி. பி. 1856 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூன்றாந் தேதி தொடங்கி உள்ளது. எனவே சின்னசீறாவின் இரண்டாம் பதிப்பு கி. பி. 1856 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வெளிவந்துள்ளமையைக் காணலாம். இது நள வருடம் ஆவணி மாதம் எனவும் அறியக் கிடக்கிறது. தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்துப் பெரும் பணிபுரிந்த தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் கி. பி. 1855 ஆம் ஆண்டிலே பிறந்துள்ளார்கள். அவர் பதிப்பித்த சீவகசிந்தா மணியின் முதற் பதிப்பு கி. பி. 1887 இலே வெளிவந்துள்ளது.

சேகுனாப் புலவர் அவர்கள் சீறாப்புராணத்தை முதன் முதலில் கி. பி. 1842 ஆம் ஆண்டு பதிப்பித்தார். பழந்தமிழ்

நூலொன்று முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டது கி. பி. 1847இலே யாம். பதிப்பித்தவர் மழவை மகாலிங்க ஐயர் அவர்கள். பதிப் பிக்கப்பட்ட நூல் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க் கினியர் உரை என்பதாகும். ஆறுமுக நாவலர் அவர்களின் திருக் குறள் பதிப்பு கி. பி. 1860 இல் நிகழ்ந்துள்ளது. ஏனைய தமிழ் நூல் பதிப்பாசிரியர்களுள் சிறந்து விளங்கியவர்களுள் பிரதான மானவர்கள் எனக் கருதப்படும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் கி. பி. 1815 இலும் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் கி. பி. 1832இலும் வித்துவசிரோமணி பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் கி. பி. 1856 இலும் பிறந்துள்ளார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. சதாவதானி செய்குத் தம்பி பாவலரும் கி. பி. 1849 இலே பிறந்துள்ளார்கள். இங்ஙனம் பார்க்கும் பொழுது சேகுனாப்புலவர் அவர்களும் உவைசு நயினார்ப்புலவர் அவர்களும் பக்கீர் முகியித்தீன் அவர்களும் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிப்பதில் முன்னோடிகளாய்த் திகழ்ந்துள்ளனர் என்பது புலப் படுகின்றது.

சின்ன சீறா இயற்றப்பட்ட காலத்தைக் குறிப்பிடும் பாயிரச் செய்யுளில் கிசுறத் தோராயிரத் தொரு நூற்றி, நாற்பதோடைந் தில் சாதாரண வருடத்தின் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையைக் கண்டோம். இந்த ஹிஜ்றி ஆண்டைக் குறிக்கும் கி. பி. 1732/33 இல் சாதாரண வருடம் வர முடியாது. பரிதாபி வருடம் தான் இந்த ஆண்டில் வருகிறது. எனவே சீறாப்புராணம் இயற்றப் பட்டது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று சாதாரண வருடத்தில் அன்று. பரிதாபி வருடத்திலேயே எனக் கொள்ளுதல் வேண்டும்.

சின்னசீறா பாடுவதற்குப் பொருளுதவி புரிந்தவர் லப்பை நயினார் என்பவர். இவர் வகுதையைச் சேர்ந்தவர். இவரைப் பற்றிச் சின்னசீறா ஆசிரியர் பாயிரத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். முதற் பாடலில் லெப்பை நயினாரின் தாயார் யார் என்றும் அவருடைய பரம்பரை எது என்றும் முதலில் குறிப்பிட்டுள்ளார். பாடலில் தாயாருடைய பெயர் சுட்டப்படவில்லை. தாயார் புகழ் பெற்ற சதக்கத்துல்லா என்பவரின் புதல்வி என்பதைச் சுட்டி உள்ளார். சதக்கத்துல்லா அப்பா அவர்களின் தந்தையார் சுலையுமான் லெப்பை ஆலிம் அவர்களையும் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்புக்கள் அடங்கிய செய்யுள் வருமாறு:

ஆதிநூல் உபநிடதம் தேர்சுலையு மானிலப்பை
ஆலிஞ் சேய் சொல்
போதறு மெய்ஞ்ஞானச் சதக்கத்துல் லாஆலீம்
புதல்வி பாலன்
சாதிநாய கன்வகுதை இலப்பைநயி னான்இதயத்
தடத்திற் பூத்த
பாததாம ரையிறசூல் புகழ்பாடக் கனகமழை
பரிவில் பெய்தான்

(பாயிரம் 11)

மக்காவிலிருந்து மதீனா வந்தவர் காத்திப். அவர் கள்ளத் தனமாக மக்காக் குறைஷிகளுக்கு ஓர் உளவோலை அனுப்பினார். சிநேக பூர்வமான முறையில் அமைந்திருந்தது அவ்வோலை. தான் மக்காவில் விட்டு வந்த தனது உறவினரைப் பாதுகாக்கும்படி அவர் கேட்டிருந்தார். இந்த ஓலை முஸ்லிம்கள் கையில் சிக்கியது. தான் ஓலை அனுப்பியதை காத்திப் ஒத்துக் கொண்டார். இந்த சந்தர்ப்பத்தில்

'விசுவாசிகளே எனக்கும் உங்களுக்கும்
விரோதியாயிருப்பவர்களை நீங்கள்
நேசர்களாக எடுத்துக் கொண்டு
நேசபான்மையில் (இரகசியமாக
கடிதம் எழுதி) அவர்களிடம் உறவாட
வேண்டாம்........ (60:1)

என்று ஆரம்பிக்கும் திருவசனம் அருளப்பட்டது. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியை விவரித்த பனீஅகுமது மரைக்காயர்ப் புலவர் இத்திரு மறைத் , திருவசனம் அருளப்பட்டதை இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

சேத்த நறவார் மறைபுறுக்கான்
செகத்தில் விளக்கும் நபிதமக்குக்
காத்தபு என்போர் தம்பொருட்டால்
கருதும் சூறத் தொன்று வந்த
வாய்த்த மூமினா னவரே
வணங்காக் குபிறர் தங்களைத்தான்
நீத்தும் ஒருகா ரியங்களிலும்
நிறுத்தல் ஒழியும் நீங்களென்றே
(காத்தபு குறைஷிகளுக்கு உளவோலை
அனுப்பின படலம்:29) (904)

திருக்குர் ஆன் 112 வது அத்தியாயம் குல்ஹுவல்லாஹு 'அஹத்' என ஆரம்பிக்கிறது. குர்ஆனில் உள்ள சின்னஞ்சிறிய அத்தியாயமான இதனை ஓதுவது அல்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை ஓதுவதற்குச் சமமாகும் எனப் பெருமானார் முகம்மது (சல்)அவர்கள் கூறி உள்ளார்கள். இவ்வத்தியாயத்தினை ஓதுவதன் சிறப்பினை பனீ அகுமது மரைக்காயர் தமது சின்ன சீறாவில் குறிப்பிட்டுள்ளார். ஆபியத் என்பவரின் மகன் முஆது என்பவர் மரணமானார் அவருடைய மரணச் சடங்கை நிறைவேற்றுமாறு இறைவன் பணித்தான் என ஜிபுறீல் (அலை) அவர்கள் முகம்மது நபி (சல்) அவர்களுக்கு அறிவித்தார். அதற்கிணங்க அண்ணல் நபி (சல்) அவர்கள் மையத்துத் தொழுகை நடத்தினார்கள். இதனை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

உமிழ்முஆ பியத்தை வேதம் ஓதியே தொழுவித் தாரால்
(தபூக்குப் படலம்: (47) 1436)

நறை மலர்க் கரங்கள் ஏந்தி நபிதுஆச் செய்துவாரித்
தறையினில் இவர்க்கிப் பேறு தரித்ததென் னென்ன உம்பர்க்
கிறையுடன் வினவக் குல்கு வல்லாகு எனும் சூறத்தை
முறை முறை நிதமும் ஓதி முடித்திடும் பேறீ தென்றார் (75)
(1437)

வரலாற்று அடிப்படையில் பெருமானார் (சல்) அவர்களுக்கு இறுதியாக அருளப் பட்ட இறைவாக்கு அல்குர்ஆனின் ஐந்தாம் அத்தியாயம் நான்காம் திருவசனத்தில் அமைந்துள்ளது. அத் திருவசனத்தில் இடம் பெற்றுள்ள அப்பகுதியின் தமிழாக்கம் இவ்வாறு அமைந்துள்ளது.

'நான் உங்களுக்கு உங்களுடைய
மார்க்கத்தை இன்றைய தினம், பரிபூரண
மாக்கி வைத்துவிட்டேன்: உங்களுக்காக
இஸ்லாம் மார்க்கத்தையும் தேர்ந்(தெடுத்)து
(உங்களுக்கு அருட்செய்து) அங்கீகரித்துக்
கொண்டேன்........... (5:4)

இவ்வத்தியாயத்தில் உள்ள முதல் திருவசனத்தை இரண்டு திருவசனங்களாகக் கொண்டு மேற்குறிப்பிட்டவாறு நான்காம் திருவசனத்திலே இக்கூற்று இடம் பெற்றுள்ளது. அதனை ஒரே திருவசனமாகக் கொள்வோர் அது மூன்றாம் திருவசனம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

நபிகள் பெருமானார் (சல்) அவர்கள் தங்களது பிரியா விடை ஹஜ்ஜுப் பயணத்தின் போது அறபா மலையில் தங்கி இருந்து இறுதி சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அச் சொற்பொழிவில் பல விழுமிய கருத்துக்கள் இடம் பெற்றன. அப்பிரசங்கம் முடிவடைய அண்ணல் நபி (சல்) அவர்கள் தங்களது பணி முடிந்து விட்டதா? பணி முழுமைத்துவம் பெற்றுவிட்டதா? எனக் கேட்டார்கள். அச்சந்தர்ப்பத்திலே தான் மேற்கூறிய இறைவசனம் அருளப்பட்டது.

இந்நிகழ்ச்சியைப் பனீ அகுமது மரைக்காயர் புலவர் அவர்கள் நபி (சல்) கச்சிற்குப் போந்த படலத்தில்,

நிலவிய அறபா மலைமிசை ஒட்டை
மீதிருந்து ஒளிநிலாக் கஃபா
புலனுறநோக்கிக் கதிரவன் குடக்கில்
புகுமள வுந்துஆ இரந்தார் (33) (1620)

எனப் பெருமானார் (சல்) அவர்கள் குறை இரங்கினமையையும்

மழைமுகில் கவிகை முகம்மது நபிக்கு
வானவர்க் கரசெனு மணிநல்
இழைதிகழ் புயத்துச் சிபுறயீல் அளித்த
இன்னிசை ஆயத்து.

என இறைவாக்கு அருளப்பட்டமையையும் குறிப்பிட்ட பின்னர் இறை வசனத்தை இவ்வாறு சுட்டியுள்ளார்.

ஆற்றல்சால் புறுக்கான் அதில்வரும் சூறத்து
ஆயத்தின் ஆனசொற் கெல்லாம்
ஈற்றினில் வந்த ஆயத்தில் உங்கள்
தீனைநாம் இற்றையில் நிறைய
ஊற்றமாய் நிரப்பு வித்தனம் எனவும்
உவணைவாழ் வளித்தனம் எனவும்
மாற்றரும் இசுலாம் மார்க்கமும் பொருந்தி
மகிழ்ந்துசம் மதித்தனம் எனவும்
(35) (1622)

ஆதியும் நடுவும் அந்தமும் எவரும்
அறிகொணா தவனரு மறையில்
ஓதினா னென்ன யாவரு மறிய
உயர்புகழ் நபியுரைத் தனர்கேட்டு
(36) (1623)

ஈருள் என்பது ஈரலைக் குறிக்கும். தொடர்ச்சியாக அடுத்து அடுத்து வரும் மூன்று செய்யுள்களில் இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளமையைக் காணலாம். ஈருள் என்பதனை ஈர் உள் எனப் பிரிக்கலாம், இரண்டாக உள்ள ஓர் உறுப்பு என்பதனையே அது, சுட்டும். உடலின் உள் இரண்டாக உள்ள உறுப்பு அது. அதனையே பொதுவழக்கில் ஈரல் என்போம். சங்ககால இலக்கியங் களிலே பயன்படுத்தப்பட்டுள்ளது இச்சொல். இரட்டை இலை போன்று இருப்பதாக வருணிக்கப்பட்டுள்ளது. அகநானூறு ஈருள் என்பதனை இவ்வாறு ஆண்டுள்ளது.

நெய்த் தோய்த் தன்ன நீர்நனை அந்தளிர்
இருவகிர் ஈருளின் ஈரிய துயல்வர (294:7-8)

சின்னசீறாவில் ஈரல் என்னும் சொல்லுக்குப்பதிலாக ஈருள் என்னும் பதம் பயன் படுத்தப்பட்டுள்ளது. ஆட்டினது ஈரலைக் குறிப்பிடவே சின்னசீறாவில் உள்ள மூன்று செய்யுட்களிலும் ஈருள் என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் ஈருள் என்னும் பதத்தை மூன்று இடங்களில் இவ்வாறு ஆண்டுள்ளார்.

மயிர்செறிந்த நெறிமருப்பு முறுக்ககலா வரை ஆட்டை
அறுத்துள் ஈருள்
அயிலவெடுத் தெரிமூட்டிச் சூட்டுகறி செய்மின்
(வேட்டைச்சாரி போந்த படலம்:4) (452)

உரைத்தபடி வருடையறுத் தூணையட்டார் மோதகமும்
சுட்டார் ஈருள்
நிரைத்துநெடும் கோலிடையில் கோலிவெய்ய அழற்கொழுந்தில்
நிறைத்துக் காய்த்தி
(வேட்டைச்சாரி போந்த படலம்:5) (453)

சுட்டுவைத்த ஈருள்தன்னை வாயார வயிறாரத்
துய்த்து மிஞ்சி
மட்டுவைத்த பாத்திரத்தில் பெய்தகறி வளர்வதுகண்டு
அன்பு பூத்தார்.
(வேட்டைச்சாரி போந்த படலம்:6) (454)

உவமை என்னும் சொல் ஓமை என மாற்றப்பட்டு சின்னசீறாவில் இடம் பெற்றுள்ளது. இணைஅற்றவன் என்றும் உவமை இல்லான் என்றும் அல்லாஹ் வருணிக்கப்படுவதுண்டு. சின்ன சீறா ஆசிரியர்

உவமையில்லான் எனக் குறிப்பிடுவதற்குப் பதிலாக ஓமையில்லான் என்னும் பொருளில் 'ஓமையில்' என இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் மக்கள் தத்தம் கருமங்களை முடிக்கும்பொழுது இறைவனை இறைமுசியே முடிப்பர். துஆப் பிரார்த்தனையாக அமைத்துவிடுவர். அறபு மொழியில் சாதாரணமாக ஓதப்படும் அந்த துஆப் பிரார்த்தனை போன்றே சின்னசீறாவின் இறுதிச் செய்யுளும் அமைந்துள்ளது. எல்லோருக்கும் அல்லாஹ் கிருபை செய்வானாக என்னும் பிரார்த்தனையை அங்கு அமைத்துப் பாடியுள்ளார்.

தாயினிற் பரிவாய் மகுசறில் காக்கும்
　　சையது முகம்மது நபிக்கும்
ஏயஆல் அசுகா பிகளவர் தமக்கும்
　　இக்கதைக் குதவிசெய் தவர்க்கும்
தூயசெந் தமிழால் கோவைசெய் தவர்க்கும்
　　சொற்கவி செய்தவர் தமக்கும்
நேயமுற் றெழுதிப்படித்தவர் தமக்கும்
　　நீதிநீ கிருபை செய் ஆமீன்.

(நபி (சல்) உபாத்துப்படலம்:186) (1823)

# இராஜநாயகம்

வரலாற்று அடிப்படையில் பார்க்கும்பொழுது ஐந்தாவது இஸ்லாமியத் தமிழ்க் காப்பியமாகத் திகழ்வது இராஜநாயகம் என்னும் காப்பியம். இச்சொற்றொடர் சுட்டுவது போன்று அரசர்க்கரசராய்த் திகழ்ந்த தனிப்பெருந்தலைவர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றினை இராஜநாயகம் விவரித்துள்ளது. எல்லா நபிமார்கள் என்னும் தீர்க்கதரிசிகளுள்ளும் அரசருக்கரசராய்த் திகழ்ந்தவர் நபி சுலைமான் (அலை) அவர்கள், தாவூது நபி (அலை) அவர்களின் புதல்வர். சுலைமான் நபி (அலை) அவர்கள் அறிவும் ஆற்றலும் மிக்கவராகத் திகழ்ந்தார்கள். பல அதிசயமான நடு நிலைத் தீர்ப்புகள் வழங்கியவர்கள். பறவைகள் எறும்புகள் பூதங்கள் முதலியவற்றுடன் உரையாடும் வல்லமை பெற்றிருந் தவர்கள். காற்றைத் தங்கள் ஆணைக்கு உட்படுத்தக் கூடியவர் களாக வாழ்ந்தவர்கள். அல்லாஹ்விடமிருந்து பல அருட்பாக்கியங் களைப் பெற்றிருந்தவர்கள். தன்னிகரில்லாத் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர்கள். அவர்களுடைய தனிப்பெரும் வாழ்க்கை இராஜநாயகத்தின் கருப்பொருளாக அமைந்துள்ளது.

வாய்ந்தெழிற் சுலையு மானன் னபிவ ரலாறு தன்னை
......... ......... ......... .........
......... ......... ......... காவியமி தற்கே
யேய்ந்திடு பெயரி ராஜ நாயக மென்ப தாமே.

(கடவுள் வாழ்த்து : 25)

எனத் தமது நூலின் பெயரையும் தமது நூலுக்குரிய கருப்பொரு ளாய் அமைந்த பாட்டுடைத் தலைவர் பெயரையும் குறிப்பிட்டுள் ளார்,

ஆசிரியர் தம்மைப் பற்றிக் குறிப்பிடும்போது

ஓரிடத்தில் தமது வண்ணம் இயற்றும் ஆற்றலால் வந்த பெயரினைக் குறிப்பாகச் சுட்டி, தாம் மீசல் என்னும் இடத்தைச் சார்ந்தவர் என்றும் காவியம் இயற்றப்பட்ட பொழுது மதுரையில் வாழ்ந்தார் என்றும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மதுரைவாழ் மீசல் வண்ணக் களஞ்சிய மவுலலுற்றாம்

(கடவுள் வாழ்த்து :26)

இக்காப்பியத்தின் இறுதியில் பதினான்கு சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தமாக அமைந்துள்ள ஒரு செய்யுளில் இந்நூல் இயற்றப் பட்ட காலம் குறிப்பிடப்படுவதோடு இந்நூலின் பரப்பும் குறிப் பிடப்பட்டுள்ளது. நாற்பத்தாறு படலங்களையும் இரண்டாயிரத்து இருநூற்று நாற்பது செய்யுட்களையும் கொண்டுள்ளது என்னும் விவரமும் இவ்வாறு தரப்பட்டுள்ளது.

நரர்முத லுயிர்க ளெவையையும் புரந்த
நபியுல்லா சுலையுமான் வரவு
நானில முழுது மகிழ்வுற விராஜ
நாயக மெனப் பெயர் விளங்க
விரவிய படல நாற்பத்தா றிரண்டா
யிரத்திரு நூற்றுநாற் பானுள்
விருத்தம தாகப் புகன்றனன் மதுரை
மீசல்வண் ணக்களஞ் சியமே.

இராஜநாயகத்தின் கடைசிப் படலமான அரசாட்சிப் படலத்தில் உள்ள கடைசிச் செய்யுள் வாழ்த்துப் பாடலாக அமைந்துள்ளது. அங்கேயும் ஆசிரியரின் பெயரும் அவர் பிறந்த ஊரும் வாழ்ந்த நகரும் இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளதை காணலாம்.

மதிதொடு குடுமி மாட மதுரையோன் வனச வாரங்
கதிர்விரி மீசல் வண்ணக் களஞ்சியங் கவிநூல் வாழி

(அரசாட்சிப் படலம் : 16)

இராஜநாயகம் அரங்கேற்றப்பட்டது கீழக்கரை என்பதை 'வளங்கொள் கீழக் கரையினி லரங்க மாக' (கடவுள் வாழ்த்து :26) எனக் குறிப்பிட்டுள்ள ஆசிரியர் தமக்குப் பொருளுதவி புரிந்த வள்ளல் அப்துல் காதிர் என்பவரை 'வகுதையோன்' (கடவுள் வாழ்த்து:27) எனக் குறிப்பிட்டுள்ளார். இராஜநாயகத்தில் பல இடங்களில் கொடைநாயகர் அப்துல் காதிர் குறிப்பிடப்பட்டுள் ளார். அவருடைய தந்தையார் பெயர் அகுமது நயினான் என்பது,

தராதரப் புயசிங் காரனகுமது நயினான் றந்த
வராதிபன் அப்துல் காதிற் வள்ளல்......

(கடவுள் வாழ்த்து:27)

தமது உடைமைகளை வழங்குபவர் கொடைநாயகர். இத்தகைய பண்பினை மிக்குடையவர் இல்லையென்னாது வழங்கும் பண்பினராதலின் வள்ளல் அப்துல்காதிர் அவர்கள் ஐந்தரு போன்றவர் என வருணிக்கப்பட்டுள்ளார். இதனைப் பஞ்சதரு என்பதே பெருவழக்கு. சுவர்க்கலோகத்துக்குரிய ஐந்து வகையான மரங்களை பஞ்சதரு என்கின்றது சூடாமணி நிகண்டு. அவை தெய்வ மரங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்திரனின் உலகத்தில் உள்ளவை அவை என்கின்றது பிங்கலந்தை நிகண்டு. அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பவை அவ்வைந்து மரங்களுமாம். இந்து மதச் சார்புடைய ஐந்தரு என்னும் சொற்றொடரைக் கொண்ட நாயகரின் கொடைத் திறனை வருணிக்கப் பயன்படுத்தி உள்ளார் இவ்வாசிரியர். பாடலின் அப்பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

தவமுழுது மியற்றியகு மதுநயினா
னீன்றருள்சந் ததியாய் வந்து
சுவமுதவு குணநிறையைந் தருவெனத்தோன்
றியவகுதைத் தோன்ற லானோன்
புவனமுழு தினுங்கீர்த்தி தழைத்த வப்துல்
காதிர்மனப் பொருள தாக

(சுலைமானபி அவதாரப் படலம் : 76)

இங்கே கொடைநாயகரின் சீர்த்தியும் சுட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

புலவர் தமது காப்பியங்களில் பெண்களின் கேசாதிபாத வருணனை ஒரு முக்கியமான அமிசமாக இடம்பெறச் செய்வது கவிமரபாகும். இத்தகைய வருணனையை இராஜநாயகத்திலும் வண்ணக்களஞ்சியப் புலவர் அமைந்துள்ளார். இராஜநாயகம் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள சகுரஜின் கூட்டமீமான் கொண்ட படலத்தில் சகுறு என்னும் ஜின்னின் புதல்வியின் கேசாதிபாத வருணனை இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

ஒரு பாட்டைப் பாடும்பொழுது அந்தப் பாடகரின் முகபாவம் தோற்றப் பொலிவு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது சிறப்பாகக் கவனிக்கப்படுவனவாகும். முன்னோர் இதற்கென இலக்கணம் வகுத்துள்ளனர். இசைமரபு இவ்வாறு வரைவிலக்கணம் கூறுகிறது.

கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்றா பற்றெரிய-வெண்ணிலவை
அள்ளள் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாடல் உணர்.

திருத்தக்கதேவரும் தமது சிந்தாமணியில் காந்தருவதத்தை பாடல் இசைக்கும் பொழுது எவ்வாறு பாடல் மரபினைப் பேணி உள்ளார் என்பதை நன்கு விளக்கி உள்ளார். புருவம் ஏறா; கண்ணும் ஆடா; மடறும் வீங்காது; எயிறும் தோன்றாவகையில் அவள் பாடினாள் என்பதை இவ்வாறு வருணித்துள்ளார்.

கருங்கொடிப் புருவ மேறா கயனெடுங் கண்ணு மாடா
வருங்கடி மிடறும் விம்மா தணிமணி யெயிறுந் தோன்றா
இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடினாளோ
நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று
நைந்தார்

(காந்தருவதத்தையர் இலம்பகம் :166) (658)

பாடல் மரபினை வண்ணக் களஞ்சியப் புலவர் தமது இராஜ நாயகத்தில் குறிப்பிட்டுள்ளார், ஜின்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவ்வாறு சுட்டி உள்ளார். பூதகணங்களுள் ஒரு ஒரு பிரிவினர் அறபு மொழியில் ஜின்கள் என அழைக்கப்படுகின்ற னர். சபபென்னும் நகரத்திலே ஒரு காலத்தில் ஓர் அமைச்சர் இருந்தார். அவர் வேட்டையிலீடுபட்டிருக்கும் பொழுது ஜின்க ளுடன் சேர்ந்து கொண்டார். விருந்தளித்து மகிழ்வித்த ஜின்கள் அவ்வமைச்சரின் வேண்டுகோள்படி ஆடிப்பாடி மகிழ்விக்கத் தலைப்பட்டனர். அவ்வாறு இணங்கியதும் ஜின்கள் தத்தம் இசைக்கருவிகளை ஒன்று சேர்த்தனர். பாடல் பாட வேண்டிய முறைப்படி பாட முற்பட்டனர். இதனையே வண்ணக்களஞ்சியப் புலவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வகுத்தலு மத்த ளங்கை மணிகுழற் றுருத்தி வீணை
தொகுத்துள கருவி யாவுங் கொணர்ந்துதோ கையரின்
மேலாய்
மிகுத்துள வடிவு தோன்ற மெய்யுரு வெடுத்தி ராகம்
பகுத்துள முறைதப் பாமற் பாடின சிலஜின் கீதம்

(பல்கீசு வரலாற்றுப் படலம்:32)

அந்த ஜின்கள் முறைதப்பாமல் எவ்வாறு இசை மரபுக் கியைப் பாடினர் என்பதையும் தெளிவாக்கி உள்ளார் வண்ணக் களஞ்சியப்புலவர். ஜின்கள் பாடும் பொழுது இசை மரபு இவ்வாறு பேணப்பட்டது. அளவுக்கதிகமாக அவை பற்களைக் காட்டவில்லை. கண்களை மூடவில்லை; வாயினைக் கோண லாகக் காட்டிக் கொள்ளவில்லை. தலையையோ உடலையோ அசைக்கவில்லை; மலர்ந்த முகத்தைச் சுருக்கித் தோன்றவில்லை. கழுத்து வீங்கவும் இல்லை. யாழின் ஒலிக்கு இணைய ஜின்கள் பாடின. இக்கருத்துக்களையே வண்ணக்களஞ்சியப் புலவர் இவ்வாறு பாடியுள்ளார்.

நகைமிகத் தெரிவ தின்றி நயனங்கள் மூட லின்றித்
தகுசொல்வாய்க் கோண லின்றித் தலையுடல சைவ தின்றி
விகசித முகங்கூப் பின்றி மிடறு வீங்குவ துமின்றிப்
பகரியா ழொலிக் கடங்க வமைந்துபா டியதன் பின்னர்

(பல்கீசு வரலாற்றுப்படலம்: 33)

இசை ஆசிரியரின் அமைதி கூறவந்த இளங்கோவடிகள் தமது சிலபதிகாரத்தில்.

அசையா மரபின் இசையோன் றானும்

(அரங்கேற்று காதை: 36)

எனக் கூறி முடித்துள்ளார்.

மீனைக் கொத்திச் சாப்பிடும் சிச்சிலிப் பறவை அதன் இரை வரும்வரை எவ்வாறு உடலை அசையாது சிறகை மாத்திரம் அசைத்துக் கொண்டிருக்குமோ, அதே போன்று பாடகனும் உடலை அசையாது கையை ஒரளவு அசைத்துப் பாடலாம். இக் கருத்துக்களையே வண்ணக் களஞ்சியப்புலவர் இவ்வாறு ஒரு பாடலின் முதலிரண்டு அடிகளிலும் அமைத்துப்பாடி உள்ளார்.

சிரல்சிறை யசைவ தன்றித் தேகம தசையா தொப்பாய்
அரியகை அசைய மேனி அசைவன்றிப் பதலை யார்ப்பக்
கரமணி பதலை யார்க்கு முறைப்படி கறங்க வேணு
விரவிய துருத்திச் சத்த விகற்பமி லாதி சைப்ப

(பல்கீசு வரலாற்றுப்பாடல் : 34)

இங்ஙனம் சில ஜின்கள் பாடி ஆடின. அவைகளின் பாடலிலும் ஆடலிலும் எல்லாச் சுவைகளும் அமைந்திருந்தன. ஒன்பது சுவை களும் தோன்றின. நவரசங்களும் எவையெனத் திவாகரம் இவ்வாறு சுட்டும். சிங்காரம், ஆசியம், கருணை, இரௌத்திரம், வீரம், பயம், குற்சை (அருவருப்பு), அற்புதம், சாந்தம் என்று

குறிக்கும் நவரசங்களையுமே அந்த ஜின்கள் பிரதிபலித்தன என்ன வண்ணக்களஞ்சியப் புலவர் இவ்வாறு தமது இராஜ நாயகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கருணைசிங் காரம்வீர நகைபயங் கருத்து நாணல்
பொருவுகம் பீரம் சாந்தம் புதுமையென் றோதுகின்ற
இரதமொன் பதுமே தோன்ற அபிநய வின்பங் காட்டித்
திரனுறப் பாடி யாடல் செய்தன சிறிது ஜின்கள்

(பல்கீசு வரலாற்றுப்படலம்:35)

இந்தப் பாடலில் நவரசங்களும் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு முறை இவ்வாறு அமைந்துள்ளது. கருணை, சிங்காரம், வீரம், நகை (ஆசியம்), பயம், கருத்து நாணல் (குற்சை) கம்பீரம் (இரௌத்திரம்), சாந்தம், புதுமை (அற்புதம்) என்பனவே ஒன்பது சுவைகளும் ஆகும். இப்பாடலில் ரசம் என்பது இரதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

பொதுவாக உலாப் பிரபந்தங்களில் பெண்களின் ஏழு பருவங்கள் வருணிக்கப்படுகின்றன. பாட்டுடைத் தலைவர் உலாவரு தலைப் பார்க்கக் கூடும் பெண்களை வருணிக்கும்பொழுது இங்ஙனம் ஏழு பருவ மடந்தையர்கள் வருணிக்கப்படுவதைக் காணலாம். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களிலும் திருமண ஊர்வலங்கள் கற்பனை நயம் மிக வருணிக்கப்படும்பொழுது பெண்கள் தம்மிடையே ஏழு பருவங்களைச் சார்ந்த மங்கையர்கள் குறிப்பிடப்படுவதைக் காணலாம். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனும் ஏழு பருவத்தினரையும் பதினொரு பாடல்களில் இராஜ நாயகத்தில் வண்ணக்களஞ்சியப்புலவர் வருணித்துள்ளார்.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலே ஆங்காங்கே திருக்குறள் போன்ற நூல்களில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். சுலையுமான் நபி (அலை) அவர்கள் காலத்தில் வேறொரு நாட்டில் ஒரு மன்னன் வாழ்ந்தான். அவனுடைய புதல்வன் ஒருநாள் ஒரு கனவு கண்டான். அதில் அழகிய பெண்ணொருத்தியைக் கண்டான். கண்டு அவள் மீது காதல் கொண்டான். கனவிலேயே அவளை அழைத்தான். அவள் வரவில்லை. அப்புறம் அவளைக் காணவில்லை. இச் சந்தர்ப்பத்திலே காதலர் தம் ஊடலை நினைவுபடுத்தி உள்ளார் வண்ணக்களஞ்சியப்புலவர். காதலர்களிடையே

ஊடல் ஏற்படுவது பின்னர் அவர்தம் காமத்திற்கு இன்பமாய் அமையவே என இவ்வாறு ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

ஊடுதற் காமத்தின்ப மதற்கின்பம்
ஊடலற்றுக்
கூடுதல் என்பார் நீயவ் விதஞ்செயக்
குறித்தா யென்னில்
கோடுடைமுலையி னோர்காற் புல்லின்மேற்
குணங்கல் வேண்டும்
வாடுநுண் ணிடையா யாதை நினைத்துநீ
கரந்தவாறே

(கனவுகண்டு மணஞ் செய்த படலம்:13)

அன்று திருவள்ளுவரும் இதே கருத்தினைக் குறிப்பிட்டுள்ளார். காமநுகர்ச்சிக்கு இன்பமாய் அத்தகையோர் இடையே ஏற்படும் ஊடலே. அங்ஙனம் ஊடுதல் இன்பம் பயக்கும். அவர்கள் இருவரும் கூடி முயங்கும் முயக்கமே அவர்களிருவருக்கும் இன்பம் பயக்கும். இக்கருத்துக்களையே திருவள்ளுவர் இவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார்.

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

(ஊடலுவகை:10 (1330)

தந்தைசொன் மிக்க மந்திரமில்லை என்பது முதுரை. இத்தகைய பல மூதுரைகளை வண்ணக்களஞ்சியப்புலவர் தமது இராஜநாயகத்தில் பயன்படுத்தி உள்ளார். தாவூது நபியின் அறவுரைகளைக் குறிப்பிட முற்பட்ட வண்ணக்களஞ்சியப்புலவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்'

மகவினுக் கினிய தாதை மனத்திலன் பிருத்தித் தேர்ந்து
பகர்திரு வசனம் போலும் பலன்செய்மந் திரமு முண்டோ

(தாவூது நபி உபாத்துப் படலம்:18)

# குத்புநாயகம்

(சேகுனாப்புலவர் இயற்றியது)

முகியித்தீன் அப்துல் காதிறு ஜீலானி (றலி) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பல கவிதை நூல்கள் தமிழில் எழுதப்பட்டன. காப்பியங்கள் இயற்றப்பட்டுள்ளன. சிற்றிலக்கியங்கள் உருவாகி உள்ளன. உரைநடை நூல்கள் தோன்றி உள்ளன. அவற்றுள் முக்கியமான இடத்தைப் பெறுவன காப்பியங்களே. ஆத்மீக ஞானி முகியித்தீன் அப்துல் காதிறு ஜீலானி (றலி) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு தோன்றிய காப்பியங்களுள் முதலாவது எனக் கருதப் படுவது குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணமே. புலவர் நாயகம் என்று வழங்கப்படும் செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்களே இதன் ஆசிரியராவார். முஸ்லிம் பெருவழக்கில் சேகுனாப்புலவர் என அழைக்கப்பட்டார்.

இக்காப்பியத்தின் பெயரைக் கடவுள் வாழ்த்தில் உள்ள ஒரு செய்யுளில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் வாழ்க்கை பற்றிய புராணத்தைக் குத்புநாயகம் எனப் பெயரிட்டதாக இவ்வாறு பாடியுள்ளார் ஆசிரியர்.

இயற்றிய கார ணத்தி னெழிலுறுங் கருத்துப் பற்றி
முயற்றவத் துறைகு லாவு முகியித்தீ னென்னுங் கொண்டல்
பயிற்றுமெய்ப் பாதங் கொண்டோர் பதவிமேல் வரங்கொள் வாரால்
குயிற்றுநற் புராண நாமங் குத்புநா யகமென் றாமே

(கடவுள் வாழ்த்து. 26)

மற்றொரு பாடலில் நூலாசிரியர் தமது பெயரை இவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார். தாம் கபீபு முகம்மது லெப்பை

புதல்வன் என்றும், மானாப்பிள்ளை லெப்பை ஆலிம் தமது தந்தையின் தந்தை என்றும் காயல் நகரிலே வாழ்ந்த மாணிக்க வியாபாரி அவர் என்றும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்,

சீரணி கொண்ட காய றிருநகர் மணிப ரிட்சைப்
பேரணி கொண்ட மானாப் பிள்ளையி லப்பை யாலி
மேரணி கொளும்க பீபு முகம்மது லெப்பை பால
னூரணி கொண்ட வல்லோ னுதவியிற் பனுவல் செய்தான்.
(கடவுள் வாழ்த்து:29)

கடவுள் வாழ்த்திலே உள்ள மூன்று பாடல்களில் மூன்றுமுறை கொடை நாயகரை வாழ்த்தி உள்ளார் ஆசிரியர். இக்காப்பியத்தை இயற்றுவதற்குப் பொருளுதவி புரிந்த கொடைவள்ளல் இவர். எனவேதான் முதற் படலத்திலே மூன்றுமுறை குறிப்பிட்டுள்ளார், இக் கொடைவள்ளல் நாகூரைச் சேர்ந்தவர். குப்பத் தம்பி என்பவரின் புதல்வர். அன்புள்ளம் படைத்தவர். முகம்மது மஸ்தான் என்னும் பெயரை உடையவர். முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் புகழையும் பெருமையையும் கேட்பதில் மிக்க ஆர்வம் உடையவர். எனவேதான் குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தை இயற்றப் பொன்னும் பொருளும் வழங்கி உள்ளார். இவ்வாறு சிறப்புச் செய்தமையைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் கொடை நாயகரை மும்முறை கடவுள் வாழ்த்தில் போற்றிப் பாடி உள்ளார். கொடை வள்ளலைப் பற்றிப் பாடிய முதற் பாடலில் அவர்தம் ஊரின் பெயரும் ஊரின் வருணனையும் அவர்தம் தந்தையின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம்.

மாரியிற் செழித்த வேலி மருதஞ்சூழ் நாகை வாழ்வோன்
றாரியல் பொற்றோள் குப்பத் தம்பிதன் வரத்தின் றோன்றல்
வாரிமா வரிசை செல்வ முகம்மது மஸ்தா னென்போன்
சீரியல் கவிதை கேட்பான் றிருக்கருத் தியற்றி னானால்
(கடவுள் வாழ்த்து:24)

அக்கொடைநாயகரின் சில பண்புகளும் அவருக்கு முகியிதீன் ஆண்டவர் பேரில் உள்ள ஈடுபாடும் பொன்னும் பொருளும் வழங்கினமையும் இவ்வாறு சுட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

பற்பல வுயிரி னுள்ளம் படர்ந்தவன் கிருபை கொண்டு
நற்பல முகியித் தீனெந் நாயகர் சரிதை கேட்போர்
சொற்பயில் வரிசை வேண்டிச் சொன்னமே பொழிந்து நின்றான்
மற்பயில் செவ்வித் திண்டோண் முகம்மது மஸ்தா னென்போன்.
(கடவுள் வாழ்த்து:25)

கடவுள் வாழ்த்தில் மூன்றாவது பாடலில் கொடைநாயகர் முகம்மது மஸ்தான் என்பவர் தமக்கு நூல் இயற்ற உதவி புரிந்தார் எனக் குறிப்பிட்டுக் கொடை நாயகரும் அவரைச் சார்ந்த சுற்றமும் 'வாழி வாழி' என வாழ்த்தி உள்ளார். கடவுள் வாழ்த்தின் இறுதிப் பாடலாக வந்துள்ள இப்பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

செழுநயக் கார ணத்தின் செய்கப்துல் காதி றென்னும்
தொழுநய மேலோர் நன்மைச் சொன்னயப் பனுவல் செய்வான்
முழுநயக் கருத்தி யற்று முகம்மது மஸ்தான் என்போன்
கொழுநயஞ் செல்வ மேன்மைக் குடிநயம் வாழி வாழி

(கடவுள் வாழ்த்து:33)

கடவுள் வாழ்த்தில் மூன்று முறையும் நூலின் எஞ்சிய படலங்களில் பதின்மூன்று முறையும் கொடை நாயகர் குறிப்பிடப்பட்டுள்ளார். பொதுவாக ஒரு நூலில் கொடை நாயகரைப்பற்றி நூறு பாடல்களுக்கொருமுறை குறிப்பிடப்படுவது இலக்கிய மரபாகும். குத்பு நாயகத்தில் இடம்பெற்றுள்ள மொத்தச் செய்யுட்களின் எண்ணிக்கை 1341 ஆகும். கடவுள் வாழ்த்தில் அமைந்துள்ள முப்பத்து மூன்று செய்யுட்களையும் நீக்கிவிட்டால் எஞ்சி இருப்பன 1308 செய்யுட்கள். இந்த 1308 செய்யுட்களிலும் கொடைநாயகர் பதின்நான்கு முறை குறிப்பிடப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஏறத்தாழ நூறு பாடல்களுக்கு ஒரு முறை கொடை நாயகர் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம்.

திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களிலே தமிழகத்திலே உள்ள பல்வேறு புனித நகரங்கள் ஒரு பெண்ணின் பல்வேறு உறுப்புக்களுக்கு உருவகிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மதுரை அப்பெண்ணின் மணிவயிறு என வருணிக்கப்பட்டுள்ளது. குத்பு நாயகத்தில் புவி ஒரு மாதினுக்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளது. பற்பல தேயங்களும் அந்த மாதின் உறுப்புக்களாக அமைகின்றன. எல்லா நாடுகளும் சேர்ந்தே புவி அமைந்துள்ளதாதலான் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் புவி மாதின் முகமாக அமைவது சிறந்த அறபு நாடாகும். அங்குள்ள பிரதானமான நகரங்களான மக்கா, மதீனா அதன் விழிகளாக அமையும். பகுதாது நகரம் புவி மாதின் வாயாகக் காட்சி அளிக்கும். அறபு அல்லாத நாடுகள் அஜமு நாடுகளாகச் சுட்டப்படுகின்றன. அத்தகைய அஜமு

நாடுகள் அப்புவி மாதின் நுதலாகத் திகழ்கின்றன. நெற்றியாக அமைகின்றன. ஆனால் அந்த நெற்றியிலே அமையும் திலகமே புவிமாதுக்கு அழகினை அளிக்கின்றது. அத்தகைய நெற்றியின் திலகமாக அமைவது முகியித்தீன் ஆண்டவர் அவர்கள் பிறந்த ஜீலான் நகரமாகும். இக்கருத்துக்களைக் கொண்ட சேகுனாப் புலவரின் ஒரு பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

தேயம் பலவு முறுப்பாகச்
சிறந்த அறபு முகமாக
வேயும் பதிகள் விழியாக
விழைவா யாக பகுதாது
தோயும் அஜமு நுதலாகத்
தோற்றும் புவிமா னழகுபெறற்
காயுந் திலதம் ஜெய்லானி
யாக விருந்த நகரன்றே

(நகரப்படலம்:3) (136)

வாழ்க்கைத் துணைநலம் பற்றிக் கூறவந்த திருவள்ளுவர் ஒரு குறளில்,

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்,
பெய்யெனப் பெய்யும் மழை. (6:5) (55)

என மனைவி கணவனிடம் எத்தகைய உறவுகொண்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி உள்ளார். மற்றொரு குறளில் மதிலும் வாயில்காவலும் போன்ற சிறைக்காவல் பயனற்றவை என்றும் நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல் என்னும் காவலே சிறப்புடையது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

(6:7:57)

என்ற குறள் இதனையே வலியுறுத்துகிறது. சேகுனாப்புலவர் ஒரு பாடலில் சிறைக் காவலையும் நிறைகாவலையும் குறிப் பிட்டுள்ளார். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு பண்புகளையும் உடையவர்கள் கற்புடைப்பெண்கள். இப்பண்பு களை உடையோரை இப்பண்புகள் காவல் காக்கும். பெண்களுக் குரிய இந்நான்கு பண்புகளையும் ஒரு நகரத்தைக் காப்பதற்கு அமைந்துள்ள நான்கு அரண்களுடன் ஒப்பிட்டுப் பாடியுள்ளார் சேகுனாப்புலவர். முதலில் இயற்கையான காடுகள் ஒரு நகருக்கு

அரணாக அமைகின்றன, அதனை அடுத்து மலைகள் அமைகின்றன. சில சமயங்களில் இயற்கையாகவும் வேறு சில சந்தர்ப்பங்களில் செயற்கையாகவும் அமையும் அகழி ஒரு நகரின் அடுத்த அரணாக அமைந்துவிடும். அடுத்த அரணாக அமைவதும் உயர்ந்ததாக நிறுவப்படும் மதிலே. இவ்வாறு காடு மலை, அகழ், மதில் என்ற இந்நான்கும் ஒரு நகரத்துக்கு அரண்களாக அமைகின்றன. அச்சம் நாணம், மடம், பயிர்ப்பு பெண்களுக்கு கற்பைக் காக்கும் அரண் களாக அமைவது போன்று அமைந்துவிடுகின்றன. மாற்றான் அப் பெண்ணைப் பற்றி நினைத்தாலும் அத்தகைய எண்ணம் அத்தகையோனைச் சுட்டுவிடும். இங்கே புலவர் பெண்ணின் குணத்தை ஒரு நகரின் அரணாக அமைவனவற்றிற்கும் அதே பெண்ணின் அவயவங்களை அந்நகரில் இடம் பெற்ற மாட மாளிகைகளுக்கும் கூடகோபுரங்க்ளுக்கும் ஒப்பிட்டுள்ளமை நயக்கத்தக்கதாகும். அத்தோடு அவர் நின்றுவிடவில்லை. அங்கே உள்ள கூடங்கள் முதலியன மலர்கள் பூத்தன போற் காட்சி அளித்தன என்றும் குறிப்பிட்டுள்ளார். அவருடைய இக்கருத் துக்கள் அடங்கிய பாடல் இவ்வாறு அமைந்துள்ளன.

காடு மலையும் பேரகழுங்
    கனக மதிலு நாற்குணமாச்
சூடு மாற்றா ருன்னுகிலோ
    சுடுமால் காந்த னியல்பினைக்கொண்
டாடு மழியாக் கற்புடைய
    நகரா மகளி னவயவம்போற்
கூடு மலர்கள் பூத்தெனக்
    குலவுங் கூட மற்றுளவே

(நகரப்படலம்:9)(142)

அந்நகரிலே அழகிய மனைகள் உண்டு. அதேபோன்று அங்கே, தாய்மார்கள் இருக்கின்றனர். அழகிய இல்லங்களுக்கும் அன்புடைத் தாய்மார்களுக்கும் பொதுவான இயல்புகள் உண்டு. அழகிய மனைகள் அங்குள்ள தாய்மார்களைப்போன்றுஇருந்தன. இயல்பால் இரண்டும் ஒத்திருந்தன. சேகுனாப் புலவர் இதனை இங்ஙனம் குறிப்பிட்டுள்ளார்.

மணத்தா லோங்கும் பெருஞ்செல்வ
    மக்கள் பெறலால் சம்பந்தக்
கணத்தா னிறையுந் திருவயிற்றாற்
    கவிந்தொன் றனுகா துறக்காக்குங்
குணத்தால் கொண்டோர்க் கியைந்துநிற்குங்
    குறியால் வெறாத நிலையாலும்
வணத்தால் வளர்க்கு மணிமனைகள்
    மாதா வனைய வியல்பினவே.

(நகரப்படலம்:13) (46)

# திருக்காரணப்புராணம்

காரணம் என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. தெய்வீக ஆசீர்வாதத்துடன் சிறப்பு நிகழ்ச்சிகளைச் செய்து காட்டுவதையும் காரணம் காட்டல் என்பர். அதிசயங்களை நிகழ்த்திக் காட்டுவதையும் இச்சொல்லால் அழைப்பர். இத்தகைய தெய்வீக ஆசீர்வாதத்துடன் நிகழ்த்தப்பட்ட அற்புத நிகழ்ச்சிகளை வருணிக்கும் காப்பியம் திருக்காரணப்புராணம் என அழைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய தெய்வீக ஆசீர்வாதத்துடன் அற்புத நிகழ்ச்சிகளைச் செய்து காட்டியவர் செய்கு அப்துல் காதிறு சாகுல் கமீது ஆண்டகை அவர்களேயாவார்கள். வட இந்தியாவில் உள்ள மாணிக்கப்பூர் என்னும் இடத்தில் பிறந்தவர்கள் தென் இந்தியாவிலும் அதன் அயல்நாடுகளிலும் தங்கள் புகழைப் பரப்பியவர்கள். இப்பகுதிகளில் பல சீடர்களைப் பெற்றவர்கள். தமிழகத்தில் உள்ள நாகூரிலே நல்லடக்கம் செய்யப்பட்டவர்கள். மீறான் சாகிபாண்டவர்கள் என்றும் அழைக்கப்பட்டவர்கள். அவர்களுடைய இயற்கையும் செயற்கையும் ஆகிய வாழ்க்கையையே இத்திருக்காரணப் புராணம் என்னும் காப்பியம் விவரிக்கின்றது. அவர்களுடைய வாழ்க்கையை விவரித்து அந்நூலுக்குத் திருக்காரணப் புராணம் எனப் பெயரிடப்பட்டது என்பது ஒரு பாடலில் இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

ஆரணப் பொருளி னுட்பத் தறிவெலாம் விளைந்த சிந்தைப்
பூரணப் பொலிவி னின்ற புகழ்அப்துல் காதி றென்னும்
வாரணத் தரசர் போற்றும் வள்ளலார் சரிதை பண்பாற்
காரணப் புராண மென்னா கனதியி னாம மிட்டான்.

(கடவுள் வாழ்த்து: 30)

திருக்காரணப்புராணம் மூன்று காண்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அக்காண்டங்கள் இரண்டு விதமாகப் பெயரிடப் பட்டுள்ளன. மூன்று காண்டங்களும் முறையே தலைக்காண்டம் இடைக்காண்டம், கடைக்காண்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளன. ஆனால் இம்மூன்று காண்டங்களும் காப்பியத்தின்உள்ளடக்கத்தில் முறையே மாணிக்கப்பூர் காண்டம், பரதேய சஞ்சாரக் காண்டம், நாகூர் காண்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளன. தலைக்காண்டம் என்னும் மாணிக்கப்பூர் காண்டத்தில் பதினொரு படலங்களும் 459 திருவிருத்தங்களும் இடைக்காண்டம் என்னும் பரதேயசஞ் சாரக் காண்டத்தில் இருபத்தொன்பத படலங்களும் 1181 திரு விருத்தங்களும் கடைக்காண்டமான நாகூர் காண்டத்தில் பதினாறு படலங்களும் 935 திருவிருத்தங்களும் இடம்பெற்றுள்ளன. ஆக, திருக்காரணப்புராணத்திலுள்ள மூன்று காண்டங்களிலும் ஐம்பத்தாறு படலங்களும், காப்பு விருத்தத்தையும் சேர்த்து மொத்தம் 2576 திருவிருத்தங்களும் அமைந்துள்ளமையைக் காண லாம்.

திருக்காரணப்புராணத்தைப் பாடும்படி ஆசிரியரைக் கேட்டுக் கொண்டவர் அகமது சாகிபு என்பவராவார். இவர் அபூபக்கர் சித்தீக் என்பவரின் புதல்வர். நாகை என வழங்கும் நாகூரைச் சேர்ந்தவர். இவ்விவரமும் ஒரு பாடலில் இவ்வாறு தரப் பட்டுள்ளது.

புவிமுத்தி நாகை வாழ்வோன் போற்றுவார் கருணை செய்த<br>
தபமிக்க சாக மீதின் தகுதிசேர் கார ணத்தின்<br>
அபூபக்கர் சித்தீக் கீன்ற அகுமது சாகி பன்பாற்<br>
கவிமுத்தஞ் சொரிய வேண்டு மெனக்கருத் தியற்றி னானே.

(கடவுள் வாழ்த்து:31)

அவ்வாறு கேட்டுக் கொண்டதுமல்லாமல் அகமது சாகிபு என்பவர் பொன்னும் பொருளும் ஈந்தார். அவருடைய பொருள் வளம் மேலும் மேலும் பெருக வேண்டும் என்று ஆசிரியர் அக்கொடை நாயகரை இவ்வாறு வாழ்த்தி உள்ளார்.

நவமுறு நாகை வாழு நாயகர் சரிதைக் கன்பின்<br>
நவமறு நிதிய மீந்த அகுமது சாகி புள்ளங்<br>
கவரற வுற்ற பேற்றின் காவலர் துணைவ ரோடு<br>
தவமுறச் செல்வ மேன்மை தழைத்திட வாழி வாழி.

(கடவுள் வாழ்த்து:39)

பெண்களும் பல இடங்களில் பாடப்பட்டுள்ளனர். மணம்புரி படலத்தில் (129-149 வரை) உள்ள பாடல்களில் பெண்கள் பல நயங்களுடன் வருணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். செய்கு யூசுபின் திருமண ஊர்வலத்தைக் காண வந்த பெண்கள் அதன் பின்னர் வருணிக்கப்பட்டுள்ளனர். தமிழ் இலக்கிய மரபுக்கியைய அப்பெண்கள் வருணிக்கப்பட்டுள்ளனர். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என ஏழு பருவங்களையும் சார்ந்த பெண்கள் அவ்வூர்வலத்தைக் கண்டு களிக்க அங்கு வந்திருந்தனர் என்று ஆசிரியர் வருணித்துள்ளார். மணம்புரி படலத்தில் இடம் பெற்றுள்ள 150 முதல் 179 வரை உள்ள பாடல்களில் இவ்வெழுவகைப் பருவத்தையும் சார்ந்த பெண்களைப் பாடுவதோடு நின்று விடவில்லை; அடுத்தடுத்த பாடல்களில் அவர் தம் இயல்புகளையும் பாடி உள்ளார்.

இஸ்லாத்தைப் பற்றியும் இஸ்லாத்தில் தோன்றிய பெரியார் களைப்பற்றியும் பேசுவனவாக அமைந்துள்ளன, இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள். இக்கூற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்த காப்பியங்களுள் ஒன்று திருக் காரணப்புராணம். இங்கே ஒரு பாடலில் இஸ்லாத்தின் அடிப் படைக் கோட்பாடுகளுள் ஒன்று ஒரு பாடலில் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இஸ்லாத்தில் முக்கிய இடத்தை வகிப்பது நம்பிக்கை. அல்லாஹ் மீதும், மலாயிக்கா என்னும் வானவர்கள் மீதும், நபிமார் என்னும் தீர்க்கதரிசிகள் மீதும், இறுதிநாள் மீதும், நன்மைதீமைகள் அல்லாஹ் பக்கல் நின்றும் உள்ளவை என்பதன் மீதும் விசுவாசம் கொள்வது முதன்மையானதாகும். இதனையே அறபு மொழியில்.

ஆமன்து பில்லாஹி வமலாஇக்கதிஹி வறுஸுலிஹி
வல்யவ் மில்ஆஹிரி வல்கத்றி ஹைறிஹி
வஷற்றிஹி மினல்லாஹி தஆலா

என உச்சரிப்பர் .இதனைத் தமிழில் மொழிபெயர்த்து சேகுனாப் புலவர் தமது திருக்காரணப்புராணத்தில் ஒரு பாடலாக அமைத் துள்ளார். இவ்வறபு வாக்கியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் பொழுது நபி என்னும் ஒரே ஒரு அறபுச் சொல்லை மாத்திரமே பாடலில் இடம் பெறச் செய்துள்ளார். இக்கருத்துக்களடங்கிய பாடல் இதுதான்.

நாயக னொருவ னுண்டு நனிபுக ழிமையோ ருண்டுந்
தூயநால் வேத முண்டுந் துலக்கிய நபிமா ருண்டு
மாயதோர் கால முண்டு மடர்வினை யிரண்டுண் டென்று
நேயநல் லுறுதி யுள்ளோர் நினைப்பரோ வேறு மாதோ.

(மேலைநாகூர்புக்க படலம்:42)

அல்குர்ஆன் கருத்துக்களும் ஆங்காங்கே திருக்காரணப் புராணத்தில் இடம்பெற்றுள்ளன. ஆகாயம், ஒளிபரப்பும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மழை, நிலம், கடல், மலை முதலிய அனைத்தையும் படைத்தவன் இறைவனான அல்லாஹ்வே. அவனே அவ்வவற்றிற்குரிய நிலை பெயராமல் இயங்கச் செய்யும் ஆற்றல் படைத்தவன். அவனல்லால் வேறு நாயன் இல்லை. சிலைகளுக்கு எவ்வித சக்தியும் இல்லை. இத்தகைய கருத்துக் களை அமைத்து இவ்வாறு பாடி உள்ளார் ஆசிரியர்.

வானமும் கதிரும் சோதி மதியமு முடுவுங் காரும்
மானிலம் கடலும் வெற்பு மற்றுள படைப்புந் தத்தங்
கோனிலை பெயரா தாகக் கொண்டவ னொருவ னல்லால்
தானிலை யெடாத வன்கல் லுருவினந் தகைய தன்றால்

(புத்துக்கள் வசனித்த படலம்:66)

எல்லோராலும் போற்றப்படுபவர் யாவர் என்பதற்கு வரை விலக்கணம் வகுத்துள்ளார் ஆசிரியர் தமது காப்பியமான திருக் காரணப்புராணத்தில். அல்லாஹ்வை தொழுதல் வேண்டும். அவன் கட்டளைக்கிணங்க விரதம் அனுட்டிக்கவேண்டும். அவனை எப்பொழுதும் புகழ்ந்து துதிக்க வேண்டும். நற்குணத்தை உடைய வராய் ஒழுகுதல் வேண்டும். நல்லறிவும் நல்லுணர்வும் இருத்தல் வேண்டும். அவனிடத்திலே தான் நாம் அழுது நமது வேண்டு கோளைக் கேட்கவேண்டும். அவன் நாட்டப்படியே எல்லாம் நடை பெறும் என்ற திடமான நம்பிக்கை இருத்தல் வேண்டும். இங்ஙனம் மாதவத்தில் ஈடுபடுவோரை உலகு என்றென்றும் போற்றும். இக்கருத்துக்களையே சேகுனாப்புலவர் தமது காப்பியத்தில் இவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார்.

தொழுகையும் விரதமுந் துதியும் நற்குணத்
தொழுகையும் நல்லறி வுணர்வும் நாதன்பால்
அழுகையு நாட்டமு மணைந்து மாதவத்
தெழுகையுங் கொண்டுல கெவரும் போற்றுவார்.

(மதுபான் தண்டனைப் படலம்:4)

பொறுமையின் சிறப்பு ஒரு பாடலில் போற்றப்பட்டுள்ளது. இகழ்ந்தவரையும் வஞ்சித்தோரையும் தீமை புரிந்தவரையும் பாவ நெறியிற் சென்று குற்றம் புரிந்தவரையும் அறிவிற்கப்பாற் பட்ட கிரியைகளில் ஈடுபட்டோரையும் நல்லறிவு புகட்டி நல் லொழுக்கம் உடையவராகச் செய்யும் பணி போற்றற்குரிய பெரும் பணியாகும். அங்ஙனம் அவர்களுக்கு நல்வழி காட்டுமாறு எல்லாம் வல்ல இறைவனான அல்லாஹ்வை இரந்து கேட்பர். இறைவன் நல்லவருள் பாலிக்கவே அவனைப் புகழ்வர். அத்தகையோர் மேலோராவர். அத்தகைய பொறையுடைமையும் பெரிதும் பாராட்டப்பட்ட வேண்டிய தொன்றாகும். அத்தகைய பொறை யுடைமையின் சிறப்பை இத்தகையது என்று அள விட்டுக் கூறமுடியாது என இவ்வாறு ஒரு பாடலில் பொறை நலங் கூறப்பட்டுள்து.

இகழ்ந்தவ ரேனும் வஞ்சித் திகலின ரேனும் தீமை
நிகழ்ந்தவ ரேனும் பாவ நெறியின ரேனும் குற்றம்
அகழ்ந்தவர்க் கறிவு தோன்ற ஆதியை இரந்து கேட்டுப்
புகழ்ந்தவர் மேலோர் என்னும் பொறைநலம் பகர்தற்
பாலோ

(உபாத்துப் படலம்:50)

மக்கட் பேற்றின் மகிமை பற்றியும் ஆசிரியர் கூறத் தவற வில்லை. பொன்னை மிகுதியாகப் பெற்றிருந்தாலும் அதனால் எவ்வித பயனுமில்லை. பொருளைத் தேடிப் பாதுகாத்து வைத் திருந்தாலும் அதனால் எத்தகைய பயனும் ஏற்படுவதில்லை. சொல் வளம் மிக்கவராய்ச் சொல்லாட்சி உடைய வாக்கு வல்லமை பெற்றவராய் இருப்பதிலும் எந்தவித பலனுமில்லை. பெரும் புகழை மக்களிடையே தேடிக் கொண்டவராய் இருந் தாலும் அதனால் பெறப்படும் பயன் எதுவுமில்லை. நல்லதிர்ஷ்ட மும் நல்லபலனும் உடையவராய் இருந்தாலும் அவற்றால் பெறக் கூடிய நன்மை எதுவுமில்லை, சிறந்த அறிவினை உடைய பேரறிஞ ராயினும் அத்தகைய நிலைமையினாலும் எவ்வித நற்பலனும் கிடைக்கப்போவதில்லை.இவ்வாறு விவரித்த ஆசிரியர் பயனுடைய ஒன்றையும் குறிப்பிட்டுள்ளார். முற்கூறியவை எல்லாம் இருந்தும் நல்ல பலனைத் தருகின்ற புதல்வர் இல்லாவிட்டால் அந் நன்மைகள் வரா என்பதே புலவரின் கொள்கை. இக்கருத்தினையே சேகுனாப்புலவர் இவ்வாறு ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்,

பொற்பல னுடைய ரேனும் பொருட்பல னுடைய ரேனும்
சொற்பல னுடைய ரேனும் துதிபல னுடைய ரேனும்
நற்பல னுடைய ரேனும் நனியறி வுடைய ரேனும்
இற்பல னாகு மைந்தர் இல்லவர் இல்லா ராமே

(லாகூர் புக்க படலம்:17)

அதே படலத்திலுள்ள மற்றொரு பாடலிலும் அதே கருத்துக்களை வேறுவிதமாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். செல்வத்தைச் செல்வம் என்று கூறமுடியாது. சீர்மையைச் சீர்மை என்று சொல்ல இயலாது. ஒருவன் பெற்ற கல்வியைக் கல்வி என்று குறிப்பிடுதல் தவறாகும். இவ்வாறு அவற்றின் பயனின்மையைக் குறிப்பிட்ட ஆசிரியர் அவை பயனுடைமை ஆவதற்குப் பிள்ளை வரம் வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்தல் அவசியம் என்று இவ்வாறு ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

செல்வமுஞ் செல்வ மன்றே சீர்மையுஞ் சீர்மை யன்றே
கல்வியும் கல்வி யன்றே கைகொள்கா தலனி லாதால்
நல்வினைப் பயனு முண்டே நாயக ஆதி பாலிற்
பல்வள மக்கள் எற்குப் பயன்பெற விரத்தல் வேண்டும்,

(லாகூர்புக்க படலம்:24)

இதே கருத்தினை வேறுவிதமாகக் கூறி உள்ளார் பாண்டியன் அறிவுடை நம்பி. நலம் சான்ற மக்களைப் பயவாதார்க்கு உயிர் வாழ்வால் முடிக்கக் கூடிய பொருளே இல்லை என்று பாடி உள்ளார். மக்களை இல்லார்க்குப் பயன் குறைவாகவே உள்ளது. வாழும் நாளும் இல்லை என்றும் இக்கருத்துக்களைக் கொண்டு பாண்டியன் அறிவுடை நம்பி இவ்வாறு பாடிஉள்ளார்.

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்கு
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

(புறநானூறு: 188)

இன்னலுற்றோர் எழுப்பிய ஓலத்தினை வருணிக்கப் புகுந்த ஆசிரியர் ஒவ்வொரு சாராரும் எழுப்பிய சத்தங்களை ஓசை நயம் மிக்கதாய் அமைத்துப் பாடியுள்ளார் இவ்வாறு.

ஆஅஆஅ அந்தோ அந்தோ வென்பார் ஒருசாரார்
ஓஒஓஒ என்றே யோய்ந்தே யாழ்வார் ஒருசாரார்
ஊஉஊஉ வென்றே பட்டுழல் கிற்பார் ஒருசாரார்.
கூஉகூஉ வென்றே கூய்க்குரன் மாய்வார் ஒருசாரார்.

(பொன்னாணி புக்க படலம்:29)

மும்முரசு ஒரு நாட்டின் வளத்தைச் சிறப்பாகச் சுட்டுவ தொன்றாகும். கொடை முரசு, மணமுரசு, போர்முரசு மூன்றும் இங்கு ஒரு பாடலில் வருணிக்கப்பட்டுள்ளன. அந்தப் பாடலைப் படிக்கும்பொழுது முரசு ஒலி காதுகளை எட்டுவது போல் அமைந் துள்ளன. அப்பாடலில் இடம் பெற்றுள்ள சொற்கள், அத்தகைய ஒரு பாடல் இங்கே தரப்படுகின்றது. இப்பாடலில் மும்முரசும் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காண்கிறோம்.

வார்பெறு மன்றல் பேரி
வரிசைகொ டானப் பேரி
சீர்பெறும் வீரப் பேரி
சிறுசுப முழங்கும் பேரிக்
கார்பெறு மிடியி னோதைக்
கடலொலி மறாத நாகூர்
பேர்பெறுஞ் செவ்வி வாய்ந்த
பெரியவ ரிருந்தா ரன்றே

(மணம் பொருந்து படலம்:1)

ஒரே எழுத்தைப் பலமுறை ஒரு பாடலில் பயன்படுத்தி ஓசை நயத்தைச் சில பாடல்களில் அமைப்பதில் தனிப்பெரும் வெற்றி கண்டுள்ளார் சேகுனாப்புலவர். இந்த வகையில் ஒரு பாடலில் ளகரத்தை ஆசிரியர் பயன்படுத்தி உள்ளார். ளகரம் பயன்படுத்தப் பட்ட செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

தெள்ளிய வள்ளலும்
ஒள்ளிய பள்ளியு
ளுள்ளிய வுள்ளொடு
கொள்ளரு ளள்ளினார் (கூத்தானூர் புக்க படலம்:17)

# குத்பு நாயகம்

(வண்ணக்களஞ்சியப் புலவர் இயற்றியது)

மதுரை மீசல் வண்ணக்களஞ்சியப்புலவர் இயற்றிய இரண்டாவது காப்பியம் 'குத்புநாயகம்' என்னும் முகியித்தீன் புராணம். வண்ணக்களஞ்சியப் புலவரின் இயற்பெயர் முகம்மது இபுறாகீம் என்பதாகும். இவருடைய சிறப்பு ஆற்றல் கருதியே இவர் வண்ணக் களஞ்சியப்புலவர் எனப் புகழ்நாமம் சூட்டப்பெற்றார். இவர் மீசலைச் சார்ந்தவர் என்பதும் கூடல் என மறு நாமம்பெற்ற மதுரையில் வாழ்ந்தவர் என்பதும் இவர்தாம் இக்காப்பியத்தை இயற்றினார் என்பதும் ஒரு பாடலில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளன.

தேடுநற் றவத்தின் மேலாய்ச் சிறந்தபு சாலி கீன்ற
நாடுளப் பொருள தான முகியித்தீ னாதர் தோன்று
நீடிய வரலா றாய்ந்து செய்யுளாய் நிலத் தினிற்கக்
கூடல்வாழ் மீசல் வண்ணக் களஞ்சியங் கூறி னானே

(கடவுள் வாழ்த்து : 33)

இக்காப்பியம் காண்டங்களாகப் பகுக்கப்படவில்லை; படலங் களாகப் பகுக்கப்பட்டுள்ளது. மொத்தம் முப்பத்தொன்பது படலங்கள் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. இக்காப்பியத் தில் காப்புச் செய்யுட்களையும் சேர்த்து எல்லாமாக 1707 செய் யுட்கள் இடம் பெற்றுள்ளன. பல காப்பியங்களில் இடம்பெறாத மரபியற் படலம் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. இப் படலத்தில் இடம்பெற்றுள்ள செய்யுட்களின் எண்ணிக்கை ஐந்தே யாகும். இம்மரபியற் படலத்தில் முகியித்தீன் ஆண்டவரவர் களின் தந்தையரான அபூசாலிகு என்னும் பெரியாரின் மூதாதை

யரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வண்ணக்களஞ்சியப் புலவர் தமது குத்புநாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தில் ஏறத்தாழ எல்லாப் படலங்களிலும் சாகுல் கமீது ஆண்டகையைப் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு படலத்திலும் உள்ள இறுதிச் செய்யுளில் அல்லது அதற்கு முன் உள்ள செய்யுளில் இத்தகைய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அச்சந்தர்ப்பங்களில் சாகுல் கமீது ஆண்டகையைக் புகழும் பொழுது அப்பெரியாரின் மூதாதையர் தாம் காப்பியத் தலைவரான முகியித்தீன் ஆண்டகை என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய சிறப்பியல்புகள் ஒரு பாடலில் விதந்தோதப்பட்டுள்ளன. மனிதப் புனிதரான ஒருவர் தமது புலன்வழியே மனதைச் செல்லவிடாது கட்டுப்படுத்தல் வேண்டும். தவம் புரிந்திடல் வேண்டும். கல்வியும் உயர்ஞான மும் கற்றிருத்தல் வேண்டும். நல்லறிவுடையோராய் இருத்தல் வேண்டும். நல்லொழுக்கம் அமைந்தோராக இருத்தல் வேண்டும். அன்புடையவராய் இருத்தல் வேண்டும். உலகியல் நன்கு தெரிந் திருத்தல் வேண்டும். இவையெல்லாம் நிறைய அமைந்திருத்தல் வேண்டும். இக்கருத்துக்களையே ஒரு பாடலில் இவ்வாறு இடம் பெறச்செய்துள்ளார்.

பொறிவழி மனம் புகாது புரிதவ ஞானங் கல்வி
அறிவுசீ ரொழுக்க மன்போ டுலகிய லகிலம் போன்ற
பொறை நிறை யமைந்து வாழ்தற் ககமெனும் புனித மேவு
நெறியின ரொருவ ரோங்கு மகிழ்வொடு நிகழ்த்து வாரால்

(கலிறுநபி வாய்மைப்படலம் : 1)

யார் தீமை செய்வர்? யார் தீமை செய்தால் பொறுக்க வேண்டும்? யார் தீமை செய்தால் அது பொறுத்தற்கரிய தொன்றாகும்? என்பனவற்றை ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார் வண்ணக்களஞ்சியப் புலவர் தமது குத்புநாயகம் என்னும் முகியித் தீன் புராணத்தில். கற்று அறிந்தவர்கள் தீயவை செய்தால் அதனைப் பொறுத்துக் கொள்ளல் அரிதான ஒரு செயலாகும். ஆனால் பகுத்தறிவோ ஆராய்ந்தறியும் ஆற்றலோ இல்லாத ஒருவர் ஏதாவதொரு தீமை செய்தால் அத்தகைய தீமை செய் தோரை பொறுத்துக்கொள்ளுதல் வேண்டும். மனநோயாளரும் மதுபானத்தினால் சுயநினைவு இழந்தோரும் தீய்மை விளைத்

தால் இழிஞர் என்றே கருதப்படுவர். எனவே நாங்கள் தீமை செய்யாது தவிர்த்திடல் வேண்டும். இக்கருத்துக்களே ஒரு பாடலில் இவ்வாறு இடம் பெற்றுள்ளன.

அறிந்தவர் தீய்மை செய்தால் பொறுத்திட லரிதா ராய்வு
முறிந்தவர் தீய்மை செய்தால் முழுக்கடன் பொறுப்பதன்றோ
வெறிந்தவர் அறியாத் தீமை விளைத்தவர் தொழும்ப ரென்றே
செறிந்தவ ரியாங்கள் செய்த தீவினை தீர்க்க வேண்டும்
(றாபியத்துல் அதவிய்யா நிறையுணர்படலம் : 10)

இக்காப்பியத்திலும் பிள்ளைச் செல்வத்தின் மேன்மை பேசப் படுகிறது. செல்வம் எல்வளவுதான் இருந்தாலும் குழந்தை இல்லை எனில் அது ஒரு பெருங் குறையாகவே இருக்கும். புதல்வர் இருத்தல் தேன் உள்ள மலர் போன்ற கண்ணிலே உள்ள மணியின் வெள்ளை போன்று விளங்கும். எனவே தான் பிள்ளைகள் கண் மணி எனப்பெற்றனர். இதனை ஆசிரியர் இவ்வாறு ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளையற் றபெருஞ் செல்வ மெவ்விதக்
கொள்ளையுற் றிடினுங் குறையே யன்றோ
கள்ளையுற் றமலர்க் கண்மணி யிலோர்
வெள்ளையுற் றதுபோலும்விளங் கவே
(முகியித்தீனிபினியறபி யுதித்தோங்கு படலம் : 33)

இதே கருத்தினை வேறொரு செய்யுளில் ஆசிரியர் வேறு விதமாகக் குறிப்பிட்டுள்ளார். சிறுபிள்ளைகள் கைகளால் துழாவிய கூழானது அமிர்தத்தை விட மேலானது எனக் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைப் பேறின்றித் தனித்தவராயும் மலடுகளாயும் இருப்பவர் உட்கொள்ளும் உணவு வேம்பு போன்று கசப்பானதாயிருக்கும். இனிமை இருக்காது. இன்பம் தராது. கிரிமியைச் சாப்பிடுவது போன்று அந்த உணவு அமைந்து விடும். இக்கருத்துக்களையே ஆசிரியர் ஒரு பாடலில் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

உமிழ்வ தாய மைந்தர்கை யுழப்புகூழ்
அமிழ்தின் மேன்மையென் பாரது வாதலிற்
றமிய ராய்மல டானவர் தங்களுண்
அமையும் வேம்புங் கிரிமியு மாவதே
(முகியித்தீனிபுனியறபி யுதித்தோங்கு படலம் :36)

அமைச்சரின் முக்கியத்துவம் ஒரு பாடலில் சுட்டப்பட்டுள்ளது. ஒரு மன்னனின் கடமை அமைச்சரை உயிர் போல் பேணிக் காத்தலேயாகும். அவ்வமைச்சரை ஆராய்ந்து ஒழுகுதல் அரசன் கடமையாகும். அமைச்சரோ அரசனுக்கு இடித்துரைக்கும் ஆற்றல் வாய்ந்தவர். நல்லவற்றைத் தீயவற்றிலிருந்து பிரித்துக் காட்டி அறவுரை பகரும் தகைமை பெற்றவர். அத்தகைய அமைச்சர் ஒருவரின் ஆலோசனையை ஏற்று ஒழுகிடா மன்னர் தோல்வி காண்பார். அவர் விரும்பும் செல்வமும் அப்பொழுது அவரை விட்டு அகன்று விடும். உயர்ந்த அரசையும் இழக்க நேரிடும். அரசே வேரொடும் கெட்டுவிடும். ஆகவே கருப்பொருள் உணர்ந்து அரசன் செயல்பட வேண்டும். வருமுன் எதையும் தடுத்துக் காத்துக் கொள்ள வகை செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் வேறு ஏதாவது கேடேற்பட்டால் அதை அமைச்சர் மீது சாட்டுவர். ஆதலினால் கேடுவராமல் அமைச்சருடைய ஆலோசனையைக் கேட்டு அரசர் ஒழுகுதல் வேண்டும் என்பது ஈண்டு வலியுறுத்தப்பட்டுள்ளது. இக்கருத்துக்களே ஒரு பாடலில் இவ்வாறு அமைந்துள்ளன.

பிரித்திடித் துரைக்கு மமைச்சரை உயிர்போற்
　　பேணியாய்ந் தொழுகிடா மன்னர்
விரிப்புறு பெருஞ்செல் வமுமுய ரரசும்
　　வேரொடுங் கெடுவதா தலினால்
கருப்பொரு ளுணர்ந்து வருமுனந் தடுத்துக்
　　காப்பவர் ஒருவரற் றிவன்றன்
மருட்குடி யிருக்கு மனப்படி செயுமந்
　　திரியினால் வந்தகே டென்பார்

(தலையருட் படலம்: 53)

திருக்குறளிலும் அமைச்சு என்னும் அதிகாரத்தில் அமைச்சின் சிறந்த பண்புகள் விதந்தோதப்பட்டுள்ளன. வண்ணக்களஞ்சியப் புலவர் தமது பாடலில் கூறிய கருத்துக்களுக்கு ஆதாரமாகத் திருக்குறளின் இக்குறள் வெண்பாவை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு (64:4) (634)

எந்தக் காப்பியத்திலும் இடம்பெறாத, பிற தமிழ் இலக்கியங் களிலே பிழையெனப் பயன்படுத்தபடாத ஒரு சொல்லை வண்ணக்

களஞ்சியப்புலவர் தமது நூல்களில் பயன்படுத்தி உள்ளார், சிற்றிலக்கியங்கள் பலவற்றிலும் இக்குறிப்பிட்ட சொல் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். 'கணவி' என்பதுதான் அச்சொல். மனைவி என்னும் பொருளிலே 'கணவி' என்னும் சொல்லை வண்ணக்களஞ்சியப் புலவர் தமது காப்பியங்களான இராஜ நாயகம், குத்புநாயகம் என்னும் முகியித்தீன் புராணம், தீன் விளக்கம் என்பனவற்றில் பயன்படுத்தி உள்ளார். குத்புநாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தில்,

கறையறு மதிமுகக் கணவி காந்தனென்
றறைதரு மிருவருற் றடுத்து நின்றனர்

(மரித்தெழுந்து மக்களீன்ற படலம் : 2)

பூண்டனன் கணவி தன்னை நோக்கியே புருடத் தோன்றல்

(பெண்களாணுருப்பெறு படலம் : 3)

பெண்களும் பிதாவு மாகப்
பெருஞ்செல்வ மனையில் மேவக்
கண்களி லடங்காக் காட்சி
கணவியு மெவருங் கண்டு
விண்களும் துதிக்கும் வள்ளல்
விரைமலர்ப் பதந்து தித்தார்
பண்கொளு மதுர வாய்மைப்
பாவையர் கவலை தீர்ந்தார்

(பெண்களாணுறுப் பெறு படலம் : 19)

என்னுமிடங்களில் 'கணவி' என்னும் சொல் ஆளப்பட்டமை காணலாம்.

# முகியித்தீன் புராணம்

காதிறிய்யா என்னும் ஆத்மிக வழியை நிறுவிய முகியித்தீன் அப்துல் காதிறு ஜீலானி (றலி) அவர்களின் வாழ்க்கை பல புலவருக்குக் கருப்பொருளாய் அமைந்தமை பற்றி முன்னர்க் குறிப் பிட்டோம். முகியித்தீன் புராணத்திலும் முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் வாழ்க்கையே கருப்பொருளாக அமைந்துள்ளது. இது வரை ஆராயப்பட்ட காப்பியங்கள் அனைத்திலும் முதலாவது படலமாக அமைந்தது கடவுள் வாழ்த்து என்னும் படலமாகும். ஏனைய காப்பியங்கள் பலவற்றில் காப்புச் செய்யுள்கள் கடவுள் வாழ்த்துப் படலத்துக்கு முன்னர் இடம் பெறச் செய்யப்பட் டிருந்தன. முகியித்தீன் ஆண்டவரின் வாழ்க்கையை வருணித்த வண்ணக்களஞ்சியப் புலவர் இரண்டு காப்புச் செய்யுட்களை முதலாவதாகப் பாடிவிட்டுக் கடவுள் வாழ்த்துப் படலத்துக்கு அடுத்ததாகப் பாயிரம் என்னும் ஒரு பகுதியையும் தமது குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தில் இடம் பெறச் செய் திருந்தார். ஆனால் முகியித்தீன் புராணம் என்னும் காப்பியத்தில் அதன் ஆசிரியர் கடவுள் வாழ்த்துப்படலம் என்று ஒன்றை அமைக்க வில்லை. அதற்கு மாறாக முதலில் பாயிரம் என்ற பகுதியைப் பாடி உள்ளார். பாயிரம் என்ற பகுதியின் தொடக்கமே காப்புச் செய்யுட்களாக அமைந்துள்ளது.

முகியித்தீன் புராணம் என்னும் காப்பியத்தின் ஆசிரியர் பதுறுத்தீன் புலவர். மகாவித்துவான். இலங்கையில் வாழ்ந்து இக்காப்பியத்தை இயற்றி உள்ளார். இவர் இலங்கையரே என ஒரு சாரார் கூறுவர். மற்றொரு சாரார் இவர் சென்னையிலே பிறந்து இலங்கையிலே வாழ்ந்தவர் என அபிப்பிராயப்படுவர். இலங்கையின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாணத்திலேதான்

இவர் தமது முகியித்தீன் புராணத்தை இயற்றி உள்ளார். ஆசிரியரைப் பற்றிய குறிப்பு இவருடைய முகியித்தீன் புராணத்தில் ஒரே ஒரு செய்யுளில் மாத்திரம் இடம் பெற்றுள்ளது. இயற்றப் பட்ட ஆண்டும் மாதமும் தேதியும் ஆசிரியரின் பெயரும் அகச் சான்றாக ஒரே ஒரு செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளது.

அருணபி ஹிஜிறத் தாயி ரத்திரு நூற்று முப்பத்
தொருவரு டத்தில் ஜமாத்து லாகிறு பிறையின் றேதி
இருசத மூன்று திங்கள் வாரத்தி லின்புற் றோங்கி
மருவியே எவருங் கேட்பப் பதுறுத்தீன் கவிசொன்னானே
(பாயிரம் 22)

பதுறுத்தீன் புலவர் முகியித்தீன் ஆண்டவர் பேரில் முனாஜாத்துப் பாடல் ஒன்றும் இயற்றி உள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

பதுறுத்தீன் புலவரின் முகியித்தீன் புராணம் இரண்டு பாகங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாம் பாகத்தில் உள்ள நாற்பது படலங்களில் 2162 திருவிருத்தங்கள் இடம் பெற்றுள்ளன. முப்பத்து நான்கு படலங்களைக் கொண்ட இரண்டாம் பாகத்தில் 1821 திருவிருத்தங்கள் அமைந்துள்ளன. ஆக, இரண்டு காண்டங் களிலும் 74 படலங்களும் 3983 திருவிருத்தங்களும் அமைந்திருக்கக் காணலாம். சதாவதானி கோட்டாறு செய்குத் தம்பிப் பாவலர் அவர்கள் முகியித்தீன் புராணம் முதற் பாகத்தை 1901 ஆம் ஆண்டிலும் இரண்டாம் பாகத்தை 1903 ஆம் ஆண்டிலும் பரி சோதித்துப் பதிப்பித்துள்ளார். முதற்பாகம் கோட்டாறு வா. நயினார் முகம்மது லெப்பை அவர்களின் முயற்சியால் வெளியிடப் பட்டுள்ளது. இரண்டாம் பாகம் வா. முகம்மது நயினார், பேட்டை முகியித்தீன் ராவுத்தர் ஆகிய இருவரினதும் முயற்சியால் வெளி யிடப்பட்டது. இரண்டு பாகங்களும் சென்னை ஸ்ரீபத்மநாப விலாச அச்சியந்திர சாலையில் அச்சேறி உள்ளன.

இப்பொழுது இரண்டு பாகங்களும் புதுப் பதிப்புகளாக வெளி வந்துள்ளன. பேராசிரியர் மு. அப்துல்கறீம் அவர்கள் இவற்றைப் பதிப்பித்துள்ளார். இதற்கு முன்னர் அப்பெரியார் சேகுனாப் புலவரின் குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தையும் பதிப்பித்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுக் கொண்டுள்ளார்.

பதுறுத்தீன் புலவர் சென்னையில் பிறந்து இலங்கை யாழ்ப் பாணத்தில் வாழும்பொழுது முகியித்தீன் புராணத்தை இயற்றி

னார் என்னும் கூற்று வலியுறின் அவர் யாழ்ப்பாணத்திற்கு வரக் காரணமாயிருந்தவர் அவருக்கு இக்காப்பியத்தை இயற்றப் பொருளுதவி வழங்கியவர் என்பது பொருந்துவதாகும். இங்ஙனம் அவருக்குப் பொருளுதவி வழங்கி அவரை ஊக்குவித்தவர் யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த செய்கு மீறான் என்னும் வள்ளலேயாவார். இவர் உசைன் நயினான் என்பவரின் புதல்வராவார். பாயிரத் திலே உள்ள இரண்டு பாடல்களில் செய்குமீறான் என்னும் கொடைவள்ளல் பாராட்டப்பட்டுள்ளார். அப்பாடல்களுள் முதலாவதில் யாழ்ப்பாணத்தின் இயற்கைநலம் விதந்தோதப் பட்டுள்ளது.

வாசனை பொருந்திய தாமரை மலர்கள் மலர்ந்துள்ள வாவிகள் பலவற்றைக் கொண்டது இலங்கைநாடு. அங்கே அமைந்தது யாழ்ப்பாணம். காய்களை மிகுதியாகக் காய்க்கும் கமுகு மரங்கள் அங்கு உள்ளன. அத்தகைய கமுகு மரங்களில் உள்ள பழுத்த பாக்குகளை வாளைகள் மேலே தாவி உகுக் கின்றன. அவ்வாறு உகுத்துவிட்டு விழுந்து அவ்வாளைகள் தாமரை மலர்கள் மிகுதியாக உடைய மலைவீழ் நீர்நிலைகளிலே படுத்திருக்கின்றன. இத்தகைய அருமையான பூஞ்சோலைகளைக் கொண்டது யாழ்ப்பாணம். அங்கே உள்ளவர் கொடைவள்ளல் சொன்ன சொல் தவறாதவர். உசைன் நயினான் என்பவர் தம் புதல்வன். இக்கருத்துக்களையே ஒரு பாடலில் இவ்வாறு விவரித் துள்ளார் பதுறுத்தீன் புலவர்;

> மருவிரி கமல வாவி வளந்தரு மிலங்கை நாட்டிற்
> றிருமலி கமுகிற் றாவிச் செழும்பழ முகுத்திக் கஞ்சத்
> தருவியிற் படுக்கும் வாளை யரும்பொழி லியாழ்ப்பா
> ணத்தில்
> ஒருமொழி தவறா வள்ள லுசைன யினான்றன்
> பாலன். (பாயிரம் : 23)

உலகத்திலே சிறப்புற்றோங்குபவர் அவர். அழகு மிக்கவர். மன்மதனைப் போன்ற சாயலை உடையவர். உலகமும் விண்ணு லகமும் போற்றும் அளவுக்கு பெருமை பெற்றிருக்கும் முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் புகழைப் பாடும்படி ஆசிரியரைக் கேட்டுக் கொண்டார். கேட்டுக் கொண்டதுடன் மாத்திரம் அவர் நின்று விடவில்லை. அதற்கான எல்லா உதளிகளையும் செய்தார். நவ நிதப்பொருள்களை எல்லாம் அளித்தார். ஆடை அணிகலன்களை

நல்கினார். இதன் பயனாக எல்லா அறிஞர்களாலும் போற்றப் பட்டார். இதன் பயனாக உலகத்திலே நிலையான ஓர் இடத்தைப் பெற்றுவிட்டார். இத்தகைய சிறப்புப் பெற்றவர் தாம் முகியித்தீன் புராணம் என்னும் இக்காப்பியத்துக்குக் கொடை நாயகராய் அமைந்த செய்கு மீறான் என்பவர். இந்த விவரங்களை ஒரு பாடலில் அமைத்து பதுறுத்தீன் புலவர் இவ்வாறு பாடியுள்ளார்.

அவனியிற் சிறப்புற் றோங்கு மழகுமன் மதவி லாசன்
புவனம்விண் ணுலகம் போற்று முகியித்தீன்புகழைப் பாட
நவநிதப் பொருளு மாடை நல்கினான் புலவோர் போற்ற
இவனியில் வாழ்வு பெற்ற செய்குமீ றானென் போனே

(பாயிரம்:24)

கொடை நாயகரைப் பற்றிய குறிப்புக்கள் முகியித்தீன் புராணத்தில் பல இடங்களில் வந்துள்ளன. கொடை நாயகரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது இலங்கை வளத்தை வருணிக்கத் தவறவில்லை காப்பிய ஆசிரியர். அத்தகைய பல சந்தர்ப்பங்களை முகியித்தீன் புராணத்தில் காணலாம். பெரும்பாலான இடங்களின் செய்கு மீறான் என்பவர் உசைன் நயினார் என்பவரின் புதல்வர் என்பதையும் சுட்டிக் காட்டி உள்ளார்.

இயற்கை எழல் மிக்க இலங்கையில் வாழ்ந்த பதுறுத்தீன் புலவர் தமது முகியித்தீன் புராணத்தில் சுவைக்கத் தக்க பல இயற்கைக் காட்சிகளை வருணித்துள்ளார்.

சிறகுகளை விரித்தவண்ணம் மயில்கள் ஆடுகின்றன. வெண்மையான அழகிய மலர்களில் இருந்து தேனைப் பருகிக் கொண்டிருந்த வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன. இந்த இனிய ஓசை மயில்களின் நடனத்துக்குப் பல்வேறு இசைகளை மீட்டுவது போல் அமைந்துவிடுகின்றது. சுதிகளாகி விடுகின்றன. இந்த மயில்களின் ஆட்டத்துக்கும் வண்டுகளின் சுதிக்கும் இசையும் பாணியில் குயில்களின் இனிய கீதங்கள் பொருத்தமாக அமைந்து விடுகின்றன. இந்நிகழ்ச்சிக்குத் தாளம் போடுவது போன்று அமைந்து விடுகின்றன, சிவப்பு நிறமாக வாய்களினால் தவளைகள் எழுப்பும் ஒலிகள். இத்தகைய ஓர் அருமையான நடனத்தைச் சிறுபாலனாக இருக்கும் போது முகியித்தீன்

ஆண்டவர்களும் அவர்களுடன் பக்கத்திலே அமர்ந்திருந்த தோழர் களும் கண்டு மகிழ்ந்தார்கள் என ஒரு செய்யுளில் இவ்வாறு பாடியுள்ளார் பதுறுத்தீன் புலவர்

விரிசிறை மயில்க ளாட வெண்மலர் நறவ மாந்தி
யரியினஞ் சுதிகண் மீட்ட வமைந்திசை குயில்கள் பாட
வரியினங் கனிக டன்னா லமைந்துமத் தாளம் போட
வரசரும் பாங்கர் யாரு மருநடம் புரியக் கண்டார்
(செறுவிளையாட்டுக் காரணப் படலம்:26)

இங்கே அரி என்னும் சொல் இரண்டு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. முதலில் வந்த அரி வண்டையும் இரண்டாம் அரி தவளையையும் சுட்டும். கம்பராமாயணத்தில் 'வல்ல தவளைகள்' என்னும் பொருளில் 'வல்லரி' என்னும் சொற்றொடர் பயன்படுத் தப்பட்டுள்ளது. (கிட்கிந்தா காண்டம் : கார்காலப் படலம்:115 (546) 'கனி' என்பது சிவந்த என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டு சிவப்பு நிறமான வாயைக் குறிக்க ஆகுபெயராக வந்துள்ளது.

இதே நடனக் காட்சியை ஒரு மலையிலே வேறுவிதமாக அமைத்துள்ளார் பதுறுத்தீன் புலவர் தமது முகியித்தீன் புராணத்தில். புள்ளிகளை உடைய வண்டுகள் இனிமையாகப் பாடிக் கொண்டிருக்கின்றன. வடிவான குயில்கள் சுதி மீட்டிக் கொண்டிருக்கின்றன. தவளைகள் கூட்டம் தாளம் போட்டுக் கொண்டிருக்கின்றது. அழகான நிறத்தையுடைய விரிந்த தோகை களை உடைய மயிலினங்கள் நடனமாடிக் கொண்டிருக்கின்றன. வரிகளைக் கொண்ட அழகிய கண்களை உடைய பெண்களின் நடையை ஒத்தனவாய் அந்த மயில்கள் திகழ்கின்றன. ஒழுங் காகவும் நிரைநிரையாகவும் அமைந்த மலர்களின் தேன் சிந்தும் வளம் மிக்கதாக அந்த மலை அமைந்திருக்கின்றது. இத்தகைய மலைக் காட்சியை இங்ஙனம் ஒரு செய்யுளில் வடித்துக் காட்டி உள்ளார் பதுறுத்தின் புலவர்.

வரியளி யிசைகள் பாட வரிக்குயிற் சுதிகண் மீட்ட
வரியினந் தாளங் கொட்ட வரிநிறக் கலாபத் தோகை
வரிவிழி மாத ரென்ன மயிலின நடன மாட
வரிமலர் நறவஞ் சிந்த வளங்கொளு முயர்ந்த வெற்பே
(இறாக்கிராச்சியத்து செய்குமார் வகுலு கேட்ட படலம்:18)

சிலப்பதிகாரத்தில் கண்ணகியை வருணிக்க முற்பட்ட இளங்கோவடிகள் அம்மாது சிரோமணியை இவ்வாறு விவரித்துள்ளார்.

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால்.........(2:72-80)

இதே பாணியில் பதுறுத்தீன் புலவர் தமது காப்பியத்திலும் பெண்ணை வருணித்துள்ளார். ஒரு பொருளை வருணிக்குமிடத்து ஆசிரியர் தாம் கருதிய குணம் முதலாகியவற்றின் மிக்க பொருளைக் கூட வைத்துச் சொல்லுவது ஒப்புமைக்கூட்டம் என்னும் அலங்காரம் என்பர். சமதன்மை உடையவைகளை ஒருங்கே சேர்த்துக் கூட்டி அமைத்தல் ஒப்புமைக் கூட்டம் எனப்படும். இரண்டு பாடல்களில் இவ்வாறு பெண்ணை வருணித்துள்ளார் பதுறுத்தீன்புலவர்.

கண்ணினின் மணியே கருத்துறு மறிவே
கனகமே யுயிர்தரு மருந்தே
விண்ணிடத் துலவா மதியமே யகத்தின்
வியன்கொளுஞ் சந்திர கலையே
தண்ணருங் கமலத் தடத்தினி லுலவாத்
தருக்கொளு மகத்துறுந் திருவே
யெண்ணகத் தறனே யிருதயக் கொழுந்தே
யெழிலுரு வெடுத்தபொற் கொடியே

வாடிய பயிர்க்கோர் மழையென வுதித்து
மருவுமென் குலத்திரு நிதியே
தேடரும் பொருளே வானவர் கடைந்த
திரைகட லுதித்ததெள் ளமுதே
தேடிய தவத்திற் றிரண்டுரு வெடுத்த
செந்திரு வனையமின் னரசே
நாடிய பொருளே யெனப்பல புகழ்ந்து
நன்குறப் போற்றிவாழ்த் தினரே.
(சின்கொண்டுபோன பெண்ணை மீட்டுக்கொடுத்தபடலம்:43-44)

திருமண விழாவின் ஊர்வலத்தைக் காணப் பெண்கள் வந்திருந்தனர். ஏழு பருவங்களையும் சேர்ந்த பெண்கள் சமுகமளித்திருந்தனர். கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டு இருந்தனர்.

நாற்றிசை பரப்பி னுற்ற நங்கைபே ரிளம்பெண்ணீறா
ஏற்றிடுஞ் சிறப்பி னோடும் எதிர்பவுஞ் சாக வந்தார்.

(மணம்புரிபடலம்:124)

இங்கே அல்குர்ஆன் சொல்லான 'பவுஞ்ச்' என்பது இடம் பெற்றுள்ளது. அறபு மொழியில் குழு என்னும் பொருளைக் கொண்டதாக பவுஜ் என்னும் சொல் அமைந்திருப்பதைக் காணலாம்.

பதுறுத்தீன் புலவரின் முகியித்தீன் புராணத்தின் முதலாம் பகுதியில் மணம்புரி படலம் அமைந்துள்ளது. அதே போன்று முகியித்தீன் புராணத்தின் இரண்டாம் பாகத்தில் கடலில் காயிபா வனை வருத்திகலியாணஞ் செய்வித்த படலம் இடம் பெற்றுள்ளது. இரண்டு படலங்களிலும் பெண்கள் வருணிக்கப்பட்டனர். இரண்டு படலங்களிலும் திருமண ஊர்வலங்கள் இடம் பெற்றுள்ளன. ஊர் வலங்களைக் கண்டுகளிக்கப்பெண்கள் கூட்டம் கூட்டமாகவந்திருந் தனர். ஏழு பருவத்தையும் சேர்ந்த பெண்கள் சமுகமளித்திருந் தனர். இரண்டு படலங்களிலும் ஏழு பருவங்களையும் சார்ந்த பெண்கள் வந்திருந்தமையைப் புலவர் வருணித்துள்ளார். திருமணப்படலத்தில் முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் திருமண நிகழ்ச்சி கற்பனைநயத்துடன் வருணிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பாகத்தில் உள்ள கலியாணஞ் செய்வித்த படலத்தில் கடலில் காணாமற் போன ஒருவனை முகியித்தீன் ஆண்டவர் அவர்கள் மீட்டுவித்துக் கலியாணஞ் செய்வித்தமை பற்றி விவரிக்கப் பட்டுள்ளது.

முகியித்தீன் புராணத்தின் முதலாம் பாகத்தில் உள்ள 20 ஆம் படலமான மணம்புரி படலத்தில் ஏழு பருவப் பெண்களும் தனித் தனிப் பாடல்களில் விவரிக்கப்பட்டுள்ளனர். இதே போன்று இரண்டாம் பாகத்தின் முதலாம் படலமாகிய (முகியித்தீன் புராணத்தை முழுமையாகக் கொள்ளின் அதன் 40ஆம் படல மாகிய) கடலில் காயிபானவனை வருத்திக் கலியாணஞ் செய்வித்த படலத்திலும் எழுபருவங்களையும் சார்ந்த பெண்கள் தனித்தனிப் பாடல்களில் வருணிக்கப்பட்டுள்ளனர். ஏழு பருவங்களில் முதலில் வருணிக்கப்படுபவர் பேதைப் பருவத்தைச் சார்ந்த பெண்கள். பேதைப் பருவத்தைச்சார்ந்த பெண்கள் எப்பொழுதும் தாயருடன்

வருவது வழக்கம். இவ்வாறு வந்து ஊர்வலத்தில் செல்லும் மணவாளன் ஊர்வலம் வரும் வாகனத்தில் தன்னையும் ஏற்றிக் கொண்டு செல்லுமாறு வேண்டும்படி தாயைக் கேட்பதாகப் பாடல் அமைந்துள்ளது. முந்திய படலத்தில் மணவாளன் குதிரையிலும் பிந்திய படலத்தில் மணவாளன் யானையிலும் பவனி வருவதாக முகியித்தீன் புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பேதையை வருணிக்கும் பாடலில் முதல் அடியில் மணவாளரான முகியித்தீன் ஆண்டவர் அவர்கள் பவனி செல்லும் வீதியின் சிறப்பும் இரண்டாம் அடியில் காப்பியத் தலைவரின் பெருமையும் மூன்றாம் அடியில் பேதையின் வேண்டுகோளும் நான்காம் அடியில் பேதை தன் தாயொடு பிதற்றுவதும் குறிப்பிடப் பட்டுள்ளன. அப்பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

கோதறு சாந்தம் பூசிக் குலவுமே னிலைக ளோங்கும்
வீதியிற் பவனி போதும் வெகுவரம் படைத்த வள்ளன்
மாதவர் பரியின் மீதி லெனையும்வைத் திடுமி னென்னப்
பேதையென் றொருத்தி பெற்ற தாயொடு பிதற்றி நின்றாள்.
(மணம்புரிபடலம்:141)

இரண்டாம் பாகத்தில் உள்ள கலியாணஞ் செய்வித்த படலத்தில் பேதைப்பெண் தன்னை அலங்கரித்துக்கொண்ட விதமும் மணவாளன் பவனி வரும் யானையில் தன்னையும் ஏற்றிச் செல்லுமாறு வேண்டும்படி அழுதவளாய் வயது முதிர்ந்தவளிடம் கேட்பதும் வருணிக்கப் பட்டுள்ளன.

மாரிடந் தடியா மெய்த்துகள் துடையா
மலர்க்குழல் வார்ந்திறுக்கு அறியா
வாரிச மலர்நேர் விழிக்குமை வரையா
மையலென் பதைமனத் தறியாச்
சீரிய பேதைப் பெண்மண வாளன்
சிறப்பைநோக் கவருட னியானு
மேருறு மியானை மிசையுறு வேனென்
றிருவிழா பிசிந்துரைத் தழுதாள்
(கடலில் காயிபானவனை வருத்திக்
கலியாணஞ்செய்வித்த படலம்128)

திருமணப்படலத்தில் ஒரு தெரு வழியாகச் செல்லும்பொழுது ஏழு பருவங்களையும் சேர்ந்த பெண்கள் குழுமி இருந்து கண் கொட்டாமல் ஊர்வலக்காட்சியைக் கண்டு களித்தனர் என்றும்

மற்றொரு தெருவில் திருமண ஊர்வலம் வரும் பொழுது ஏழு பருவங்களைச் சேர்ந்த மற்றொரு பெண்களின் கூட்டம் அங்கும் குழுமி இருந்தனர் என்றும் ஏழு பருவங்களையும் சேர்ந்த பெண் களை இரண்டுமுறை ஒரே படலத்தில் முகியித்தீன் புராண ஆசிரியர், பதுறுத்தீன் புலவர் கற்பனை நயத்துடன் வருணித் துள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது மூன்று வெவ்வேறு விதமான சொல்லாட்சியைப் பயன் படுத்தி வெவ்வேறு மூன்று நடையில் ஏழு பருவங்களையும் சேர்ந்த பெண்களைப் படிப்போர்க்குச் சலிப்புத்தட்டாத விதத்தில் பாடி யுள்ளமை புலவரின் சொல்லாட்சித் திறமையை எடுத்துக் காட்டு வதோடு கற்பனை ஆற்றலையும் எடுத்துக்காட்டுகின்றது எனக் கூறின் அது மிகையாகாது.

இங்கு மற்றொரு சிறப்பம்சமும் குறிப்பிடத்தக்கது. முகியித் தீன் புராணத்தில் திருமணம் பற்றிய வருணனைகள் இடம்பெற்ற படலம் முதலாம் பாகத்தில் திருமணப்படலம் என்றும் அதே போன்ற வருணனைகள் இடம்பெற்ற படலம் இரண்டாம் பாகத் தில் கலியாணஞ் செய்வித்த படலம் என்றும் வருணிக்கப் பட்டுள்ளன. உமறுப்புலவரும் தமது சீறாப்புராணத்தில் பாத்திமா திருமணப்படலம் என்றும் செயினம்பு நாச்சியார் கலியாணப் படலம் என்றும் இரண்டு திருமணங்களை வெவ்வேறு தலைப்புக் களில் வருணித்துள்ளார் என்பதும் ஈண்டு நோக்கற்பாலது.

முகியித்தீன் புராணத்தில் கேசாதிபாத வருணனை இடம் பெற்றுள்ளது. அங்கும் வருணிக்கப்பட்டுள்ளது முஸ்லிம் அல்லாத ஒரு பெண் பாத்திரம். தரீசா என்னும் முஸ்லிம் அல்லாத பெண் பாத்திரத்தையே பதுறுத்தீன்புலவர் கேசாபதிபாத வருணனைக்குப் பயன்படுத்தி உள்ளமையைக் காணலாம்.

தரீசா என்பவள் றூம் நகரைச் சேர்ந்தவள். மக்க மாநகரிலே பேரும் புகழும் பெற்று வாழ்ந்த மாதவர் செய்கு சன்ஹா அவர்கள் மக்கமாநகரில் இருக்கும் பொழுது ஒருநாள் தரீசா என்னும் பெண்ணைக் கனவில் கண்டார். பேரழகியாக அவள் இருந்தாள். றூம் நகருக்குச் சென்றபொழுது தரீசாவின் இல்லத்தை அடைந்தார் செய்கு சன்ஹ அவர்கள். முகியித்தீன் ஆண்டவரின் தலைமைப் பதவியை ஏற்க மறுத்தமையினால் சாப மிடப்பட்ட செய்கு சன்ஹா என்பவர் உணர்விழந்து அப்பெண் வயப்பட்டார். றூம் நகரில் தரீசாவை செய்கு சன்ஹா என்பவர் கண்டார். அந்தக்காட்சியை வருணிக்க முற்பட்ட பதுறுத்தீன்

புலவர் தரீசாவின் கேசாதிபாத வருணனையை நுணுக்கமாக விவரித்துள்ளார். முதலில் மூன்று செய்யுட்களைப் பயன்படுத்தி அவள் கிறித்தவ சமயம் என்னும் இஞ்சீல் மார்க்கத்தைச் சேர்ந் தவள் என இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

இந்த வண்ண மிலங்குறு மூரினிற்
சொந்த மாகிய தொன்மறை யோர்களிற்
சிந்து தித்திடு முத்தைச் செறித்தசொ
லந்த மாமறி யம்மலை கிஸ்ஸலாம்.

அந்தக் கற்புடை யாயிழை தம்வயின்
றந்தை யன்றிய தற்பர னேவலா
யுந்து தாயிலாம லுதித்துவிண்
ணிந்து நேர்வத னத்தரீ சாநபி.

அஞ்ச லற்றவ னாதிதன் றூதரா
யிஞ்சி லென்று மியன்மறை வேதராம்
வஞ்ச மற்றவர் மார்க்கத்தி னுட்படுந்
தஞ்ச மற்றத ரீசாவென் பாளரோ.

(செய்குசன்ஹாவுக்குச் சாபமிட்டுத் தீர்த்தபடலம்:55-57)

இச்செய்யுளில் ஈசா நபி அவர்களின் தாயார் மறிய மலை கஸ்ஸலாம் என்பதும் ஈசாநபி எவ்வாறு அல்லாஹ்வின் அருளால் பிறந்தார் என்பதும் இறைவனின் தூதர் ஈசா நபி என்பதும் அவர் போதித்த மார்க்கம் இஞ்சில் மார்க்கம் என்பதும் அந்த மார்க் கத்தைச் சேர்ந்தவளே தரீசா என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறு முப்பத்தொரு உறுப்புக்களைக் கேசாதிபாதமாக பதுறுத்தீன் புலவர் வருணித்துள்ளார். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய வேறு எந்தக் காப்பியத்திலும் பதுறுத்தீன் புலவரின் முகியித்தீன் புராணத்தில் உள்ளதுபோல் முழுமையான கேசாதி பாத வருணனையைக் காணமுடியாதெனின் அது மிகைபடக் கூறும் கூற்றன்று. ஒவ்வோர் உறுப்பையும் வருணிக்கும்பொழுது பயன்படுத்தப்பட்டுள்ள உவமை உருவகங்களைக் கொண்ட செய்யுட்களில் கற்பனை வளமும் அணிநயமும் கருத்துச் சிறப்பும் மேலோங்கி இருப்பதைக் காணலாம்.

மிகமிக அருமையாக இவ்வாசிரியர் பயன்படுத்திஉள்ள ஒருசொல் இவனி என்பதாகும். அவனி என்பது உலகம். ஆனால் பதுறுத்தீன் புலவர் உலகத்தைக் குறிக்க இவனி என்ற சொல்லை உபயோகித்

துள்ளார். ஒட்டக்கூத்தர் தமது குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் இவனி என்னும் சொல்லை இதே கருத்தில் பயன்படுத்தி உள்ளமை ஈண்டு நோக்கற் பாலது. பதுறுத்தீன் புலவர்.

இவனியில் வாழ்வுபெற்ற செய்குமீ றானெனன் போனே.
(பாயிரம்:24)

என இவனி என்னும் சொல்லை இங்ஙனம் அமைத்துப் பாடி உள்ளார்.

உபம் என்பது இரண்டு என்னும் பொருள்படும். இரட்டை என்றும் பொருள் கொள்ளலாம். எல்லாப் படைப்புக்களையும் இரண்டு இரண்டாகத்தான் நாம் படைத்தோம் என எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹ் அவனது திருமறையாம் திருக்குர் ஆனில் குறிப்பிட்டுள்ளான். (அல்குர்ஆன்: 13:3;39:6) இக்கருத்தைக் கருத்தில் கொண்டே முகியிதீன் ஆண்டவர் அவர்கள் கூற்றாக அவர்கள் வாயிலாக பதுறுத்தீன் புலவர் ஒரு பாடலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இபமுத லெறும்பீ றாக விவணுறுஞ் சீவன் யாவு
முபமுறப் படைத்திங் கூணு முறக்கமுங் கவலை மற்று
மிதமுற வெழுதி வைக்கு மிலௌகெனும் பலகை யென்ற
னபமுறு நாட்ட முன்பின் னாட்டிய தன்றோ வென்றும்.
(மகத்துவம் பேசிய படலம்:14)

இச்செய்யுளில் யானைமுதல் எறும்பீறாக உள்ள உயிரினங்களையும் இரண்டிரண்டாக படைக்கப்பட்டமையும் ஊண் உறக்கம் கவலை முதலியன நிகழ்வது பற்றி லௌகுல்மஹ்பூல் என்னும் விண்ணகப் பலகையில் முன்கூட்டியே எழுதப் பட்டுள்ளமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

சங்கசாரம் என்னும் ஒரு சொல்லை ஆசிரியர் அகில உலகமும் என்னும் பொருளில் பயன்படுத்தி உள்ளார். 'சங்சார' என்ற ஒரு சொல்லைப் பாலி மொழியிலும் வடமொழியிலும் பயன்படுத்தப் படுவதைக் காணலாம். வேற்றுமதக் கொள்கைகளில் 'உலகம் என்னும் கடலில் தத்தளிப்பதிலிருந்து மீள வேண்டும்' என்பதை சங்சார என்னும் கடலிருந்து மீட்சி பெறல் வேண்டும் எனக் குறிப் பிடப் பட்டிருப்பதைக் காணலாம். எனவேதான் பதுறுத்தீன் புலவரும் அதே கருத்தில் சங்கசாரம் என்பதை ஒரு செய்யுளில் பயன்படுத்தி உள்ளார்.

குரைதிரைப் பவத்தி னுற்ற குடிசங்க சார மென்னும்
திரையினில் அழுந்தி நீந்தத் திறனிலா முங்கி யேங்கி
(பிரயாணப்படலம்:70)

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங் களுள் செய்யுட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதலிடம் வகிப்பது புதுகுஷ்ஷாம். இக்காப்பியத்தில் 6786 செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. இந்த எண்ணிக்கை அடிப்படையில் இரண் டாம் இடத்தை வகிப்பது சீறாப்புராணம். இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள செய்யுட்களின் எண்ணிக்கை 5027 ஆகும். பதுறுத்தீன் புலவரின் முகியித்தீன் புராணத்தில் 3983 செய்யுட்கள் இடம் பெற்றுள்ளமையால் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப் பியங்களுள் அது மூன்றாவது இடத்தை வகிக்கின்றது.

# திருமணிமாலை

செய்கு அப்துல்காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்களால் இயற்றப்பட்ட மூன்றாவது காப்பியம் திருமணிமாலை என்பதாகும். இக்காப்பியம் இபுறாகீம் நபி (அலை) அவர்கள் வாழ்க்கையை விவரிக்கின்றது. ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களுள் ஒருவரானவர் நபி இபுறாகீம் (அலை) அவர்கள். இறைத்தூதர்கள் என வழங்கப்பெறும் முறுசலான நபிமார்களுள் ஒருவர். இறைநெறியைப் போதிக்கும் முயற்சியில் பல இன்னல்களுக்காளான உலுல் அசுமி என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப் பெற்றவர். இபுறாகீம் நபி (அலை) அவர்கள் பின்பற்றிய மார்க்கம் ஹனீப் என்றும் தஹன்னுத் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. தஹன்னுத் என்னும் இறைநெறியை அறிந்திருந்தார்கள் பெருமானார் முகமது (சல்) அவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நபி இபுறாகீம் கலீலுல்லா அவர்களுடைய இயற்கையுஞ் செயற்கையுமாகிய நிகழ்ச்சிகளை வருணிப்பது திருமணி மாலை.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும் அளிப்பது இக்காப்பியம், இவற்றைப் பயக்கும் இந்நூல் எனக்கருதி விருத்தப்பாக்களில் மாலையாகப் புனைந்து இக்காப்பியம் இயற்றப்பட்டது எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார். விருத்தப் பாக்களாகிய மாலையாகப் புனையப்பட்ட இத்திருமணிமாலையை எவரும் பூண்டுகொள்வர் என்னும் கருத்தை உடைய காரணத்தினாலே இந்நூல் இயற்றப்பட்டது. இக்கருத்துக்களையே ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இயல்புறுந் தரும மாதி இயைபுறும் பொருள்கள் நான்கும்
பயனுறுந் தகுதி நோக்கி பயிற்சியி லறிவுண் டாமென்
றுயர்மன நினைவி னாற்பா வொழுகிய விருத்த மாலை
அயர்விலா தெவரும் பூண்பான் அருங்கவி பனுவல் செய்தான்
(கடவுள் வாழ்த்து:26)

இபுறாகீம் நபி (அலை) அவர்களின் வரலாற்றைக் கவிதை யாகப் பாடுவதற்குப் பொருளுதவி புரிந்தவர் பெருஞ் செல்வந்த ராகத் திகழ்ந்த கபீபு முகம்மது என்பவர். பெருமளவில் பொருள் வழங்கிய புரவலர் வாழ்க வாழ்க எனக் கடவுள் வாழ்த்துப் பாடலிலே ஆசிரியர் இவ்வாறு வாழ்த்தி உள்ளார்.

இருநிதி பெருக மெய்மை இயைதரும் இபுறா கீந்தந்
திருநிதி பெருக வாகைத் திறத்தொடும் புனைதல் செய்வான்
வருநிதி நிறை கபீபு முகம்மதும் வனைந்து நின்றார்
தருநிதி பெருக மேன்மை தழைத்திட வாழி வாழி.
(கடவுள் வாழ்த்து:36)

கபீபு முகம்மது என்னும் புரவலர் காயல்பதியைச் சார்ந்தவர். அழகிய வளம் மிக்கது அந்நகர். அத்தகைய சிறப்பு நகருக்கு அதிபதியாக இருந்தவர் இஸ்மாயில் என்பவர். அவருடைய கண் மணியென விளங்கியவர் திருமணிமாலை கொடை நாயகர் கபீபு முகம்மது அவர்கள். அத்தகைய வள்ளல் கபீபு முகம்மது என்பவர் திருமணிமாலை இயற்றுவதற்குப் பெருமளவில் பொருளுதவி செய்தார். இவ்வாறு புரவலரின் தந்தையர் யார் என்பதையும் அவர் எந்நகரத்தைக் சார்ந்தவர் என்பதையும் ஒரு பாடலில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கொடை நாயகர் கபீபு முகம்மது அவர்களின் பிறப்பகம் புகழ் மிக்க நகராம் வகுதையாம். இக்குறிப்பு.

கீர்த்தியின் வகுதைப் பதி .........
(புவனம் விளங்கிய படலம்:58)

என ஒரு பாடலில் இடம் பெற்றுள்ளது. மற்றொரு பாடலில் புகழினை நல்கும் வகுதை என்பதை

புகழ்தரு வகுதை ............

என வருணிக்கப்பட்டுள்ளது.

திருமணிமாலையின் கொடைவள்ளலின் தந்தையார் பெயரும் இக்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் பெயர் இசுமாயில் என்பதும் சுட்டப்பட்டுள்ளது. அவருடைய கண்மணியாகப் பிறந் தவர் கபீபு முகம்மது என்பவர் என்பது.

சீர்த்தியின் வகுதைப் பதியிசு மாயீல்
திருவிழிக் கொருமணி யென்ன

(புவனம் விளக்கிய படலம்:58)

என வருணிக்கப்பட்டுள்ளது. வேறொரு பாடலில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் இசுமாயில் என்பவர் என்பதும் அவரின் அளவிலா மகிழ்ச்சிக்குக் காரணமாக அமைந்திருந்தார்கள் கபீபு முகம்மது என்னும் அவர் மைந்தர் என்பதும் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

புகழ்தரும் வகுதை மன்னன்
பொருவிலா இசுமா யீல்மெய்
மகிழ்தரு மணிகபீபு முகம்மது............

(நகர் நீங்கு படலம்:61)

காப்பியப் புலவர் தத்தம் காப்பியங்களில் பெண்களைக் கேசாதிபாதமாக அல்லது பாதாதிகேசமாக வருணிக்கத் தவறுவதில்லை. இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தத்தம் காப்பியங்களை இயற்றிய ஆசிரியரும் அத்தகைய வருணனையைத் தத்தம் காப்பியங்களில் இடம் பெறச் செய்துள்ளனர். பெரும்பாலும் அவை கேசாதிபாத வருணனைகளாகவே அமைந்திருப்பதைக் காணலாம். அத்தகைய வருணனைகளைக் கூட அவர்கள் முழுமையானதாக அமைக்கவில்லை என்பதும் உணரக்கூடியதாக இருக்கின்றது. இஸ்லாமிய நெறியைப் பேணவே அவர்கள் அவ்வாறு பெண் பாத்திரங்களைப் படைத்துத் தந்துள்ளனர். திருமணி மாலை என்னும் காப்பியத்தில் அதன் ஆசிரியர் சேகுனாப்புலவர் அவர்கள் ஆசரின் பாரியாரை (பாட்டுடைத் தலைவரான இப்றாகீம் நபி அவர்களின் தாயாரான அவுசா அம்மையாரை) இப்றாகீம் நபி அவர்கள் பிறக்குமுன் இருந்த நிலையில் கேசாதிபாதமாக வருணித்துள்ளார். ஆனால் அவ் வருணனைகூட முழுமையானதாக அமையவில்லை. அவ்வாறு வருணிக்கும் பொழுது பல உவமைகளைக் கவி நயம் பெறக் கையாண்டுள்ளார் ஆசிரியர் எனக் கூறலாம். கேசாதிபாதமாக இபுறாகீம் நபி அவர்களின் தாயாரின் சில உறுப்புக்களை மாத்திரம் அவர் வருணித்துள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள் விரலைச் சூப்புவது வழக்கம். அவ்வாறு ஒரே விரலையே பெரும்பாலும் சூப்புவது உண்டு. அவ்வாறு செய்வதில் அவை அலாதியான ஒரு சுவையைப் பெறுகின்றன. இபுறாகீம்

நபி அவர்களும் குழந்தையாக இருந்த சமயம் விரல் சூப்பும் பழக்கத்தைப் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் ஒரு விரலை மாத்திரம் சூப்பவில்லை. கையில் உள்ள ஐந்து விரல்களையும் சூப்பிக் கொண்டிருந்தார்கள். அவ்விரல்களிலிருந்து அவர்களுக்கு சுவன நாட்டுச் சுவைகள் அளிக்கப்பட்டன. அவர்கள் தங்கள் பெரு விரலைச் சூப்பும்பொழுது தேனின் சுவையைப் பெற்றார்கள். சுட்டு விரலிலிருந்து பாலின் சுவையைப் பெற்று மகிழ்ந்தார்கள். இளகக் காய்ச்சி வெல்லத்திலிருந்து பெறப்படும் சுவையை நடுவிரலைச் சூப்புவதன் மூலம் பெற்று மகிழ்ந்தார்கள். நடுவிரலுக்கு அயலில் உள்ள மோதிர விரலிலிருந்து அவர்களுக்கு வெண்ணெயின் சுவை கிடைத்தது. சிறு விரலிலிருந்து நீரைச் சுவைக்கும் பேற்றைப் பெற்றார்கள். இபுறாகீம் நபி அவர்கள் தங்கள் அன்னையாரின் மடியில் குழந்தையாக இருந்தபொழுது புதுமையான இந்த அனுபவங்களைப் பெற்றார்கள். இக்கருத்துக்களையே சேகுனாப் புலவர் தமது திருமணி மாலை என்னும் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள ஒரு பாடலில் இவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார்.

திருவனை மடியிற் றிகழ்தருங் குழவிச்
  செழுங்கர மலர்விர லைந்து
மருமலி வாயிற் சுவைத்திடத் தேனும்
  பெருவிரல் வழிதர வடுத்து
வருவிரற் பானம் நடுவிரற் பாகு
  மயல்விரல் வண்ணவெண் ணெய்யும்
ஒருவிர நீருஞ் சுவன நாடுடைய
  வொழுகியூ றியவளத் துடனே

(புவனம் விளக்கிய படலம்:62)

நோன்புப் பெருநாள், பக்ரீத் என்று வழங்கும் ஹஜ்ஜுப் பெருநாள் போன்ற நாட்களில் முஸ்லிம் மக்கள் தக்பீர் ஓதுவர். இது எங்ஙனம் ஏற்பட்டது என்பதைப் புலவர் நாயகம் திருமணி மாலைப் பாடல் ஒன்றில் விளக்கி உள்ளார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நபி இபுறாகீம் அவர்கள் தமது புதல்வர் நபி இஸ்மாயில் அவர்களைக் குர்பானி செய்து அர்ப்பணிக்க அழைத்துச் சென்றார்கள். எல்லா ஆயத்தங்களையும் செய்து புதல்வரைத் தரையில் கிடத்திக் கழுத்தை அறுக்க முற்பட்டார்கள். ஆனால் கூர்மையான அக்கத்தியினால் புதல்வரின் கழுத்தை அறுக்க முடியவில்லை. அப்பொழுது அமரர்கோன் ஜிபுறீல்

அவர்கள் புதல்வருக்குப் பதிலாக ஓர் ஆட்டை வைத்தார்கள். இபுறாகீம் நபி அவர்களும் அதனை அறுத்துப் பலியிட்டார்கள். அல்லாஹ்வின் அருளால் நிகழ்ந்தது இச்சம்பவம். அல்லாஹ் நபி இபுறாகீம் அவர்களைச் சோதித்தான். அந்தச் சோதனையில் நபி இபுறாகீம் அவர்கள் வெற்றி பெற்றார்கள். இவ்வாறு தங்களது புதல்வருக்கு ஈடாக ஓர் ஆடு இறைவனின் அருளால் பலியிடப் பட்டதை அறிந்து இபுறாகீம் நபி அவர்கள் அவனைப்புகழ்ந்து 'அல்லாஹ் பெரியவன்' எனப் பொருள்படும் 'அல்லாஹு அக்பர்' என்பதை மூன்று முறை கூறினார்கள். இதனைச் செவிமடுத்த புதல்வர் இஸ்மாயில் நபி அவர்கள் 'வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ் அன்றி வேறில்லை, அல்லாஹ் பெரியவன்' என்று பொருள்பட 'லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்' என்று உச்சரித்தார்கள். தந்தையும் தனையனும் இவ்வாறு கூறிய தைக் கேட்டுக்கொண்டிருந்த ஜிபுறீல் அவர்கள் 'அல்லாஹ் பெரியவன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்' என்று பொருள்பட' 'வல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து' என்று முழங்கினார்கள். இந்த தக்பீர் முழக்கமே ஹஜ் பயணத்தின்போது ஆண்டுதோறும் மக்க மாநகரிலும், ஏனைய விழாக் காலங்களில் உலகின் நானா பகுதிகளிலும் இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. இங்ஙனம் தோன்றியது தக்பீர் முழக்கம் என்பதனை ஒரு செய் யுளில் சேகுனாப்புலவர் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

அக்கண நபிஅல் லாகு அக்குபறென் றொருமுன் றோத
இக்கணஞ் சொல்ல லாயி லாகஇல் லல்லாஃ ஒல்லாகு
அக்பறென் றன்பிற் றோன்றல் அறையவே பின்அல் லாகு
அக்குபர்ஒ லில்லா கில்கம் தென்றனர் அமரர் கோமான்.

(இசுமாயீல் நபியைக் குறுபான் செய்த படலம்:123)

# இறவுசுல்கூல் படைப்போர்

படைப்போர் என்பது ஒரு வினைத்தொகை. படைத்த போர், படைக்கிற போர், படைக்கும் போர் என முக்காலத்தையும் குறிக்கக் கூடியதாக அமைந்திருப்பதைக் காணலாம். படைப்போர் நூல்களுக்கு இடப்பட்டுள்ள பெயர்களைப் பொறுத்தவரையில் படைப்போர் என்பதை வினைத்தொகையாகக் கொள்வது பொருத்தமானதாகத் தோன்றுகிறது. படைப்போர் நூல்கள் எல்லாம் இஸ்லாத்துக்கும் இஸ்லாம் அல்லாத தன்மைக்கும் இடையே நிகழ்ந்த போர்களையே வருணிக்கின்றன. அத்தகைய படைப்போர் நூல்கள் அனைத்தும் இஸ்லாத்துக்கு எதிராகப் போரிட்ட முஸ்லிம் அல்லாதாரின் பெயர்களாலேயே அழைக்கப் பட்டுள்ளன. படைப்போர் நூல்களிலே விவரிக்கப்பட்டுள்ள எல்லாப் போர்களும் எதிரிகளால் ஆரம்பிக்கப்பட்டவை என்று தொனிக்கும்பொருட்டே படைப்போர்கள் அனைத்தும் இஸ்லாத்தின் எதிரிகளின் பெயர்களைக் கொண்டு அழைக்கப்படு கின்றன. இஸ்லாம் ஈடுபட்ட போர்கள் அனைத்துமே தற்காப்புப் போர்களே என்பதும் போர்கள் எல்லாம் எதிரிகளால் ஆரம்பிக்கப் பட்டவையே, படைக்கப்பட்டவையே என்பதும் படைப்போர்கள் அவ்வாறு பெயர் பெற்றமைக்குரிய காரணமாகும். இந்தப் படைப் போர் ஏனைய படைப்போர் நூல்களிலிருந்து வேறுபட்டது. இந்தப் படைப்போர் நூலிலே காப்பிய இலக்கணங்கள் அனைத்தும் ஒருங்கே அமைந்துள்ளது, இந்தப் படைப்போர் இரண்டு பெயர் களால் அழைக்கப்படுகின்றது. ஒன்று சல்காப் படைப்போர் என்பது. மற்றது இறவுசுல்கூல் படைப்போர் என்பது. இக்காப்பியத் தின் முகப்புப் பக்கத்தில் "இஃது எல்லா உலகங்களையும் உயிர்

களையும் படைத்தாளுகின்ற வல்ல நாயகனான அல்லாகுத்த ஆலாவின் உண்மைத் தூதராகிய முகம்மது நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய இயற்கையுஞ் செயற்கையுமாகிய காரண வதிஜய திட்டாந்திர புதுமையை, அறிந்தீமான் கொண்டி சுலாத்திலான கற்புநாயகி சல்கா என்னும் பெயரைக் கொண்ட லோகதாய், அமர் செய்து வெற்றியடைந்த ‘சல்காப் படைப்போர்’ என்று வழங்கா நின்ற இறவுசுல்கூல் படைப்போர்'' என இக்காப் பியத்திற்கான இரண்டு பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு பெண்ணின் பெயரால் அழைக்கப்படும் முதற்காப்பியம் இது வாகும். இக்காப்பியத்தில் அரும்பெருஞ்செயல்கள் புரிந்த சல்கா அம்மையின் சிறப்பைக் கருதி அவர் பெயரால் இக்காப்பியம் சல்கா படைப்போர் என அழைக்கப்பட்டிருக்கலாம். சல்கா அம்மையார் கூட முதலில் இஸ்லாத்தை எதிர்த்துப் பின்னர் இஸ்லாத்தைத் தழுவி இறவுசுல்கூலை எதிர்த்தமையால் சல்காவினால் படைக்கப் பட்ட போர் எனக் கொண்டு இக்காப்பியம் முதலில் சல்கா படைப் போர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். ஆனால் சல்கா அம்மை யார் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் அப்பெயர் பொருத்தமில்லா திருப்பதை உணர்ந்திருக்கலாம். ஆகையினால் அப்பெயரைக் குறிப்பாகவும் இஸ்லாத்தின் பரம விரோதியாகப் போரிட்டு மறைந்த இறவுசுல்கூலின் பெயரால் வெளிப்படையாகவும் அழைத் திருக்கலாம். சல்கா படைப்போர் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டால் அடிப்படைக் கொள்கையான இஸ்லாத்தின் பரம விரோதியின் பெயரால் படைப்போர் நூலுக்குப் பெயரிடும் கொள் கைக்கு முரணாக அமைந்திருக்கலாம். எனவேதான் இக்காப்பியத் துக்கு இறவுசுல்கூல் படைப்போர் எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளது. பெரும்பாலும் படைப்போரில் எவன் பெயரால் அழைக்கப்படுகின்றதோ அவன் போரில் மடிந்து விடுவதாகப் படைப்போர் விவரிக்கிறது. சல்கா அம்மையார் போரில் மடிந் திருந்தால் சல்கா படைப்போர் பொருத்தமானதாயிருக்கும் என ஆசிரியர் கருதியிருந்தார்போலும். ஆதலினால் இஸ்லாத்தை எதிர்த்துப் போரிட்டு மறைந்த இறவுசுல்கூலின் பெயரால் இக் காப்பியத்துக்கு இறவுசுல்கூல் படைப்போர் பொருத்தமானது என்று ஆசிரியர் கருதியிருக்கலாம். இதன் மூலம் பிரதானமான ஓர் இஸ்லாமியத் தமிழ்க் கவிமரபும் பேணப் பட்டிருப்பதையும் நாம் காண்கிறோம்.

இறவுகல்கூல் படைப்போர் குஞ்ஞுமுசு லெப்பை காஜி ஆலிம் புலவரால் இயற்றப்பட்டது. இவர் செய்யிது முகம்மது என்பவரின் புதல்வர். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியவர். அறபு அறிஞர் எனப் பொருள்படும் ஆலிம் என்னும் பட்டம் பெற்றவர். எனவே அறபு மொழியில் வல்லவராகத் திகழ்ந்தவர். தந்தையோடு போர் புரிந்த பெண்ணான செய்யிதத்து என்பாரின் சரிதையான செய்யிதத்துப் படைப்போர் என்னும் நூலை இயற்றியவர். பூவாறு என வழங்கப்பட்ட குழந்தை ;நகரைச் சேர்ந்தவர். இவருக்கு இருந்த மலையாளத் தொடர்பினாலே இவருடைய பேரில் உள்ள குஞ்ஞு என்பது பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

இறவுசுல்கூல் படைப்போர் என்னும் காப்பியத்திலே முகப்பு அட்டையிலே இரண்டு காப்புச் செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்தில் இடம் பெறத் தவறிய இரண்டு செய்யுட்கள் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளன. இந்நூலியற்றப்பட்ட நாளினை இவ்விரண்டு செய்யுட்களும் கொண்டிருக்கின்றன. இக் காப்பியத்தில் 45 படலங்கள் இடம் பெற்றுள்ளன. எல்லாம் சேர்த்து இக்காப்பியத்தில் 2383 திருவிருத்தங்கள் அமைந்துள்ளன. ஒரு படலத்தில் உள்ள ஆகக் குறைந்த எண்ணிக்கை 10 செய்யுட் களாகும். மிகக்கூடிய எண்ணிக்கை 189 செய்யுட்களாகும். கடவுள் வாழ்த்து, நாட்டு நகர வருணனையைத் தொடர்ந்து வாழ்க்கை வரலாறு கூறும் ஏனைய காப்பியங்களில் உள்ளது போன்று மூதாதையர் பற்றிய படலம் இக்காப்பியத்தில் இல்லை. சீறாப் புராணத்தில் தலைமுறைப் படலம் உள்ளது. காப்பியத்தில் தாம் கூறவந்த வரலாற்றுடன் தொடர்புடைய போர் நிகழ்ச்சியைக் கூற ஆசிரியர் முற்பட்டுள்ளார். அதனாலேயே மதியாள் படலத் துடன் சரிதை ஆரம்பமாகின்றது. இறவுசுல்கூலின் (மகாரிக்) கொடுமையை விவரித்து பின்னர் கூறப்படும் போருக்குக் களம் அமைப்பதாக விளங்குகிறது முதியாள் படலம்; அடுத்து சரிதை விறுவிறுப்பாய்த் தோன்ற செய்யுட்கள் அமைந்துள்ளன.

இக்காப்பிய ஆசிரியர் அறபு அறிஞர் ஆதலால் காப்புச் செய்யுளை அழகாக ஆரம்பித்துள்ளார். அல்குர்ஆனின் நுழைவாயிலாகவும் பொழிப்பாகவும் அமைந்துள்ள முதல் அத்தியாயமான சூறத்துல் பாத்திஹாவின் தொடக்கமாயுள்ள திருவசனத்தின் பொழிப்புரையை அடிப்படையாக வைத்து முதலாவது காப்புச்

செய்யுள் அமைந்துள்ளது. அல்குர்ஆன் பாத்திஹா சூறாவின் முதலாவது திருவசனத்துக்குத் தமிழில் இவ்வாறு கருத்துக் கூறலாம்.

''எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே
அவன் அகிலங்கள் அனைத்தையும்
படைத்துப் போசித்துப் பரிபக்குவப்
படுத்துபவன்'' (1:1)

இக்கருத்துக்கள் இறவுசுல்கூல் படைப்போரில் உள்ள முதலாவது காப்புச் செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளன.

எல்லாத்துதி யும்புகழ் எவ்வகையும்
நல்லாலம னைத்துடந டாத்தியருள்
அல்லாவொரு வற்கவை யாகுமெனுஞ்
சொல்லானது கொண்டுதொ டங்குதுமால்.

அடுத்த காப்புச் செய்யுளில் பாத்திஹா சூறாவின் இரண்டாவது திருவசனத்தில் பொதிந்துள்ள கருத்தினையும் விரிவுபடுத்தி விளக்கிச் சிறப்பாக அதனை அமைத்துத் தந்துள்ளார். வழிபடுபவர்க்கும் வழிபடாதவர் அனைவருக்கும் ஒன்று போல் கிருபை செய்பவன் அல்லாஹ் இது இம்மையில் நடைபெறுவதாகும். ஆனால் மறுமையில் தன்னை வழிபட்டவர்க்கு மிகுதியாகக் கிருபை செய்பவன் அல்லாஹ். அத்தகையோருடைய மனக் கவலையைத் தீர்ப்பவன் அவன். எனவே அத்தகையோனுடைய பெயரைக்கொண்டு ஆரம்பித்துள்ளார் ஆசிரியர். தமது தந்தையும் தந்தையைச் சார்ந்தவர்களும் பின்பற்றிவந்த இஸ்லாம் அல்லாத தன்மையை (குபிர்)க் கடிந்தவள் சல்கா. அவர்களைப் போரில் வென்றவர் சல்கா. வென்று இஸ்லாத்தைத் தழுவியவர் சல்கா. நபிகள் நாயகம் (சல்) அவர்களைப் பணிந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் சல்கா. அத்தகைய சிறப்பு மிக்க சல்காவின் சரிதையை அல்லாஹ்வின் பெயரை முதலில் சாற்றி ஆரம்பித்துள்ளார், ஆசிரியர் குஞ்ஞு மூசுப்புலவர். இக் கருத்துக்களே இரண்டாவது காப்புச் செய்யுளில் இவ்வாறு ஆரம்பித்துள்ளன.

தனக்குவழிப் பட்டவர்க்கும் வழிப்ப டாத
சட்சமயத் தவர்களுக்கு மொன்று போலக்
கனக்கவிரை கடலுலகிற் கிருபை செய்தோர்
கருதிவழிப் பட்டவர்க்கா சிறத்தி னன்பாய்

மனக்கவலை தீர்த்துமிகு கிருபை செய்யும்
வல்லனசு மாவதனாற் றொடங்கித் தந்தை
இனக்குபிரர்க் கடிந்துசல்கா பொருது வென்றெம்
மிறசூலைப் பணிசரித மியம்பு வாமே.

உலகத்தவர் அனைவருக்கும் அன்பும் இறுதி நாள் முஸ்லிம் களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அருளும் பாலிப்பவன் அல்லாஹ் எனப் பொருள்படும் சூறத்துல் பாத்திஹாவின் இரண்டாம் திருவசனத்தில் பொதிந்துள்ள கருத்துக்களை இரண்டாம் காப்புச் செய்யுளில் அமைத்துள்ளார். சூறத்துல் பாத்திஹாவின் இரண் டாவது திருவசனம் தமிழில் இவ்வாறு பொருள்படும் எனலாம்.

'அளவற்ற அருளாளன்: நிகரற்ற அன்புடையோன்' (1:2)

அல்ஹம்துசூறா என்னும் பாத்திஹா சூறாவில் இவ்விரு திருவசனங்களும் அறபுமொழியில் இவ்வாறு அமைந்துள்ளன.

''அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்
அர்றஹ் மானிர்றஹீம்'' (1:1-2)

பொதுவாக முஸ்லிம் தமிழ்க்காப்பிய ஆசிரியர்கள் தத்தம் கடவுள் வாழ்த்துப் படலங்களில் அல்லாஹ்வைப் புகழ மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து செய்யுட்களையே ஒதுக்குவர். ஆனால் குஞ்ஞுமூசு ஆலிம்புலவர் தமது காப்பியத்தில் அல்லாஹ் வைப் புகழ்ந்து அவன் துணையை நாடி பதினொரு செய்யுட்களில் பாடி உள்ளார்.

ஒரு செய்யுளில் கன்னி சல்கா போரினைப் பாட, தமது கண் களால் பார்க்க முடியாத, ஒருவருடைய கண்களுக்கும் தோன்றாத ஏகனான அல்லாஹ்வைப் புகழ்ந்து அவன் பாதுகாப்பைக் கோரி உள்ளார் ஆசிரியர். ஏழேழாக அமைந்துள்ள விண்ணுலகு, கடல், நரகு, மண்ணுலகு எல்லாமே நபிகள் பெருமானார் முகம்மது (சல்) அவர்களை வாழ்த்தும். அத்தகைய பெருமானாரைக் கண்ணாரக் கண்டுகளித்த கன்னி சல்கா என்னும் பெண்மணி ஈடுபட்டு இஸ்லாத்துக்கு வெற்றி ஈட்டிக்கொடுத்த போரினைப் பற்றிப் பாட ஏகனான அல்லாஹ்வைப் பாதுகாப்பு அளிக்குமாறு வேண்டி உள்ளார் காப்பிய ஆசிரியர் குஞ்ஞுமூசு ஆலிம் புலவர். இக்கருத்துக் களைக் கொண்ட பாடல் வருமாறு:

விண்ணுல கவையே ழேழு
விரிகட னரகே ழேழு
மண்ணுல கவையோ டெல்லாம்
வாழ்த்தியே விறசூல் பாதங்
கண்ணுறக் காண்க வுற்ற
கன்னிசல் காபோர்ப் பாட
எண்ணுதற் கடங்கா தான
ஏகனே காப்பு நீயே

(கடவுள் வாழ்த்து:2)

குஞ்ஞுமூசுப் புலவரின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் புதுமை யான கருத்துக்களைக் கொண்டுள்ளன. இஸ்லாமிய அடிப்படை யில் தோன்றிய ஏனைய தமிழ்க் காப்பியங்களில் இல்லாத பாணி யில் இறவுசுல்கூல் படைப்போரில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் அமைந்துள்ளன. ஏனைய முஸ்லிம் தமிழ்க் காப்பிய புலவர் அல்லாஹ்வின் பண்புகளையும் அவனின் அழகிய திருநாமங்களின் கருத்துக்களையும் அமைத்துப்பாடி இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மரபினை ஏற்படுத்தி உள்ளனர். ஆனால் இவ்விலக்கிய மரபி னுக்குச் சற்று மாற்றமாகவே குஞ்ஞு மூசு ஆலிம் புலவரின் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் அமைந்துள்ளன. மனிதனின் பிரதான மான உறுப்புக்களான உள்ளம், காது, நா, கண், வயிறு, மூக்கு, மனிதனிடம் அமைந்துள்ளன என்பதையும் அவற்றின் சிறப்புக் கருமங்கள் எவை என்பதையும் விளக்கி உள்ளார். அல்லாஹ்வைப் பற்றி நினைப்பதற்கே மனம் படைக்கபபட்டுள்ளது. அவன் தன் திருமுறையின் இனிய ஒலியைக் கேட்பதற்கே மனிதன் காதைப் பெற்றுள்ளான். மற்றோர் உறுப்பான நாவினை மனிதன் பெற்றி ருப்பது எல்லாம் வல்ல இறைவனை புகழ்வதற்காகவேயாகும். திருமறையின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ள நூல்களைப் பூரண மாகப் பார்ப்பதற்காகவே மனிதனுக்கு கண்கள் பெரும் பேறாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. வயிற்றினை ஆண்டவன் ஏன் உருவாக் கினான் எனின் மனிதனுக்கு எப்பொழுதும் வேளைக்குவேளை ஏற்படும் பசியைத் தீர்ப்பதற்காகவேயாம்.

உயிர்வாழ இன்றியமையாதது மூச்சு. அந்த மூச்சை வாங்கி விடுவதற்கே மனிதனுக்கு மூக்கினை அல்லாஹ் படைத்துள்ளான். எல்லோரும் அத்தகைய பெரும் பேற்றினைப் பெற்றுள்ளனர். ஆனால் இந்நூலாசிரியரோ இவற்றை எல்லாம் தமக்கும் அமைத்த

துடன் நில்லாது எல்லோருக்கும் போல் தமக்கும் உணவு அளிப்பது அல்லாஹ்வைப் புகழவே எனக் கூறி உள்ளார். அத்தகைய வாய்ப் புக்களை எல்லாம் நல்கிய 'ஏகனாகிய அல்லாஹ்வே நீயே எனக்குப் பாதுகாப்பு அளிப்பாயாக' என்று இக்கருத்துக்கள் அனைத்தையும் ஒருங்கே அமைத்து இவ்வாறு ஒரு செய்யுளை இயற்றித் தந்துள்ளார். இப்பாடலில் கல்பு என்பது உள்ளத் தையும் இரணம் என்பது உணவையும் சுட்டுகின்றன.

நினைப்பதற் குரித்தாம் கல்பு
நின்மறை கேட்கக் காதும்
உனைப்புகழ் வதற்கு நாவும்
உற்றநூ னோக்கக் கண்ணும்
தினப்பசி வயிறும் மூச்சாற்
சீர்பெற மூக்கு மாக
எனைப்படைத் திரண மீயும்
ஏகனீ காப்ப தாமே.

(கடவுள்வாழ்த்துப் படலம்:8)

நபிகள் பெருமானார் (சல்) அவர்களின் மகள் ஃபாத்திமா நாயகி (றலி) அவர்களின் புதல்வர்கள் மூன்று செய்யுட்களில் புகழப்பட்டுள்ளனர். ஹசன் (றலி) அவர்களைத் தனியாக ஒரு செய்யுளிலும் (21) உசைன் (றலி) அவர்களைத் தனியாக மற்றொரு செய்யுளிலும் (22) பெயர் குறிப்பிடப்படாமல் அவர் கள் இருவரையும் சேர்த்து வானோரால் தொட்டிலாட்டப்பட்ட வர்கள் முதலிய அடைமொழிகளைப் பயன்படுத்தி மற்றொரு பாடலிலும் (19) புகழ்ந்துள்ளார் ஆசிரியர்.

குஞ்ஞுமூசுப்புலவர் தமது காப்பியத்தில் வருணித்துள்ள இயற் கைக்கு அமைவான நடனக் காட்சியை எடுத்துக் கொள்வோம்.

சேவல் கூவும். அவ்வாறு சேவல் கூவும்பொழுது அதன் சிறகு களை அடித்தே கூவும். ஒரு நடனக் காட்சியை வருணிக்க முற் பட்ட குஞ்ஞு மூசு ஆலிம் புலவர் அச்சேவல் சிறகடிப்பதை முரசொலிப்பதாகவும் அச்சேவல் கூவுவதை காளம் ஊதலாகவும் உவமித்துள்ளார். அந்நடனக் காட்சியில் குயில்கள் ஊதுகுழல் ஊதுகின்றன. சாதாரணமான குயில்கள் இசை எழுப்புவது குழல் ஊதுவது என வருணிக்கப்பட்டுள்ளது. அங்கே மலர்களி லிருந்து தேனைப் பருகிய வண்டுகள் ஓசை எழுப்பி ரீங்காரம் செய்

கின்றன. வண்டுகளின் ரீங்காரம் பாடலாக ஒலித்தது எனக் குறிப்பிட்டுள்ளார். புறாப்பறவைகள் ஒலி எழுப்புகின்றன. அந்த ஒலி குரவை ஒலிக்குச் சமமானதாக இருந்தது. இந்தப் பின்னணியில் மயில்கள் நடனம் புரிந்துகொண்டிருந்தன. இக் காட்சி ஒரு செய்யுளில் இவ்வாறு அமைக்கப்பட்டு வருணிக்கப் பட்டுள்ளது.

சிறைமுர சொலிப்பச் சேவற் றிருக்குரற் காள மூதக்
குறையறு குழலி சைக்கக் குயிலினந் தேனை மாந்தி
அறுபத ஞிமிறு கீத மதுசெய மயில்க ளாடப்
புறவுபுட் குரவை காட்டப் புகலுமிக் கோலத் தோடே.

(இறவுசுல்கூல் வதைப்படலம்:38)

ஒருநாள் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் ஓர் அகழியைக் கடந்து சென்றார்கள். அது பெரியதோர் அகழி. அந்த அகழியிலே பல்வேறு வகையான மீன்கள் இருந்தன. விதவிதமான சங்குகள் இருந்தன. அங்கே இருந்த சுறா எனப்படும் மகரமீன்கள் மத்தளத்தைப் போன்று காட்சி அளித்தன. நீண்டவாளை மீன்கள் மேலே பாய்ந்து விழுவது ஆகாசவாணம், பொறிவாணம் முதலியன போன்று காட்சி வழங்கின. விரால்கள் சிலம்ப வித்தைகாட்டுவதைப் போல் தோன்றின. அங்குள்ள இறால்கள் குதித்துக் குதித்துக் காட்சி தந்தன. சங்குகளின் ஒலி குரவை ஒலியைப் போல் கேட்டது. அழகு மிக்க வலம்புரிச்சங்கு எழுப்பும் ஒலி இனிமையைத் தந்து கொண்டிருந்தது. மத்தளம், வாணம், சிலம்பம், குதி, குரவை, பண் முதலியன ஒரு மணவீட்டுக்கு இன்றியமையாதனவாகும். எனவே அகழ் ஒரு மண இல்லத்தைப்போல காட்சிவழங்கியது என ஆசிரியர் ஒரு செய்யுளில் இவ்வாறு அக் காட்சியைப் படம் பிடித்துக்காட்டுவது போல் தந்துள்ளார்.

மகரமத் தளத்தைக் காட்ட வாளை வாணத்தைக் காட்ட
உகழ்விரால் சிலம்பங் காட்ட ஒழுகிறால் குதிகள் காட்ட
இகல்வளை குரவை காட்ட எழில்வலம் புரிபண் காட்ட
அகழ்மண மனையைக் காட்டி ஆங்குறல் நபிகண் டாரால்

(அகழ் கடந்த படலம்:18)

அறமிபுனுதையான் போர்புரிய வருவதை ஆசிரியர் தத்ருபமாக வருணித்துள்ளார். அவனுடைய படையினர் நடக்கும் பொழுது பூமி நடுங்கியது. மலைகள் அஞ்சின. வார் கட்டப்பட்ட

முரசொலி ஒலித்து எதிரொலித்தது. மிகுதியாக ஒலித்தது. வரிசை வரிசையாகச் சக்தி மிக்க போர் வீரர் மிகுதியாக வந்தனர். அணி அணியாய் வந்தனர். வேகமாகப் பாய்ந்து வந்த பெரிய குதிரையின் மீது அவன் ஏறிவந்தான். இக்காட்சி இவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளது.

தாரணி நடுங்கிட சயிலம் அஞ்சிட
வாரணி முரசொலி மலிய வாசியின்
போரணி வயவர்கள் புடைசெ றிந்திடச்
சீரணி யுறுகதித் தேசி மேற்கொண்டான்

(அறம்மிபுனுதையான் வருபடலம்:38)

போர் வீரர்கள் எவ்வாறு வந்தனர் என்பது வேறொரு விதமாக வருணிக்கப்பட்டுள்ளது. வில்லையுடையவர்கள் மிகுதியாக வந்தனர். வேலை ஏந்தியவர்களாகப் பலர் வந்தனர். பெருங் கற்களைத் தாங்கியவர்களாக வேறு பலர் நடந்தனர். கசையைக் கையில் கொண்டவர்களாய் நிறைய வந்திருந்தனர், மல்யுத் தத்தில் ஈடுபட்டவர்கள் கூட்டம் கூட்டமாய் வந்தனர். வாளை உருவியவர்களாய் அனேகர் வந்தனர். அவர்கள் அனைவரையும் ஒழுங்காக நடக்க வேண்டி கட்டளை பிறப்பிப்பவர்களாகப் பலர் வந்தனர். இங்ஙனம் போர் புரிய வந்தவர்களின் கூட்டத்தை ஒரு செய்யுளில் புலவர் இவ்வாறு வருணித்துள்ளார்.

வில்லினர் மிடைந்திட வேன்மி டைந்திடக்
கல்லினர் மிடைந்திடக் கசைமி டைந்திட
மல்லினர் மிடைந்திட வாண்மி டைந்திடச்
சொல்லினர் மிடைந்திடத் துகண்மி டைந்திட

(அறம்மிபுனுதையான்வருபடலம்:39)

இங்கே ஓசை நயம் ததும்புவதைக் காணலாம்.

அவன் எவ்வாறு புடைசூழ வந்தான் என்பதை மற்றொரு செய்யுளில் ஆசிரியர் விவரித்துள்ளார். குதிரைகள் நெருக்கமாக வந்தன. கொடிகள் பிடித்தவர்களாய்ப் பலர் வந்தனர். சிவிகை கள் நெருக்கமாக வந்தன. தேர்கள் நெருக்கமாக வந்தன. குடை கள் நெருக்கமாக வந்தன. அவர்கள் அனைவரும் குதிரைகளிலே வந்தனர். அவனோ வீரம் மிக்க சூரனாக பெரும் பாதையிலே வந்து நெருங்கினான். இக்கருத்துக்கள் ஒரு செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளன.

குவிபரி நெருங்கிடக் கொடிநெ ருங்கிடச்
சிவிகைக ணெருங்கிடத் தேர்நெ ருங்கிடக்
கவிகைக ணெருங்கிடக் கற்கி யோட்டியே
சவுரியத் துடனெறி தன்னில் ஈண்டினான்.

(அறம்மிபுனுதையான்வரு படலம்:40)

இச்செய்யுளில் ஓசை நயம் அமைந்திருப்பதைக் காணலாம்.

ஒரு சந்தர்ப்பத்தில் நடந்த போரில் வரிசையாக நடப்பட்டு இருந்த கொடிகள் முறிந்தன. குடைகள் நொறுங்கின. போர் முரசு உடைந்தது. வலிமையான வீரர் பலரின் தலைகள் பிளந்து பட்டன. மூளைகள் சிதறின. அவற்றை ஏனையோர் மிதித்து நடக்கலாயினர். இக்காட்சி இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

கொடிநிரை முறிந்திடக் குடை நொறுங்கிட
வடிமுர சுடைந்திட வலியின் மன்னர்கள்
முடிபல பிளந்திட மூளை சிந்திட
கடிதினில் மிதித்தன கருத யாருமே.

(குசுஆ வருபடலம்:44)

இரவு புலர்ந்தது. இருள் சூழ்ந்தது. அனைவரும் இல்லம் திரும்பினர். சூரியனும் மறைந்தான். உலகம் வெறிச்சோடியது, பின்னர் வரிகளை உடைய வண்டுகள் மலர்களை நாடின. வாவி களில் அன்னங்கள் கூடின. குதிரை வீரரும் கூடிவிட்டனர். இக் கருத்துக்கள் ஒரு செய்யுளில் இவ்வாறு இடம் பெற்றுள்ளன.

இரவெனும் நிசியங் கீண்ட யாவரும் விடுதி யீண்ட
அருணனும் குடபா லீண்ட அவனியின் வெளிதா னீண்ட
வரியளி மலரி னீண்ட மடுக்களில் அனங்க ளீண்ட
புரவியின் வீர ரீண்ட பொழுதும் விண் ணீண டிற்றம்மா

(கடந்தைப் படலம்:1)

இக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இரண்டாவது முக்கிய மான பெண்பாத்திரம் சல்கா அம்மையார் ஆவார். அவ்வம்மை யாரை வைத்துக்கொண்டே பெண்கள் வருணனையை விவரிக்க வேண்டிய நிர்பந்தம் குஞ்ஞுமூசு ஆலிம் புலவருக்கு ஏற்பட்டது. சல்கா அம்மையாரை வருணித்துள்ளார் ஆசிரியர். நட்சத்திரக் கூட்டத்துக்கு தலைவனான சந்திரனின் ஒளியும் சூரியனின் பிரகா சமும் கலந்த தோற்றத்தை உடையவர் சல்கா அம்மையார். இவ்விரு ஒளிகளினாலும் தெளிந்தெடுத்து வடித்த நிறத்தைக்

கொண்ட மேனியை உடையவர். இவ்வாறு உருவாக்கப்பட்டவரோ என ஐயுற வேண்டி இருந்தது. புள்ளியிடப்பட்ட சித்திரச் சிலை போன்ற பட்டாடை அணிந்திருந்தார். அணிகலன்கள் பூண்டிருந்தார். மணியோ பொன்னோ நவரத்தினமோ என ஐயுறும்படி அழகாய் இருந்தாள். இக்கருத்துக்களே ஒரு செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளன.

வெள்ளிக் கரசாம் விதுவமுதும்
வெய்யோன் கதிருஞ் சரிகலந்தே
தெள்ளித் தெளித்து வடித்ததனால்
தெரிவை யுருச்செய் தியற்றியதோ
புள்ளிப் படமார் பணிமணியோ
பொன்னோ நவரத்தின அறலை
யள்ளிப் படைத்த வடிவினளோ
அவர்க டிருமுன் அணுகினளே.

(சல்கா புறப்படு படலம்:5)

காப்பியத்தின் ஓர் அம்சமாக அமைந்துள்ள கேசாதிபாத வருணனையை இறவுசுல்கூல் படைப்போர் என்னும் காப்பியத்திலும் அமைக்க சல்கா அம்மையாரின் உருவம் புலவருக்கு வாய்ப்பாய் அமைந்தது. இஸ்லாத்தைத் தழுவுமுன்னர் அவ்வம்மையாரை வருணித்தால் அது இஸ்லாத்துக்கு முரணாகவும் அமையாது. சல்கா புறப்படு படலத்தில் உள்ள எழுபத்தொரு செய்யுட்களுள் இருபத்தொன்பது செய்யுட்களில் அவ்வம்மையாரின் இருபத்தேழு உறுப்புக்களைக் குஞ்ஞு மூசு ஆலிம் புலவர் வருணித்துள்ளார். குழலும் தனமும் இரண்டிரண்டு செய்யுட்களில் விவரிக்கப்பட்டுள்ளன. உவமை உருவக நயங்கள் அமைய அவ்வருணனைகளை மேற்கொண்டுள்ளார்.

இஸ்லாத்துக்கு அடிப்படையாக அமைவது அல்குர்ஆன். எனவே அல்குர்ஆன் கருத்துக்கள் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களில் அமைந்துவிடுவது இயல்பே. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய காப்பியங்களெனின் அத்தகைய கருத்துக்கள் மிகுதியாக இடம்பெறும். இறவுசுல்கூல் படைப்போரிலும் அத்தகைய அல்குர்ஆன் கருத்துகள் வந்துள்ளன.

முஸ்லிம் அல்லாதார் பலம் குன்றி ஏகினவர்களாய் ஓடினர். அப்பொழுது முஸ்லிம் போர்வீரர் அல்குர்ஆன் திருவசனம் ஒன்றை

ஓதியவர்களாய் அவர்களைத் துரத்தினர். அந்த அல்குர் ஆன் ஆயத்து (திருவசனம்) இதுதான்.

"(ஈசாவை நிராகரித்த) அவர்கள்
(அவரைக் கொலைச் செய்யச்) சதி
செய்தார்கள். (எனினும், அல்லாஹ்
அவரை இரட்சித்துக் கொண்டு
தங்களில் ஒருவனையே அவர்கள்
கொலைசெய்து விடும்படி) அல்லாஹ்
(அவர்களுக்குச்) சதி செய்துவிட்டான்
அல்லாஹ் சதி செய்பவர்களில்
மிகைத்தவன்" (3-54)

கைறான அதாவது நல்லனவற்றுக்குச் சதி செய்வதில் அல்லாஹ்வைவிட மிஞ்சியவர்கள் இல்லை என்பதே ஒட்டு மொத்தமான கருத்தாகும். முஸ்லிம்கள் இந்த ஆயத்தை ஓதியவர்களாய்ப் பகைவர்களை விரட்டினர் என்பதும் இவ்வாறு ஒரு செய்யுளில் அமைந்துள்ளது.

உதித்தவவ் வாயத்தி னுடைய உட்பொருள்
சதித்துறும் அவரையே சதிப்பன் ஆதியுங்
கதித்தவச் சதியரின் கைறுள்ளா னென்றே
யிதைத்தனி யோதியங் கிண்டி வெட்டினார்.

(முகல்கில் போர்க்கெழுந்த படலம் : 124

ஒருநாள் இரவுசுல்கூலுக்கும் அலி (றலி) அவர்களுக்கும் போர் மும்முரமாக இருந்தது. அப்பொழுது எதிர்பாராத விதமாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அல்லாஹ்வினால் ஏவப்பட்ட கடந்தை என்றழைக்கப்படும் ஒருவகை வண்டுகள் சிறகுகளை விரித்துக் கொண்டு அங்கு வந்தன. வந்து பகைவரைத் தாக்கின. கடந்தை இனத்தைச் சேர்ந்த வண்டுகள் பல்லும் முள்ளும் உள்ளவை. இறவுசுல்கூல் சேனையில் புகுந்த கடந்தை வண்டுகள் அவற்றின் பற்களால் பகைவரின் முகங்களைக் கிழித்தன. குத்தின. முகத்திலே குழி ஏற்படும் வரை தாக்கின. இதனால் பகைவர் நிலை தடுமாறினர். அலங்குலைந்தனர். ஐயோ எனக் கூச்சலிட்டனர். விழுந்து விழுந்து ஓடினர். பெரும் இன்னலுக்கு ஆளாகினர். அவர்களுடைய மமதை அடங்கியது. இக்கருத்துக்களை ஒரு செய்யுளில் குஞ்ஞுமூசு ஆலிம் புலவர் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

புகுந்தவை யாவும் பல்லால் பூமுகங் குழிய வூன்ற
அகந்தடு மாறிக் காபிர் அலங்குலைந் தையோ வென்னச்
செகந்தனில் முகங்கீ ழாகிச் சிதைவுற விழுந்தங் கோடி
மிகுந்தவெவ் விதன முற்று மிடுக்கறுந் தனர்கள் அன்றே

(கடந்தைப் படலம்: 11)

யானை ஆண்டு ஏற்படக் காரணமாயிருந்த நிகழ்ச்சியை இது நினைவுபடுத்துகிறது. அப்றஹா என்பவன் யானைப் படையுடன் மக்காவைக் கைப்பற்ற வந்தான். மக்கா மக்கள் அவனை எதிர்க்க வில்லை. அப்பொழுது அல்லாஹ் அபாபீல் என்னும் பறவைகளை அனுப்பினான். சுடப்பட்ட சிறிய கற்களைச் சொண்டுகளில் கவ்விக் கொண்டு கூட்டம் கூட்டமாக வந்த அப்பறவைகள் அந்த யானைகளை அக்கற்களினால் தாக்கி யானைப்படையை அழியச் செய்தன. அப்றஹாவையும் பின் வாங்கச் செய்தன. மக்க மாநகரமும் காப்பாற்றப்பட்டது. இந்தச் சம்பவம் அல்குர் ஆனிலே

அவர்கள் மீது பட்சிகளைக் கூட்டங்
கூட்டமாக அவன் அனுப்பிவைத்தான்
(கெட்டியான) சுடப்பட்ட சிறிய கற்களை
அவை அவர்கள் மீது எறிந்தன'' (106-34)

என அந்நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

இறவுசுல்கூலுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே நடந்த போரிலும் பல்லும் முள்ளும் உள்ள கடந்தை வண்டுகள் எதிரிகளைத் தாக்கி அவர்களைச் சின்னாபின்னமாக்கின. அவற்றை அப்றஹாவை அழித்த அபாபீல் பறவைகளுடன் ஓரளவு ஒப்பிடக் கூடியதாக இருப்பதைக் காணலாம்.

ஒரு செய்யுளில் ஓர் அறபுக் கூற்றையும் அதனை அடுத்த செய்யுளில் அக்கூற்றின் பொருளும் தந்துள்ளார் ஆசிரியர். 'யாகியாதல் முஸ்த்தகீம்தீனே' என்றும் 'அறுகமற்றாகி மீனே' என்றும் ஒரு செய்யுளில் வந்துள்ளன. அடுத்த செய்யுளில் அவற்றின் கருத்துத் தரப்பட்டுள்ளன. 'யாகியாதல் முஸ்த்தகீம் தீனே என்பதன் கருத்து 'உதவி கேட்போர்க்கெல்லாம் உதவி செய்பவனே' என்றும் 'அறுகமற்றாகீமின்' என்பதன் கருத்து 'சிறப்பாகக் கிருபை செய்யும் ஏற்றம் உள்ளவனே' என்றும் அடுத்த செய்யுளில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

உதவிகள் கேட்போர்க் செல்லா முதவிசெய் பவனே யென்று
மிதமுறுங் கிருபை செய்யு மேற்றமுள் ளவனே யென்றும்
அதினுறு மகனா வாகு மப்படிச் சுபைறங் கார
மதினம்விட் டலியா ரேகும் வழியினார் வரவு சொல்வாம்.

(சுபைறுசிறைப்படு படலம்: 51)

ஒருவன் தான் செய்த காரியத்துக்குத் தானே பலன் அனுபவிப் பான். இது உலக நியதி. 'வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினை விதைத்தவன் தினையறுப்பான்' என்பது பழமொழி. இதனையே ஒரு செய்யுளில் குஞ்ஞு மூசு ஆலிம் புலவர் இவ்வாறு அமைத்துள்ளார்.

வினை விதைத்தவன் வினைக்குலை பெறுவதைப் போலுந்
தினை விதைத்தவன் றினைக்குலை பெறுவதைப் போலும்
பனுச திப்பெனும் விதைமனம் விதைத்தவப் பலன்பெற்
றனிலம் போன்மிகு தொலையிரிந் திருந்தன னரசன்

(சதியெழுத்துப் படலம்: 63)

மற்றொரு செய்யுளில் வேறொரு பொதுக்கூற்று இடம் பெற்றுள்ளது. வாக்குண்டாம் என்னும் மூதுரையில்

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்குமாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை. (10)

இவ்வாக்குண்டாம் செய்யுளின் கருத்தைத் தழுவி அறபு நாட்டுச் செய்தி ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். முகம்மது நபி(சல்) அவர்கள் எல்லோருக்கும் நன்மையே செய்வார்கள். அவர்கள் பொருட்டால் எந்தையர் நற்பலன் அடைவாராக. நல்லொழுக்கத் தையும் தரும சிந்தனையையும் நட்புத் தன்மையும் பெருமானார் பொருட்டால் எமக்கு அளிப்பாயாக அல்லாவே என வேண்டு கிறார். அல்லாஹ்வைக் குறிக்க இங்கே இலாஹி என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்தினையே ஒரு செய்யுளில் ஆசிரியர் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

நெல்வய னிரம்பவிடு நீரொழுகி அங்கார்
புல்வினை வளர்த்திடுதல் போல்நபி பொருட்டால்
சொல்லுமெனின் தந்தையர்தம் துன்புபவ நீக்கி
நல்லிய லறம்பெருக நட்பரு ளிலாகி

(றசூலுல்லா மதீனம் புக்க படலம்: 55)

# புதூகுஷ்ஷாம்

'பு(த் தூஹ்) என்பது 'பத்ஹு' என்பதன் பன்மையாகும். பத்ஹு என்பது வெற்றி எனப் பொருள்படும் தமிழ் இலக்கிய மரபில் வாகை எனப்படுவதும் இதுவே. எனவே 'பு(த்)தூ ஹுஷ்ஷாம்' எனுஞ் சொற்றொடர் 'ஷாம் நாட்டு வெற்றிகள் அல்லது ஷாம் நாட்டைவென்று கைப்பற்றிக் கொள்ளல்' என்னும் பொருள் தருவதென்பது தெளிவு.

ஷாம் நாடு அறபு நாட்டின் வடதிசையில் அமைந்து உரோமப் பேரரசின் ஒரு பகுதியாயிருந்தது. 'சிரியா' என்பது அந்நாட்டின் இக்காலப் பெயர்.

ஷாம் என்பது அறபு வழக்கில் இடக்கைப் பக்கத்தில் இருப் பதைக் குறிக்கும். அறபு நாட்டார் சூரியன் உதிக்கும் திக்கை நோக்கி நிற்குங்கால் இடப்புறமாய் அமைந்து விளங்கும் நாடு, ஷாம் என அவர்களால் வழங்கப்பட்டது.

எம்பெருமானார் (சல்) அவர்களின் காலத்திலேயே உரோம நாட்டுப்போர் ஆரம்பித்துவிட்டது. செய்யிதினா அபூக்கர் சித்தீக்கு (றலி), செய்யிதினா உமறுபாறுக்கு (றலி) ஆகிய இரு பெருவேந்தர் காலத்திலும் தொடர்ந்து பூரண வெற்றியுடன் நிறைவெய்தியது. இவ்வெற்றி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே புதூகுஷ்ஷாம் காப்பியம்.

இதனையே ஒரு பாடலில் சேகுனாப்புலவர் இவ்வாறு பாடி யுள்ளார்.

நவக்குண முகம்ம தெங்க ணாயகர்
　　துடக்கும் வெம்போர்
துவக்கபூ பக்கர் காலந் தொடர்ந்தபின்
　　உமறு கத்தா
புவக்குமச் சாமு றூம்க ளொக்கலின்
　　வென்று வாகை
புவிக்குளே பூண்டதன்மை புதூ குச்சாம்
　　என்ப மாதோ

(கடவுள் வாழ்த்து: 31)

முகம்மதிய்யா, சித்தீக்கிய்யா, பாறூக்கிய்யா என்னும் மூன்று காண்டங்கள் இக்காப்பியத்தில் உண்டு. முதற் காண்டம் முகம்மதிய்யா பதினொரு படலங்களையும் தொளாயிரத்து அறுபத்தைந்து திருவிருத்தங்களையும் கொண்டது. இரண்டாம் காண்டம் சித்தீக்கிய்யா காண்டம். இது பதின்மூன்று படலங் களையும் ஆயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு திருவிருத்தங்களை யும், மூன்றாங் காண்டம் பாறுக்கிய்யா முப்பத்தேழு படலங்களை யும் நாலாயிரத்து எழுபத்து நான்கு திருவிருத்தங்களையும் கொண்டன.

எனவே மூன்று காண்டங்களும் அறுபத்தொரு படலங்களும் ஆறாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு திருவிருத்தங்களும் காப்பு விருத்தமொன்றும் இப்பெருங்காப்பியத்தில் அடங்கியுள்ளன.

சித்திரக் கவிகள் பலபாடிச் சொல்லலங்கார வித்தையிற் கை தேர்ந்த புலவர் நாயகம் சிறுவரும் உணரத்தக்க இலகு நடையி லும் நூல்களை யாத்தளித்துள்ளார் என்பது புதுமையாகவே உள்ளது. நல்லொழுக்கங்களையும் நீதிகளையும் புகட்டும் 'சொர்க்க நீதி' என்னும் நூல் சிறுவர்க்கும் உபயோகமாகக் கூடியவாறு 'உலகநீதி'யே போல் அமைந்து விளங்குகிறது. இது மிகவும் சிறந்த அறநூலாகும்.

முன்னோரியற்றிய நூல்களை அச்சிட்டு வெளியாக்குவதிலும் புலவர் நாயகம் முன்னோடியாகத் திகழ்கின்றார். உமறுப்புலவர் பெருமானின் சீறாப்புராணத்தைச் செவ்வனே பதிப்பித்தவர். இவரே பல ஏட்டுப் பிரதிகளிலிருந்து ஆராய்ந்தெடுத்து ஹிஜ்ரி 1258-ல் (கி.பி. 1842) அதனை அச்சிட்டு வெளியாக்கினார்.

தமிழ் நூற்பதிப்பின் முன்னோடியாகிய மழவை மகாலிங்கையர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை (நச்சினார்க்

கினியம்) முதன் முதலாக 1847இல் அச்சிட்டுள்ளார். இதனை நோக்குமிடத்துப் புலவர் நாயகம் இத்துறையில் அவருக்கும் முன்னோடியாய் விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது நூல்களுள் நாகையந்தாதியை மட்டுமே 1843இல் இவர் அச்சிட்டார். புலவர் நாயகத்துக்குத் துணைபுரிந்து சீறாப் புராணத்தை அச்சிடுவித்த கூட்டு முயற்சியாளர் யாழ்ப்பாணத்தவரான பரிகாரி மரைக்கார் பக்கீர் முகியித்தீன் என்னும் கெழுதகை அறிஞரும் வள்ளியோருமாவார் என்பது ஈழத்தவருக்குப் பெருமை தருவதாகும்.

யாழ் பக்கீர் முகியித்தீன் அவர்களே காசிம் புலவரின் திருப்புகழை ஹிஜ்ரி 1269 (1852) இலும் புலவர் நாயகத்தின் 'குத்பு நாயகம்' காப்பியத்தை ஹிஜ்ரி 1271 (1854) இலும் சின்னச் சீறாவை 1272 (1856) இலும் அச்சிட்டார்.

சேகுனாப்புலவரின் பெருங்காப்பியமான புதூகுஷ்ஷாம் என்பதற்கு மூலநூலாய் அமைந்தது அறபு மொழியில் உள்ள புதூகுஷ்ஷாம் என்னும் நூலேயாகும். புதூகுஷ்ஷாம் என்னும் அறபு நூலை இயற்றியவர் அபூ அப்துல்லாஹ் முகம்மது பின் உமர் என்பவராவர். இவர் அல் வாக்கிதி என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். அல் வாக்கிதி என்பது இவருக்குக் குடும்பப் பெயராய் அமைந்து பின்னர் சிறப்புப் பெயராகிவிட்டது. இவர் ஒரு தலைசிறந்த வரலாற்றாசிரியர் எனக் கருதப்பட்டார். இவர் மாலிக் பின் அனஸ் என்பவரினதும் சுபியான் அல்ஸெளறி என்பவரினதும் மாணாக்கராகக் கணிக்கப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெருமானாரின் பொன்மொழிகளின் ஆய்வில் முதன் முதல் ஈடுபட்டவர் எனக் கருதப்படும் இப்னு ஜுறைஜ் என்பவருடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதும் பேசப்பட்டுள்ளது. வாக்கிதி என்பவர் வரலாற்றுத் துறையில் மாத்திரமன்றி நீதித் துறையிலும் பொன்மொழிகளான ஹதீதுக்கலையிலும் சிறந்து விளங்கினார் என்பதும் கூறப்பட்டுள்ளது. இவர் சுல்தான் ஹாறூன் அல்றஷீத் அவர்களின் காஜியாக நியமனம் பெற்றார். சுல்தான் மஃமூன் காலத்தில் அரச பதவி வகித்தார். இவர் பக்தாதில் இருந்த ஓர் இடத்திலிருந்து மற்ற இடத்திற்குச் செல்ல நேர்ந்த பொழுது 120 ஒட்டகச் சுமைகளாக இவருடைய நூல்கள் எடுத்துக் செல்லப்பட்டனவாம். இவருக்கு அபார ஞாபகசக்தி இருந்தது என்பதும் கூறப்பட்டுள்ளது. இவர் ஹிஜ்றி 130-ஆம் ஆண்டு பிறந்து

ஹிஜ்றி 207-ஆம் ஆண்டு மறைந்தார் என்பதும் கூறப்பட்டுள்ளது. இவர் கி.பி. 834இல் இறந்திருக்கவேண்டும் என இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது கி.பி. 834-ஆம் ஆண்டுக்குச் சமமான ஹிஜ்றி ஆண்டு 219 ஆகும். முன்னைய கூற்றுப்படி வாகிதி 75 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். பின்னைய கூற்றுப்படி 87 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். (ஹிஜ்ரி 130—கி.பி. 747; ஹிஜ்றி 207—கி.பி. 822) (கி.பி. 834—ஹிஜ்றி 219) ஆண்டு அடிப்படையில் வரலாற்று நிகழ்ச்சிகளை விவரிப்பதில் கைதேர்ந்தவர் என மேனாட்டு அறிஞர்களால் புகழப்பட்டவர்களுள் வாக்கிதி என்பவரும் ஒருவராவார். இவர் சிறியா வெற்றி கொண்டமையைப் பற்றி மாத்திரம் இலக்கியம் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

புதூகுஷ்ஷாம் காப்பியம் இயற்றும்படி புலவர் நாயகம் அவர்களைக் கேட்டுக் கொண்டவர் முகம்மது சகீது என்பவர். இவர் பாவா சாகிபு என்பவரின் புதல்வர். இவர் பவளக்காட்டைச் சேர்ந்தவர். இத்தகவல்கள் ஒரு செய்யுளில் இவ்வாறு இடம் பெற்றுள்ளன.

சீதநீர் வயல்சூழ் மேன்மைத் திருப்பதி பவளக் காட்டில்
தாதுலாம் புயத்து பாவா சாகிபு தவத்தால் வந்த
மூதறி வுணருஞ் சிந்தை முகம்மது சகீது வேந்த
னாதமொய்ப் பனுவல் செய்வா னற்கருத் தியற்றி னானே.

(கடவுள் வாழ்த்து: 28)

இந்நூலின் கொடை நாயகர் மூதறிவுணரும் சிந்தையாளரான முதுபுகழணிந்த கீர்த்தி முகம்மது சகீது என்னும் வள்ளலேயாவார். இவர் பவளக்காடு என்னும் திருநகரில் தோன்றிய சீர்பெறு மேலோராவார்.

முகம்மது சகீது வள்ளலின் கொடை மாண்பினையும் அன்னவர் நபிகளெம் கோமான் (ஸல்) மீது கொண்டுள்ள குறைவிலா உள்ளப் பக்தியினையும் நூல் முழுவதும் நிறைவுறப்பாடிச் சென்று வாழியும் பகர்ந்துள்ளார். உமறுப்புலவர் அபுல்காசீம் வள்ளலாரையும், கம்பர் சடையப்ப வள்ளலாரையும் ஏனையப் புலவர் பெருமக்கள் தத்தம் வள்ளற் பெருமக்களையும் பாடியுள்ள மரபையே இவரும் பின்பற்றியுள்ளார்.

ஒரு பாடலில் வள்ளற்குணம் படைத்த செய்னுல் ஆபிதீன் என்பவருடன் அவரது சகோதரர் முகம்மது கனீபாவையும் சேர்த்து அவர்கள் இருவரினதும் மூத்த சகோதரரான கொடை நாயகர் முகம்மது சகீது என்பவரையும் குறிப்பிட்டுள்ளார். பொருள், புகழ் முதலிய செல்வங்கள் அனைத்தையும் பெற்று வாழ்க என ஆசிரியர், செய்கப்துல் காதிறு நெயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள் வாழ்த்தியுள்ளார்.

அருளுடை மனத்தன் செய்னுல்
ஆபிதீன் றனக்கு நன்மைக்
கருதிய சிந்தை யாளன்
முகம்மது கனீபா வுக்கு
முருகவிழ் புயத்து முன்னோன்
முகம்மது சகீது மன்னன்
பொருளுறை செல்வம் என்னும்
புகழொடு வாழி வாழி

(கடவுள் வாழ்த்து: 41)

கடவுள் வாழ்த்துப் படலத்தில் உள்ள இறுதிச் செய்யுள் எல்லோரையும் வாழ்த்தும் ஒரு செய்யுளாக அமைந்திருப்பதைக் காணலாம். கொடைநாயகரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தொடர்ச்சியாக ஒரு முறைமையைக் கடைப்பிடித்துள்ளார் ஆசிரியர். கொடை நாயகர் பெயர் வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முகம்மது சகீது என்றே அவருடைய பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. முகம்மது என்பது நபிகள் பெருமானார் பெயராக அமைவதனாலேயே முஸ்லிம் மக்கள் அப்பெயரைத் தத்தம் ஏனைய பெயர்களுடன் சேர்த்துக் கொள்கின்றனர். அந்தப் பெயருக்கு இருக்கும் மகிமையை உணர்ந்துதான் அவர்கள் அவ்வாறு செய்கின்றனர் அந்தப் பெயரைக் கொண்டவர்கள் எப்பொழுதும் அப்பெயரைப் பயன்படுத்தவேண்டும் என்பது பெரு வழக்காகிவிட்டது. இக்கருத்துக்கிணங்கவே செய்கு அப்துல் காதிறு நெயினார் லெப்பை ஆலிம் புலவர் முகம்மது என்பதை விடாது செய்யுளிலும் முகம்மது சகீது எனப் பாடியுள்ளார்.

கொடை நாயகரின் மாட்சிமையும், தெளிந்த புத்தியும், நற்குணமும், அளவிலாக் கிருபையும் மிகுந்த செல்வமும் எங்கும்

இ—14

பரந்திருந்தன. பூஞ்சோலைகள் மிகுந்த மருத நிலத்தைப்போன்று விரிவாய் அமைந்திருந்தன. இக்கருத்துக்கள் ஒரு செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளன.

செழுமையுங் குணமும் ஓங்குந்
தண்ணமும் திருவின் மிக்க
விழுமமு நிழலும் சூழின்
வியப்பொடு மணமு மாறா
முழுவளம் புனைந்த செல்வ
முகம்மது சகீது கீர்த்தி
ஒழுகுத லொத்த பூங்கா
ஓங்கிய மருத மன்றே

(நாட்டுப்படலம்: 78)

பெருமானார் (சல்) அவர்கள் மறைந்துவிட்டார்கள். மதீன மாநகரமே மீளாத்துயரில் மூழ்கியது. துயர் மிகுந்த காரணத்தினால் மதினா நகர மக்கள் செய்வது இன்னது என உணராமல் தவித்தார்கள். மக்களுடைய கைகளும் கால்களும் அவற்றிற்குரிய வேலைகளைச் செய்ய மறுத்தன. பச்சிளங் குழந்தைகள் பால் உண்ணவுமில்லை. தாய்மார்கள் பாலூட்டவும் மறந்துவிட்டனர். உடல்கள் உயிரற்றன போன்று காட்சிஅளித்தன. அடுப்பங்கரையை எவரும் நாடவில்லை. சமையல் நடக்கவில்லை. மீளாத்துயரம். சமையல் இல்லை எனவே சமையல் அடுப்புக்களிலிருந்து புகை வரவில்லை. பறவைகள் பறக்கவில்லை. தத்தம் உணவு தேடிப் பூஞ்சோலைகளுக்கும் செல்லவில்லை. அவை பூஞ்சோலைகளையே மறந்துவிட்டனபோன்று காட்சி அளித்தன. உணவின் தேவையையும் மறந்தன. சொகுசான படுக்கைகளைப் பயன்படுத்தியவர்கள் அப்படுக்கைகளையே மறந்துவிட்டனர். அவர்கள் படுக்கைக்கே செல்லவில்லை. துயில் கொள்ளவில்லை. வீடுகளில் தீபங்கள் ஏற்றப்படவில்லை. அதனையும் வீட்டார் மறந்துவிட்டனர். வீடே இருள் மண்டிக்கிடந்தது. அத்தகைய கடுமையான துயரம் மதீனமாநகரையே வாட்டியது. மதீனமாநகரம் அதன் கருமங்களையும் செய்யத் தவறியது. எதுவுமே அங்கு இயங்கவில்லை. எல்லாவற்றிற்கும் காரணம் பெருமானார் (சல்) அவர்களின் மறைவினால் ஏற்பட்ட துக்கமேயாம். இந்த நிலையை ஒரு செய்யுளில் ஓசைநயம் மிளிர இவ்வாறு பாடியுள்ளார் சேகுனாப் புலவர்.

பாவினை மறந்த கைகால் பான்முலை மறந்த பிள்ளை
ஆவியை மறந்த ஆக்கை அடுபுகை மறந்த சுல்லி
காவினை மறந்த புட்கள் கண்படை மறந்த பள்ளி
தீவிகை மறந்த இல்லம் செய்தொழின் மறந்த மூதூர்.
(நபிநாயகம் உபாத்துப்படலம்: 48)

இக்காப்பியம் வீரத்தைப் போற்றும் காப்பியமாக அமைந்துள்ளமையால் போர் பற்றிய சில வருணனைகளைப் பார்ப்போம். போர் நடக்கும்போது நடைபெறும் சில நிகழ்ச்சிகள் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. போர்க்களத்தில் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. வாளைப் பிடித்துக் கொண்டிருந்த சிலரின் கைகளை வாளொடு வெட்டிவிட்டனர். கைகள் கீழே விழ வெட்டினர். அச்சுறுத்தும் வகையில் சிலரைத் தட்டினர். கேடயங்களைத் தாங்கி நின்ற சிலரை கேடயங்களும் தலைகளும் நொறுங்க உடைத்தனர். கையிற் பிடித்த தண்டாயுதங்களோடு தோள்களும் அறுந்து விழப் போராடினர். மற்றுஞ்சிலர் வேலாயுதங்களைக் கொண்டு தாக்கினர். இதனையே புலவர் இவ்வாறு வருணித்துள்ளார்.

வெட்டு வார்சிலர் வாளொடு கையிற வெருளத்
தட்டு வார்சிலர் கேடகம் தலையொடு நுறுங்க
வொட்டு வார்சிலர் கதையொடு தோள்விழ வொதுங்கிக்
கட்டு வார்சிலர் வேல்கொடு பொருமுகக் களத்தே
(கிறக்கிலுடன் போர்புரி படலம்: 85)

போரைப்பற்றிய பாடல்கள் சில குற்றெழுத்துக்களாலான செய்யுட்களாக அமைந்துள்ளன. வஞ்சனை பொருந்திய கயவர்களான பகைவர் போர்வீரர் ஒரு பக்கத்திலே கூடி இருந்தனர். மிகைத்து இருந்தனர். தவம் மிக்க அதிபரும் அவருடைய முஸ்லிம் வீரரும் மறுபக்கத்தில் இருந்தனர். மேகக்கூட்டங்களும் திகைக்கும்படி ஒலிமுழக்கம் எழுப்பினவர்களாகப் பகைவர்களைத்தாக்கினர். நெருக்கினர். அடர்த்தனர். கலக்கினர். தமது படை வீரர்களைப் பின்னர் ஒரு வழிப்படுத்தினர். இக்கருத்துக்களைக் கொண்ட ஒரு செய்யுள் குற்றெழுத்துக்களேகொண்டு இவ்வாறு அமைந்துள்ளது.

வலப்புற மிகைத்தனர் மறக்கய மனத்திற்
சலப்பகை யெனத்தரு தவத்திப ரொக்கல்
கலப்புற நெருக்கின ரடர்த்தனர் கலக்கிக்
குலப்படை கொழித்தனர் புயற்குழு திகைப்ப
(இரண்டாம் போர்புரி படலம்: 158)

முஸ்லிம்களுக்கும் றூமிகளுக்கும் இடையில் நடைபெற்ற போரில் றூமிப்படைகளுக்கு ஏற்பட்ட சேதம் பல செய்யுட்களில் வருணிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் இரண்டு செய்யுட்கள் இங்கு தரப்படுகின்றன. இவ்விரண்டு செய்யுட்களிலும் கடைசி அடியின் கடைசிச் சீரைத் தவிர்த்த முழுச் செய்யுளும் குற்றெழுத்துக் களையே கொண்டனவாக அமைந்துள்ளன. முதல் பாடலில் இடங்கள் படபட என்று அழிந்தன; பேரிகைகள் வெட்டுண்டு கடகட என உருண்டன; வீரர்களில் உடல்கள் மடமட என்று சரிந்தன; மலைபோலக் குவிந்துள்ள பிணக்குவியலில் குறைபட்ட உடலின் உறுப்புக்கள் தடதட என நடமாடுவதுபோல் துடித்தன; நடனமிட்டன என இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

படப டென்றுகதை யிட்டிவிட முற்றுமழி பட்டு கவியுங்
கடக டென்றுருள வெத்திசையு மொய்த்தவலி கத்த ருடல்
மடம டென்றுசரி யக்கண நெருக்கினிழி மட்டை யெவனுந்
தடத டென்றுநட னிட்டன பிணக்குவை தடக்கிரி கண்மேல்.

(மூன்றாம்போர்புரி படலம்:59)

இங்கே ஓசைநயமும் அமைந்திருப்பதைக் காணலாம்.

சூரியோதயம் சந்திரோதயம் போன்ற வருணனைகளைப் பாடும்பொழுது பெரும்பாலும் தற்குறிப்பேற்றவணியினை அமைத்தே செய்யுளியற்றுவர். இயற்கையாக நிகழும் சூரியோ தயமோ, சூரியாஸ்தமனமோ, சந்திரோதயமோ, சந்திராஸ் தமனமோ ஒரு செயற்கைக் காரணத்தினால் ஏற்படுகின்றது என்பதைக் குறிக்கவே இத்தகைய வருணனைகளில் தற்குறிப் பேற்றவணி அமைக்கப்படுகின்றது.

சூரியன் மறைவது இயற்கை அன்று சூரியன். மறைவதற்கு ஒரு காரணம் கற்பித்துள்ளார் ஆசிரியர். அப்துல்லாஹ் (றலி) அவர்கள். தமது தந்தையின் மரணத்தை அறிந்து அவர் அடக்கத்தலத்துக்குச் சென்று அவருடைய ஆத்மசாந்திக்குப் பிரார்த்தித்த பின்னர் மீளாத் துயரத்தில் மூழ்கி இருந்தார். அவருடைய கவலை தோய்ந்த முகத்தை இனிமேலும் நோக்கமுடியாது; அதனைச் சகித்துக் கொண்டிருக்கமுடியாது என உணர்ந்து வேதனையோடு மேற்றிசை சென்றுவிட்டான் சூரியன். இதனையே ஒரு செய்யுளின் முதலிரண்டு அடிகளிலும் ஆசிரியர் இவ்வாறு வருணித்துள்ளார்.

கருத்திடத் தகலா வன்பாற் கனிந்தவ ணிருந்தார் வெய்யோ
னருத்திய முகநோக் காதுள் ளயர்வினோ டகன்றான் வாடி
வருத்தமுற் றரிய காளை மலர்விழி துயின்றார் மேன்மை
யிருத்திய கனவொன் றாதி யிறையவ னருளிற் கண்டார்.
(அபுல்குதுக கொண்ட படலம்:16)

இனி, சூரியோதய வருணனையைப் பார்ப்போம். நசுத்தன் என்னும் நகரினை ஒரு சூழ்ச்சியை மேற்கொண்டு முஸ்லிம் படைகள் கைப்பற்றின. அங்குள்ள மக்கள் முஸ்லிம்களின் அபயம் கோரினர். அவர்களுடைய மனவெறுப்பு நீங்கியது. வலிமை அழிந்தது. ஒளியினால் கண்கள் குளிர்ந்தன. இரவோடு இரவாக அந்தக் கோட்டை சரணடைந்தது. அந்தக் கோட்டை மீட்கப் பட்டுவிட்டது என்று நபித் தோழர்கள் முகங்கள் மலர்ந்தன. தாமரைப்பூ மலர சூரியன் தோன்றுவது போல் கிழக்குக் கடலிலி ருந்து சூரியன் தோன்றினான். சூரியன் அதன் கதிர்க்கால்களை கிழக்குக் கடலிலே உருவினான் என்றே சூரியோதயம் வருணிக் கப்பட்டுள்ளது.

உள்ளக் கார மொழியவலி யொழிய விழிகள் குளிர வொளிர்
கொள்ளக் காந்தும் படைக்கலன்க ளொழியக் குறுகார் குறுகிவரத்
துள்ளக் காலு மானந்தந் தொடர்ந்த மேலோர் முகமலரப்
பள்ளக் கார்பைங் கடற்குணக்கிற் பருதி கதிர்க்கா லுருவினனே
(முப்புரங்கொண்டபடலம் : 35)

அல்குர்ஆனிலே தாலூத் மன்னனைப் பற்றிக் குறிப்பிடப் படுகிறது. இவரைப்பற்றி குறிப்பிடப்படும் அல் குர்ஆன் ஆயத்திலே ஒரு நபி இடம்பெறுகிறார். அங்கு நபி என்பது மாத்திரம்தான் குறிப்பிடப்படுகிறது. பெயர் குறிப்பிடப்படவில்லை. அவருடைய பெயர் இஷ்மவீல் அல்லது ஷம்வீல் ஆயிருக்கலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருடைய பெயர் யூஷா இப்னு நுன் அல்லது ஷம்ஊன் இப்னு ஸபீயா என இருக்கலாம் என்ற அபிப்பிராயமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பெயரின் கருத்து இஸ்மாஈல் என்பதன் கருத்துடன் ஒத்திருக்கிறது என்றும் கூறுவர். இந்த நபியின் காலத்தில் இஸ்ரவேலர்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாயினர். அவர்களுக்கு அரசியல் தோல்வி ஏற்பட்டது. உடனே அவர்கள் நபி இஷ்மவீல் (அலை) அவர்களை அண்மித் தங்களுக்கு ஒரு மன்னனை அனுப்பிவைக்குமாறு வேண்டினர். நபி அவர்களும் அல்லாஹ்விடம் துஆ இறைஞ்சினார்கள். தாலூத் என்பவரை

மன்னனாக அனுப்பினதாக நபி அவர்கள் கூறினார்கள். அவர் உயர்ந்த தோற்றமும் அழகான உருவமும் உடையவராய் இருந்தார். புன்யாமீன் நபி அவர்களின் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தார். ஆனால் அவருடைய உலகச் சொத்துக்களோ மிகச் சொற்பமானதாய் இருந்தது. இதனால் இஸ்ரவேலவர்கள் தாலூத் அவர்களை மன்னனாக ஏற்க மறுத்தனர். போலிக் காரணங்களைக் காட்டி தமது மறுப்பைத் தெரிவித்தனர். அவர்களிடத்து ஏற்பட்ட பொறாமையே அதற்கான காரணமாகும். பின்னர் அவர்கள் தாலூத் அவர்களை மன்னனாக ஏற்றுக் கொண்டனர்.

அப்பால் ஒரு படையைச் சேர்ந்தவர்களாக தாலூத் அவர்கள் புறப்பட்டார்கள். அவ்வாறு புறப்படும்பொழுது படை வீரர்கள் சோதிக்கப்படும் முறை ஒன்றினைக் குறிப்பிட்டார்கள். தாங்கள் செல்லும் வழியில் ஓர் ஆறு குறுக்கிடும். அந்த ஆற்றிலிருந்து அளவுக்கு அதிகமாக நீரை ஒருவரும் உட்கொள்ளக் கூடாது. இந்தக் கட்டளையை மீறாதவர்களே தம்முடன் செல்லத் தகுதி உடையவர் எனக் குறிப்பிட்டார்கள். ஆனால் பெரும்பாலோர் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. எனவே ஒரு சிறு கூட்டத்தினரே அவர்களுடன் செல்ல முடிந்தது. தாலூத் அவர்களுக்கும் அவர்களுடைய சிறு கூட்டத்தினருக்கும் ஒரு பெருஞ் சேனையை எதிர் நோக்கவேண்டி ஏற்பட்டது. அப்பொழுது தாலூத் மன்னர் அல்லாஹ்விடம் துஆக் கேட்டார்கள். ''எங்கள் இறைவனே, நீ எங்கள் மீது பொறுமையைச் சொரிவாயாக. எங்கள் பாதங்களை உறுதிப் படுத்துவாயாக. அன்றி நிராகரிக்கும் இந்த ஜனங்கள் மீது (வெற்றிபெற) எங்களுக்கு நீ உதவி புரிவாயாக. தாலூத் அவர்கள் இவ்வாறு இறைவனிடத்தில் துஆக் கேட்டார்கள். வெற்றியும் பெற்றார்கள். எதிரிகளின் தலைவனான ஜாலூத்தை அப்பொழுது தாலூத்தின் படையில் பணிபுரிந்த தாவூத் நபி (அலை) அவர்கள் வெட்டிக் கொன்றார்கள். தாலூத் மன்னனைப் பற்றியும் அவருடைய சிறு கூட்டத்தினர் பெருங்கூட்டத்தை வெற்றிபெறக் கிடைத்த வாய்ப்பினையும் பற்றி அல் கிர்ஆன் குறிப்பிடுகிறது. (அல் குர்ஆன் 2 :246—251)

முஸ்லிம்கள் பிற்காலத்தில் தாம் ஈடுபட்ட தற்காப்புப் போர்களில் தம்மைவிடத் தமது எதிரிப் படைகள் எண்ணிக்கையில்

அதிகமாக இருந்த சந்தர்ப்பங்களில் இத்தகைய துஆவினை அல்லாஹ் இடத்தில் கேட்டார்கள். தாலூத் மன்னனுக்கு அளித்த அதே வெற்றியைத் தமக்கும் அளிக்குமாறு அல்லாஹ்விடத்தில் இறைஞ்சினார்கள். விறாஸரச் சிறைமீட்ட படலத்தில் இக்கருத்துக்களை றாபிகு(றலி) அவர்கள் நினைவுபடுத்தி அல்லாஹ் விடம் குறை இரந்தார்கள் என புதூகுச்சாம் விவரிக்கின்றது. இக்கருத்துகளைக் கொண்ட பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

வல்ல நாத னேவும் மாண்பின் வாழிநற் பொருத்தமேற்
செல்க நாடி முன்னு ளோர்தஞ் செய்யபாதை யுங்கநீள்
வில்லி னண்ணல் தாலூத் தன்பின் மிக்கசேனை யோதல்
போற்
சொல்க நன்மை யருள்வ னாதி துணையுமென்று ணர்த்தினார்
(விறாறைச் சிறைமீட்ட படலம்:89)

அடுத்த செய்யுளில் இதனைக் குறிக்கும் ஆயத் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம்.

இபுறாகீம் நபி (அலை) அவர்கள் யார் என்பதை உமறு கத்தாப் (றலி) அவர்கள் விளக்கினார்கள். அவர் யூதருமல்லர். ஒரு கிறிஸ்தவரும் அல்லர். ஒரு நயவஞ்சகரும் அல்லர். யகூதியு மல்லர், நசுறானியுமல்லர், முசுரிக்குமல்லர் என இம்மூன்றையும் முறையே அறபு மொழியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். திருமறை இவ்வாறு கூறுகின்றது.

''இபுறாஹீம் யூதராகவும் இருக்க வில்லை;
கிறித்தவராகவும் இருக்கவில்லை. எனினும்
இறைவனுக்கு முற்றிலும் வழிபட்ட நேரான
முஸ்லிமாகவே இருந்தார். அன்றி அவர்,
இணைவைத்து வணங்குவோரிலும்
(ஒருபோதும்) இல்லை (அல் குர்ஆன்:3:67)

இதனையே சேகுனாப்புலவர் சுருக்கமாக இவ்வாறு பாடி உள்ளார்.

படர்புகழ் இபுறா கீமும் பயிலெகூ திய்ய ரன்று
தொடர்நசு றானியன்று துயருறு முசரிக் கன்று
நடைதரு நேர்மை பற்று நயனுடை முசுலி மென்ன
விடரறு மாயத் தோடு மிசைத்தன ரின்னு மன்றே.

(ககுபுல் அகுபாறு ஈமான்கொண்ட படலம் : 43)

மற்றொரு செய்யுளில் திருக் குர்ஆன் ஆயத்துக்கள் நான்கின் கருத்துக்கள் உள்ளடங்கி இருக்கக் காணலாம்.

நீங்கள் என்னைத் தியானியுங்கள்: நானும்
உங்களை நினைத்து (அருள்புரிந்து) வருவேன்...'

(அல் குர்ஆன்:2: 152)

இக்கருத்தினையே சுருக்கமாக

'எனை நினைத்திட ருங்களை நினைப்பனியான்...'

எனக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

'அன்றி உங்கள் இறைவன் (அவர்களை
நோக்கி ''இதற்காக) நீங்கள் (எனக்கு)
நன்றி செலுத்தினால் (நான் என்னுடைய
அருளைப் பின்பற்றும்) உங்களுக்கு அதிகப்
படுத்துவேன்...........

(அல்குர்ஆன்:14:7)

இதன் சுருக்கமே அதே செய்யுளில்.

... ... ... ... ... ... ... யான் கொடுத்த
தனைத்துதித்திடி லதிக மாக்குவன்.........

என வந்துள்ளது.

'உங்கள் இறைவன் கூறுகின்றான்
நீங்கள் (உங்களுக்கு வேண்டியவையும்
கேட்க) என்னையே அழையுங்கள்
நான் உங்களுடைய பிரார்த்தனைக்குப்
பதிலளிப்பேன்''

(அல் குர்ஆன்: 40:60)

இதுவே சுருக்கமாக அதே செய்யுளில்

......... ......... அமை கருமந்
தனையி ரந்திட ரருள்குவன் .........

என அமைந்திருப்பதைக் காணலாம்.

'(நீங்கள் பாபத்திலிருந்து விலகி, மனம்வருந்தி
மன்னிப்பைக் கோரினால்) நிச்சயமாக அல்லாஹ்
(உங்களுடைய) பாபங்கள் யாவையும் மன்னித்து
விடுவான்......'' (அல்குர்ஆன்: 36:53

இதனைச் சுருக்கி அதே செய்யுளில்

...................பிழைபொறு தகைமை
யினையெ டுத்திடீர் பொறுக்குவ னென்றன னிறையே

எனப் பயன்படுத்தி உள்ளார்.

ஆக, இந்த நான்கு சிறந்த குர்ஆன் வாக்கியங்களின் கருத்துக்களை இங்ஙனம் ஒரு செய்யுளில் அமைத்துள்ளமை நன்கு சுவைக்கத் தக்கதொன்றாகும்.

எனை நினைத்திட ருங்களை நினைப்பனியான் கொடுத்த
தனைத் துதித்திடி லதிகமாக் குவனமை கருமந்
தனையி ரந்திட ரருள்குவன் பிழைபொறு தகைமை
யினை யெடுத்திடீர் பொறுக்குவ னென்றன னிறையே

(அகுசாசு கொண்ட படலம்:59)

அபூபக்கர் (றலி) அவர்கள் இஸ்லாமிய வரலாற்றிலே இரண்டாவது கலீபாவாகப் பதவி வகித்தார்கள். அப்பொழுது போருக்குச்சென்ற தமது வீரர்களுக்கு அறிவுரை பகருகின்றார்கள்' 'பகைவர் பெருமைப்பட்டவர்களாய் இருக்கலாம். ஆனால் நீங்கள் வெற்றி பெற்ற காரணத்துக்காக அவர்களுடைய இல்லங்களுக்குத் தீ வைக்காதீர்கள்.' இதனையே சேகுனாப்புலவர் இவ்வாறு வருணித்துள்ளார்.

தீங்குறை பகைஞர்கள் செருக்கின் வைகிய
ஊங்குறை மனைகளை ஒளிர்வெந் தீயினால்
வேங்குறை படுத்திடீர் வென்றி கொண்டதால்
வாங்குவிற் றடக்கர வண்மை தாங்கினீர்

(படையெழுச்சிப் படலம்:85)

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய மாங்குடி மருதனார்,

நாடுகெட எரிபரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசுபட அமர் உழக்கி
முரசுகொண்டு களம் வேட்ட
அடுதிறல் உயர் புகழ் வேந்தே

(மதுரைக் காஞ்சி 126-130)

எனப் பகைவர் நாட்டை எரியூட்டி அழித்த மன்னரின் வீரத்தைப் பாடியுள்ளமை ஈண்டு நோக்கற் பாலது.

மற்றொரு பாடலில் அபூபக்கர் (றலி) அவர்கள் இட்ட வேறொரு கட்டளை இடம் பெற்றுள்ளது. இக்கட்டளைக்கிணங்க நோயாளர், முதியவர், பேதையர், பெண்டிர், சிறுபிள்ளைகள்

ஆகியோரைக் கொல்லக்கூடாது என வெற்றி வீரர்களான தமது படையினர் கேட்கப்பட்டுள்ளனர். இக்கருத்தைக் கொண்ட பாடல் இவ்வாறு அமைந்துள்ளது,

பிணியினர் முதிர்ந்தவர் பேதை மாதரோ
டணியினர் சிறாரிவ ரகப்ப டுத்ததோர்
திணிவிறல் கொண்டிடிற் றேறுதல் கொள்ளன்மின்
கணிதலி லெறுழ்வலிக் கனகம் பூண்டநீர்
(படையெழுச்சிப்படலம்:84)

புறநானூற்றில் வரும் ஒரு பாடல் புதூகுஷ்ஷாமில் இடம் பெற்றுள்ள செய்யுளின் கருத்துக்களுடன் ஒத்திருத்தலைக் காணலாம்.

'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
எம்மம் புகடிவிடுதும் நும்மரண் சேர்மின்' (:9:1-5)

புதூகுஷ்ஷாம் காபியத்தைக் கையெழுத்துப்பிரதியாகவும் மக்கள் பயன்படுத்தி உள்ளனர். அத்தகைய கையெழுத்துப் பிரதி கொல்லம் ஆண்டு 1020 இல் தயாரிக்கப்பட்டுள்ளது. கொல்லம் ஆண்டின் ஆரம்பம் கி. பி. 824 எனக் கூறலாம். இது ஹிஜ்றி 209 வது ஆண்டாகும். எனவே இக் கையெழுத்துப் பிரதி ஆங்கில ஆண்டு 1844 இல் தயாரிக்கப்பட்டதாகும். இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது புதூகுஷ்ஷாம் ஆசிரியர் செய்கப்துல் காதிறு நயினார் ஆலிம் புலவர் வாழ்ந்த காலத்திலேயே இது பிரதி செய்யப்பட்டுள்ளது. புதூகுஷ்ஷாம் அரங்கேற்றப்பட்டு 22 ஆண்டுகளில் இதனைத் தயார் செய்துள்ளனர். இதனைத் தயாரித்தவர் செல்வராயன் என்பவர் ஆவார். இவர் உபதேசிப்பாவலர் குமரர் என்றும் பவளக் காட்டிற் கொட்டைக் குப்பத்தைச் சேர்ந்தவர் என்றும் இக்கையெழுத்துப் பிரதியின் அடிக்குறிப்பொன்று குறிப்பிடுகிறது.

இக்கையேட்டின் சிறப்பம்சம் என்னவெனின் புதூ குஷ்ஷாமில் இடம் பெற்றுள்ள ஒவ்வோர் அறபுச் சொல்லும் சொற்றொடரும் அறபு வடிவத்திலேயே பக்கக் குறிப்புகளாகத் தரப்பட்டுள்ளமையேயாம். கையேட்டுப் பிரதியின் தொடக்கத்திலும் இறுதியிலும் படல அட்டவணை தரப்பட்டுள்ளது. அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள புதூகுஷ்ஷாம் பிரதிகளில் அங்குள்ள படலங்

களின் எண்ணிக்கை 61 ஆகும். ஆனால் கையேட்டுப் பிரதியில் 60 படலங்களே இடம் பெற்றுள்ளன. அச்சுப் பிரதி களில் வர்த்தான் போர் புரிப்படலம், வர்த்தான் வதைப் படலம் என இரண்டு படலங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் கையேட்டுப் பிரதியில் இவ்விரண்டு படலங்களிலும் உள்ள செய்யுட்கள் வர்த்தான் வதைப்படலம் என ஒரே படலத்தில் அமைந்துள்ளன. பாறூக்கிய்யாக் காண்டத்தின் இரண்டாம் படலமான அபூவுபைதா தலைமைபூண்ட படலத்தில் 61 பாடல் களே அச்சுப்பிரதியில் தரப்பட்டுள்ளன. ஆனால் கையெழுத்துப் பிரதியில் இப்படலத்தில் 81 செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. கையெழுத்துப் பிரதியில் 30 முதல் 49 வரை உள்ள பாடல்கள் அச்சுப் பிரதியில் அமைந்த அபூவுபைதா தலைமை பூண்ட படலத் தில் இடம்பெறவில்லை. ஆனால் கையெழுத்துப் பிரதியில் உள்ள இப்படலத்தில் ஒருகுறிப்புத் தரப்பட்டுள்ளது. அக்குறிப்புக்கிணங்க இச்செய்யுட்களை அந்தாக்கியா முதற் போர்புரிபடலத்தில் 47ஆம் செய்யுளுக்கும் பின்னர் சேர்த்துக் கொள்ளலாம் என உள்ளது. இதன்படி இப்பாடல்கள் அந்தாக்கியா முதற் போர்புரி படலத்தில் 48 முதல் 67 வரை உள்ள செய்யுட்களாக அச்சுப் பிரதியில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

பவளக் காட்டிற் கொட்டைக்குப்பத்தைச் சேர்ந்த உபதேசிப் பாவலர் முதலியார் குமாரரான செல்வராயன் என்பவரின் கையெழுத்துப் பிரதியில் கையெழுத்துப் பிரதியினைத் தயார் செய்தவரின் குறிப்புக்கும் பின்னால் ஒரு செய்யுள் அமைந்துள்ளது. அச்செய்யுளில் முகம்மதிய்யாக் காண்டத்தில் பதினொரு படலங் களும் சித்தீக்கிய்யாக் காண்டத்தில் பன்னிரண்டு படலங்களும் பாறுக்கியாக் காண்டத்தில் முப்பத்தேழு படலங்களும் இடம் பெற்றுள்ளன என்றும் இக்காண்டங்கள் ஒவ்வொன்றிலும் முறையே 965 செய்யுட்களும் (ஒன்பானூறஃதறுபத்தைந்து) 1747 செய்யுட்களும் (ஆயிரத்தெழுநூற்றையெட்டேழு) 4074 செய்யுட் களும் (ஆயிரம்நான்ககத்தெழுபானான்கு) இடம் பெற்றுள்ளன என்றும் மொத்தச் செய்யுட்களின் எண்ணிக்கை 6786 (ஆறாயிரத் தறுநூற்றறுமுப்பானாறு) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன இச் செய்யுள் வருமாறு.

பகுபடலம் பன்னொன்று பன்னிரண்டுமுப்
பானேழு பாட்டொன் பானூ
றஃதறுபத் தைந்தாயி ரத்தெழுநூற்
றையெட்டே ழாயி ரம்நான்

ககத்தெழு பானான்கா றாயிரத்தறு
நூற்றறுமுப் பானாறும் கொண்ட
முகம்மதியா சித்தீகியா பாறூக்கியா
காண்ட மூன்று மாமே.

இங்கே மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிடும் பொழுது அமைக் கப்பட்டுள்ள சொல்லாட்சியைப் பார்க்கும்பொழுது இவ்வாறு கூறலாம். ஆறாயிரமும் அறுநூறும் அறுமுப்பானும் (நுற்றெண் பதும்) ஆறும் சேர்ந்தே இத்தொகை பெறப்பட்டுள்ளது. இச்செய்யுளில் குறிப்பிட்டாங்கு மூன்று காண்டங்களிலும் இடம் பெற்றுள்ள பாடல்களைக் கூட்டிப் பார்க்கும்பொழுது ஆறாயித்து எழுநூற்று எண்பத்தாறு செய்யுட்கள் பெறப்படுவதைக் காணலாம். ஆயிஷா (றலி) அவர்களின் கூற்றுக்கிணங்க அல்குர் ஆனிலே இடம்பெற்றுள்ள திருவாக்கியங்களின் எண்ணிக்கை ஆறாயிரத்து அறுநூற்றறுபத்தாறு என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

# தீன் விளக்கம்

இஸ்லாமிய அடிப்படையில் தமிழில் இயற்றப்பட்ட ஒன்பது காப்பியங்கள் தோன்றிய 15 ஆண்டுகளைக் கொண்ட குறுகிய கால எல்லையுள் ஒன்பதாவதாகப் படைக்கப்பட்ட காப்பியம் தீன் விளக்கமாகும். ஒரு பதிப்பில் இக்காப்பியம் தீன்விளக்கம் என்றும் பிறிதொரு பதிப்பில் தீனெறிவிளக்கம் என்றும் பெயர் சுட்டப் பட்டுள்ளது. போர் வருணனைகள் மிகுதியாக உள்ளது இக்காப் பியம் இக்காலஎல்லையுள் தோன்றியகாப்பியங்களுள் நான்கினைப் படைத்த காயல்பட்டணச் செய்கு அப்துல் காதிர் நெயினார்ப் புலவர்க்கும் மூன்றினுக்கு ஆசிரியராக அமைந்த மதுரை மீசல் வண்ணக்களஞ்சியபுலவருக்கும் இலக்கியத் துறையில் ஏற்பட்ட போட்டி இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பெருக வழிவகுத்தது எனலாம். இருபுலவர்களும் படைத்த காப்பியங்களுக்குக் கருவாக அமைந்த பொருளைப் பார்க்கும்பொழுது இவ்வுண்மை புலனா கின்றது,

பத்து நாட்கள் நடைபெற்ற போரின் வருணனையே தீன் விளக்கத்தில் முக்கிய இடம் பெறுகின்றது. ஒவ்வொரு நாளும் நிகழ்ந்த போர் ஒவ்வொரு படலத்தில் வருணிக்கப்பட்டுள்ளது. காப்பியத்தில் இடம்பெறும் கடவுள் வாழ்த்து, நாட்டுப்படலம், நகரப்படலம் என்பனவற்றைத் தவிர்த்து பத்துப் படலங்களில் போர் நிகழ்ச்சிகளும் ஏனைய ஒன்பது படலங்களில் பிற செய்தி களும் இடம் பெற்றுள்ளன. தலைமுறை, திருவாக்கருளப் பெற்றமை, சமர் யாத்திரை மேற்கொண்டமை, விக்கிரம பாண்டியனுக்குத் தூதனுப்பியமை, செய்யிது இபுறாகிம் வொலி யுல்லாஹ் அரசாட்சி புரிந்தமை, செய்யிது இசுகாக் திருமணம்

புரிந்தமை, செய்யிது இபுறாகிம் ஒலியின் மறைவு, தலைமுறை விருத்தியானமை, சேதுபதி மகாராசா சந்ததிபெற்றமை என்பன ஒன்பது படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. இவ்வொன்பது படலங்களுள் முதல் நான்கு படலங்களில் போர் நிகழ்ச்சிகளின் வருணனைக்கு முன்னரும் பின்னைய ஐந்து படலங்களில் போர் நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்ட பின்னரும் கதை தொடர்பான செய்திகள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். 22 படலங்களில் மொத்தம் 1715 செய்யுட்கள் தீன்விளக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

ஏனைய காப்பியங்களில் உள்ளன போன்று புகழ்ப்பாக்களோடு வேறு சிலரையும் புதிதாச் சேர்த்துப் பாடப்பட்ட துதிப்பாக் களையும் கொண்டுள்ளது இக்காப்பியம். முகியித்தீன் ஆண்டகை யின் ஆசானைப்பற்றி வேறு எந்தக் காப்பிய ஆசிரியரும் கடவுள் வாழ்த்துப் படலத்தில் குறிப்பிடவில்லை. ஆனால் வண்ணக் களஞ்சியப்புலவர் முகியித்தீன் ஆண்டகையின் உஸ்தாதை (குருவை) இவ்வாறு புகழ்ந்து பாடி உள்ளார்.

நிரவுறு தவத்தோர் நெஞ்ச நேத்திர மணியெனப் பாகத்
தரமுறு மப்துல் காதர் முகிய்யித்தீன் தமக்குஸ் தாதாய்
வரமுறு மபூ சஹீதுல் மகுஸூமி மலர்பொற் பாதஞ்
சிரமிசை யிருத்தி வாழ்த்திச் செந்தமிழ்ப் பனுவல் செய்வாம்.
(கடவுள் வாழ்த்து.14)

இக்காப்பியத்தின் பெயர் காப்பியத்தின் இரண்டு வெவ்வேறு பதிப்புக்களில் வித்தியாசப் பட்டு வந்துள்ளது. ஒன்று தீன்விளக்கம் என்றும் மற்றது தீனெறிவிளக்கம் என்றும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் அல்லாதார் தீன் என்னும் அறபுச் சொல்லின் கருத்தைப் புரிந்து கொள்ளாமல் விட்டால் அது வேறுவிதமாகக் கருத்துக் கொடுக்கும் என்பதனாலோ என்னவோ இரண்டாம் பதிப்பில் அதன் பெயர் 'தீனெறிவிளக்கம்' அல்லது 'தீனெறிவிளக்கம் என்கிற புராணம்' எனப் பெயரிடப்பட்டிருப்பதைக் காணலாம். தீன் என்னும் தமிழ்ச் சொல் உணவு என்னும் பொருளைத் தருமா தலால் இந்த நிலைமை உருவாகி இருக்கலாம். தீன் என்பது இஸ்லாத்தையே இங்கு சுட்டுகின்றது. ஆனால் இக்காப்பிய ஆசிரியர் மதுரை, மீசல், வண்ணக்களஞ்சியப் புலவர் இக்காப்பி யத்தை தீன் விளக்கம் என்றே குறிப்பிட்டுள்ளார். தாம் அதன் பெயராக தீன்விளக்கம் என்பதைக் குறிப்பிட்டதாக ஒரு செய்யுளில் ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அம்மனையா யிருந்ததனை யவர்தம்பால ராகிவளர்
முசாபிர்களாய்த் தோன்றி னோர்கள்
தம்மனத்தின் மகிழ்ச்சிபொங்கப் படலஞ் சேர்ந்த
தானுலவு காவியமாய்ச் சாற்ற வென்று
செம்மைதர வுரைத்ததனா லவ்வா றாகச்
சிறந்தவின்பம் தருமதுர பாகந் தோன்ற
வண்மைதரு தீன்விளக்க மென்னும் நாம
மகிதலத்தி லேவிளங்க மவுன்றிட் டேனே.

(கடவுள் வாழ்த்து:25)

இக்காப்பியம் அரங்கேற்றப்பட்டமையைக் குறிப்பிடும் பொழுதும் அதன் பெயரை தீன்விளக்கம் என்றே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பண்புசேர்ந் திடுமோர் தீன்விளக்கம்
பரிவுட னரங்க மேற்றியதே

(கடவுள் வாழ்த்து 27)

ஒரு செய்யுளில் ஆசிரியர் தமது பெயரைக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு குறிப்பிடும் பொழுது தாம் மீசலைச் சேர்ந்தவர் என்று கூறி உள்ளார். முதுகுளத்தூர்ப் பகுதியில் உள்ளது மீசல் என்பர். மதுரையையும் கூடல் எனக் குறிப்பிட்டுள்ளார். தாமரை மலர்கள் நிறைந்த வாவிகளால் சூழப்பெற்றது மதுரை என நகரை வருணித்துள்ளார். தமது இயற்பெயரான முகம்மது இப்றாகீம் என்பதனைக் கூறாது பெரு வழக்கைப் பெற்றிருந்த பெயரான வண்ணக் களஞ்சியம் என்றே குறிப்பிட்டுள்ளார். அச்செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

புதுமைநாட் டியமுகம்ம துறசூ லேவலின்
மதின புரத்தி னின்று
மதுரைநாட் டெழுந்தசெய்யி திபுறாகீம்
ஷஹீதுவர லாற தெல்லாங் •
கதிரினாட் டுவதாகக் காவியஞ்செய்
தான்கமலத் தடஞ்சூழ் கூடல்
அதிபனூற் புலவரன்பன் மீசல் வண்ணக்
களஞ்சியமா ராய்ந்து தானே.

(கடவுள் வாழ்த்து:28)

இக்காப்பியத்தை இயற்றுவதற்காக நிறையப் பொருளீந்துள்ளார் வரிசை இபுறாகீம் வெப்பை என்பவர். அவர் செய்யிதி புறாகீம் லெப்பையின் புதல்வர். அவரோ செய்கு இபுறாகீம்

லெப்பை என்பவரின் புதல்வர். அவர் பெருஞ் செல்வந்தர். அவர் கற்பகதருவைப் போன்றவர். இல்லையென்னாது வழங்குபவர். அவர் இக்கவிதை பாட நிறையப் பொருள் ஈந்தார். அதன் பயனாக அவருடைய புகழ் எல்லா இடங்களிலும் பரவியது. இக் கருத்துக்களையே ஆசிரியர் வண்ணக் களஞ்சியப் புலவர் ஒரு செய்யுளில் இவ்வாறு எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆதிபதி செய்குஇபு றாகிம் லெப்பை
யருளியதோர் செய்யிதிபு றாஹிம் லெப்பை
நீதிபதி யமுதகுண பதிமா றாத
நேயவர பதிநிறைசெல் வத்தி னோனென்
றோதியல்சேர் செய்யிதிபு றாஹிம் லெப்பை
யுதவியருள் வரிசையிபு றாஹிம் லெப்பை
மாதிருவைந் தருவெனவே நிதிக ளீய்ந்தார்
வையகத்தில் சீர்த்திமிக வளரத் தானே.

(கடவுள் வாழ்த்து:26)

தீன்விளக்கம் என்னும் இக்காப்பியத்தில் மதீனநாடும் நகரப் படலத்தில் மதீன நகரும் வருணிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

சீர்தரு முலகி யாவுஞ் செய்துகாத் தருள்வோ னன்பு
சேர்தரு விலாயத் தோங்கித் திகழ்செய்யி திபுறா ஹீம்பூந்
தார்தரு வரைத்திண் டோளார் தங்கிவாழ்ந் திடுவ தான
வேர்தரு மதீன நாட்டி னியல்வளஞ் சிலசொல் வாமே.

என நாட்டுப் படலத்தில் முதலாஞ் செய்யுளில் மதீன நாடும்.

ஆரண முதவு தனிப்பொரு ளிறையோ
னருளொளி திரண்டொரு வடிவாய்ப்
பூரண நபிக ளெவர்க்குமோ ரரசாய்ப்
புண்ணியப் பொருளினுட் பொருளாய்
வாரணத் தரசர் தொழுமுகம் மதுவாம்
வள்ளல்செங் கோல்புரிந் தனந்தங்
காரணப் புதுமை விளைக்கும்விண் மணியிற்
கதிர்விரி மதீனமா நகரம்

என நகரப்படலத்தில் மதீன மாநகரமும் வருணிக்கப்பட்டுள்ளன.

மதீனாவிலிருந்து தமிழ் நாடு வந்து விக்கிரமபாண்டியனுடன் போர் புரிந்து தமிழ் நாட்டின் ஒரு பகுதியை வென்று செய்யிது

இபுறாஹிம் அவர்கள் ஆட்சி செய்த நகர் பௌத்திரமாணிக்கப் பட்டணம் என தீன்விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி. பி. 1239 இல் அரசு கட்டில் ஏறிய மாறவர்மன் சுந்தரபாண்டியன் வழங்கிய ஒரு நன்கொடை பற்றிய கல்வெட்டு திருப்புல்லாணிக் கோவிலில் கோபுரவாசலில் அமைந்துள்ளது. அந்தக் கல்வெட்டில் பவுத்திரமாணிக்கப்பட்டணம் குறிப்பிடப்பட்டுள்ளது. 'கீழ் செம்பி நாட்டுப் பவுத்திரமாணிக்கப்பட்டின கீழ்பால் சோனகசாமந்தப் பள்ளி' என்ற இந்தப் பவுத்திரமாணிக்கப்பட்டணமே சுல்தான் செய்யித் இப்றாஹிமின் ஆட்சியிலே தலைநகராகத் திகழ்ந்தது. இந்நகர் பற்றிய குறிப்புக்கள் வரலாற்று நூல்களிலே மிக அருமையாகவே இடம் பெற்றுள்ளன. தீன்விளக்க ஆசிரியர் வண்ணக் களஞ்சியப்புலவர் தமது காப்பியத்தில் பவுத்திரமாணிக்கப் பட்டணத்தின் மதில்களையும் கொத்தளங்களையும் மலைக்குன்றுகளையும் குறிப்பிட்டு அவற்றின் உயரத்தைக் கற்பனை நயத்துடன் அவற்றில் முகில்கள் அடைகின்றன என்றும் அந்நகரின் பெயர் பவுத்திர மாணிக்கப்பட்டணம் என்றும் ஒரு செய்யுளில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மாந்தர்கா னடைக்கெண் காதநீள்வழியாய்
  வகுப்பதா மதிலுய ரிஞ்சி
யாய்ந்துகா வதத்தி நீண்டுள தாமங்
  கதிலுள கொத்தளத் திரள்கள்
சேந்தவொண் கனகக் கிரிகள்போற் றுலங்கிச்
  செழுமுகில் பலவடை கிடக்கும்
பாந்தளுங் கிரியும் புகழத னாமம்
  பவுத்திர மாணிக்க நகரே

(திருவாக்கருள் படலம்:15)

ஏனைய பாடல்களில் பவுத்திர மாணிக்கப் பட்டினம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வாறெல்லாம் பவுத்திர மாணிக்கப் பதி

(சமர்யாத்திரைப்படலம்:158)

பவுத்திர மாணிக்கப்பட்டினத்தின் மேற்காக வுற்ற
நவத்துறு புன்னைக் காயற் கப்புற நவிலோர் காதம்

(சமர் யாத்திரைப் படலம்:160)

ஏனைய காப்பியங்களில் உள்ளன போன்று பெண்கள் பற்றிய வருணனை தீன் விளக்கத்தில் இடம் பெறவில்லை. ஆனால் செய்யிது இசுஹாக்கு என்பாரின் திருமணத்தை வருணிக்க முற்பட்ட வண்ணக்களஞ்சியப்புலவர் இலக்கிய மரபினைத் தழுவி பெண்கள் பற்றிய வருணனையை இடம் பெறச் செய்துள்ளார். செய்யிது இசுஹாக்கு என்பாரின் திருமண ஊர்வலம் வருணிக்கப் பட்டுள்ளது. அந்தத் திருமண ஊர்வலத்தைக் கண்டு களிப்பதற்குப் பெண்கள் வந்திருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்ஙனம் திருமண ஊர்வலத்தைக் கண்டு களிக்க வந்தவர்களுள் ஏழு பருவங்களையும் சேர்ந்த பெண்கள் இருந்தனர் என்பது இக்காப்பி யத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செய்யிதிபுறாகீம் ஷஹீது அவர்களுக்கும் விக்கிரம பாண்டி யனுக்கும் இடையே பத்துநாட்கள் தமிழ்நாட்டில் போர் நடை பெற்றுள்ளது. எனவே அப்போரைக் கருவாகக் கொண்டு தோன்றிய தீன்விளக்கம் என்னும் காப்பியத்தில் பத்துநாட்கள் நடைபெற்ற போர் நிகழ்ச்சிகள் வெவ்வேறாகப் பத்து படலங் களில் விவரிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான போர் நிகழ்ச்சிகள் இரண்டு சாராரையும் சார்ந்த முக்கியமான இருவர்களுக்கிடையே ஏற்பட்டனவாய் வருணிக்கப்பட்டுள்ளன. பெருந் தொகையின ரான போர்வீரரும் பெருந்தொகையான யானைகள், குதிரைகள், தேர்கள் முதலியனவும் போரில் பயன்படுத்தப்பட்டன எனக் காப்பிய ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் நாள் நிகழ்ந்த போரிலே பங்குபற்றிய குதிரைகளினதும், யானைகளினதும் தேர் களினதும், காலாட்படையினதும் எண்ணிக்கையைப் புலவர் ஒரு செய்யுளில் குறிப்பிட்டுள்ளார். குதிரைகளின் எண்ணிக்கை மாத்திரம் ஆறு இலட்சம் எனவும் ஏனையன அது போன்று இரு மடங்கு என்வும் கற்பனை நயம் தோன்ற இவ்வாறு ஒரு செய்யுளில் ஆசிரியர் பாடி உள்ளார்.

> பரிகளா றிலக்கஞ் சூழப் பன்மணி புனைந்த சோதி
> விரிதரு மிரதந் தந்தி மிக்கத னிரட்டி சூழ
> விரணிய சிவிகைக் கூட்ட மெண்ணற நெருங்க வாச
> மறுமலர்த் தும்பை சூடி வந்துதங் கிளைஞர் மேல்

(இரண்டாம் போர்புரி படலம்:37)

இனி இங்ஙனம் பங்குபற்றிய போர் எவ்வாறு நிகழ்ந்தது என்பது மற்றொரு பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரு

சாராரும் ஒருவர் மற்றவருக்கு இளைத்தவரல்லர் எனப் போரிட்டனர் என்றும் அதன் காரணமாகக் குருதி ஆறாய் ஓடியது என்றும் கடுமையான போர் நிகழ்ந்தது என்றும் ஒரு செய்யுள் இவ்வாறு கூறுகின்றது

உறுமிரு வகையி லொன்றுக்
கொன்றிளை யாத வண்ணங்
கறுவொடு பூச லிட்டார்
கரிபரி யிரதம் வீரர்
அறுவது சிலவாய்ச் சோரி
யாறெழுந் தங்கு மிங்கு
முறிவது மிலவாய்க் கூண்டு
மொய்யமர் செய்ய லுற்றார்.

(இரண்டாம் போர் புரி படலம்:49)

தனிப்பட்ட முறையில் இரண்டு சாராரையும் சார்ந்த இருவர் போர்புரிந்தமை பற்றியும் ஒரு செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருவருடைய தேர்களும் நிலைபெயர இருவரும் ஏனைய ஆயுதங்களை எடுத்துக் கடுமையாகப் போர் புரிந்தனர் என ஒரு செய்யுளில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

இருவ ரூர்தியு மிறந்திட விருவரு மெதிர்த்துக்
கருவி வாளயில் கதைபல பகைரத் தெடுத்துப்
பொருவு போர்புரிந் தனர்பொரும் போரினி லொருவர்க்
கொருவர் தாமுமே நலிந்திடா வியன்பெற வோங்கி

(இரண்டாம்போர் புரி படலம்:60)

படைகள் அழிக்கப்பட்ட விதம் மற்றொரு செய்யுளில் விவரிக்கப் பட்டுள்ளது. குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் சின்னாபின்னமாக்கினர். ஆயிரக் கணக்கானோர் கொல்லப் பட்டனர். நெற்கதிர் அரிவது போன்று பகைவர் பத்தாயிரம் பேர் மாய்க்கப்பட்டனர். பின்னர் எல்லோருமாய் ஒழுங்காய் ஒன்று சேர்ந்து போரைத் தொடர்ந்து நடத்தினர். இச்செய்தியே ஒரு செய்யுளில் இவ்வாறு பாடப்பட்டுள்ளது.

பரிகரி யிரதம் வாளாற் பலதுணுக் காக வீழ்த்தி
அரிகள் போ லரச ரோர்பத் தாயிரம் பெயரை மாய்த்து
விரவுறு மளவிற் பின்னு மேயொரு மித்து நின்றார்
செருமுனைந் தெதிர்த்து நின்று செழுஞ்சமர் விளைத்திட் டாரே

(ஆறாம்போர் புரி படலம்:30)

எவ்வளவு விரைவாகப் பகைவர்களின் தலைகள் துண்டிக்கப் பட்டது என்பதும் இரத்தம் ஓடியது என்பதும் பிணமலை குவிக்கப் பட்டது என்பதும் இன்னொரு செய்யுளில் இவ்வாறு விவரிக்கப் பட்டுள்ளது.

அரியினுட் புகுந்த வேலை யசைத்தவன் வாங்கு முன்னே
விரைவினிற் குதித்தன் னோன்கை விற்றுணித் துதிரஞ் சிந்தச்
சிரமது துணித்து மற்றுஞ் சேனை வீரரைத் துணித்துப்
பெருகுசெங் குருதி யோடப் பிணமலை குவித்திட் டாரே.

(ஆறாம்போர்புரி படலம்:32)

தன் புதல்வன் இறந்து விட்ட செய்தியைக் கேட்ட விக்கிரம பாண்டியனின் புலம்பலைக் குறிப்பிட்டுள்ளார் வண்ணக்களஞ்சியப் புலவர். 'இப்போதுள்ள என்னரசு நீ ஆட்சி புரியப் போதுவதன்று என நினைக்கக் கூடியவன் நீ. அந்த அரசை எட்டு மடங்கு விசால மானதாய் மாற்றிடுவாய் என்று நினைத்தேன். அத்தகைய பேரரசை ஆட்சி செய்வாய் என உள்ளம் பூரிப்படைந்தேன். இப்பொழுது அந்தக் கனவை நினைத்துப் பார்க்க முடியவில்லை. எனக்குப் பின்னால் இந்த அரசினை ஆட்சி செய்ய ஒரு வாரிசு இல்லாதவனாக மாறிவிட்டேன். ஏனைய அவைக்களங்களில் நான் பிள்ளைப்பாக்கியம் அற்றவன் என்றும் ஒரு பாவி என்றும் என்னை ஏளனம் செய்யப்போகின்றனர். இதற்கெல்லாம் என்னை ஆளாக்கிவிட்டு நீ மறைந்துவிட்டாயே' என விக்கிரம பாண்டியன் வாய்விட்டலறியதாக ஆசிரியர் ஒரு செய்யுளில் இவ்வாறு பாடியுள்ளார்.

என்னரசி லெண்மடங்கா யெங்குமொரு கோல்செலுத்தி
உன்னரசு செய்வாயென் றுள்ளம்பூ ரிதிரு ந்தேன்.
பின்னரசு செய்யவொரு பிள்ளையில்லாப் பாவியென்று
மன்னர்சவை தோறும் வசைக்க வைத்துப் போயினையே

(ஏழாம்போர் புரி படலம்:77)

அடுத்துத் தாயின் புலம்பல் பல செய்யுட்களில் இடம் பெற்றுள்ளது. அவளும் மனம் உருகினவளாய் அழுது விழுந்தாள். வாய் புலம்பினாள். கண்ணீர் சொரிந்தாள். கன்மம் தான் பலன் செய்தது எனக் கத்தினாள். விதிசெய்த சதி எனத் துன்புற்றாள். பொன் மகளால் கூட உன்னைக் காப்பாற்ற முடியவில்லையா என்று ஓலமிட்டாள். அத்தோடு அவள் நின்றுவிடவில்லை.

'தென்னாடாம் தமிழ்நாட்டில் கிடைக்கும் புகழ் போதாது என நீ நினைத்தாய் போலும். அதனால்தான் நீ பொன்னாடாம் சுவர்க்கத்துக்குப் போனாய் போலும். அங்கே நீ புகுந்து தேவர்கள் எல்லோரும் உன்னைப் போற்ற வேண்டும் என்ற எண்ணமோ? மேலுலகில் உன் சிறப்புக்களை நிலைநாட்ட நீ அங்கு சென்றாயோ? விண்ணுலகிலே உன் புகழ் நாட்டப்பெற்று அது வளர்ந்து வரும் பொழுது தேவ அரசன் இந்திரன் கூட இந்தப் பாண்டி நாட்டு இந்திரன் எமது அரசன் எனக் கூறும் வாய்ப்பை அளித்தாயோ?' இவ்வாறு தாயின் அலறலை ஒரு செய்யுள் இங்ஙனம் கூறுகிறது.

தென்னாட்டார் போற்றுஞ் சிறப்புனக்குப் போதாமற்
பொன்னாட்டார் போற்றப் புகுந்தாயோ மேலுலகில்
கன்னாட்டாய் நாட்டிக் கருத்துவள ருன்புகழ்போல்
என்னாட்டர செனுமவ் விந்திரனும் பெற்றானோ.

(ஏழாம் போர்புரி படலம்:87)

'நீ முதியவனாய் விட்டாயோ? உனக்கு இப்பொழுது வயது இருபத்து நான்கு தானே ஆகின்றது. நீ சின்ன வயதுக்காரன். இத்தகைய சின்னவயதுக்காரன் இத்தகைய தீவினைக்கு ஆளாக வேண்டுமா? நீ இன்று இருந்தால், என் அருமை மைந்தனே, உன்னை மன்னவர் அனைவரும் போற்றி இருப்பார்கள். நான் இப்பொழுது உன்னை இழந்து தவிக்கிறேன். நீ இத்தகைய இளம் வயதில் உலகை விட்டுப் பிரிந்த பின்னரும் நான் இந்த உயிரை வைத்திருக்கிறேனே. நானும் இறந்து போயிருக்கக் கூடாதா? நான் ஒரு கொடியவளாகி விட்டேன். ஒரு பெண் பேயாகி விட்டேன்' என இவ்வாறு கதறினாள். இக்கதறலையே வண்ணக் களஞ்சியப்புலவர் இவ்வாறு பாடியுள்ளார்.

முன்ன முதியவனோ முப்பதுக்கோ ராறுகுறை
சின்ன வயதிலிந்தத் தீவினையுந் தான்வருமோ
மன்னவர்கள் போற்றிசெயு மைந்தா வுனையிழந்தே
இன்னமுயிர் வைத்திருந்தே னென்னைப்போ னீலியுண்டோ.

(ஏழாம்போர் புரி படலம்:90)

சுல்தான் செய்யிது இப்றாகீம் ஷஹீது அவர்கள் அரசு கட்டிலிலே வீற்றிருந்த காட்சி ஒரு செய்யுளில் வருணிக்கப்பட்டுள்ளது. சுல்தான் செய்யிது இபுறாஹீம் சகீது என்பவர் சாதாரண மனிதர் அல்லர். அவர் முகம்மது நபி (சல்) அவர்களின் வழித்தோன்றல்

ஆவார். நான்கு வேதங்களான தவுறாத், சபூர், இன்சீல், புறுக்கான் சதுமறை என வகுக்கப்படுவதுண்டு. அத்தகைய நான்கு வேதங்களின் திருத்தூதர் முகம்மது (சல்) அவர்களின் மரபில் வந்தவர் ஆவார். அவருடைய மரபினைச் சேர்ந்த ஏனையோர் அவரைச் சுற்றிவர இருப்பது இரவிலே சந்திரனைச் சூழவர நட்சத்திரங்கள் இருப்பதை ஒத்திருந்தது. மிருகங்களுக்கெல்லாம் அரசான சிங்கத்தைச் சூழ்ந்து புலிகள் இருப்பது போன்று சுல்தான் அவர்களைச் சுற்றிவரப் போர்வீரர்கள் இருந்தனர். இந்தக் காட்சிக்கு மத்தியிலே சுல்தான் செய்யிது இபுறாஹிம் வீற்றிருந்தது ஒரு பிரகாசமான விளக்குபோல இருந்தது. மேருமலையின் உச்சியிலே அழகான ஒரு விளக்கு போலக் காட்சி வழங்கினார். பனியினால் மூடப்பட்ட மேருமலையின் சிகரத்தில் சூரியஒளி பாயும்பொழுது மலை உச்சி பொன் மயமாகக் காட்சி அளிக்கும். முதிர்ந்த ஒளிக் கதிர்களை எறியும் பொன்மயமான உச்சியிலே இருந்து பிரகாசிக்கும் அழகுமிக்க விளக்குப்போல சுல்தான் செய்யது இபுறாஹிம் ஷஹீது அவர்கள் அரசு கட்டிலில் திகழ்ந்தார்கள். இக்காட்சியையே வண்ணக்களஞ்சியப்புலவர் தமது தீன்விளக்கம் என்னும் காப்பியத்தில் இவ்வாறு உவமை நயம் ததும்ப வருணித்துள்ளார்.

மதியினைச் சூழு மீன்போன்
மரபினோ ரருகிற் சுற்றத்
துதிகொள் கேசரியைச் சூழும்
புலிகள்போல் வீரர் சூழ
முதிர்கதிர் செம்பொன் மேரு
முடிமணித் தீபம் போலச்
சதுமுறை யிறசூல் பேரர்
தவிசில்வீற் றிருந்திட் டாரே.

(அரசாட்சி படலம்:21)

உருவமாகவோ எதற்கும் உவமித்தோ அல்லாஹ்வை வருணிக்கமுடியாது. அவனைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது அவனது அழகிய திருநாமங்களைக் கூறலாம். அவனுக்கு உள்ள தன்மைகள், இல்லாத தன்மைகள் முதலியன பற்றிக் குறிப்பிடலாம். முஸ்லிம் தமிழ்க் காப்பிய ஆசிரியர் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு முரணாக அமையாத வகையிலே அல்லாஹ்வைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அவனுடைய திருநாமங்களைக் கூறாத சந்தர்ப்பங்களில் அவன்தன் பண்புகளே சுட்டப்பட்டுள்ளன.

அரியவன், அந்தமில்இறை, அமைத்தவன், ஆதி, இறை, இறையவன், இறைவன், இறையோன், உடையவன், ஏகன், ஒருவன் முதலிய பல சொற்களைக் கொண்டு அல்லாஹ்வைப் புகழ்ந்து பாடியுள்ளார் ஆசிரியர்.

மீனாட்சி அம்மன் கோவில் மதுரையில் உள்ளது. மதுரையில் வாழ்ந்து மதுரைக்கு அணித்தாயுள்ள பிராந்தியத்தில் செங்கோல் ஓச்சி அங்கேயே கல்லறை அமையப்பெற்றுள்ள செய்யிதிபுறாகீம் ஷஹீது அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ள தமது காப்பியத்தில் வண்ணக்களஞ்சியப்புலவர் பொருத்தமான இடங்களில் மீனாட்சி அம்மையையும் சிவபெருமானையும் குறிப் பிடத் தவறவில்லை. தீன் விளக்க காப்பியத்திலே வரும் முஸ்லிம் அல்லாத பாத்திரங்களின வாயிலாக மீனாட்சி அம்மை யையும் சிவபெருமானையும் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

மதுரையில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந் தவர் சிவபெருமான் என்று சிவ புராணங்கள் கூறுகின்றன· பத்தாம் நாள் போரில் விக்கிரம பாண்டியன் மரணமுற்றான் என் பதை அறிந்த அவன் தன் மனைவி அழுது புலம்பினாள். தனது ஆறாத் துயரை எடுத்துக் கூறினாள். அவ்வாறு கதறும்பொழுது, ஆறுபோன்று மதம் வழிந்த யானையினை அடக்கி அதனை உரித்தது போன்று அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந் தவர் சிவபெருமான். அதன் மூலமாகப் பாண்டிய மன்னர்களை யும் தென்னகத்தில் வாழ்பவர்களையும் காத்தவர். அத்தகைய தெய்வம் இருந்தும் தனது கணவன் காப்பாற்றப்படவில்லையே. பல மைல்களுக்கு அப்பாலிருந்து கடல்கடந்து வந்த துலுக்கன் படையினால் தனது கணவன் கொல்லப்பட்டமை தாம் முன்னைய பிறப்பினில் புரிந்த தீமையின் விளைவாகத்தான் இருக்க வேண்டும். கடவுளைக் குறை கூற முடியாது என்பது தொனிக்கும் வகையில் இக்கருத்துக்களை அமைத்து ஆசிரியர் இவ்வாறு பாடி யுள்ளார்.

அருவிகள்போற் கடமொழுகும் வேளமுரித்
தாடிய றுபத்து நான்கு
திருவிளையா டலும்புரிந்து தென்னவரைக் காத்ததெய்வ
மிருந்துந் தீராக்

கருவிளைவா யுதித்துநெடுங் கடல்கடந்து துலுக்கன்வந்து
கனன்று தாவிச்
செருவிளைவா யிறந்ததுமுற் சென்மமதி யியாம்புரிந்த
தீமை தானே.

(பத்தாம்போர் புரி படலம்:85)

பாற்கடலைக் கடைந்தபோது பெறப்பட்ட ஆலகால விஷத்தை விழுங்க, உள்ளே செல்லாமல் அதனைத் தடுக்க உமா தேவி கழுத்தை நெருக்க தொண்டையிலே நின்றுவிட்டது அவ் விஷம் என்பது இந்து சமயக்கருத்து. அதன் பயனாக சிவபெருமான் நீலகண்டன் என்று சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். விக்கிரம பாண்டியன் சிவபெருமானின் அருளைப் பெற்றவன். அத்தகைய அருளைப் பெற்றவனுடைய உயிரையும் யமன் கவர்ந்துவிட்டானா என மன்னன் மனைவி புலம்புவதாக இச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

ஆலநிறை கண்ட ரருட்பெற்ற சீராளா
காலனுமுன் னாவிநிலை கண்டு பிடித்தானோ

(ஏழாம்போர் புரி படலம்:88)

சிவபெருமானைக் குறிக்க ஈசன் என்னும் சொல் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. இங்கே அது விக்ரமபாண்டியன் கூற்றாக அமைந்துள்ளது.

தரமும்போய்த் தவத்தா லீன்ற சந்ததி களும்போ யீசன்
வரமும்போய்ச் சேனை யின்கா வலரும் போய் மற்றோர் கூட்டத்
துரமும்போய்த் துலுக்கன் மைந்த னுற்றடர் போரி னெந்தன்
கரமும்போ யாவி போகாக் கவலைவந் திருக்கின் றேனால்

(பத்தாம் போர் புரி படலம்:16)

அடுத்து மனைவி கூற்றாக ஈசன் என்னும் சொல் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

ஈசனருண் மணிமுடியுங் கலசமுங்கை வாள்கதையு மேவு மெங்கே.

(பத்தாம் போர் புரி படலம்:83)

ஐந்தெழுத்து என்னும் சொற்றொடர் இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. பஞ்சாட்சரம் என்பதையே இங்கு ஆசிரியர் ஐந்தெழுத்து எனக் குறிப்பிட்டுள்ளார். சைவசமயக் கோட்பாட்டுக்கு இணங்க பஞ்சாட்சரம் என்பது சிவபிரானை ஆதி தெய்வமாகக் கொண்டதும் நமசிவாய என்னும் ஐந்து எழுத்துக்களா

லானதுமான மந்திரம் என்பதைக் குறித்துநின்றது. விக்கிரம பாண்டியமன்னன் சிந்தனையில் உதித்த கருத்தினைக் கூறவந்த புலவர் அவன் கூற்றாக அதனை இவ்வாறு கூறி உள்ளார்.

சொல்லுமெவ் விதத்தென் றாலுந் துலுக்கன்விட் டிடுவ தில்லை
வெல்லுமைந்தெழுத்தை யுன்னி விமலனைத் தியானஞ் செய்து
கொல்லுமப் பகைஞன் கையிற் சொளவுயிர் கொடுப்ப தாயிற்
செல்லுநந் தீமை நீங்கிச் சேர்வதாம் வீர சொர்க்கம்.

(பத்தாம் போர் புரி படலம்:32)

இங்கே போரில் வீரமரணம் எய்தியோர் சுவர்க்கம் அடைவர் என்ற கூற்று முக்கிய இடத்தைப் பெறுவதைக் காண்கின்றோம். இஸ்லாத்திலும் ஐந்து எழுத்துக்களின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது. அது இதிலிருந்து வேறுபட்டதாகும்.

கயல் என்பது கெண்டை மீனைக் குறிக்கும். மையுண்ட கண்ணுக்குக் கவிஞர் கயலை ஒப்பிடுவர். 'கயலெனக் கருதிய வண் கண்' (36) என்கின்றது ஐங்குறுநூறு. அழகிய கெண்டைமீன் போன்ற கண்களை உடையவளை அங்கயற்கண்ணி என்பர். அங்கயற்கண்ணி என்பது மதுரையிலே உள்ள கோயிலில் 'எழுந் தருளி இருக்கும்' மீனாட்சி அம்மையைக் குறிக்கும் சிறப்புப் பெயராகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சம்பந்தர் தேவாரத்திலும்

அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவாய் (868:1)

என அப்பெயர் சுட்டப்பட்டுள்ளது. வண்ணக்களஞ்சியப்புலவரும் தீன் விளக்கத்தில் மீனாட்சி அம்மையைக் குறிக்க 'அங்கயற் கண்ணி' என்னும் சொற்றொடரைப் பயன்படுத்தி உள்ளமையைக் காணலாம். சிவபெருமானை அங்கயற்கண்ணி பாகன் என்பது மரபு. இம்மரபினைப் பேணியே வண்ணக்களஞ்சியப்புலவர் இவ்வாறு பாடி உள்ளார்.

நங்கிளைத் தலைவ ரெல்லா நாளைந்தி லிறப்ப தானார்
அங்கயற் கண்ணி பாக னருளன்றி வலிவே றில்லை

(ஆறாம்போர் புரி படலம்:20)

கயல்விழி பாகர் தம்மைக் கனிவொடு மிறைஞ்சி மீண்டோம்

(செய்யிதிபுறாஹிமொலிஷகீதுப் படலம்:21)

எனவும்,

கயற் கண்ணி தன்னை

(செய்யிதிபுறாஹிமொலிஷகீதுப்படலம்:19)

னவும் வந்துள்ளமை காண்க.

கங்கைநதி சிவபெருமானின் முடியிலிருந்து ஊற்றெடுக்கிறது என்பது ஐதீகம். இதனாலேயே சிவபெருமானை 'கங்கையஞ் சடை' உடையவன் என வருணிக்கப்பட்டுள்ளது. நெற்றியிலுள்ள கண்ணையும் சேர்த்து மூன்று கண்கள் உடையவராகையால் சிவபெருமான் முக்கண்ணன் என வழங்கப்படுகிறார். இரண்டையும் சேர்த்தே வண்ணக் களஞ்சியப்புலவர் சிவபெருமானை

கங்கையஞ் சடைமுக் கண்ணன் கருணையு மில்லை யாயின்
(ஆறாம்போர் புரி படலம்:20)

என்று பாடியுள்ளார்.

காமனார் புரமெ ரித்தோன் கைவிடு மாயிற் பேசா
(ஆறாம்போர் புரி படலம்:21)

எனவும்,

சிவனுக் கோர்செய வில்லையா மிவ்வுப தேசம்
(விக்கிரமபாண்டியனுக்குத் தூதனுப்பு படலம்:54)

எனவும்

.................... சொக்கராணை ...........
(இரண்டாம் போர் புரி படலம்:31)

எனவும்

சோதி வெண்பிறை சூடிய சொக்கரே........
(இரண்டாம் போர் புரி படலம்:114)

எனவும்

ஊன்றி வைக்க வன்னா ளொரு வசிய னாகி வந்து
தோன்று சொக்கநாதர் துணையு மற்றுப் போய்விடுமோ
(ஏழாம் போர் புரி படலம்:76)

எனவும்

தனிவிடைச் சொக்கநாதர் சன்னதி யதனிற் போந்து
கனிவொடு மிறைஞ்சி நின்று கருத்தினி னினைத்த வெல்லாம்
இனிதுற முடியவென்றே எண்ணி உள்ளிருத்தி • .........
(செய்யிதிபுறாஹிம் ஷஹீதுப்படலம்:12)

எனவும்

திரிபரந் தகனஞ் செய்த செஞ்சடைச் சொக்கநாதர்
ஐந்தாம் போர் புரி படலம்:4)

எனவும்,

தேவர் தேவரைச் சொக்க நாதரைத் தெரிசித்து
(செய்யிதி புறாகிமொலி ஷகீதுப் படலம்:61)

எனவும்

பாண்டியனெனப் புரந்த பரமனே மதிகு லத்து
நீண்டநற் கருணை செய்யு நிமலனே ...........
(செய்யிதிபுறாகிமொலிஷகீதுபடலம்:14)

பவளவொண் ணிறத்த முக்கட் பரமன்மெல் லடிகள்
போற்றி
(ஒன்பதாம் போர் புரி படலம்:14)

எனவும்

முடிவுறு விதியை மாற்ற முக்கண ராலு மாமோ
(பத்தாம் போர்புரி படலம்:30)

எனவும் சிவபெருமானைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

மீனாட்சி அம்மையைக் குறிப்பிட முற்பட்ட வண்ணக்களஞ்சியப்புலவர், அம்மையை,

பொன்மகளு முன்னைவிட்டுப் போரிற் பிரிந்தாளோ
(ஏழாம் போர் புரி படலம்:86)

எனக் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமானையும் மீனாட்சியம்மையையும் ஒருவர் மற்றவர் பாகம் எனப் பல இடங்களில் வருணித்துள்ளார் ஆசிரியர்,

கயல்விழி பாகர் தம்மைக் கனிவொடு மிறைஞ்சி மீண்டோம்
(செய்யிதிபுறாமொலிஷகீதுப்படலம்:21)

கயற்கண்ணி மீதுஞ் சொக்கர் கமலத் தாண்மீதும் தோன்ற
(இரண்டாம் போர் புரி படலம்:22)

கவினுலா வியசொக் கேசர் கயற்கண்ணி பாதத்தாணை
(இரண்டாம் போர் புரி படலம்:28)

.......... தனித்தசொக் கேசர் பாகத்
தங்கயற் கண்ணி தம்மை யகத்தினி லிருத்தி யேற்றி
(முதற்போர் புரி படலம்:44)

மீன்றரு விழியாள் பாகர் விமலனா ரருளு நின்பால்
(இரண்டாம் போர் புரி படலம்:34)

என வந்துள்ளமை காண்க.

# நவமணிமாலை

பதினைந்து ஆண்டுகால எல்லையைக் கொண்ட ஹிஜ்றி 1223 முதல் 1236 வரையிலான (கி. பி. 1807 முதல் 1821 வரையிலான) காலத்தில் ஒன்பது தமிழ்க் காப்பியங்கள் இஸ்லாமிய அடிப் படையில் தோன்றியுள்ளன. அவற்றுள் கடைசியாகத் தோன்றிய மூன்று காப்பியங்கள் போரைப் பற்றியனவாகும். குஞ்ஞு மூசுப் புலவரின் இறவுசுல்கூல் படைப்போர் (1233/1818) செய்கு அப்துல் காதர் நயினார் ஆலிம் புலவரின் புதூகுச்சாம் (1236/1821) வண்ணக்களஞ்சியப்புலவரின் தீன் விளக்கம் (1246/1821)என்பன மூன்றும் போரைப் பற்றிக் கூறுவனவாகும். இக்காப்பியங்கள் தோன்றி ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்குப் பின்னரே மற்றொரு காப்பியம் தோன்றி உள்ளது. போரைப் பற்றிய காப் பியமாக அது அமையவில்லை மாறாக வாழ்க்கை வரலாற்றினை விவரிக்கும் ஒரு காப்பியமாகவே அமைந்துள்ளது.

அதுவே நவமணிமாலை என்பது. மேலே சுட்டப்பட்ட கால எல்லையுள் மூன்று ஆசிரியர், முகியித்தீன் அப்துல் காதில் ஜீலானி (றலி) அவர்களின் வாழ்க்கையைக் கருப்பொருளாகக் கொண்டு, காப்பியங்கள் இயற்றி உள்ளனர். இம்மூவரும் முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் வாழ்க்கையில் வெவ்வேறு அமிசங்களைச் சிறப்பாகக் கொண்டு தத்தம் காப்பியங்களை இயற்றி உள்ளனர். அதே போன்று நவமணி மாலையிலும் அதன் ஆசிரீயர் முகியித்தீன் ஆண்டவர்அவர்களின் வாழ்க்கையை வேறொரு கோணத்திலிருந்து பார்த்துத் தமது காப்பியத்துக்குக் கருப்பொளருாக அதனைக் கொண்டுள்ளார். ஏனைய மூன்று ஆசிரியர்களும் முகியித்தீன் ஆண்டவர்களின் வாழ்க்கை வரலாறு நிகழ்ச்சிகளையே பெரும்

பாலும் தத்தம் காப்பியங்களிலே விவரித்துள்ளனர். ஆனால் நவமணிமாலை ஆசிரியரோ முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகளையே, முகியித்தீன் ஆண்டவர் அவர்கள் நிகழ்த்திக்காட்டிய அற்புத நிகழ்ச்சிகளையே தமது காப்பியத்துக்கான கருப்பொருளாகக் கொண்டுள்ளார். இக் காப்பியத்தின் பெயர் நவமணிமாலை என்கின்ற முகியித்தீன் புராணம் என்றே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். கௌது முகியித்தீன் அப்துல்காதிறு சாகிபு ஆண்டகையின் இயற்கையுஞ் செயற்கையு மாகிய சரிதங்களில் சிலவற்றை எடுத்துக் கூற முற்படுவதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். முகியித்தீன் அப்துல் காதிறு செயிலானி (றலி) அவர்களின் வாழ்க்கை முழுமையும் தாம் பாட முற்படவில்லை என்றும் அளவிடற்கரிய அற்புதங்களைச் செய்து காட்டிய அப்பெரியாரின் வாழ்க்கையிலிருந்து சிலவற்றையே இங்கு தரப்போவதாகவும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

நவமணிமாலை என்னும் முகியித்தீன் புராணத்தை இயற்றி யவர் ஐதுறூசு நயினார்ப் புலவர் ஆவார். அவர் பாவகைவல்ல வித்துவான். காலன்குடியிருப்பைச் சேர்ந்தவர். ஆசிரியர் தாம் காலன் குடியிருப்பைச் சேர்ந்தவர் என்பதை ஒரு செய்யுளில் இறுதி அடியில்

கோதிலாது வளர்காலன் குடியாந்தடங்க ணகரிருந்தே
(கடவுள் வாழ்த்துப் படலம்:46)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தந்தை மகாவித்துவான் மீரா நயினார் மரைக்காயர் புலவர். அவர்தம் தந்தை பாபா நயினார்ப்புலவர். அவரின் தந்தை சிறாஜுத்தீன் புலவர். அவர்தம் தந்தை சேரா முதலி யார்ப் புலவர். அவர்கள் அனைவரும் காலன் குடியிருப்பில் வாழ்ந் தோராவர். தம் மூதாதையர்கள் முதலில் வகுதையில் வாழ்ந்த வர்களென்றும் பின்னர் சேரை என்று வழங்கிய குலசேகரப் பட்டினத்தில் வாழ்ந்தவர்கள் என்றும் அம்மூதாதையரின் பெயர்கள் இன்ன இன்ன என்றும் ஒரு செய்யுளில் இவ்வாறு ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

சீரார் வகுதை நகரகத்தி பினன்சே ரையின்சே ராமுதலி
யாராம் புலவர் பேரர்சிறா சுத்தீன் பாபா நயினாராம்

பேரா ருதவு செல்வரிற்றம் பேறார் மூதாதையின் பெயர்
கொண்

மீரா நயினார் மரைக்காயர் மெய்மைத் தவத்தால்
வருதோன்றல்

(கடவுள் வாழ்த்துப் படலம்:47)

மற்றொரு செய்யுளில் தன்னைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். எழுத்தியலோ, சொல்லியலோ, பொருளியலோ, அணி யியலோ, தெரியாது என்றும் ஏதோ கவிதை எழுத முற்பட்டார் என்றும் இவ்வாறு ஒரு செய்யுளில் குறிப்பிட்டுள்ளார்.

பழுத்து மதுரங் கனிந்தொழுகும்
பண்பின் பனுவற் செழுங்கவிதை
வழுத்தும் புலவர் பயிற்சிசெய்நல்
வகைநூன் முறைமை யறிவாகும்
எழுத்தி னியல்சொல் லியல்பொருளி
னியலோ டியாப்பி னியலணியின்
அழுத்து மியல்பு மறியாதான்
ஐது றூசு நயினானே

(கடவுள் வாழ்த்து:48)

தமது நூலுக்கு நவமணிமாலை எனப் பெயரிடப்பட்டமை பற்றி ஒரு செய்யுளில் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

திவமணி புனித ஞான திருமணி வரிசை மேவுந்
தவமணி கௌதுல் லகுலம் தஸ்தக்கீர் முகியித் தீன்றந்
துவமணி சரிதை யான தோற்றமே கொண்ட மாண்பின்
நவமணி மாலை யென்ன நற்பெயர் பொறற்பின் இட்டே.

(கடவுள் வாழ்த்துப் படலம்:40)

நவமணி மாலை என்னும் சொற்றொடரை நவ + மணி + மாலை என்று பிரிக்கலாம். நவம் என்னும் சொல்லுக்குப் பல பொருள் உண்டு. நவமணி என்று சொல்லும்பொழுது கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வயிரம் என்னும் ஒன்பது வகையான மணிகளை-அரதனங்களைக் குறிக்கிறது. ஒன்பது மணிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட மாலை என நவமணிமாலை பொருள் படும். ஒன்பது மணிகள் கோக்கப்பட்டது போன்று விளங்கும் மாலை எனப் பொருள் கொண்டு நவமணிமாலை எனலாம். ஆனால் இங்கே ஆசிரியர்

நவம் எனக் கருதியது புதுமை என்பதேயாகும். அபூர்வமாக நிகழ்த்தப்படும் ஒரு செயலைப் புதுமையான செயல் என்பர். அபூர்வமான அச்செயல் அதிசயமானதாயுமிருக்கும். அத்தகை யான புதுமையான செயல் இயற்கையைக் கடந்ததாகவும் அமையும். இயற்கையாகச் செய்ய முடியாத ஒரு செயலைச் செய்து காட்டுவதைப் புதுமையான செயல் என்ப. அது காரணச் செய லாக அமைந்து விடுகின்றது. இங்ஙனம் முகியித்தீன் ஆண்டவர் அவர்கள் நிகழ்த்திக் காட்டிய அபூர்வமான, அதிசயமான, புதுமை யான. நவமான செயல்களை மணிபோல் தொடுத்து இயற்றப் பட்டதே நவமணிமாலை எனக் கூறுதல் பொருத்தமுடைத்தாம். இந்த நவமணிமாலையிலும் நவ என்னும் சொல் ஏறத்தாழ அறுபது தடவை பயன்படுத்தப்பட்டு உள்ளமை காணலாம். அற்புதம், புதுமை என்பதைக் குறிக்கவே பெரும்பாலான சந்தர்ப் பங்களில் நவ என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாதராங் கௌதுல் லகுல நவபுகழ் சரிதையாலே

(கடவுள் வாழ்த்து:50)

என வந்துள்ள செய்யுளடியில் புதுமையான, அற்புதமான என்ப தைக் குறிக்கவே நவ என்பது பயன்யடுத்தப்பட்டுள்ளது.

காப்பிய அமைப்பினைப் பார்க்கும் பொழுதும் நவமணி மாலை என்னும் காப்பியத்தின் பெயரில் அமைந்துள்ள நவ என்னும் சொல் அற்புத நிகழ்ச்சிகளாம் புதுமைகளைச் சுட்டுவ தாகவே அமைந்துள்ளது. நவமணிமாலை என்னும் காப்பியத்திலே 2335 செய்யுட்கள் 35 படலங்களிலே அமைந்துள்ளன. ஒவ்வொரு படத்திலும் உள்ளடக்கம் முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் அற்புத சாதனையை விவரிப்பதாகவே அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்து, நாட்டுப்படலம், நகரப்படலம், ஐந்தாவது படலமான ஒலியுல்லா அவதாரப் படலம் என்னும் இந்நான்குமே முகியித்தீன் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புள்ளனவாய் அமைந்துள்ளன. இயற்கை நிகழ்ச்சிகளாய் அமைந்துள்ளன. நான்காவது படலம் முன்முறைப் படலம். இப்படலத்திலும் புதுமைகளே பேசப்படு கின்றன. முகியித்தீன் ஆண்டவர் அவர்கள் உலகிலே பிறக்கு முன்னர் எங்கே இருந்தார்கள் எப்படி இருந்தார்கள் என்பது பற்றிய விளக்கம் முன்முறைப் படலத்தில் விரிவாகத் தரப் பட்டுள்ளது. செயற்கையே இப்படலத்திலும் ஏனைய படலங் களிலும் இடம் பெற்றுள்ளது. மூன்றாவது படலப் உட்பட ஏனைய

முப்பத்தொரு படலங்களிலும் முகியித்தீன் ஆண்டவர்கள் செய்து காட்டிய இயற்கை இறந்த அற்புத நிகழ்ச்சிகளே வருணிக்கப் பட்டுள்ளன. நவமானவை என்று அழைக்கக் கூடிய சம்பவங்கள் விதந்தோதப்பட்டுள்ளன.

முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் வாழ்க்கையைக் கருப் பொருளாகக் கொண்ட ஏனைய காப்பிய ஆசிரியர்கள், வாழ்க்கை வரலாற்றை அடியொட்டியே தமது செய்யுட்களை யாத்துள்ளனர். ஆனால் ஐதுறூஸ் நயினார்ப்புலவரின் நவமணிமாலை என்னும் முகியித்தீன் புராணத்தில் முகியித்தீன் ஆண்டவரின் வாழ்க்கையில் அவர்கள் புரிந்து காட்டிய புதுமைகள் முக்கியமான ஓர் இடத் தைப் பெறுகின்றன. நவமணிமாலையின் கடைசிப் படலமாக அமைந்திருப்பது ஹஜ்ஜியற்றி வந்த படலம் என்பதாகும். இப் படலத்தில்கூட ஆசிரியர் ஒரு புது உத்தியைக் கையாண்டுள்ளார். முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் ஹஜ் பயணத்தை ஐதுறூசு நயினார்ப்புலவர் நேரடியாக வருணிக்கவில்லை. முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் மூத்த புதல்வரின் கூற்றாக முகியித்தீன் ஆண்டவரின் ஹஜ் பயணம் நவமணிமாலையில் வருணிக்கப் பட்டுள்ளமையைக் காணலாம். முகியித்தீன் ஆண்டவர் அவர்கள் எவ்வாறு ஹஜ் கடமையை நிறைவேற்றினார் என்பதை அவர் களுடைய மூத்த புதல்வர் கூறக் கேட்டவர்போல ஐதுறூசு நயினார்ப்புலவர் வருணித்துள்ளார். இங்கும் புதுமை இருப்பதைக் காணலாம். இதுவும் இந்நூல் நவமணிமாலை எனப் பெயர் பெற்றதற்கு ஒரு காரணம் ஆக இருந்திருக்கலாம். இதனைப் பதிப் பித்து அச்சியற்றிய மகுதூ முகம்மதுப் புலவர் தமது அச்சிட்ட வரலாறு பற்றிய அகவற்பாவில்

நவமணி கௌது நாயகர் சரிதை
நவமணி யதனால் நவமணி மாலை
எனப் பெய ரியற்றி ......

எனக் குறிப்பிட்டுள்ளமையும் புதுமையாம். அற்புத நிகழ்ச்சிகள் முதன்மையாக இக்காப்பியத்தில் வருணிக்கப்பட்டுள்ளமையால் இக்காப்பியம் நவமணிமாலை எனப் பொருத்தமாகப் பெயர் இடப்பட்டுள்ளது எனலாம்.

நவமணிமாலை என்னும் முகியித்தீன் புராணத்தைப் பாடு வதற்கு ஆசிரியருக்குப் பொருளுதவி புரிந்தவர் இஸ்லாமியபுரத் தைச் சேர்ந்தவர். ஆனால், இன்று இந்த இஸ்லாமிய்புரம்

ஆசிரியர் குறிப்பிடும் இடத்தில் இல்லை. குலசேகரப்பட்டணத்துக்குத் தென்பக்கமாய் இஸ்லாம்புரம் ஒரு காலத்தில் (1855 வரையில்) சிறந்து விளங்கி இருக்கவேண்டும். ஏனெனில் அவ்வாறு இஸ்லாம்புரத்தில் கொடைநாயகர் வாழ்ந்த காலத்திலேதான் ஐதுறூசு நயினார்ப்புலவர் அவரிடமிருந்து பொருளுதவி பெற்றுள்ளார். இப்பொழுது இஸ்லாம்புரம் இல்லை. இஸ்லாம்புரத்தில் வாழ்ந்தவர்கள் பிற்காலத்தில் அங்கிருந்து சென்று குலசேகர பட்டணத்தில் குடியேறி இருக்கவேண்டும். ஏனெனில் அங்குள்ள முதியோர் கூற்றுப்படி இஸ்லாம்புரத்தில் இருந்து வந்து குலசேகரப் பட்டணத்தில் பலர் குடியேறி உள்ளனர். இன்றும் அத்தகையோர் தம்மை இசுலாம்புரத்தவரே என அறிமுகஞ்செய்யும் முகமாகத் தம் பெயருக்கு முன்னால் முன்னடையாக 'இ' என்னும் எழுத்தைப் பயன்படுத்துகின்றனர். 'இ' இன்னார் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைகின்றனர். கடவுள் வாழ்த்துப் படலத்தில் மாத்திரம் மூன்று செய்யுட்களில் கொடைநாயகர் சுட்டப்பட்டுள்ளார். அடுத்துவரும் இரண்டு பாடல்களில் கொடைநாயகர் இஸ்லாம் புரத்தைச் சேர்ந்தவர் என்பதும் உமறுக்கத்தாபு என்பவரின் புதல்வர் என்பதும் கொடைநாயகரின் பெயர் செய்கு முகம்மது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன. கொடை நாயகர் உதவி புரிந்த பாங்கினை இவ்வாறு பாடியுள்ளார்.

க்னதியின் பனுவ லின்ன காரணா கமத்தைச் செய்வான்
இனிகொள கருத்தற் கின்பி னியற்றிநன் னிதிமற் றுந்தான்
மனதுவந் துதவி னான்சீர் வளரிசு லாம்பு ரத்தார்
தனதயா லன்யசம் பன்ன சௌமிய சற்கு ணாளன்

உத்தம வுமறு கத்தா புதவிய செல்வ னீத
பத்தியின் முகியித் தீன்பொற் பதகதித் துணைம றாதுள்
வைத்துண ரின்ப செய்கு முகம்மது மிறைநல் லன்பால்
புத்திர சம்பத் தோங்கப் புகழ்மிக வளர நாளும்

(கடவுள் வாழ்த்துப் படலம்:42)

இந் நூல் குலசேகரபட்டணத்தில் அரங்கேற்றப்பட்டதென்றும் அப்பொழுது இக்கொடைநாயகர் வரிசைகள் பலவற்றைச் செய்து பொருளுதவி புரிந்தார் என்றும் ஒரு செய்யுளில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமலி சேரை வாழ்நந் தீனவர் மன்றி னின்ன
திருமுகி யித்தீன் ஆகங் கூறநல் வரிசை செய்த
மருமலி வாகன் செய்கு முகம்மதுஞ் செல்வர் நற்சீர்
தருமரு மக்கள் கோத்ரந் தழைத்திறை யருளால் வாழி

(கடவுள் வாழ்ததுப் படலம்:51)

தமது கொடைநாயகர் இஸ்லாம்புரம் என்னும் ஊரைச் சார்ந்தவர் என்றும் அவர்தம் தந்தையார் பெயர் உமறுகத்தாப் புலவர் என்றும் மேலும் பல செய்யுட்களில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்ணைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது ஐதுறூசு நயினார்ப் புலவர். அவள் உத்தமி. மிகுந்த பேற்றினைப் பெற்றவள். வரம் பெற்றவள். குணமே குடிகொண்டவள். குளிர்ந்த உள்ளம்படைத்தவள். தவறுகள் எல்லாவற்றையும் கடிந்தவள். மயில் போன்ற சாயலை உடையவள். கிளி போன்ற மொழியுடையாள். அன்னம் போன்ற நடையை உடையாள். உயர்ந்த பத்தினிப் பெண் அவள். இங்ஙனம் அப்பெண்ணின் சிறப்பியல்புகளைப் பாடியுள்ளார் ஆசிரியர்.

பெற்ற நாயகி யானவுத் தமிமிகு பேறுறும் வரமாது
குற்ற மாவன யாவையுங் கடிதருங் குளிர்ந்தசற் குணமேதை
உற்ற மாமயில் கிளிமொழி அனநடை யுயர்ந்தபத்
 தினிமடமான்
பற்றி னாரணந் தேர்ந்துநற் றவம்புரி பாவையர்க்
 கரசானோர்

(பீங்கான் கவிழ்த் தெழுப்பித்த படலம்:16)

காப்பிய மரபைப் பேணுமுகமாகப் பெண்களை வருணிக்கும் பொழுது கேசாதிபாதமாகப் பெண்ணை இரண்டுதடவைகள் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர் தமது நவமணிமாலை என்னும் முகியித்தீன் புராணத்தில். கேசாதிபாதமாக எல்லா உறுப்புக்களையும் முதல் தடவையாக ஐந்து செய்யுட்களிலும் இரண்டாம் தடவையாக பதினெட்டுப் பாடல்களிலும் வருணித்துள்ளார்.

முதலாந் தடவையாக முன்முறைப் படலத்தில் 232 முதல் 236 வரை உள்ள செய்யுட்களில் கேசாதிபாத வருணனையைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாவது தடவையாகக் கேசாதிபாத வருணனையை கப்பலெழும்பும் படலத்தில் 64 முதல் 81

வரை உள்ள செய்யுட்களில் இடம் பெறச் செய்துள்ளார் ஆசிரியர். இங்கே பெண்ணின் பல உறுப்புகள் வருணிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

பெரும்பான்மையான காப்பியங்களில் திருமண ஊர்வலம் வருணிக்கப்படும்பொழுது அத்தகைய திருமண ஊர்வலங்களைக் கண்டு களிக்கப் பெண்கள் திரளாக வந்தனர் என ஆசிரியர் விவரிப்பர். அத்தகைய பெண்கள் கூட்டத்திலே ஏழு பருவங் களையும் சார்ந்த பெண்கள் கூடி நின்றனர் என அப்புலவர் வருணிப்பர். நவமணிமாலை என்னும் காப்பியத்திலும் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய ஏனைய தமிழ்க் காப்பியங் களில் இடம் பெற்றுள்ளன போன்று ஏழு பருவங்களையும் சேர்ந்த பெண்கள் திருமண ஊர்வலத்தைக் காண வந்திருந்தனர். பக்கீறு வேட்டல் படலத்தில் தொடர்ந்து வரும் ஏழு செய்யுட்களில் ஏழு பருவத்தையும் சார்ந்த பெண்கள் வருணிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பேதை(109), பெதும்பை(110), மங்கை (111) மடந்தை (112), அரிவை (113), தெரிவை (114) பேரிளம்பெண் (115) என ஏழு பருவப் பெண்களும் விவரிக்கப் பட்டுள்ளமையைக் காணலாம். இப்படலத்தில் மணவினை முதலியனவற்றையும் மணவினை என்னும் நிக்காகு நடத்தப்பட்ட முறைமையினையும் ஐதுறூசு நயினார்ப் புலவர் குறிப்பிடுகிறார்.

பெண்களுக்கு இருக்கவேண்டிய குணங்களைப் பற்றியும் ஒரு செய்யுள் குறிப்பிடுகிறது. கற்புடன் கூடிய நான்கு தன்மைகள் ஒரு பெண்ணிடம் இருக்கவேண்டும் என ஐதுறூசு நயினார் புலவர் நவமணிமாலையில் உள்ள ஒரு செய்யுளில் குறிப்பிட்டுள்ளார். இங்கே நான்கு தன்மைகள் என்பதைத் 'தன்மை சதுவோடு' எனக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். 'தன்மைசது' எதனைக் குறிக்கின்றது? பெண்களுக்கு அமைந்திருக்கவேண்டிய நல்லியல்புகள் நான்கு, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்பன அந்நான்கு தன்மைகளு மாகும். இவற்றையே 'பொற்புநிறை கற்பு தன்மைசதுவொடு' எனச்சுட்டி உள்ளார். 'தன்மைசது' என்னும் சொற்றொடர்இடம் பெற்றுள்ள நவமணிமாலைச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

நன்மையினல் லாவுதவு நற்பலன தென்னப்
புன்மையற வேயுதித்த பொற்புநிறை கற்பு
தன்மைசது வோடுநய சற்குணநற் செய்கை
வென்மையுற வேகுடியி ருக்குமொரு மின்னாள்.

(பக்கீறு வேட்டல் பெறு படலம்:4)

ஒரு முஸ்லிம் இறந்த பின்னர் அவன் நல்லடக்கம் செய்யப் பட்டதைத் தொடர்ந்து புதைகுழி என்னும் கபுறறைக்குள் நிகழும் சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றோடு தொடர் புடையது தல்கீன் என்பது. ஒரு முஸ்லிம் கபுறறைக்குள் வைக்கப் பட்ட பின்னர் அமரர் வந்து அவனிடம் உலகில் இருக்கும்பொழுது செய்த நன்மை தீமைகளை எழுதும்படி கேட்பர். அவன் தன்னிடம் எழுதக் கடதாசியோ எழுதுகோலோ மையோ இல்லை என்பானாம். அப்பொழுது அவனைப் போர்த்தியுள்ள கபன் என்னும் வெள்ளைச் சீலையை கிறுத்தாசு என்னும் கடதாசியாகவும், சப்பாபத்து விரல் என்றும் கலிமா விரல் என்றும் வழங்கப்படும் சுட்டுவிரலினை கலம் என்னும் எழுதுகோலாகவும், வாயில் உள்ள நீரை மையாகவும் கொண்டு உலகில் செய்த நன்மை தீமைகளை எழுதச் சொல்வர் அமரர். இதனையே ஒரு செய்யுளில் ஐதுறூசு நயினார்ப் புலவர் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

தீட்டு னக்கிறுத் தாசெனத் துணிகபன் சீலை
மாட்டெ டுத்துன்சப் பாபத்து விரல்கல மாக்கித்
தோட்டுன் வாயினீர் மையென்றாக் கெழுதெனச் சொல்லிக்
காட்டிக் கேட்டிடும் வானர்க்கப் போனார் கபுறுள்.

(ஆடு மேய்த்தவர் படலம் : 8)

இது முடிந்ததும் முன்கர் நக்கீறு என்னும் இரண்டு அமரர் கேள்விகள் ஒன்றொன்றாய்க் கேட்பர். இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க இறந்தவரைத் தயார் செய்யும் பாணியில் ஓதப்படுவது தல்கீன் எனப்படும். அந்த அமரர் இருவரும் கேட்கும் முக்கியமான கேள்விகள் ஆறினைப் பிரதானமாகக் கொண்டது இத்தல்கீன். உனது இறைவன் யார்? உனது நபி யார்? உனது மார்க்கம் எது? உனக்குத் தொழுந்திசையாம் கிபுலாவாக அமைந்திருப்பதெது? உன்னை வழிநடத்தும் இமாமாக இருப்பது எது? உனது சகோதரர் யாவர்? இக்கேள்விகளைக் கேட்பர் அமரர். இதனையே சுருக்க மாக ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உனது நாயக னபிநெறி கிபுலத்தி மாமத்
தினிதி னாமுடற் பிறப்பியார் சொல்லெனக் கேட்பார்

(ஆடு மேய்த்தவர் படலம் : 17)

அங்ஙனம் கேள்வி கேட்கப்படும் பொழுது அளிக்க வேண்டிய பதில் களையும் தல்கீன் கொண்டுள்ளது. எனது இறைவன் அல்லாஹ். எனது நபி முகம்மது (சல்). எனது மார்க்கம் தீனுல் இசுலாம்.

எனது தொழுந்திசையான கிபுலாப் புனித கருபா. எனக்கு வழி காட்டியாம் இமாம் அல் குர்ஆன். எனது சோதரர் நல்ல குணத் தவர்களான முஸ்லிம்கள். இங்ஙனம் கூறவேண்டும் என்பதையே ஒரு செய்யுளில் ஆசிரியர் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

> கேட்கும் வானர்க்கு நாயக னேயல்லா கெடறீர்த்
> தாட்கொ ளுநபி முகம்மது தீனிசு லாங்காண்
> ஆட்கொ ளுங்கிபு லாகரு பாவிமாம் குறுஆன்
> கோட் கொளாவுடற் பிறப்புமே முசுலிமாஞ் சுகுணர்
>
> (ஆடு மேய்த்த படலம் : 18)

''படைப்புப் பல படைத்து'' என ஆரம்பிக்கும் புறநானூற்றுச் செய்யுளின் கருத்துக்களை ஞாபகப்படுத்தும் பல செய்யுட்கள் நவமணிமாலையில் இடம் பெற்றுள்ளன. கல்வியும், அழகும், செல்வமும், அறிவின் தெளிவும், நல்ல பாக்கியங்களும் என்பன அனைத்தும் இருந்தும் உலகத்திலே ஒரு மகனைப் பெறவில்லை யெனின் இத்தனை பேறுகளைப் பெற்றும் அவற்றால் எவ்வித பயனும் இல்லை என்பதையே ஆசிரியர் ஒரு செய்யுளில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

> கல்வியுண் டென்னினுங் கவினுண் டென்னினுஞ்
> செல்வமுண் டென்னினுந் தெருளுண் டென்னினு
> நல்வர முடையவ ரெனினு நானிலத்
> தில்வரு மகவில ரிருந்து மில்லராம்
>
> (ஒலியுல்லா வவதாரப் படலம்:21)

இதே கருத்துக்கள் இன்னொரு வகையில் இவ்வாறு கூறப் பட்டுள்ளன. எல்லாம் இருந்தும் எவ்விதப் பயனும் இல்லை. பயனடைய வேண்டுமாயின் ஒருவனைச் சார்ந்தே இருத்தல் வேண்டும். செய்யுள் இது.

> திருவின ரேனுஞ் சேமஞ் சிறந்தவ ரேனும் யார்க்கு
> மருவின ரேனும் வீர மாண்பின ரேனும் பாராள்
> பெருவிய னுடைய ரேனும் பிரபல ரறிவ ரேனும்
> ஒருவனைச் சார்ந்தோ ரைச்சா ராரொரு பேறுங் கொள்ளார்.
>
> (பீங்கான் கவிழ்த்தெழுப்பித்த படலம் : 78)

மற்றொரு விதமாகவும் இக்கருத்துக்கள் நவமணிமாலையில் இவ் வாறு இடம் பெற்றுள்ளன.

மதிநல னுடையோ ரெனினுநல் லழகோர்
வரநல னுடையவ ரெனினுந்
துதிநல னுடையோ ரெனினுங்கைப் பொருளோர்
சுகநல னுடையவ ரெனினும்
பதிநல னுடையோர் செய்கையார் குலத்தாற்
பண்பினா லுயர்நல ரெனினுங்
கதிநல னுடையோ ரெனினுமக் களிலார்
காசினியி லிருந்து மில் லாதார்.

(புத்திர தானப் படலம் : 12)

இதே பாணியில் மற்றொரு செய்யுள் இவ்வாறு அமைந்திருப்பதைக் காணலாம்.

அழகின ரேனுங் கல்வி யறிவின ரேனு நல்லோர்ப்
பழகின ரேனு மிக்காம் பாக்கிய ரேனு நன்னே
ரொழுகற மீகை கீர்த்தி யுரமுள ரேனுங்
குழகுறு மகவி லார்பூக் குடிப்பிறந் ததிற்பே றென்னாம்.

(புத்திர தானப் படலம் : 44)

புதல்வர்களைப் பெற்றவர்கள் எல்லாம் பெற்றவர் என்பதை மற்றொரு செய்யுளில் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார் ஆசிரியர்.

எண்மையர் புவிமே லெவர்களும் புகழ்ந்தேற்
றிசையின ராதலு மிறந்தோர்
உண்மையின் பரமேம் பதவிபெற் றிடலு
மோங்குறப் பெயர்விளங் குதலுந்
தண்மையா மினத்தா ரென்னினும் வளமார்
தருபிர சங்கரா குதலுந்
திண்மையி னறிவோ டினியநற் குணஞ்சேர்
செல்வரைப் பெற்றவர் பெறுவார்.

(புத்திர தானப் படலம் : 13)

பல்வேறு காப்பிய ஆசிரியரும் தத்தம் காப்பியங்களில் ஓசை நயம் அமையும் செய்யுட்களை உள்ளடக்குவதற்கு வெவ்வேறான உத்திகளைக் கையாள்வர். ஒரே உச்சரிப்பைக் கொண்ட பல்வேறு சொற்களை ஒரே செய்யுளில் பயன்படுத்தி ஓசைநயத்தைப் பெறுவது அத்தகைய உத்திகளுள் ஒன்றாகும். நவமணிமாலை ஆசிரியர் ஐதுறூசு நயினார்ப்புலவர், உல்லா, நல்லார், நில்லாது, செல்ல, வில்லார், புல்லா, வல்லார் எல்லாம் என்னும் சொற்களைப் பயன்படுத்தி ஒரு செய்யுளில் இவ்வாறு ஓசைநயத்தைப் பெற்றுள்ளார்.

ஒதி வழுத்தொலி யுல்லா வுத்தம மதுரச நல்லார்
சோதி இடத்துற நில்லா துற்றது ணிக்கொடு செல்லாப்
பாதி வழிக்கணின் வில்லார் பக்கறையின் பரி புல்லா
மாதி பதிச்சுதன் வல்லா ராநடை யுற்றவ ரெல்லாம்.

(கலிபா தெரிசனைப் படலம் : 18)

இதே பாணியில் அமைந்த மற்றொரு செய்யுள் வருமாறு:

வாகனன் மற்றவ ரெல்லா மாக வெளிக்கிலட பொல்லா
ராக நவிந்துணர் வில்லா தாடுக றங்கென நில்லா
தேககு பங்களின் வல்லே யேகலு மூன்றிடல் கல்லார்
பாக நடந்தகை யில்லார் பாடினும் வெம்புறு பாடாம்.

(கலிபா தெரிசனை பெற்ற படலம் : 20)

வல்லெழுத்துக்களை மிகுதியாகப் பயன்படுத்தி ஓசைநயம் பெறுவர் ஆசிரியர். அத்தகைய வல்லெழுத்துக்களுக்கும் தகர எழுத்தைக் கூடுதலாக உபயோகித்தும் ஓசைநயத்தைப் பெறுவதுண்டு. அத்தகைய ஒரு செய்யுள் வருமாறு.

முத்தலம் புகழ்முகி யித்தீனிலகு முத்தினங்களைம தித்தெடுத்
துத்தமத் தொடுதெ ளித்திதச் சுதைசெய் வித்துவப் பினழ
காயதை
எத்தலத் துமொளிரத் தத்திற் றெரிய விச்சையிற் றடவு
சோதியார்
சுத்தபொற் பிரசி தப்பொருப் பையிகல் சொர்க்க மொத்த
தென வண்மையே.

(அனைமனைதனையனாம் படலம் : 6)

முகபாடம் என்பது வாய்ப்பாடம். மனனம் பண்ணுதல் அல்லது வாய்ப்பாடஞ் செய்தல் முகபாடம் என வழங்கப்படும். ஐதுறூசு நயினார்ப் புலவரும் வாய்ப்பாடம் செய்தல் என்னும் கருத்தில் முகபாடஞ் செய்து என இவ்வாறு உபயோகித்துள்ளார்.

ஓதியேமுக பாடமுஞ் செய்துளத் துவந்து

(திருவாய்மைப் படலம் : 26)

முறிவி லாநெறி யாருல மாமுகப் பாடம்

(திருவாய்மைப் படலம் : 32)

# நாகூர்ப் புராணம்

திருத்தலம் ஒன்றின் பெயரால் அழைக்கப்படும் ஒரே இஸ்லாமியத் தமிழ்க் காப்பியம் நாகூர்ப்புராணம். தமிழ் நாட்டில் உள்ள நாகூரிலே சாகுல் கமீது ஆண்டகை அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் பிறந்தது வட இந்தியாவில் உள்ள மாணிக்கப்பூர் என்னும் நகரம். சாகுல் கமீது ஆண்டகை அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட பின்னர் நடைபெறும் நிகழ்ச்சிகளே நாகூர்ப் புராணத்தில் வருணிக்கப்பட்டுள்ளன. அப்பெரியாரின் மறைவுக்குப் பின்னர் அவர்கள்தம் சிறப்பாற்றல் காரணமாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளே நாகூர்ப் புராணத்தில் வருணிக்கப் பட்டுள்ளன.

சாகுல் கமீது ஆண்டகையின் பிறப்பையும் மறைவையும் கூற வந்த நாகூர்ப்புராணம் அவர்களை சூரியனுக்கு உருவகித்துள்ளது. அவர் பிறந்தது மாணிக்கப்பூர். மறைந்தது நாகூர். சாகுல் கமீது என்னும் சூரியன் மாணிக்கப்பூர் என்னும் வட கடலில் உதித்து நாகூர் என்னும் தென்கடலில் மறைந்தது என்றும் அந்தச் சூரியன் எல்லாஇடத்திலும் அற்புத நிகழ்ச்சிகள் என்னும் கதிர்களைப் பரப்பியது என்றும் ஒரு செய்யுளில் இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

மாணிக்க நகரமெனும் வடகடலி லுதித்தாங்கு
சேணிக்கை நாகூராந் தென்கடலின் மறையவெழுஉப்
பாணிக்க வெவரகனு மற்புதமாங் கதிர்பரப்பி
யாணிக்கை பெறும்ஷாகுல் கமீதென்னு மாதித்தன்

(உத்தரவளித்த படலம் : 4)

அடுத்து ஆண்டகை அவர்களின் வாழ்க்கை நான்கு கால எல்லைகளாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பிறந்தகத்திலே வாழ்ந்து

கல்விகற்ற காலம் பதினெட்டாண்டுகள். பிறந்தகத்தினை நீங்கிக் குருவிடம் சென்று அங்கிருந்த கால எல்லை பத்தாண்டுகள். கவாலியூர் கௌதுசாகிபு அவர்களிடம் பயிற்சி பெற்றமையையே கால எல்லை குறிப்பிட்டுள்ளது. கலைகள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்த பின்னர் அவ்விடத்தை விட்டகன்று பல நாடுகளிலும் சுற்றித் திரிந்த கால எல்லை பன்னிரண்டு ஆண்டுகள். பின்னர் அவர்கள் சிறந்து விளங்கிய இடமாம் நாகூருக்கு வந்தார்கள். நாகூரிலே இருபதெட்டாண்டுகள் சிறந்து விளங்கினார்கள். இங்ஙனம் அறுபத்தெட்டாண்டுகள் வாழ்ந்து சாகுல் கமீது ஆண்டகை அவர்கள் தமது இறுதிக்காலம் நெருங்கியதும் தமது புத்திரரான செய்கு யூசுபு என்பவரை அழைத்து அவர் அறிய வேண்டிய பல அறிவுகளையும் தாம் இறையடி எய்திய பின்னர் செய்கு யூசுபு அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் விளக்கிக் காட்டினார்கள். இச்செய்திகளே நாகூர்ப் புராணத்தில் உள்ள உத்தரவளித்த படலத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு செய்யுள்களில் இவ்வாறு தரப்பட்டுள்ளன.

பிறந்தகத்துப் பதினெட்டாண் டிகப்பித்துப் பின்னரவண்
இறந்தகத்துக் குருவயிற்போய்ப் பத்தாண்டாங் கிருந்தருளத்
துறந்தகத்துப் பஃறேயம் பன்னீராண் டுறச்சுற்றிச்
சிறந்தகத்து நாகூரார் திருத்தலையினி னிதமர்ந்து

ஓரிருபத் தெட்டாண்டு முறப்போக்கி யெல்லாமு
மாரறுபத் தெட்டாண்டுங் கழிந்தவதி யாங்காலை
சீருறுபுத் திரரான செய்குயூ சுபுவிளித்து
நேருறுபற் பல்லறிவு மற்றவுமே நிகழ்த்தினார். (5-6)

நாகூர்ப்புராணம் நாகூர் குலாம் காதிறு நாவலரால் இயற்றப் பெற்றது. இவர் வாப்பு மரைக்காயர் என்பவரின் புதல்வர். வித்வ ஜனசேகரர். தர்கா வித்துவான். கல்வி கேள்விகளில் சிறந்தவர். குலாம் காதிறு நாவலரின் தகப்பனார் ஆயுர்வேத வைத்தியராய்த் திகழ்ந்தவர். சாற்றுக்கவி பாடியவர்களுள் ஒருவர் மகுமூது பந்தரைச் சேர்ந்த அ. முகம்மது சுல்தான் மரைக்காயர் அவர்கள். அவர் ஓர் உருவகம் மூலம் குலாம் காதிறு நாவலரை இவ்வாறு வருணித்துள்ளார். தமிழ் என்னும் குதிரையிலே அவர் வலம் வருபவர். அவரது வலக்கையிலே இலக்கணம் என்னும் வாளைக் கொண்டிருப்பார். இடது கையிலே செய்யுள் என்னும் கொடியைக் கொண்டிருப்பர். இங்ஙனம் குதிரையில் நாவலர் வலம் வரும் விதத்தை இவ்வாறு பாடியுள்ளார் முகம்மது சுல்தான் அவர்கள்

மணவான் றமிழென்னும் வாம்பரியி லேறியிலக்
கணவாள் வலது கரங்கொண் டிடக்க ரத்திற்
குணமான செய்யுட் கொடிபிடித்து மாவிசய
நணவா ரிறைவன் குலாம்கா திறுநாவ லர்பெருமான்.

குலாம் காதிறு நாவலர் பன்னூலாசிரியர். மூன்று காப்பியங்களின் ஆசிரியர். ஆரிபு நாயகம் என்பது இவர் இயற்றிய மற்றொரு காப்பியம். முகாஷபா மாலை இவரது குறுங்காப்பியம். ப்தாயிருக்கலம்பகம், குவாலீர்கலம்பகம், மதுரைக்கோவை முதலிய பல நூல்களை குலாம் காதிறு நாவலர் இயற்றி உள்ளார். யாழ்ப்பாணத்து சு. அசனாலெப்பை அவர்கள் தமது சாற்றுக் கவிகளுள் ஒன்றில் அவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

துதிபுனைந்த கலம்பகங்கள் கோவையுயர் மிறைக்கவிக
டொடுக்கப்பட்ட
விதிபுனைந்த பலபாடல் வசனவுரை களுமெவரும் வியப்பத்
தந்தோன்
நிதிபுனைந்த வுலகுபுகழ் நாவலரென் னும்பதவி நிலவப்
பெற்றோன்
கதிபுனைந்த வில்லறத்தை யொளிர்பூணாக் கொண்டொழு
குங் காட்சி யேய்ந்தோன்

மதுரையில் நிறுவப்பட்ட நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவுவதில் துணை புரிந்த ஓர் உறுப்பினராய்த் திகழ்ந்தார் குலாம் காதிறு நாவலர். அச்சங்கத்தின் 'நக்கீரர்' எனப் புகழ் நாமத்தையும் பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை இயற்றிப் புலவரை ஆற்றுப்படுத்தும் வாயிலாகப் புகை வண்டியை வருணித்துப் புதுமை படைத்தார். பல வசன நூல்களையும் இயற்றி உள்ளார்.

கருமையான வண்டு பூவிலே அமர்ந்து ஊதுகின்றது. பூ மொட்டு அவிழ்கின்றது. மணங்கமழும் தேன் பெறப்படுகின்றது. அவ்வாறு தேன் பெறப்படுவது மலர் அளிக்கும் விருந்தாக அமைந்து விடுகின்றது. அத்தகைய கரையில் தென்றல் வீசுகின்றது. விளையாடி வருகின்றது. சிறகுகளை வளைத்துப் பெண் அன்னத்தைத் தழுவிய வண்ணம் அன்னங்கள் அங்கே துயிலுகின்றன. இத்தகைய அருமையான தன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன அந்த அன்னங்கள். இதனையே குலாம் காதிறு நாவலர் ஒரு செய்யுளில் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

கருந்தும்பி இருந்தூதப் பிணியவிழ்பு கமழ் தீந்தேன்
விருந்தொன்ற வினிதளிக்கும் விரிமலர்ப்பூங் கழிக் கரைவாய்
வருந்தென்றல் விளையாடி வளைத்திறைகள் பெடைதழீஇ
யருந்தன்மை நனிகாட்டு மன்னங்கள் கண்வளரும்

(பள்ளிகட்டிய படலம் : 4)

இதே கருத்து முல்லைப்பாட்டில்

யாழிசை யினை வண்டார்ப்ப நறுவீ முல்லை (8-10)

எனவும், மணிமேகலையில்

குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட (14:4)

எனவும், சிலப்பதிகாரத்தில்

மழலைத் தும்பி வாய்வைத் தூத (4:16)

எனவும் வந்துள்ளமை காண்க. ஆசிரியர் தமது புலவராற்றுப் படையில்

அஞ்சிறைத் தும்பி துஞ்சி யூதப்
பிணியவிழ் பலர்ந்து கமழ்காம் பணிமலர் (60-61)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாகூர்ப்புராணத்தில் இடம் பெற்றுள்ள உருமாற்றிய படலத்தில் உள்ள பல செய்யுட்களில் கலித்தொகையில் வரும் பல காட்சிகளைத் திரித்தும் மாற்றியும் குலாம் காதிறு நாவலர் அமைத்துள்ளார். சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் தமக்கிருந்த அளப்பரிய ஆற்றலை அவர் இவ்வாறு தமது காப்பியங்களிலும் ஏனைய நூல்களிலும் நயம் பெறக் காட்டி உள்ளார்.

ஒரு புலியோடு யானை பகற்பொழுதில் போர் புரிந்தது. அது வேங்கைப் புலி. வேங்கை மரம் பூத்தாற் போல் காட்சி அளிக்கும் புலி அது. பின்னர் யானை உறங்கியது. உறங்கும்பொழுது அந்த யானை ஒரு கனவு கண்டது. தான் உறங்கு முன்னர் புலியோடு சண்டையிட்ட காட்சியை யானை கனவிற் கண்டது. கனவிலும் புலியுடன் யானை சண்டையிட்டது. உடனே அந்த யானை விழித் தெழுந்தது. விழித்த உடனே அதற்குத் தோன்றியது வேங்கை மரம். அந்த வேங்கை மரம் பூத்திருந்தது. நறுமலர்கள் பல வற்றைக் கொண்டிருந்தது. வேங்கைமரம் புலியின் தோற்றத்தைக் காட்டிக் கொண்டிருக்கும். நித்திரை விட்டு விழித்தெழுந்த யானை பூத்திருந்த வேங்கை மரத்தைக் கண்டது. அதனை வேங்கைப் புலி யென நினைத்தது. யானைக்கு வந்தது கோபம். உடனே யானை

அதனைத் தாக்கியது. புலியென நினைத்துத் தாக்கியது. அத் தாக்குதலினால் பழிக்குப் பழி வாங்கிவிட்டோம் என அந்த யானை நினைத்தது. யானையின் கோபமும் தணிந்தது. உடனே அந்த யானை உண்மை நிலையை உணர்ந்து கொண்டது. தான் தாக்கியது வேங்கைப் புலியையன்று; வேங்கை மரத்தையே என்று புரிந்து கொண்டது. உடனே அந்த யானைக்கு வெட்கம் ஏற்பட்டது. யானை நாணியது. உடனே அந்த யானை அதன் இடத்திற்குச் சென்று மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தது. இந்த அற்புதக் காட்சியையே குலாம் காதிறு நாவலர் தமது நாகூர்ப் புராணத்தில் இவ்வாறு பாடி உள்ளார்.

புலிபொரு துறங்கும் வேழம் பொருந்திய நனவிற் செய்த
வலிகெழு செய்தி யாங்கு வருங்கன விடத்துக் காண்டு
நலிவுடன் விழித்து நிற்கு நறுமலர் வேங்கை தாக்கி
மலிசினந் தணிய நாணி வழைவயிற் றுஞ்சு கிற்கும்.

(உருமாற்றிய படலம் : 9)

இந்தக் காட்சி கலித்தொகையிலே இவ்வாறு இடம்பெற்றுள்ளது.

கொடுவரி தாக்கி வென்ற வகுத்தமொடு
நெடு வரை மருங்கின் துஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலின்
கனவிற் கண்டு கதுமென வெரீஇப்
புதுவ தாக மலர்ந்த வேங்கையை
அதுவென உணர்ந்ததன் அணிநல முருக்கிப்
பேணா முன்பீற்றன் சினந்தணிந் தம்மரங்
காணும் பொழுதின் நோக்கல் செல்லாது
நாணி யிறைஞ்சு நன்மலை...............

(குறிஞ்சிக்கலி : 13 : 1-9 (49) )

இப்பாடலில் புலி யானையை வென்றது என்றும் தான் அடைந்த வெட்கம் காரணமாக வேங்கை மரத்தையே பாராது செல்லும் பழக்கத்தை யானை ஏற்படுத்திக் கொண்டது என்றும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

மற்றொரு மலைக்காட்சியை எடுத்துக் கொள்வோம். கலித் தொகையில் அக்காட்சி எவ்வாறு அமைந்துள்ளது என்பதை முதலில் பார்ப்போம். சங்ககாலத் தமிழ் மக்களிடை அம்பெறியும் கலை போருடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. அம்பு போன்று

கற்களைக் கவணில் ஏற்றிப் பயிர்களை அழிக்கவரும் விலங்கினங் களை ஓட்டவும் அக்கலையைப் பயன்படுத்தினர். அக்காலமக்கள் நாளாந்த வாழ்க்கையில் அம்பெறியும் கலையைப் பயன்படுத்தி உள்ளனர். பண்டைய மக்கள் யானை முதலிய விலங்கினங்கள் தமது பயிரை அழிக்காது காப்பாற்ற அக்கலையைப் பயன்படுத்தி உள்ளனர்.

ஒரு நாள் நடுயாமம். எவ்வித சத்தமும் இல்லாத நடுயாமம். மழைபெய்து கொண்டிருந்தது. மின்னலோடு இடிமுழக்கமே அப்போதைய அமைதியான நிலையைக் கலைத்தது. மின்னலின் ஒளிவே அப்பொழுது இடைக்கிடை தென்பட்டது. அந்நேரத்தில் ஆண்யானை அதன் பெண் யானையோடு பயிர்களை மேய அங்கு வந்தது. யானைகளின் அடிகளின் சத்தத்தினாலே யானைகள் அங்கு வந்துள்ளன என்பதை உணரக்கூடியதாக இருந்தது. தாம் விளைத்த பயிர் ஓரளவு வளர்ந்ததும் அதனை விலங்கினங் களிலிருந்து காப்பாற்ற மரத்திலே கவண் அமைத்திருந்தனர். அந்தக் கவணிலே கல்லையிட்டு எறிந்தால் தினைப்புனத்தை அழிக்கவந்த விலங்கினங்கள் வெகுண்டு ஓடிவிடும். அன்று தினைப் புனங்காத்த கானவன் யானையின் அடிச்சத்தத்தைக் கேட்டதும் ஆசினி மரத்திலே அமைக்கப்பட்டிருந்த காவல் குடிசையில் ஏறி அங்குள்ள கவணில் வைத்துக் கல்லை எறிந்தான். கை விட்டான். அந்தக் கல்லின் சத்தத்தைக் கேட்டதும் யானைகள் சென்று விட்டன. ஆனால் அந்தக்கல் பல சாதனைகளைப் புரிந் துள்ளது. மலையிலே இருந்த ஒளிபொருந்திய வேங்கைப் பூக்களைச் சிதறச் செய்தது. பழுத்த ஆசினிப் பழங்களை அழித்து விழுத்தியது. தேனீக்கள் கட்டி இருந்த தேன்கூட்டை ஊடுருவிச் சென்றது அந்தக் கல். மணம் வீசுகின்ற மாமரத்தின் கிளை களின் மாந்தளிர்களை உழக்கியது. வளமாக வளர்ந்திருந்த வாழைமரத்தின் வாழைக் குலையைக் கிழித்துத் துளைத்துக் கொண்டு சென்றது. பின்னர் அந்தக் கவண்கல் பலாமரத்தில் பழத்துள் சென்று தங்கியது. இத்தகைய வளம் உடைய குறிஞ்சி மலை எனப் பாடப்பட்டுள்ளது. அப்பாடல் இது.

இமயுமிழ் பிரங்கிய விரவுபெயர் நடுநாட்
கொடுவிரு பிருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு மேயுஞ் செய்புன் யானை
அடியொதுக் கியக்கங் கேட்ட கானவன்

நெடுவரை ஆசினிப் பணவை யேறிக்
கடுவிசை கவணையிற் கல்கை விடுதலின்
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளித்தவை உதிராத்
தேன்செய் இறாஅல் துளைபடப் போகி
நறுவடி மாவிற் பைந்துணர் உழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் இழியாப்
பலவின் பழத்துள் தங்கும் மலை.

(குறிஞ்சிக்கலி : 5:516) (41)

இங்கு விரிவாக வருணிக்கப்பட்ட நிகழ்ச்சியை குலாம் காதிறு நாவலர் தமது நாகூர்ப் புராணத்தில் சுருக்கமாக விவரித்துள்ளார். நடுயாமம், மழை, மின்னல், யானை, புன்செய், சத்தம், கானவர், கவண் எல்பனவற்றைக் குறிப்பிட்டுள்வார். அத்தோடு கானவர் கவணில் வைத்துக் கைவிட்ட கல் தேன் கூட்டை ஊடுருவிச்சென்று பலாமரத்திலே காய்த்துத் தூங்கிக் கொண்டிருக்கும் பலாப் பழத்துள் தங்கியது என்று சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். இரண்டு பாடல்களிலும் ஒரே கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்பது நோக்கற்பாலது. குலாம் காதிறு நாவலர் இக்கருத்துக் களை இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

மழையி ருணள்ளென் யாமம் வான்றவழ் மின்னி னோக்கி
யுழைவரு பிடியி னோடுமுற் றுப்புன் செய்யின் மேயுங்
களைகரி யரவத் தோச்சுங் கானவர் கவணி றாலிற்
றுளைபடப் பலவிற் காய்த்துத் தூங்கிடும் பழம்போய் வைகும்

(உருமாற்றிய படலம் : 10)

தஞ்சை மன்னன் நாகூரை அடைந்து சாகுல்கமீது ஆண்டகை யின் கல்லறையை நெருங்கி ஆண்டகை அவர்களைப் புகழத் தலைப்பட்டார். அவ்வாறு புகழும்பொழுது உருவகங்களால் அவர்களைப் போற்றினார். ஆண்டவர் அவர்கள் பெருந்தவம் புரிந்தவர்களாதலால் அவர்களை அருந்தவக் கொழுந்து என்றார். சிங்கம் போன்று பகைவர்களை வென்றவராகையால் அடைய லர்க்கு ஏறு என்று கூறினார். மருந்துகளுக்கெல்லாம் மேலான மருந்தாக இருந்தமையால் அவர்களை மருந்துயர் மருந்து என்றார். குன்றில் இட்ட தீபம் எல்லா இடத்துக்கும் பயன்படும் ஆதலால் சாகுல் கமீது ஆண்டவர் அவர்களை மலைமுடிவிளக்கம் என்றார். அமுதம் எல்லாராலும் பெற முடியாத ஒன்று. எல்லா

ராலும் அளிக்க முடியாததுமாகும். ஆனால் ஆண்டகை அவர் களோ வருந்துபவர்களுக்கு அமுதம் போன்றவர் என்றார். பயிருக்கு மழை அவசியம். அதே போன்று மக்களுக்கு மழை அவசியம். எனவே தான் ஆண்டகை அவர்களை மனுப்பயிர் மாரி என்றார். புதையல் எல்லோராலும் பெறப்படக் கூடிய தொன்றன்று. அதிலும் பெறுமதி மிக்க செல்வத்தை உடைய புதையல் கிடைப்பது அரிதிலும் அரிதாகும். ஆனால் நாகூர் ஆண்டகை அவர்களோ கருந்தனப் புதையல் என்றார். வானி லிருந்து பெறப்படும் நீர் இலவசமாகக் கிடைப்பதொன்று. அதே போன்று சாகுல் கமீதாண்டகையின் கருணை என்னும் மழை எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதொன்று. எனவே தான் ஆண்டகை அவர்களைக் கருணைவான் புணரி என்றார். இக் கருத்துக்களைக் கொண்ட குலாம் காதிறு நாவலரின் நாகூர்ப் புராணச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

அருந்தவக் கொழுந்து போற்றி
    அடையலர்க் கேறு போற்றி
மருந்துயர் மருந்து போற்றி
    மலைமுடி விளக்கம் போற்றி
வருந்துநர்க் கமுதம் போற்றி
    மனுப்பயிர் மாரி போற்றி
கருந்தனப் புதையல் போற்றி
    கருணைவான் புணரி போற்றி.

(ஐந்தாம் மினாறாப் படலம் : 12)

'உள்ளத்தினுவகையாங் கெற்கொரு மகவளித்தல் வேண்டும்' (ஐந்தாம் மினாறாப் படலம் : 19) என சாகுல் கமீதாண்டகையின் கபுறடியில் மன்றாடினான் தஞ்சை மன்னன். சில நாட்கள் சென்றன. தஞ்சை மன்னனின் மனைவி கருவுற்றாள். குலாம் காதிர் நாவலர் மன்னனின் இராணியின் பெயரைச் சுட்டவில்லை. 'ஐம்பாலோதி' என்றே அம்மங்கையைக் குறிப்பிட்டுள்ளார். ஐந்து விதமாகத் தலைமையிரைப் பகிர்ந்து மலரணிதல் அக்காலத் தமிழ் மங்கையர் மரபாகும். எனவேதான் அப்பெண்மணியை இவ்வாறு உருவகப் பெயர் கொண்டு அழைத்துள்ளார். அப்பெண்மணி கருவுற்றாள் என்று கூறவந்த ஆசிரியர் இவ்வாறு பாடி உள்ளார்.

கழலடித் தடிந்தோட் டஞ்சைக்
காவல னமர்சின் னாளி
னிழலடிப் பெருமா னன்பி
னிரைமல ரைம்பா லோதித்
தழல்புரை காந்தட் செங்கைத்
தடமுலை யமைத்தோள் வண்டிற்
சுழல்வரு கருங்கட் டேவி
சூலுளங் குற்றா ளன்றே.

(ஐந்தாம் மினாறாப் படலம் : 23)

முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைப்பதற்குப் பயன்படுத்தப் படும் அழைப்பொலி அறபு மொழியில் 'அதான்' என்றும் பாரசீக மொழியில் 'பாங்கு' என்றும் வழங்கப்படுகிறது. அதானை விட பாங்கு என்பதே பெருவழக்கைப் பெற்றுள்ளது. அதான் கூறுபவரே முஅத்தின் என அழைக்கப் படுவார். நாள்தோறும் ஐவேளை பாங்கு அல்லது அதான் ஒலிக்கப்பட்டு முஸ்லிம் மக்கள் தொழு கைக்கு அழைக்கப்படுகின்றனர். ஐவேளைகளையும் வைகறை, உச்சி, அந்தி, மாலை, முன்னிரவு எனத் தமிழில் அழைக்கலாம் என்பர். ஆனால் முஸ்லிம் மக்கள் இந்த ஐவேளைகளையும் அறபு மொழியிலே சுப்ஹு, லுஹர், அஸர், மஃறிப், இசா என அழைப்பர். இவ்வாறு அழைக்கப்படுவதையே இங்ஙனம் ஒரு செய்யுளில் குறிப்பிட்டுள்ளார் குலாம் காதிறு நாவலர்.

வைகறை யுச்சி யந்தி மாலைமுன் றிரவா மின்ன
மெய்கெழு மோரை யைந்தும் விரிகட லிரங்கி யாங்கு
துய்மையம் பெரிய வல்லோற் றொழவரு கென்ன வார்க்குங்
கைகொளும் பாங்கி னோதை கல்லெனுந் தினமு மன்றே.

(நகரப்படலம் : 49)

அந்தக் காலத்திலே நாகூரிலே மூன்று பள்ளிகளே இருந்தன என்றும் முதற்பள்ளி சாகுல் கமீது ஆண்டகை அங்கு வருமுன் அமைக்கப்பட்ட சிறுமனை என்றும், மற்றது புராதன மனை என்றும், மூன்றாவது பின்னர் கட்டப்பட்டது என்றும் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குங்குமத் தடத்தோள் குத்பு சாகுல் கமீது கோமான்
தங்குற முன்னஞ் செய்த தனிச்சிறு மனையு நன்மை
பொங்குமம் முதுபக் கென்னும் புராதன மனையு மின்ன
கொங்கவிழ் பள்ளி மூன்றுங் கொண்டதித் தலமக் காலம்

(விவாகப்படலம்: 25)

சாகுல் கமீதாண்டகை நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள ஊரிலே பலவகை மரங்கள் உள்ளன. அத்தகைய மரங்களுள் புன்னை மரமே சிறப்புறத் திகழ்ந்தது. புன்னைக்கு நாகம் என மற்றொரு பெயருமுண்டு. எனவே நாக மரம் சிறந்து விளங்கியதால் நாகவூர் எனப் பெயர் பெற்றது. பின்னர் நாகவூர் என்பது மருவி நாகூர் என வந்தது. இவ்வாறு குலாம் காதிறு நாவலர் ஒரு செய்யுளில் அமைத்துப் பாடி உள்ளார்.

போக மாமரம் பலவகை யுளவெனிற் புன்னை
யேகவொண் மரமுதன் மைமிக் கிருத்தலி னிவ்வூர்
நாக வூரெனுந் தலைமை பற்றி யபெயர் நண்ணி
யாக மற்று நாகூ ரெனமரீஇ யதை யன்றே.

(செய்கு யூசுபு நாயகருபாத்துப் படலம் : 6)

குலாம் காதிறு நாவலர் தமது நாகூர்ப்புராணத்தில் ஒரு புலவரைப் பற்றி விரிவாக விவரித்துள்ளார். அவர் தஞ்சை மாநகரத்தைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் ஒரு பெரும்புலவர் என்றும் முஸ்லிம்களிடையே சிறந்து விளங்கினார் என்றும் குணசீலராகவும் செல்வந்தராகவும் கொடையாள ராகவும் விளங்கியதோடு இல்லறத்திலும் சிறந்து திகழ்ந்தார் எனவும் அவருடைய பெயர் பாவா ராவுத்தர் என்றும் ஒரு செய்யுளில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எனமுடி யரைய னோப்புமூ தூரி னிருந்தன ரொருபெரும்
புலவர்
இனமுடை முசுலி மீன்களிற் சிறப்புற் றியன்றநாற்
குணத்தினர் வியப்பக்
கனமுறழ் கொடையின் வளர்நிதிச் செல்வங் கலந்தவில்
லறத்தினி லான்று
பனகவொண் படத்தி னல்குலார் மாழ்கும் பாவாரா
வுத்தரென் பவரால்

(மலடு தீர்த்த படலம் : 2)

அவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார் என்பதும் ஐந்திலக்கணம் இலக்கியங்களில் வல்லவராகத் திகழ்ந்தார் என்பதும் எல்லா நூல்களிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார் என்பதும் பதினொரு செய்யுட்களில் (மலடு தீர்த்த படலம் : 3-13)

விவரிக்கப்பட்டுள்ளன. எல்லா வரங்களும் பெற்று மதிவாண ராகத் திகழ்ந்தார் எனினும் அவருக்கு மகப்பேறு இல்லாமல் வருந்தினார் என்று இவ்வாறு ஒரு செய்யுளில் குறிப்பிட்டுள்ளார்.

அறங்கொளும் கல்விப் பேரறி வனைத்து மகனக
மமைவரப் பெற்றுத்
திறங்கலந் திருக்குந் தன்மைய ரெனும்பேர்
திசைபுக நாடொறு மலியும்
மறங்கொளுஞ் செல்வ மன்னிய பாவா
ராவுத்த ரெனுமதி வாணர்
பிறங்கெழின் மகப்பே றன்றிமற் றெல்லாப்
பேறுமுற் றிருந்தன ரன்றே
(மலடு தீர்த்த படலம் :14)

சாகுல் கமீது ஆண்டவரிடம் மகவரம் கேட்டு பல்வேறு வகையான சித்திர கவிகளைப் பாடினாரென்றும் வெவ்வேறு விதமான சித்திரகவிகளை மலடுதீர்த்த படலத்தில் பாவா ராவுத்தர் அவர்களின் வாயிலாகத் தந்துள்ளார். பாவா ராவுத்தர் என்னும் புலவர் நொண்டிநாடகம் ஒன்றும் இயற்றினார் என ஒரு செய்யுளில் குலாம் காதிறு நாவலர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். குலாம் காதிறு நாவலரின் குறிப்புக்கிணங்க பார்க்கும் பொழுது சாகுல் கமீது ஆண்டகையைப் புகழ்ந்து பாவா ராவுத்தர் அவர்கள் நொண்டி நாடகம் ஒன்று இயற்றி இருத்தல் வேண்டும். நொண்டி நாடகம் பற்றிய குறிப்பைக் கொண்ட நாகூர்ப்புராணச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

என்னவண் புகழிற் போற்றி யெழின்மக வரங்கேட்
டண்ணல்
பொன்னவாய் நின்று மேன்மைப் புலவர்கோன் பாத்தி
காவும்
பின்னமி லாம லோதிப் பெரிதுள விழைவி னோடு
நன்னயத் திருந்து நொண்டி நாடக மொன்றுஞ் செய்தார்
(மலடு தீர்த்த படலம்:40)

நாகூர் எத்தகைய சிறப்பு வாய்ந்த நகரமென்பதையும் குலாம் காதிறு நாவலர் குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம்களுக்குப் புனிதமாகவுள்ள நான்கனுள் நான்காவது நாகூர் எனக் குறிப்பிட்டுள்ளார். பெருமானார் முகம்மது (சல்) அவர்களின் கல்லறை (றவுளாசரீப்) அமைந்துள்ள மதினாவையும் அண்ணல் (சல்)

அவர்கள் பிறந்த மக்காவையும் முகியித்தீன் ஆண்டவர் அடங்கி இருக்கும் பகுதாது நகரையும் தவிர்த்து மேன்மையானது நாகூர் எனக் குலாம் காதிறு நாவலர் குறிப்பிட்டுள்ளார். அந்தச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

மங்க ளத்தொனி சேர்மதி னாவெழின் மக்கா
தங்கு சீர்பகு தாதெனு முப்பதி தவிர
எங்கி ருக்குமற் றிணையிதற் கென்றுல கியம்பு
நங்க ளுக்கொரு மேன்மையின மைந்தது நாகூர்.

(தலவிசேடப்படலம்:2)

ஆனால் முஸ்லிம்களுக்கு மூன்றாவது புனிதத் தலமாக விளங்குவது ஜெருசலம் என்னும் பைத்துல் முகத்திஸ் நகரம் என்பது ஈண்டு நோக்கற்பாலது.

பொதுவாகக் காப்பியத்தில் அமையவேண்டிய விருத்தப் பாக்கள் நாகூர்ப்புராணத்தில் இடம் பெற்றுள்ளன. நாகூர்ப் புராணத்தின் சிறப்பு அமிசமாகத் திகழ்வது அங்கு அமைந்துள்ள சித்திரக்கவிகளே. பாவா ராவுத்தர் என்னும் மதிவாணர் நாகூர் ஆண்டகையிடம் பிள்ளைவரம் வேண்டும் நிகழ்ச்சியையே குலாம் காதிறு நாவலர் சித்திரக்கவிகளாகப் பாடி உள்ளார். அவருடைய குறை இரங்குதலையும் வேண்டுகோளையும் தமக்குப் பிள்ளை வரம் அருள வேண்டும் என்று முறையிடும் கருத்துக்களையுமே குலாம் காதிறு நாவலர் சித்திரக்கவிகளிலே அமைத்துப் பாடி உள்ளார். மலடு தீர்த்த படலத்திலே 19 முதல் 36 வரை உள்ள செய்யுட்கள் சித்திரக்கவிகளாக அமைந்துள்ளன.

நாகூர்ப் புராணத்தை அச்சிட நிதி உதவி புரிந்த நாகூர் பாவா ராவுத்தர் குமாரர் சிக்கந்தர் ராவுத்தர் அவர்களது பேரில் வாழ்த்துப்பதிகம் பாடிஉள்ளார் குலாம் காதிறு நாவலர். அப்பதி கத்தின் பத்தாவது செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

பாகூர்க மீதொலியாம் பாத்துஷா சாகிபுவின்
நாகூர்ப்பு ராணத்தை நாற்றிசையும் போக்குதற்கு
மாகூர்நி தியருளி மாண்புற்றா யாலதனால்
வாகூர்ந்த சிக்கந்தர் வள்ளனீ வாழியவே

# ஆரிபு நாயகம்

'ஆரிப்' என்பது அறிஞரைச் சுட்டும் ஒரு பெயர் என்பர். இறைவனின் நல்லடியார்களுக்கு இப்பெயர் சுட்டப்பட்டுள்ளது. இவர்களைப் பின்பற்றுபவர்களின் கருமங்களை இவர் செவ்வனே, செய்து முடிப்பர். இறைபக்தி மிகுதியாக உள்ளவர்கள் இத்தகையோர். இறைவன் பற்றிய உண்மைகளையும் ஆரிப் எனப்படுவோர் நன்கு அறிவர். இத்தகைய ஆரிபுகளுக்கெல்லாம் தலைவராக இருக்கக் கூடியவரே ஆரிபு நாயகர் ஆவார். ஆரிபீன்களுக்கெல்லாம் தலைவராக விளங்குபவர் சுல்தானுல் ஆரிபீன் என அழைக்கப்பட்டார். அத்தகைய பெரியார்தான் ஆரிபு நாயகம் என வழங்கப்பெற்ற சுல்தானுல் ஆரிபீன் செய்யிது அகுமதுல் கபீறுர் றிபாயி அவர்கள். அப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றினையே ஆரிபு நாயகம் என்னும் தமது காப்பியத்துக்குக் கருப்பொருளாகக் கொண்டார் அதன் ஆசிரியர் குலாம் காதிறுநாவலர். ஆரிபு நாயகம் குலாம் காதிறு நாவலரால் இயற்றப்பட்ட இரண்டாம் காப்பியமாகும்.

இக்காப்பியத்துக்கு ஆரிபு நாயகம் எனப் பெயரிடப்பட்டதன் காரணத்தை ஒரு செய்யுளில் குறிப்பிட்டுள்ளார். அல்லாஹ்வால் மேல்நிலைக்கு உயர்த்தப்பட்டவர் செய்யிது அகுமது கபீறு றிபாய் ஆண்டகை அவர்கள். அவர்களுடைய நாமங்களுள் ஒன்று ஆரிபீன்களுக்கெல்லாம் தலைவர் என்று பொருள்படும் ஆரிபு நாயகம் என்பது. அந்த உண்மை என்றும் உலகில் விளங்கவேண்டும் என்னும் அவாவினால் உந்தப்பட்டே அப்பெரியாரின் மேன்மையாம் வரலாற்று நிகழ்ச்சிகளை இக்காப்பியத்தில் விவரிக்க

முற்பட்டேன். அதனாலேயே இக்காப்பியத்துக்கு ஆரிபு நாயகம் என்னும் நாமத்தையும் சூட்டினேன். இவ்வாறு பாடி உள்ளார் ஆசிரியர்.

பெரியவ னுயர்த்தும் செய்யி தகுமதுல் கபீறுபெம்மாற்
குரியதொர் நாமம் பற்றி யுண்மையின் விளங்கி யாண்டும்
விரியநின் றமைந்த வன்னார் மேன்மையங் காதை மன்னு
மரியவிப் புராண நாம மாரிபு நாயகம்மே

(பாயிரம்:16)

இக்காப்பிய ஆசிரியர் ஒரு செய்யுளில் தம்மைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பெரிய தவத்தினை உடைய சுல்தானுல் லாரிபீன் அகுமது கபீறு றிபாயி ஆண்டகையின் வாழ்க்கை வரலாற்றினை எல்லோரும் விரும்பிப் படிப்பர். அதனாலேயே அக்கதையை இனிய தமிழில் காப்பியமாகப் புனைந்து தந்தேன் எனக்கூறித் தமது தந்தையின் பெயர் வாப்பு என்பதையும் குறிப்பிட்டதோடு தாம் நாகூரைச் சேர்ந்தவர் என்பதையும் அப்பதியைச் சேர்ந்த தாம் குலாம் காதிறு நாவலர் என்பதையும் ஒரு செய்யுளில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கண்டாடுந் தவத்திறைவர் சுல்தானுல் லாரிபீன்
கதையை யாருங்
கொண்டாடுந் தகவாகக் கொழுந்தமிழி னுறப்புனைந்து
கொடுத்தா னேலார்
திண்டாடுந் திறலாளன் செய்யதவ வாப்பீன்ற
செல்வ மைந்தன்
வண்டாடுந் தடநாகூர் மருவுகுலாம் காதிறுநா
வலரென் பானே.

(பாயிரம் : 20)

ஆரிபு நாயகத்தின் கொடை நாயகர் இருவர் பெயர் இக்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளன. ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். மற்றவர் அந்தறோத் என்னும் நகரைச் சேர்ந்தவர். இக்காப்பியம் யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணைக் கல்லூரியில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவரும் ஆறுமுக நாவலரின் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவ சிரோமணி ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்களின் தலைமையில் அரங்கேற்றப்பட்டது. இக்காப்பியத்துக்கு ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் சிறப்புப்பாயிரம் ஒன்றும் வழங்கி உள்ளார். அச்சிறப்புப் பாயிரத்தில்,

தென்னியாழ்ப் பாண தேசந் தன்னின்
மன்னிய வண்ணை மாநக ரதனிற்
பாக்கிய மெவையும் பரந்து நிற்றலிற்
பாக்கியப் பாவெனப் பலரும் பரவும்
முகம்மது லெவ்வை மரைக்கான் முதலாம்.

என பாக்கியப்பா எனப் புகழ்ப் பெயர் பெற்ற முகம்மது லெப்பை மரைக்காயர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் அபூபக்கர் நயினார்ப் பிள்ளை மரைக்காயர் குமாரராவார். இக்காப்பியம் அச்சிடப்படுவதற்கு பாக்கியப்பா அவர்களின் பெருமுயற்சியே காரணம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரிபு நாயகக் காப்பியத்தைப் பாட குலாம் காதிறு நாவலருக்குப் பொருளுதவி புரிந்தவர் முகம்மது காசிம் என்பவர். இவர் அந்த்ரோத் என்னும் தீவைச் சேர்ந்தவர். அந்த்ரோத் தீவு இந்து மகாசமுத்திரத்தில் உள்ளது. கேரளக் கடற்கரையிலிருந்து ஏறத்தாழ 400 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ளது அந்த்ரோத் என்னும் தீவு. இருபது தீவுகளைக் கொண்ட இலக்ஷத்தீவுகள் என வழங்கப்படும் தீவுத் தொகுதியில் ஒன்றாக விளங்குவது இது. கொடைநாயகரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அந்த்ரோத் நகரைச் சார்ந்த முகம்மது காசிம் என்றே குறிப்பிட்டுள்ளார். பாயிரத்திலே அவருடைய பெயர் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

ஈழ நாட்டினு மிக்கதை விளக்கியோ ரியலார்
வாழ நாட்டிய வந்தறோத் தெனுநகர் மகிபர்
பேழ நாட்டு முகம்மது காசிமார் பெயரின்
வீழ நாட்டிய தேறிய வரங்கிடை மிகவே

(பாயிரம் 18)

சங்ககாலச் செய்யுட்களின் சொல்வளத்தைக் குலாம்காதிறு நாவலரின் ஆரிபு நாயகத்தில் காணக் கூடியதாக இருக்கின்றது. இயற்கை வருணனைகளைப் பார்க்கும் பொழுது சங்ககாலச் செய்யுட்களைப் படிக்கிறோமோ என்னும் ஐயப்பாட்டைத் தோற்றுவிக்கக் கூடியதாக அவருடைய இலக்கிய நடை அமைந்துள்ளது.

இயற்கை வருணனையில் ஒரு தனி நடையைப் பின்பற்றி உள்ளார் குலாம் காதிறு நாவலர். நாகூர்ப்புராணத்தில் இத்தகைய வருணனைகள் எவ்வாறு இருந்தன என்பதைக்

கண்டோம். தாம் வருணிக்க முற்படும் இடத்தின் அழகினையும் அங்கு காணப்படும் தாவரங்களையும் மிருகவர்க்கங்களையும் விவரிக்கும்பொழுது சங்ககால இலக்கியங்களிலுள்ள அத்தகைய வருணனைகளை நமக்கு ஞாபகப்படுத்துவனவாய் அவை அமைந்து விடுகின்றன. நாகூர்ப்புராணத்தில் உள்ள உருமாற்றிய படலத்தில் அத்தகைய செய்யுட்கள் இடம் பெற்றிருப்பதைக் கண்டோம். ஆரிபு நாயகத்தில் இடம் பெற்றுள்ள ஒரு மலை நாட்டு வருணனையைப் பார்ப்போம்.

மலைக்குன்றுகளிலே குரங்குகள் இருந்துகொண்டிருந்தன. முதிர்ந்த தினைகள் மலிந்த வயல்களை அவை நெருங்கின. அத் தினைகள் முற்றினதன் அடையாளமாக வளைந்து நிற்கின்றன. அந்தக் கதிர்களைக் குரங்குகள் கவர்ந்தன. வரிசையாக அமைந் துள்ள குன்றுகளுக்குச் சென்றன. உட்கார்ந்தன. அவை கொண்டு சென்ற கதிர்களை அகங்கைகளிலே வைத்து நெறித்துத் தானியத்தை வேறாய் எடுத்தன. அத்தானியத்தை அவற்றின் துணைவிகளுடன் உண்டன. இன்புற்றன. உண்டு மகிழ்ந்து ஏதோ உளறிக் கொண்டிருந்தன. பயனில்லாத, மற்றவர்களுக்குப் புரியாத சொற்களைப் பேசிக்கொண்டிருந்தன. குரங்குகளின் நாடி திரை விழுந்தனவாய்க் காட்சி அளித்தன. குரங்குகள் அவற்றின் வாய்களிலே நிறையத் தானியத்தை இட்டுச் சாப்பிட்டுக் கொண் டிருந்தன. சாப்பிட்டு என்பதைக் குறிப்பிட 'முக்கி' என்னும் சொல்லைக் குலாம் காதிறு நாவலர் பயன்படுத்தி உள்ளமையைக் காணலாம். சங்ககாலத்திலும் சாப்பிட்டு என்பதை முக்கி என்றே குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நினைவுபடுத்தற்பாலது. முதலில் குலாம் காதிறு நாவலரின் செய்யுளில் இக்கருத்துக்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப் பார்ப்போம்.

> வரைவளர் புனத்து முற்றி வளைகுரல் கவர்ந்த மந்தி
> நிரைபெறு பாறை போகி யங்கையின் நெமிடி யின்பிற்
> றினரகவு ணிறைய முக்கிப் பயனில செப்ப லோம்பி
> யுரையுல மடக்கு வாரி னொப்பெனத் திரிதல் கண்டார்
>
> (மக்கா யாத்திரைப் படலம்: 49)

இனி இதே கருத்துக்களைக் கொண்ட சங்ககாலச் செய்யுள் ஒன்றினை எடுத்துக் கொள்வோம்,

கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை யேறி
அங்கை நிறைய நெமிடிக் கொண்டுதன்
திரையணற் கொடுங்கவுள் நிறைய முக்கி

(நற்றிணை: 22: 1-5)

இரண்டு பாடல்களிலும் 'கசக்கி' என்னும் பொருளில் 'நெமிடி' என்பது வந்துள்ளமையைக் காணலாம். இலங்கையில் சில பகுதியில் வாழும் முஸ்லிம்கள் 'சாப்பிட்டு' என்னும் பொருளில் 'முக்கி' என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஒரு முல்லைக் காட்சியை எடுத்துக் கொள்வோம். முல்லை நிலத்தின் இயற்கை அமைப்பு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இடைச்சியர் ஆபரணம் அணிந்தவர்களாகக் காணப்பட்டனர். பிரகாசம் பொருந்தியவை அவ்வாபரணங்கள். அவ்விடைச்சியர் அவர்களுக்கு உரிய பாணியில் தயிரைக் கடைந்தனர். மத்தை இட்டு கடையும்பொழுது ஒரு பேரொலி பிறக்கும். அது புலி முழங்குவதுபோன்று ஒலிக்கும். அந்தச் சத்தத்தினால் தொலைவில் உள்ள மான் கூட்டங்கள் அஞ்சின. புலியின் சத்தம் அது எனப் பயந்தன. அஞ்சியமைக்கான மற்றொரு காரணம் அந்தக் கூட்டத்தில் சிறு மான்கள் இருந்தன. மான்கள் சிறிய தலையையும் பெரிய கண்களையும் உடையனவாய் இருந்தன. ஆங்காங்கே அவை மறைந்து திரிந்தன. இக்கருத்துக்களைக் குலாம் காதிறு நாவலர் தமது ஆரிபு நாயகம் என்னும் காப்பியத்தில் ஒரு செய்யுளில் இவ்வாறு அமைத்துப் பாடி உள்ளார்.

பூணுவந் திழைபோ காது புணர்முலை யாய்ச்சி மார்கைந்
நாணுரைந் தொளிறு மத்திற் றயிர்தரு நரலை கேட்டுச்
சேணுகைந் துழுவைத் தென்னச் சிறுதலைப் பெருங்க
ணம்மான்
மாணுவந் துயிரை யாங்குத் தொறுந்தொறு மறுகல் கண்டார்

(மக்கா யாத்திரைப் படலம்: 54)

சிறிய தலையையும் பெரிய கண்களையும் உடைய மான்களை

சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை (2: 21)

எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது. மதுரைக் காஞ்சியில் இச் செய்தி,

பெருங்கவின் பெற்ற சிறுதலை நவ்வி
மடக்கட் பிணையொடு மறுகுவன வுகள் (275-276)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்து ஒரு மருதக்காட்சி அங்கு தடாகங்கள் பல இருந்தன. நீரே வற்றுதல் அறியாதவை அத்தடாகங்கள். அத்தடாகங்களில் ஒலித்துக் கொண்டிருக்கும் புள்ளினங்களை எப்பொழுதும் காணலாம். அத்தோடு அத்தடாகங்களில் முட்களைக் கொண்ட தண்டுகளை உடைய தாமரை மலர்கள் வெளிச்சம் போன்று மலர்ந்திருந்தன. அன்னப்பறவைகள் அத்தடாகத்தில் இருந்த தாமரை இலைகளில் அமர்ந்திருந்தன. இந்தத் தாமரை இலைகள் கோபம் என்னும் மதத்தை ஒழுகும் யானையின் காதுகள்போல் காட்சி அளித்தன. யானையின் காதுகள் போன்ற தாமரை இலை களிலே அன்னங்கள் அமர்ந்திருந்தன. இந்தக் காட்சி பல்வேறு வகையான மணிகளினால் சூழப்பெற்று அன்னமாகிய அரசன் தாமரை இலையிலே வீற்றிருந்ததற் கொப்பாகும். இதனையே குலாம் காதிறு நாவலர் இவ்வாறு வருணித்துள்ளார்.

புனலற லறிய கில்லாப் புள்ளிமிழ் பொய்கை தோறுங்
கனலன வலரி னோங்கு முள்ளரைக் கமலங் கொண்ட
சினமத மொழுக்கும் யானைச் செவியிலை வைகு மன்னம்
மனவின மணிக ளோம்ப வளைத்திறை யிருத்தல் கண்டார்
(மக்கா யாத்திரைப் படலம்: 77)

தாமரை மலர்களின் ஒளிபோன்ற பிரகாசமான தன்மையையும் யானையின் செவிபோன்ற தாமரை இலைகளில் அன்னங்கள் வீற்றிருப்பதையும் நற்றிணைநானூறு இவ்வாறு சுட்டுகிறது.

விளக்கின் அன்ன சுடர்விடு தாமரைக்
களிற்றுச் செவி அன்ன பாசடை தயங்க
(210: 1-2)

குறுங்கால்களையும் சிவந்த கண்களையும் கொண்ட எருமைக் கூட்டம் நெல் அறுவடை செய்வோர் பறை கொட்டுவதனால் எழுப்பப்படும் சத்தத்தினால் அஞ்சினவாய்க் கலைந்து சென்றன. இதற்கிடையில் கொல்லையிலே கட்டப்பட்டிருந்த எருமைக் கன்றுகள் பாலுக்காகக் கரைந்து தாய் எருமையை அழைத்தன. இந்த அழைப்பைக் கேட்ட எருமைகளின் பால்முலைகள் பாலைச் சொரிந்தன. அப்பால் வீணாய்ப் போனது. இக்காட்சியையும் கண்டுகொண்டு ஆரிபு ஆண்டகை சென்றார்கள். அச்செய்யுள் வருமாறு.

நெல்லரி களமர் கொட்டுந் தண்ணுமை ஞெளிரி னஞ்சி
எல்லையிற் குறுந்தாட் செங்க ணெருமைசே ரினங்க ணீங்கிப்
பல்வயிற் செருத்த லுக்க பாவிழிந் தொழுக நின்று
கொல்லையில் யாத்த கன்று கரைந்துகூப் பிடுதல் கண்டார்.
(மக்கா யாத்திரைப் படலம்:79)

நற்றிணையிலே அறுவடை செய்வோர் எழுப்பும் பறை ஒலியினால் புட்கள் வெருண்டு ஓடின என்பது

வெண்ணெய் அரிநர் தண்ணுமை வெரீஇப்
பழனப் பல்புள் இரிய............(350:1-2)

என வந்துள்ளது.

இனிப் பாலை நிலத்துக்கு வருவோம். உப்பு நீரைக் கொண்ட கிணறுகள் பல நெய்தல் நிலக் கடற்கரையிலே இருந்தன. அத்தகைய உப்பு நீர்க் கிணறுகள் ஒவ்வொன்றிற்கும் அருகில் வால்களையும் பசுமையான கண்களையும் கொண்ட சிவப்புநிற நாய்கள் துன்புற்றிருந்தன. அவற்றிற்குஉணவு கிடைக்கவில்லை. அவை அங்கே வீழ்ந்து கிடப்பன போன்று காட்சி அளித்தன' அவற்றில் பால் முலைகளைக் கொண்டு தோலொடு ஒட்டிக் கொண்டிருந்தன. தசையற்ற தோலாகவே நாய்கள் காட்சி அளித்தன. முன்பு அந்த முலைகள் பாலை நிறையச் சுரக்கும் தன்மையில் இருந்தன. இத்தகைய பாலை நிலக் காட்சியைக் கண்டவர்களாக அகுமது கபீறுறிபாய் ஆண்டவர் மக்கா நோக்கிச் சென்று கொண்டிருந்தார். இக்காட்சியையே குலாம் காதிறு நாவலர் இவ்வாறு நயம்பட வருணித்துள்ளார்.

கல்லறுத் தியற்றி வைத்த கடம்புகாச் சிறுவா யுண்ணா
வல்லுவர்க் கூவ றோறும் வால்வளை பைங்கட் செந்நாய்
அல்லலிற் றீம்பால் விம்முந் தோன்முலை யகடு வீழ்த்தி
யெல்லடு பசியின் மாழ்கி முடங்கிமற் றிருத்தல் கண்டார்
(மக்கா யாத்திரைப் படலம்: 63)

சங்ககாலத் தமிழ் இலக்கியங்களிலே இத்தகைய காட்சிகள் வருணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்

களிறு நின்று இறந்த நீரல் ஈரத்துப்
பால்அவி தோல்முலை அகடுநிலம் சேர்த்திப்
பசிஅட முடங்கிய பைங்கட் செந்நாய்
மாயா வேட்டம் போகிய கணவன்
பொய்யா மரபின் பிணவுநினைந்து இரங்கும்.
(103:4—8)

என நற்றிணையில் வந்துள்ளமையைக் காண்க. இங்கே மருதனிள நாகனார் வேட்டை நோக்குடன் சென்ற ஆண் நாய் வரும்வரை பெண் நாய் வருந்தி இருந்தது என்பதைச் சுட்டி உள்ளார்.

மற்றொரு பாலை நிலத்தில் ஒரு யானைக்கு ஏற்பட்ட அவல நிலை வருணிக்கப்பட்டுள்ளது. யானையின் தோற்றப் பொலிவு குன்றிவிட்டது. அதன் அழகு நீங்கியது. அதன் மதம் அகன்று விட்டது. அது நீர் தேடி அலைந்தது. ஒரு கானலைக் கண்டதும் யானை அங்கு சென்றது. அங்கே நீர் இல்லை என அறிந்ததும் அது வருந்தியது. செய்வது இன்னதென்று அறியாது துதிக்கையைத் தொங்கவிட்டுக் கொண்டு தாகத்தினால் யானை வருந்தியது. தவித்தது. நீரில்லாமல் தத்தளிக்கும் மரக்கலம் போல் காட்சி அளித்தது. காப்பியத் தலைவர் கண்டதாக புலவர் வருணிக்கும் காட்சி இப்பாடலில் அமைந்துள்ளது.

ஏரறு மாமை தீர்ந்த விருமத மற்ற வேழந்
தேரகன் வழியி னோடித் தெண்புன லன்மை காண்டு
வாரமர் பனைக்கை நாற்றி வாயுல ரடைந்து மாழ்கி
நீரறு மம்பி மான நின்றிடு நிலைமை கண்டார்.

(மக்கா யாத்திரை படலம்:65)

இத்தகைய ஒரு காட்சி அகநானூறிலே அமைந்திருப்பதைக் காணலாம். வெம்மை மிக்கது பாலைவழி. எரிபறக்கும் இயல்பினது அங்கே சென்றது யானை. அதன் பெருமை அனைத்தும் ஒழிந்தது. தளர்ந்து அவ்வழியில் சென்றது. நீருள்ள இடம் எது என அறியாமல் அலைந்தது. பேய்த்தேர் தோன்றும் இடம் எல்லாம் அதனை நீரென நினைத்துச் சென்றது. மயங்கி ஓடியது. நீரற்ற ஆற்றிலே கிடக்கும் ஓடத்தைப் போன்றது அதன் நிலை. வழி யிடத்திலே வருந்திச் சோர்ந்து வீழ்ந்து கிடந்தது. நினைப்பவரை வருத்தும் தன்மையது. அக்காட்சி அகநானூற்றில் இவ்வாறு அமைந்துள்ளது.

வெம்மை தண்டா எரிஉகு பறந்தலை
கொம்மை வாடிய இயவுள் யானை
நீர்மருங்கு அறியாது தேர்மருங் கோடி
அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கருங் கடத்திடை

(29:15—19)

இயல்பாகவே குலாம் காதிறு நாவலர்தம் சொல்லாட்சி ஓசை நடை சிறப்ப அமைவதொன்றாகும். சங்ககாலத் தமிழ் இலக்கியங் களில் மேற்கொள்ளப்பட்ட சொற்களையே அவர் பெரும்பாலும் தமது காப்பியங்களில் பயன்படுத்துவதனால் அவருக்கு இந்நடை கைவந்த தொன்றாகத் திகழ்கின்றது. பொதுவாகத் தமிழில் காப்பியங்கள் இயற்றிய முஸ்லிம் புலவர் தமது கடவுள் வாழ்த்துப் படலத்தில் நான்காம் கலிபாவாகிய அலி (றலி) அவர்களைப் புகழ்ந்து பாடும்பொழுது, அவர்களைப் பற்றிய செய்யுளை ஓசை நயம் மிக்கதொன்றாகவே அமைத்துப் பாடுவர். அத்தகைய பாடல் அலி (றலி) அவர்களின் வீரம் பொருந்திய சிறப்பாற்றலை எடுத்துக் கூறுவதாகவே அமைந்திருக்கும். டகர எழுத்துக்களைக் கொண்ட சொற்களை அதிகமாகப் பயன்படுத்துவதனால் பாடல்களில் ஓசை நயம் சிறப்பாக அமைவதைக் காணலாம். குலாம் காதிறு நாவலரும் தமது ஆரிபு நாயகம் என்னும் காப்பியத் தில் அலி (றலி) அவர்களைப் புகழ்ந்து பாடிய கடவுள் வாழ்த்துப் பாடலில் இவ்வாறு பாடியுள்ளார்.

கடிவிட வரவுட னெரிபட விடுமத கரியுட லுதறிடவே
படிகக னொடுதிகை கிடுகிடு வெனவெதிர் பகையவர்
பொடிபடவே
கொடிகுடை முடியடி தலையுட லிவைகுவை குவைகொடு
குவிதரவே
யிடியொடு பொரநட மிடுசூர கதரலி யெழிலடி
முடிபுனைவாம்.
(கடவுள் வாழ்த்து:10)

இச்செய்யுளில் டகரத்தைப் பயன்படுத்தி அதன்கண் ஓசை நயத்தைப் பெற்றுள்ளார். இவ்வாறு டகரங்களை அதன் பல்வேறு உருவங்களில் பயன்படுத்தும் பொழுது ஓர் ஒழுங்குமுறையைப் பின்பற்றியிருப்பது புலனாகின்றது. இச்செய்யுளில் உள்ள ஒவ்வொரு அடியிலும் அறுசீர்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு சீரிலும் டகரம் வர வழிபார்த்துக் கொண்டுள்ளார் ஆசிரியர். ஒரு அடியில் ஒரு சீரில் டகரம் அமையவில்லை. அதற்கு ஈடுசெய்யும் முகமாக அதற்கடுத்துள்ள சீரில் இரண்டு டகரங்களை அமைத் துள்ளார். இங்ஙனம் பார்க்கும்பொழுது முதலாம் அடியில் உள்ள அறுசீர்களில் ஏழு முறையும் ஏனைய மூன்று அடிகளிலும் ஆறாறு முறைகளும் டகரம் அமைத்து ஓசை நயம் சிறக்கச் செய்யுள் இயற்றி உள்ளார் குலாம் காதிறு நாவலர்.

மற்றொரு செய்யுளில்தகர எழுத்தின் பல்வேறு உருவங்களைப் பயன்படுத்தி ஆசிரியர் ஓசை நயத்தை அமைத்துள்ளார். அபூபக்கர் (றலி) அவர்களைப் புகழும் முகமாகப் பாடப்பட்டுள்ள அச்செய்யுள் இவ்வாறு ஓசை நயம் ததும்ப அமைந்துள்ளது.

ஆதித்த னாகத்தி னார்வித்த நாமத்தி ஞரற்பி னாகத்தினார்
சேதித்த காதத்தை யேயுற்ற நீதத்த சீதத்த யாளத்தினார்
சாதித்த பேர்கட்கு ளேமிக்க பேர்பெற்ற தாமத்த
ரேமத்தினார்
போதித்த பூபக்கர் பாதத்தை யேநித்த போகத்தி ரேகிப்பமே

(கடவுள் வாழ்த்து:7)

வேறொரு செய்யுளை எடுத்துக் கொள்வோம். இச் செய்யுளிலே உள்ள நாலடிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சொல்லை இவ்விரண்டு கருத்துக்களில் நயம்பெற அமைத்துப் பாடியுள்ளார். இதுதான் அந்தச் செய்யுள்.

மலையெ லாமிவர் குணக்கென்று நாணத்து மலைய
நிலையெ லாமொரு பரநிலை யேயென நிலைய
வலையெ லாமிவர் பொறைக்கென வவ்வழி யலையக்
கலையெ லாநிறை மதியினா யினர்பகை கலைய

(கல்விகற்ற படலம் : 17)

# தொகுப்புரை

அறபு நாட்டிலே இஸ்லாம் தோன்றிச் சில ஆண்டுகளில் தமிழ் நாட்டிலும் அதன் அயல்நாடுகளிலும் இஸ்லாம் பரவிய போதிலும் இஸ்லாமிய அடிப்படையிலான தமிழ் இலக்கியங்கள் தோன்றப் பல நூற்றாண்டுகள் கழிய வேண்டியிருந்தது. தமிழ் நாட்டை ஆட்சி புரிந்த முஸ்லிம் ஆட்சியாளர் கூட தமிழ் மொழியை வளர்க்க அத்துணை முயற்சி எடுத்ததாகத் தோன்றவில்லை. அத்தகைய ஆட்சியாளர் தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெறாதிருந்தமையே இஸ்லாமிய அடிப்படையிலான தமிழ் இலக்கியங்கள் தோன்றாமைக்குரிய காரணமாகக் குறிப்பிடலாம். அத்தோடு அத்தகைய முஸ்லிம் ஆட்சி தமிழகத்தில் நெடுங்காலம் நீடிக்கவில்லை என்பதும் மற்றொரு காரணமாகும். தமிழகத்தில் ஆட்சி புரிந்த முஸ்லிம் ஆட்சியாளர் பெரும்பாலும் பாரசீக மொழியைப் பேசுபவர்களாகவே இருந்தனர். தமிழ்மொழியைப் போற்றிவளர்க்கும் பணியில் அத்தகையோர் போதிய ஆர்வம் காட்டவில்லை என்பதையும் ஈண்டு சுட்டிக்காட்டுதல் வேண்டும். அதன் பயனாகவே அக்காலகட்டங்களில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தோன்றவில்லை எனலாம். வியாபார நோக்கமே தமிழகம் வந்த ஆதி முஸ்லிம்களிடம் முதன்மை பெற்றிருந்தமையும் அத்தகைய நிலைமைக்கு ஒரு காரணம் எனலாம்.

தமிழ் மொழியைக் கற்றுணர்ந்த சீதக்காதி போன்ற கொடைவள்ளல்கள் தோன்றித் தமிழ் மொழியையும் அதன் பண்பாட்டையும் பேணிப் போற்ற முன்வந்தபின்னரே பெருமளவில் இஸ்லாமிய அடிப்படையிலான தமிழ் இலக்கியங்கள் தோன்றலாயின. அத்தகையோருள் பெரும்பாலானோர் தமிழகத்திலே ஆங்காங்கே

எல்லைப் புறங்களிலே குறுநில மன்னர்களாகவும் பெருநிலக்கிழார் களாகவும் இருந்தபொழுதே தமிழ் மொழி வளர ஆக்கமளித்து ஊக்கம் ஊட்டினர். அவர்களின் பெருமுயற்சி காரணமாகவே இஸ்லாமிய அடிப்படையில் தமிழ் இலக்கியங்கள் தோன்றலாயின. இஸ்லாம் தமிழை வளர்க்கத் தலைப்பட்டது. இஸ்லாம் வளர்த்த தமிழ் உருவாகியது.

அத்தகைய இலக்கியங்களின் முன்னோடியாகத் திகழ்வது பல்சந்த மாலைச் செய்யுட்களில் இடம் பெற்றுள்ள அல்லாஹ், கலுபா போன்ற சிறப்பு அறபுச் சொற்களும் முஸ்லிம்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள யவனர், சோனகர், அஞ்சு வண்ணத்தார் போன்ற சொற்களும் வகுதை, அந்துபார் போன்ற இடப் பெயர்களும் பின் அவுன் என்பதன் மரூஉவான வின்னன் என்னும் பெயர்ச் சொல்லும் பல்சந்தமாலையை இனங்காணப் பெரிதும் பயன்பட்டுள்ளன. பல்சந்தமாலை இஸ்லாமிய அடிப் படையில் தோன்றிய தமிழ் இலக்கியம் என்பதும் அங்ஙனம் தோன்றிய முதல் இலக்கியங்களுள் இப்பொழுது நமக்குச் சிதைந்த உருவில் கிடைக்ககூடியதாக உள்ள ஒரே ஒரு நூல் என்பதும் தெற்றெனப் புலனாகின்றது.

வகுதாபுரியில் வாழ்ந்த மக்களின் வணிக ஆற்றலும் மதி நுட்பமும் கொடைச் சிறப்பும் சமய ஈடுபாடும் பல்சந்தமாலை யிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள செய்யுட்களில் விதந்தோதப் பட்டுள்ளமையைக் காணலாம்.

வரலாற்று அடிப்படையில் பார்க்கும்பொழுது பல்சந்த மாலையைத் தொடர்ந்து உருவான ஒரு நூல் யாகூபுசித்தர் பாடல் எனலாம். மருத்துவத் துறையில் சிறந்துவிளங்கிய யாகூபு சித்தர் மருத்துவ அறிவியல் பற்றிய குறிப்புக்கள் பலவற்றைத் தமது பாடலில் தொகுத்துக் கூறியுள்ளார். எளிதில் புரிந்துகொள்ள முடியாதவகையில் தமது மருத்துவக் கலையில் பயன்படுத்தப்படும் மூலிகைகளின் பெயர்களை நேரடியாகக் குறிப்பிடாது வலிந்து பொருள்கொள்ள வேண்டிய முறையில் சுட்டி உள்ளமை யாகூப் சித்தரின் பாடலில் சிறப்பமிசமாக சுட்டிக்காட்டலாம். நோய் எவ்வாறு ஏற்படும், அதன் இயல்புகள் எவை, அதனை எவ்வாறு குணப்படுத்தலாம், அதற்கான மருந்துகளைத் தயார் செய்யப் பயன்படுத்தவேண்டிய மூலிகைகள் யாவை என்பனவற்றை யாகூப் சித்தர் தமது பாடலில் விளக்கி உள்ளார்.

பதினாறாம் நூற்றாண்டில் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களுள் முழுமையானவையாகக் கிடைக்கக்கூடியனவற்றுள் முந்தியது ஆயிரமசலா என்பதாகும். வினாவிடையாக அமைந்துள்ள இந்நூல் தோன்றிப் பதினெட்டு ஆண்டுகள் சென்றபின்னர் மிஃறாஜ் மாலை தோன்றி உள்ளது என்பது புலனாகின்றது. இக்கால விஞ்ஞானக் கண்டுபிடிப்பு களோடு இயைந்த குறிப்புக்கள் மிஃறாஜ் மாலையில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

இருபத்துமூன்று ஆண்டுகளுக்குப்பின்னர் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது திருநெறிநீதம் என்னும் நூல். ஆயிரம் மசலாவைப் போன்று பெரும்பாலும் வினாவிடையாக அமைந்துள்ளன திருநெறிநீதச் செய்யுட்கள். யாகூப்சித்தர் பாடலில் இடம் பெற்றுள்ளதுபோல் திருநெறிநீதப் பாடல்களும் அந்தாதித் தொடரில் அமைந்திருப்பதைக் காணலாம். இங்ஙனம் அந்தாதியாக அமைந்திருப்பதால் அவற்றை எளிதில் மனப்பாடம் செய்யலாம் என்பது அறிஞர்களின் துணிபு ஆகும். ஆயிரம் மசலாவிலும் திருநெறிநீதத்திலும் மறுமை பற்றிய குறிப்புகள் பல இடம் பெற்றுள்ளன. சுவர்க்கத்தினதும் நரகத்தினதும் தன்மைகள் ஆயிரம் மசலாவிலும், மிகுறாஜ் மாலையிலும் திருநெறிநீதத்திலும் விவரிக்கப்பட்டுள்ளன. திருமணம், சொத்துரிமை முதலியனவும் திருநெறிநீதப் பாடல்களின் குறிப்பிடப்பட்டுள்ளன.

திருநெறிநீதம் தோன்றி எழுபத்துநான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது சக்கூன் படைப்போர். இதற்கு முன் தோன்றிய நூல்களைப் போலல்லாது யாப்பு முறையில் சக்கூன் படைப்போரில் ஒரு வேற்றுமையைக் காணலாம். சக்கூன் படைப்போரில் போர் பற்றிய செய்திகள் கண்ணிப்பாடல்களிலே தரப்பட்டுள்ளன.

முதுமொழிமாலை பெருமானாரிடம் குறைஇரங்கும் பாணியில் அமைந்துள்ளமையால் இது இதற்கு முன்னர் தோன்றிய இலக்கிய அமைப்பில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அளவிலும் சிறியதொரு நூலாகவே முதுமொழி மாலை அமைந்துள்ளது.

தமிழை வளர்க்க முற்பட்ட முஸ்லிம் புலவர்கள் தமிழில் உள்ள எந்தப் பிரபந்த வகையினையும் விட்டுவிடவில்லை. அத்தகைய பிரபந்த வகைகளுக்கு இஸ்லாமிய மெருகூட்டிப் அவற்றை இஸ்லாமிய நூல்களாக மாற்றி உள்ளனர். திருமக்காப்பள்ளு

என்னும் நூல் இஸ்லாமிய அடிப்படையில் பள்ளு பிரபந்த வகைக்குரிய சிறப்பியல்புகள் மாறாது அமைந்திருப்பதைக் காணலாம். இராகம் தாளத்துடன் பாடக்கூடிய சிந்துகள் திருமக்காப்பள்ளு நூலில் இடம்பெற்றுள்ளன.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க்காப்பியங்களுள் காலத்தால் முந்தியது கனகாபிஷேகமாலை. பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றியது கனகாபிஷேகமாலை என்னும் காப்பியம். சீயாக் கொள்கைகளுக்கும் கனகாபிஷேக மாலையில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. பதினேழாம் நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்னர் தோன்றியது சீறாப்புராணம். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களுக்குள் மக்கள் மத்தியிலே பெருவழக்கைப் பெற்றது சீறாப்புராணம் எனின் அது மிகையாகாது.

மறுமையில் நிகழ உள்ள சம்பவங்களை வருணிக்கும் காப்பியமாக அமைந்துள்ளது திருமணக்காட்சி. திருமணக்காட்சி என்னும் காப்பியத்தின் கொடைநாயகராகத் திகழ்ந்தவரே சின்னசீறா என்னும் காப்பியத்துக்கும் கொடைநாயகராகத் திகழ்ந்துள்ளார். திருமணக்காட்சி என்னும் காப்பியம் தோன்றி இருபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே சின்னசீறா தோன்றி உள்ளது. சீறாப் புராணத்தில் உள்ள குறையை நிறைவு செய்யும் முகமாகச் சீறாப் புராணம் தோன்றி ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரே சின்னசீறா இயற்றப்பட்டுள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட காப்பியங்கள் இயற்றியோர் என்ற வரிசையிலே மூவரைக் குறிப்பிடலாம். ஒருவர் வண்ணக்களஞ்சியப் புலவர். மற்றவர் செய்கு அப்துல்காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர். மூன்றாமவர் குலாம் காதிறு நாவலர். வண்ணக்களஞ்சியப் புலவர் மூன்று காப்பியங்களையும் செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் நான்கு காப்பியங்களையும் குலாம் காதிறு நாவலர் குறுங்காப்பியம் ஒன்றையும் சேர்த்து மூன்று காப்பியங்களையும் இயற்றி உள்ளனர். வண்ணக்களஞ்சிய புலவரின் மூன்று காப்பியங்களும் செய்கு அப்துல் காதிறு நெயினார்ப்புலவரின் நான்கு காப்பியங்களும் பதினைந்து ஆண்டுக் கால எல்லையுள் தோன்றி உள்ளன. இருவரும் முகியித்தீன் ஆண்டவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு குத்புநாயகம்

என இரண்டு காப்பியங்கள் இயற்றி உள்ளனர். வண்ணக் களஞ்சியப்புலவர் சுலைமான் நபி அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இராஜநாயகம் என்னும் காப்பியத்தையும் செய்கு அப்துல் காதிறு நயினார்ப் புலவர் இபுறாகீம் நபி அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு திருமணி மாலை என்னும் காப்பியத்தையும் யாத்துள்ளனர். இருவரும் போர் பற்றிய இரண்டு காப்பியங்களைத் தந்துள்ளனர். வண்ணக் களஞ்சியப்புலவரின் தீன்விளக்கமும் செய்கு அப்துல்காதிறு நெயினார்ப் புலவரின் புதூகுஷ்ஷாமும் இங்ஙனம் அமைந்த காப்பியங்களாகும். வண்ணக்களஞ்சியப் புலவர் நாகூர் ஆண்டகையைத் தமது குத்புநாயகத்தில் உள்ள ஒவ்வொரு படலத்திலும் ஒவ்வொரு செய்யுளில் குறிப்பிடும்பொழுது செய்கு அப்துல்காதிறு நெயினார் லெப்பை ஆலிம் புலவர் நாகூர் ஆண்டகையைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு திருக்காரணப்புராணம் என்னும் காப்பியத்தையே இயற்றி உள்ளமை கண்டு நோக்கத் தக்கது.

வண்ணக்களஞ்சியப் புலவரும் செய்கு அப்துல் காதிறு நெயினார் லெப்பை ஆலிம் புலவரும் தத்தம் காப்பியங்களை இயற்றிய பதினைந்து ஆண்டுகால எல்லையுள் முகியித்தீன் ஆண்டவரைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பதுறுத்தீன் புலவர் முகியித்தீன் புராணத்தையும் இஸ்லாத்தை மேனோங்கச் செய்வதற்காகப் போரில் ஈடுபட்ட சல்கா அம்மையின் வீர தீரச்செயல்களைப் பாடும் முகமாக குஞ்ஞு மூசு ஆலிம் புலவர் இறவுசுல்கூல் படைப்போரையும் இயற்றி உள்ளனர்.

முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் வாழ்க்கையினை வேறொரு கோணத்திலிருந்து பாடப்பெற்ற காப்பியம் நவமணி மாலை. நவம் என்று ஆரம்பிக்கும் அப்பெயருக்குப் பொருத்தமாக முகியித்தீன் ஆண்டவர் நிகழ்த்திக் காட்டிய புதுமைச் சம்பவங்கள் நவமணிமாலையில் வருணிக்கப்பெற்றுள்ளன.

நாகூர்ப்புராணத்தையும் ஆரிபுநாயகத்தையும் இயற்றியதோடு குறுங்காப்பியமாக முகாஷபா மாலையையும் இயற்றிச் சென்றுள்ளார் குலாம் காதிறு நாவலர். அவருடைய செய்யுட்களிலே சங்ககாலத் தமிழின் வாசனை கமழ்வதைக் காணலாம்.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க்காப்பியங்கள் அனைத்தும் கடவுள் வாழ்த்துப் படலத்தைப் பொறுத்தவரையில் ஒரே ஒழுங்குமுறையைப் பின்பற்றி உள்ளன. நாட்டுநகரப் படலங் களும் அவ்வாறே அமைந்துள்ளன. இஸ்லாத்துக்கு முரணான செய்திகளை எவ்வளவுக்கெவ்வளவு தவிர்க்கமுடியுமோ அவ் வளவுக்கவ்வளவு தமது காப்பியங்களில் தவிர்த்தே சென்றுள்ளனர் முஸ்லிம் புலவர்கள். ஒருசில சந்தர்ப்பங்களில் தமிழ் இலக்கிய மரபைப் பேணுவதற்காக அத்தகைய முரண்பட்ட செய்திகள் இடம் பெறாமல் போகவும் இல்லை. இயற்கை வருணனைகள் பெரும்பாலும் தமிழக இயற்கையினைச் சுட்டிக் காட்டுவது போன்று இருந்தாலும் அறபுநாட்டின் புவியியல் அமைப்பும் அத்தகைய வருணனைகளில் பேணப்பட்டுள்ளமையைக் காணலாம்

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் திசைச் சொற்களாக அறபுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அது இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் ஒரு சிறப்பியல்பாகக் கொள்ளல்வேண்டும். திருக்காரணப் புராணத்தையும் நாகூர்ப் புராணத்தையும் தவிர்ந்த ஏனைய இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங் களில் அறபு நாட்டிலும் அறபு நாட்டைச் சார்ந்த நாடுகளிலும் வாழ்ந்த பெரியோர்களே பாட்டுடைத் தலைவர்களாகக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. திருக் காரணப்புராணத்தில் நாகூர் ஆண்டகை சாகுல் கமீது அவர்களின் வாழ்க்கை விவரிக்கப்பட்டுள்ளது. நாகூர்ப்புராணத்தில் நாகூர் ஆண்டகை மறைந்த பின்னர் நிகழ்ந்த புதுமையான சம்பவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

இஸ்லாம் வளர்த்த தமிழின் முதற்பகுதியே இது எனலாம் இஸ்லாம் வளர்த்த தமிழின் இச்சிறுபகுதியை எடுத்துக்கூறும் இந்த அரிய வாய்ப்பினை எனக்கு அளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாருக்கும் சிறப்பாக அதன் தலைவர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கும், இச்சொற்பொழிவுக்குக் காலாக விளங்கிய சீதக்காதி அறக்கட்டளைச் சொற்பொழிவினைப் பெருமனத்தோடு நிறுவிய சீதக்காதி அறக்கட்டளை நிலையத் தாருக்கும் எனது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

# சொல்லகராதி

## அ


அகமதுசாகிபு 163
அசன் (றலி) 02, 105, 197
அஞ்சு வண்ணத்தார் 16, 25, 28 29, 271
அஞ்சுவண்ணம் 27
அஞ்சுமன் 27, 28
அடைக்கல மாலை 138
அந்துபார் 16, 26, 30, 31, 32, 33
அப்துல் கறீம், மு. 175
அப்துல்காதிர் 151
அப்துல் காதிர் நயினா லெப்பை ஆலிம் புலவர் 137, 138
அப்துல்லா இப்னுசலாம் 51
அப்றஹா 203
அபுல்காசிம் 126, 127
அபூபக்கர் (றலி) 24, 70, 73, 102, 105, 107, 128, 130, 205, 217, 269
அபூஜகில் 130
அமீறுல் மூமினீன் 108
அல்குர்ஆன் 201
அலி (றலி) 71, 73, 82, 84, 102, 105, 108, 114, 202, 268
அறபுத்தமிழ் இலக்கியங்கள் 14
அறமிபுனுதையான் 198
அறபாமலை 147
அறாபியர் 1, 5, 6, 7
அவுசா 188


## ஆ


ஆகிர்சமான் 74
ஆயிரமசலா 49, 272
ஆயிஷா (றலி) 220
ஆரிப் 260
ஆரிபுநாயகம் 250, 260, 274
ஆலிப்புலவர் 54, 55, 58,
ஆறாவது பாண்டியன் 12
ஆறுமுக நாவலர் 144
ஆஸியா (றலி) 134


## இ


இஞ்சீல் 183
இபுறாகீம் நபி (அலை) 96, 186, 187, 189, 190, 215, 274
இமாம்கள் 105
இரணம் 197
இராமசாமிக்கோன், ஜி. 38
இராவுத்தர் 30
இராஜநாயகம் 150, 173, 274
இலாஹி 204
இறசூல் 41
இறவுசுல்கூல் 192, 193, 202, 203
இறவுசுல்கூல் படைப்போர் 191, 193, 236, 274
இறுதிக்காலம் 74
இறுதி நாள் 77
இவனி 183, 184
இஸ்லாம்புரம் 241, 242
இஸ்மாயில் நபி (அலை) 95, 189
இஸ்ரவேலர் 213
இஸ்லாம் 270


## ஈ


ஈசா நபி (அலை) 183
ஈருள் 148


## உ


உசைன் (றலி) 101, 105, 106, 107, 197
உதுமான் (றலி) 71, 73, 102, 105, 113
உமறுகத்தாப் (றலி) 24, 70, 73, 102, 105, 106, 109, 110, 205, 215
உமறுப்புலவர் 85, 90, 122, 123, 124, 126, 129, 141
உஹுல் அஸ்மி 104
உவைசு நயினார்ப்புலவர் 125, 144


## எ


எசீது 106, 112
எழுபிறப்பு 75

ஐ

ஐதுறூசு நயினார்ப் புலவர் 237
ஐந்தரு 152
ஐந்தெழுத்து 232
ஐயோனியர் 1, 2

க

க ·.பா 147
கடிகைமுத்துப் புலவர் 123
கண்ணகுமது மகுதூ முகம்மதுப் புலவர் 84, 87, 126
கணவி 173
கந்தூரி 43, 44
கபீபு முகம்மது 180, 187
கல்பு 197
கலப 25
கலிபா 24, 25
கலிமா 34, 35, 41, 76, 95, 132
கலுபா 20, 24, 25, 26, 27,
களவியற்காரிகை 16. 22
கனகவிராயர் 100, 101
கனகாபிஷேக மாலை 100, 273

கா

காகிரி 56
காசிம் புலவர் 207
காத்திப் 145
காதிரசனா மரைக்காயர் 125
காதிறிய்யா 174
காயல்பட்டினம் 56, 142
காரணம் காட்டல் 162
காலிமஹ்மூது 125
காஹிரா 32

கி

கிதாபுல்மகாசி 79
கிந்தில் 61
கியாமத் 75

கீ

கீழக்கரை 31, 49, 123. 151

கு

குஞ்ஞுமுசுலெப்பை காஜி ஆலிம் புலவர் 193, 196, 274
குத்புநாயகம் 157, 169, 173, 207 273, 274
குர்பானி 189
குலாம்காதிறு நாவலர் 249, 250 260, 261, 260, 273, 274
குவளாலபுரம் 21
குவாலீர்க்கலம்பகம் 250
குளோப் 116, 117

கொ

கொந்தாலகான் 101

கோ

கோட்டை 99

ச

சக்கூன் 79, 80, 82
சக்கூன் படைப்போர் 78, 81
சகருவான் 107
சங்கசாரம் 183
சல்கா 192, 194, 195, 200, 274
சல்காப் படைப்போர் 191

சா

சாகுல்கமீது ஆண்டகை 125, 135 162, 170, 248, 254
சாமந்தர் 15

சி

சிக்கந்தர் ராவுத்தர் 259
சித்திரக்கவி 259
சின்னசீறா 136, 141, 207, 273
சிவபெருமான் 231, 232, 234

சீ

சீதக்காதி 15, 16, 85, 124, 126, 137, 270
சீயா 107, 108, 273
சீறா 118
சீறாப்புராணம் 85, 89, 118, 126, 141, 185, 193, 273

சு

சுந்தரபாண்டியன் 12
சுபுகு 86
சுல்தானுல் ஆரிபீன் 260
சுலைமான்நபி (அலை) 150, 274
சுன்னத்ஜமாஅத் 107, 108

செ

செய்கு அப்துல்காதிர் நெய்னார்

லெப்பைஆலிம் புலவர் 125, 186, 221, 273, 274
செய்கு சதக்கத்துல்லா அப்பா 68, 69, 85, 86, 125, 136, 137
செய்குதம்பிப் பாவலர் 126, 144, 175
செய்கு மீறான் 177
செய்கு முகம்மது 241
செய்கு யூசுபு 249
செய்யித் புலவர் 126
செய்யிது இபுறாகிம் 224, 226, 229
செய்னுலாபிதீன் (றலி) 102
செல்வராயன் 218, 219

சே

சேகாதிநயினான் 135
சேகுனாப்புலவர் 143, 144, 157, 164, 205

சை

சையது இபுறாகிம் 8, 9, 22
சையிதுமுகம்மது, எம். 30

சொ

சொர்க்கநீதி 206

சோ

சோனக சாமந்தப்பள்ளி 5, 10, 11, 225
சோனகர் 3, 4, 5, 13, 14, 20, 26 33, 271

த

தக்பீர் 189, 190
தகியுத்தீன் அப்துல்றஹ்மான் 11, 12
தல்கீன் 244
தலைக்காப்பியம் 117
தன்மைசது 243

தா

தாமோதரம் பிள்ளை, சி. வை 144
தாலூத் 213, 214
தாவூதுநபி (அலை) 150

தி

திருக்காரணப் புராணம் 162, 164, 274, 275
திருநெறி நீதம் 64, 272
திருப்புகழ் 207
திருப்புல்லாணிக் கல்வெட்டு 5, 10, 225
திருமக்காப்பள்ளு 92, 93, 97, 272, 273
திருமணக்காட்சி 134, 273
திருமணிமாலை 186, 274

தீ

தீன் 135, 147
தீன் விளக்கம் 173, 221, 236, 274
தீனெறிநீதம் 66
தீனெறி விளக்கம் 222

தூ

தூர்சீனாய் மலை 60

தொ

தொழுகை 61

தௌ

தௌர் 128

ந

நயினார் முகம்மதுப்புலவர் 126
நபி 39, 119
நவசேருவான் 106, 111
நவமணி மாலை 236, 237, 238, 240, 274

நா

நாகூர் 125, 158, 162, 248, 257, 258, 259, 261
நாகூர் ஆண்டகை 274
நாகூர்ப் புராணம் 248, 251, 274, 275
நாச்சிகுளத்தார் 126
நான்கு கலிபாக்கள் 70
நான்கு வேதங்கள் 230

நி

நிக்காகு 72, 73

நு

நுபுவ்வத் 120

ப

பக்கீர்முகியித்தீன் 125, 144
பக்தீத் 95, 189
பகுதாது 160, 259

படைப்போர் 78, 79, 83, 191, 192
பதாயிகுக் கலம்பகம் 250
பதுறுத்தீன் புலவர் 174, 175, 274
பந்தர் 6, 7
பல்சந்தமாலை 15, 16, 17, 18, 19, 25, 271
பவுஞ்ச் 180
பவுத்திர மாணிக்கப்பட்டணம் 5, 225
பனீ அகுமது மரைக்காயர் 136, 141, 142

பா

பாக்கியப்பா 262
பாங்கு 22, 24, 26, 256
பாத்திமா (றலி) 108, 109
பாவா ராவுத்தர் 257, 258, 259,

பி

பிலாக் 10, 11

பீ

பீர்முகம்மது 66, 67

பு

புதூகுஷ்ஷாம் 185, 205, 218, 236, 274
புலவர் நாயகம் 206
புலவர் பணம் 128

பை

பைத்துல் முகத்திஸ் 59, 259

பொ

பொன்னம்பலப் பிள்ளை 144, 261

ம

மக்கா 59, 88, 92, 259
மக்ருஹ் 72
மகதி 111
மகர் 72
மதீனா 59, 89, 225, 258
மதுரைக் கோவை 250
மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை 250
மரியம் (அலை) 134
மகாலிங்க ஐயர், மழவை 144, 206
மலிக்நாஇப் 12, 13
மறுமை 75, 134, 194
மஹ்மூது பந்தர் 7, 125, 127
மஸ்தான் சாகிபுப் புலவர் 108

மா

மாறவர்மன் சுந்தர பாண்டியன் 9, 225
மாணிக்கப்பூர் 248

மி

மிஃறாஜ் 54, 55, 62
மிகுறாசு மாலை 54, 58, 100, 272

மீ

மீனாட்சி சுந்தரம் பிள்ளை 144
மீனாட்சி அம்மை 231, 233, 235

மு

முக்கூடற்பள்ளு 93, 97
முகம்மது காசிம் 262
முகம்மது சகிது 208, 209
முகம்மது நபி (சல்) 11, 51, 70, 92, 102, 104, 107, 119, 120, 135, 204
முகம்மது மஸ்தான் 158
முகம்மது ஹனீபா 114
முகாஷபா மாலை 250, 274
முகியித்தீன் அப்துல் காதிறு ஜீலானி (றலி) 157, 169, 170 174, 222, 236,, 239, 240, 274
முகியித்தீன் புராணம் 174, 176, 185, 274
முதுமணி மாலை 87
முதுமொழி மாலை 85, 87, 272
மும்முரசு 168
முன்கர் நக்கீறு 244
முனாஜாத் 86

ய

யவனப் பிரியம் 2
யவனர், 1, 2, 3, 4, 5, 6, 26, 34, 271

**யா**

யாக்கூபு சித்தர் பாடல் 36, 271, 272
யாகோபு சித்தர் 36, 37, 38, 44 271
யானை ஆண்டு 120, 121, 203

**யோ**

யோனக 3, 4

**ல**

லஸ்தர் 116

**லெ**

லெப்பை 42
லெப்பை நயினான் 136, 138, 144

**வ**

வகுதாபுரி 16, 271
வகுதை 16, 30, 31, 49, 127 135, 187
வச்சிர நாடு 30
வண்ணக்களஞ்சியப் புலவர் 151, 169, 173, 174, 221, 273, 274
வண்ணப்பரிமளப் புலவர் 49
வரிசை இபுறாகீம் லெப்பை 223
வரிசை முகியித்தீன் புலவர் 80, 81
வலி 39, 105, 107

**வா**

வாக்கிதி 207, 203

**வி**

விக்கிரம பாண்டியன் 9, 226, 228, 231
வின்னன் 15, 23, 24, 25, 30

**வீ**

வீரபாண்டியன் 9, 18

**ஜ**

ஜமாஅத் 28

**ஜி**

ஜிப்றயீல் (அலை) 51, 128
ஜின்கள் 153, 154

**ஜீ**

ஜீலான் 160

**ஹ**

ஹதீது 49, 51
ஹலால் 72
ஹறாம் 72

**ஹி**

ஹிஜ்ரி ஆண்டு 103
ஹிஜ்றத் 120

**ஹூ**

ஹூறுல் ஈன்கள் 140

**ஸ**

ஸலாத் 54

**ஷா**

ஷாம் 205

# நிறுவன வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. 1980-இல் தமிழ் | 45 | 00 |
| 2. 1981-இல் தமிழ் | 65 | 00 |
| 3. உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | 6 | 00 |
| 4. பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள் | 8 | 00 |
| 5. தமிழும் தமிழரும் | 5 | 00 |
| 6. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் | 12 | 00 |
| 7. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | 12 | 00 |
| 8. Dr. MU. VA. | 20 | 00 |
| 9. Dissertations on Tamilology | 10 | 00 |
| 10. Tamil Writers Directory | 10 | 00 |
| 11. தமிழர் எண்ணங்கள் | 16 | 00 |
| 12. தமிழர் அளவைகள் | 8 | 00 |
| 13. மெய்க்கீர்த்திகள் | 20 | 00 |
| 14. தமிழ் இலக்கியக் கொள்கை-7 | 15 | 00 |
| 15. தமிழ் இலக்கியக் கொள்கை-8 | 20 | 00 |
| 16. Epigraphical Evidences for Tamil Studies | 10 | 00 |
| 17. Tiru Murugan | 5 | 00 |
| 18. A Study of the Perunkatai | 12 | 00 |
| 19. Papers on Tamil Studies | 15 | 00 |
| 20. தமிழில் விடுகதைகள் | 12 | 00 |
| 21. தமிழர் தோற்கருவிகள் | 10 | 00 |
| 22. Tamil Drama | 20 | 00 |
| 23. Folk Arts of the Tamils | 10 | 00 |
| 24. Language & Grammar | 22 | 00 |
| 25. Cultural Heritage of the Tamils | 20 | 00 |
| 26. Literary Heritage of the Tamils | 50 | 00 |
| 27. Art & Architecture | 25 | 00 |
| 28. Philosophical Heritage of the Tamils | 22 | 00 |
| 29. Historical Heritage of the Tamils | 35 | 00 |
| 30. தொல்காப்பியம்-புணரியல் | 10 | 00 |
| 31. தொல்காப்பியய்-தொகைமரபு | 8 | 00 |
| 32. தொல்காப்பியம்-கிளவியாக்கம் | 20 | 00 |
| 33. தொல்காப்பியம்-உருபியல் | 8 | 00 |
| 34. தொல்காப்பியம்-உயிர்மயங்கியல் | 12 | 00 |
| 35. தொல்காப்பியம்-புள்ளிமயங்கியல் | 15 | 00 |
| 36. தொல்காப்பியம்-குற்றியலுகரப்புணரியல் | 11 | 00 |
| 37. தொல்காப்பியம்-வேற்றுமையியல் | 14 | 00 |
| 38. கும்மிப் பாடல்கள் | 16 | 00 |
| 39. பிரபந்த தீபிகை (இலக்கணம்) | 12 | 00 |
| 40. கண்மருத்துவம் (மருத்துவம்) | 50 | 00 |
| 41. திருமயிலை உலா | 7 | 00 |
| 42. ஊஞ்சல் இலக்கியம் | 10 | 00 |
| 43. மீனாட்சியம்மன் திருப்புகழ் | 10 | 00 |
| 44. வெள்ளைக்காரன் கதை | 7 | 00 |
| 45. சிந்து இலக்கியம் | 8 | 00 |
| 46. இலக்கியத்தில் நிறம் | 23 | 00 |
| 47. ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள் ஓர் மதிப்பீடு | 20 | 00 |
| 48. தமிழ்ச்சுவடிகள் அட்டவணை | 6 | 00 |
| 49. சித்திரக் கவிகள் | 25 | 00 |
| 50. Bibliography on Translations | 35 | 00 |
| 51. திவ்வியப் பிரபந்தத்தில் மனம் | 12 | 00 |

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,**
சி. ஐ. டி. வளாகம், டி. டி. டி. ஐ. அஞ்சல், சென்னை-600 113